# சொர்ண ரகசியம்

இந்திரா சௌந்தர்ராஜன்



# சொர்ண ரகசியம்

## 1

'அண்ட சராசரங்களில் பூ உலகம் வினோத மானது. இங்கேதான் ஓருயிர் முதல் ஆறாம் அறிவு பெற்றவர்கள் வரை வாழ்கிறார்கள். அப்படிப்பட்ட பூஉலகில்கூட பாரத நாடாகிய பரத கண்டமே உன்னதமானது. ஏன் என்றால் இந்த ஒரு நாட்டில் தான் மூன்று பக்கம் கடல் எனும் பெரும்பள்ளம், அதில் நிரம்பிய நீர், வடக்கில் உலகின் உயர்ந்த சிகரமான இமயம் எனும் இயற்கையின் 'பள்ளம் - சமதளம் - உயர்வான மலை' எனும் மூன்று வித நிலைப்பாடுகளும் உள்ளது

அதிலும் தென்பகுதி எனப்படும் தென் தமிழ்நாடு மிக உன்னத சிறப்பு கொண்டதாகும். இந்த தென்தமிழ்நாட்டில்தான் 'கடல், நதி, அருவி, குளம், மலை' - எனும் ஐவகை நிலப்பரப்பும் ஒரே இடத்தில் உள்ளது. இந்த உலகில் வேறு எங்கும் இப்படி பலமான இயற்கை அமைப்பை பார்க்கவே முடியாது. ஒன்று இருந்தால் ஒன்று இருக்காது.

எங்கே பலமான இயற்கை அமைப்பு உள்ளதோ அங்கேதான் காலத்தால் அழிக்க முடியாதவைகளும் தோன்ற முடியும். அந்த வகையில்தான் இந்த பாகத்தில் இருந்தே ஞானியர், யோகியர் தோன்றினர். குறிப்பாக சித்தர் பெருமக்கள் இந்த பாகங்களில் அதிகமாக தோன்றிடக் காரணம் பூகோள அமைப்பு எனப்படும் இயற்கை பலம்தான். அப்படி ஒரு இயற்கையின் அசாத்திய பலம் குவிந்து கிடக்கும் ஒரு மலைத்தலம்தான் சதுரகிரி. இங்கே மட்டும்தான் பஞ்சபூதமும் சமபலத்தோடு இருக்கிறது!'

விடிந்து விட்டது!

காலைப் பொழுதுக்கே உண்டான குதூகலங்கள் அன்றைய வெள்ளிக்கிழமை காலை வேளையிலும் இருக்கத்தான் செய்தது. வீட்டு முகப்பில் வீட்டுக்கே குடைபிடிப்பது போல வளர்ந்திருக்கும் வாதா மரத்தில் நடுவில் காகம் கரைந்தபடி இருக்க, சில சேட்டைக்கார அணில்கள் ஒலிம்பிக்கில் ஓடுவதற்காக பயிற்சி எடுப்பது போல ஓடியபடி இருந்தன.

கீழ் எல்லாம் வாதாமரம் உதிர்த்துப் போட்டிருக்கும் பழுப்பு இலைகள். நடுநடுவே அரக்குச் சிவப்பில் கிடக்கும் பாதாம் பழங்கள்! பழத்தைவிட அதன் உள்ளிருக்கும் பருப்புதான் அலாதி ருசியுடையது. அதை உடைத்து எடுத்து பருப்பை நசுங்கிடாதபடி முழுமையாக வெளியே எடுப்பதில் ஜெயந்தி ரொம்பவே கெட்டிக்காரி.

அந்த காலை நேரத்தில் கண் விழித்து எழுந்த மாத்திரத்தில் ஜன்னல் வழியாக எந்த அளவுக்கு பழங்கள் உதிர்ந்து கிடக்கிறது என்று பார்ப்பதும் அவள்



வாடிக்கைதான். நிறைய கிடந்தால் கண்களிரண்டும் அப்போதே அகண்டுவிடும். படுக்கைக்கு அருகில் கிடக்கும் தன் கட்டைக்கால் களை குனிந்து எடுத்து பின் இரு கக்கத்துககு நடுவிலும் அதை வைத்துக் கொண்டு சற்று கெந்திக் கெந்தி நடந்து செல்லும்போது வாசற்படிகளில் பால் பாக்கெட், தினசரி பேப்பர், கீரைக்கட்டு என்று சகலமும் கிடக்கும்.

குனிந்து அவ்வளவையும் எடுத்துக்கொண்டு திரும்ப வரும்போது அவளது அப்பாவும், அந்த இல்லத்தின் கதாநாயகருமான சதாசிவம் குளித்துவிட்டு தலை துவட்டியபடியோ இல்லையேல் ஷேவ் செய்தபடியே தாடை நிறைய சோப்பு நுரையுடனோ கண்ணில் படுவார்.

ஜெயந்திக்கு அடுத்து பிறந்த நந்தினி பெரும்பாலும் எழுநதிருக்காமல் புரண்டு கொண்டிருப்பாள். அவளைக்கூட தட்டி எழுப்பி விடலாம். ஆனால், அவளுக்கும் அடுத்து பிறந்திருககும் ராகவியைதான் எட்டு மணிக்கு முன்னால் எழுப்பவே முடியாது. சதாசிவம் மகள்களின்விஷயத்தில் மிகவே இதமானவர். எனவே மூன்று பேர்களுமே அப்பா செல்லம்தான்!

அதிலும் போலியோவால் கட்டைக்கால்களை உயிர்க்கால்களாக கருத வேண்டிய ஜெயந்திமேல் சதாசிவத்துக்கு பாசத்தோடு கூடி பலமடங்கு அனுதாபங்களும் உண்டு.

அந்த கால்களுடனேயே ஜெயந்தி வீட்டின் அவ்வளவு வேலைகளையும் செய்து விடுவதுதான் ஒரு ஆச்சரியமான விஷயம். தங்கைகள் உதவி செய்யப் போனால் கூட தவிர்த்து விடுவாள். தான் ஊனமுற்றவள்

தன்னால் பெரிதாக செயல்பட முடியாது என்று யாரும் கருதிவிடக் கூடாதே என்கிற பயம்!

அவளது உள் பயம் பார்ப்பவர்களுக்கு தன்னம்பிக்கையாக தெரிவதுதான் ஆச்சரியம்.

பாவம்.

மூவருமே தாயில்லாப் பெண்கள்!

ராகவிக்கு ஒண்ணரை வயதிருக்கும்போது அந்த தாய்க்கு மஞ்சள்காமாலை வந்தது. எல்லாவித வைத்தியங்களையும் மீறி அவளது உயிரைக் கொண்டு போய்விட்டது.

சுமங்கலிக் கோலத்தோடு பிணம் வீதியில் போன போது சதாசிவம் தன் மூன்று பெண்களையும் அணைத்துக் கொண்டு நின்றதைப் பார்த்து வீதியே விக்கித்துப் போய் நின்றுவிட்டது.

அன்றிலிருந்து இன்று வரை சதாசிவம்தான் அந்த மூன்று பெண்களுக்கும் அம்மா அப்பா அண்ணன் தம்பி என்று எல்லாம்....

ஒரு பள்ளிக்கூட தமிழ்வாத்தியாரான சதாசிவத்துக்கு இப்போது பென்ஷன் வருகிறது. அது போக ட்யூஷன் எடுப்பதில் ஏதோ கொஞ்சம் வருகிறது.

குடியிருக்கும் வீடு மட்டும் எப்படியோ எந்தக் கடனுக்கும் ஆட்படாமல் பத்திரமாக இருக்கிறது. மூன்று பேருக்கும் திருமணம் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் வரும்போதெல்லம் வீட்டை நினைத்துப் பார்த்து கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சுவிடுவார்.

அதை விற்று மூவரையும் கரை ஏற்றிவிடலாம் என்கிற நம்பிக்கை! அதன்பின் தனக்கென்ன வழி



என்று மட்டும் தப்பித்தவறிக்கூட அவர் கேட்டுக் கொண்டதில்லை. அவருக்குள் அம்மட்டில் ஒரு தீர்மானம் இருக்கிறது. அதன் பின் சதுரகிரி மலைப் பக்கமாய் போய் அங்கு திரிந்தபடி இருக்கும் ஏராளமான சித்தர்களில் அவருக்கு மிகப் பரிச்சயமான ஜடாமுடிச் சித்தரிடம் அத்யந்த சிஷ்யனாகி கடைசிக் காலத்தை அப்படியே அவரோடேயே முடித்துக் கொண்டுவிட வேண்டும் என்பதுதான் அந்த தீர்மானம்.

இது அந்தப் பெண்களுக்குகூட தெரியாது. ஆனால், அவர்களுக்கு ஒரு விஷயம் மட்டும் நன்றாகத் தெரியும். 'தன் தந்தை ஒரு பரம சிவபக்தர். சித்தர்களின் மேலும் தனித்த பக்தி கொண்டு பௌர்ணமிக்கு பௌர்ணமி தவறாமல் சதுரகிரி மலைக்கு சென்று வருபவர்' என்று...

அன்றைய காலைப் பொழுதில் புடவை முந்தியில் பாதாங்காயும், ஒரு கையில் பால்பாக்கெட்டுமாய் தினசரி காலண்டரின் முந்தைய நாளின் தாளைக் கிழித்தபோது அன்று பௌர்ணமி என்பதும் கண்ணில் பட்டது.

அடுத்த நொடியே மார்க்கெட்டுக்குப் போய் வில்வ இலை வாங்கி வந்து மாலை கட்ட வேண்டும். லாலா கடையில் அரைத்த சந்தனத்தை வாழை இலையில் வைத்துக் கட்டித் தரச் சொல்லி வாங்கி வரவேண்டும். செட்டியாரம்மா மாலை பால் கொண்டு வரும்போது பசும்பாலை ஒரு லிட்டர் கூடுதலாய் கேட்டு வாங்கி அதை அபிஷேகத்துக்கு வாளியில் ஊற்றி வைத்து அப்பா மாலை மலைக்கு புறப்படத் தயாராகும்போது எல்லாவற்றையும் எடுத்துத் தர வேண்டும் என்று மிக வேகமாய் முடிவுக்கு வந்து விட்டாள் ஜெயந்தி.

காலண்டரைப் பார்த்தபடி நின்ற அவளை சதா சிவமும் குளித்துவிட்டு தலையைத் துவட்டிக் கொண்டு பார்த்தபடியே வந்தார்.

"என்னம்மா... காலண்டரையே பார்த்தபடி நின்னுட்டே?"

"இன்னிக்கு பௌர்ணமிப்பா, அதான் நீங்க மலைக்குப் போவீங்களே உங்களுக்கு சந்தனம், வில்வ மாலை எல்லாம் தயார் பண்ணணுமேன்னு நினைச்சு கிட்டிருந்தேன்..."

-அவள் சொல்லவும், சதாசிவம் முகத்தில் ஒரு தீர்க்கமான சிந்தனை... முகத்தில் அதன் எதிரொலிகள்.

"அப்பா..."

"உம்..."

"ஏன்பா மௌனமாயிட்டீங்க..."

"ஒண்ணுமில்லம்மா.... இன்னிக்கு மலைக்குப் போகணுமான்னு ஒரு நிமிஷம் யோசிச்சு பார்த்தேன்..."

"ஏம்ப்பா அப்படி?"

"ஒரு சோர்வுதான்..."

"சோர்வா... உங்களுக்கா?"

"ஏம்மா நான் என்ன கடவுளா? நானும் மனுசப் பிறவிதானே. எனக்கும் மனச்சோர்வு வரக்கூடாதா என்ன?"

"என்னப்பா இது-பல வருசமா விடாம பௌர்ணமி தவறாம மலைக்குப் போய்ட்டு வர்ற நீங்க இன்னிக்கு ஏம்ப்பா சோர்வு அது இதுங்கறீங்க?"

"எல்லாம் உங்கள நினைச்சுத்தாம்மா...."



- சதாசிவம் பேசிக்கொண்டே கொடியில் கிடந்த காய்ந்த வேட்டியை எடுத்து கட்டிக் கொள்ளத் தொடங்கினார்.

"எங்கள நினைச்சா-நாங்க என்னப்பா பண்ணோம்?"

"கிடு கிடுன்னு வளர்ந்து கண் எதிர்க்க தளதளன்னு நிக்கறீங்களேம்மா... இதைவிட தனியா ஏதாவது பண்ணணுமா என்ன?"

"என்னப்பா சொல்றீங்க?"

"புரியலியா பெரியவளே... நேராவே விசயத்துக்கு வரேன். இப்ப உன் வயசு என்ன தெரியுமா?"

"இருவத்தி ஏழு!"

"உனக்கு அடுத்தவளுக்கு...?"

"இருவத்தி நாலு..."

"கடக்குட்டிக்கு..."

"இருவதோ, பத்தொம்பதோ..."

"அவளக்கூட விடு.... உனக்கும் அடுத்தவளுக்கும் எப்பவோ கல்யாண பிராயம் வந்தாச்சு. ஆனா, மாப்ளை கிடைச்ச மாதிரியே தெரியலியேம்மா..."

"ஓ.... எங்க கல்யாண கவலையா...?"

- ஜெயந்தி சற்று சாதாரணமாகத்தான் கேட்டாள்.

"என்னம்மா அப்படி கேட்டுட்டே... கல்யாண கவலையான்னு.... அது அது நடக்க வேண்டிய வயசுல நடந்தால்லம்மா நல்லாருக்கும்?"

- சதாசிவம் சுரத்தில்லாத குரலில் கேட்ட விதமே அவர் எவ்வளவு கவலைப்படுகிறார் என்பதை காட்டிக் கொடுத்துவிட்டது.

ஜெயந்திக்கு ஏனோ அந்த பேச்சே பிடிக்கவில்லை. ஆனால், படுத்திருக்கும் நிலையில் முழித்துக் கொண்டுவிட்ட அவளுக்கு அடுத்தவளான நந்தினி அவர்கள் இருவரின் பேச்சையும் கேட்டபடி இருந்தாள்_ கடைக் குட்டிக்காரி ஒரு மரவட்டை போல சுருண்டு படுத்திருந்தாள். முழித்த மாதிரியே தெரியவில்லை.

"அப்பா.... எதுக்குப்பா இப்படி காலங்கார்த்தால கண்ட கண்ட கவலை எல்லாம் உங்களுக்கு. இப்ப என்னாயிடுச்சு... பொண்ணுங்கன்னா கட்டாயம் கல்யாணம் பண்ணிக் கிட்டுதான்தீரணுமா? ஏன் அவங்களால தனியால்லாம் வாழ முடியாதா...?"

- ஜெயந்தி இப்படிக் கேட்பது ஒன்றும் அவருக்குப் புதிதில்லை. கல்யாணப் பேச்சு எப்பொழுதெல்லாம் வந்திருக்கிறதோ அப்போதெல்லாம் கேட்டிருக்கிறாள். ஆனால், அப்போதெல்லாம் சொல்லாத ஒரு பதிலை சதாசிவம் சொல்லத் தொடங்கினார்.

"அம்மாடி... மனுஷ வாழ்க்கைங்கறது ரெண்டு விதம். ஒண்ணு, குடும்பம். இல்லேன்னா சந்நியாசம்! இந்த ரெண்டுல ஏதாவது ஒண்ணுல தெளிவா நின்னுடணும். இதுல ஒரு கால், அதுல ஒரு கால்னா உருப்படாது. குறிப்பா உன்னைப் போல கால் ஊனமான பெண்களுக்கு கட்டக்கால் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கட்டிக்கப் போறவன்.

நந்தினி, ராகவி பத்தி கூட எனக்கு கவலையில்லை. அவங்களுக்கு கைகால் நல்லா இருக்கு. ஏதாவது கூலி வேலை பார்த்து, அவ்வளவு ஏன் பிச்சை எடுத்தாவது பிழைக்க வைக்க முடியும். ஆனா, உன் வரையில....?"

சதாசிவம் கேட்டுவிட்டார். அப்படியே விபூதியை உள்ளங்கையில் வைத்து குழைப்பது, பின் பூசுவது என்று



செயல்களுக்கு அவர் மாறிவிட்டாலும் ஜெயந்தியால் அப்படியெல்லாம் மாற முடியவில்லை. ஸ்தம்பித்து விட்டாள்.

'இந்த ஊனத்தைப் பற்றி இவர்கூட பேசி விட்டாரே...? இதுதான் யதார்த்தமா... நடைமுறையா?'

ஜெயந்தியால் அசையக்கூட முடியவில்லை.

அவரே தோள் மேல் ஒரு துண்டைப் போட்டுக் கொண்டு திரும்பி வந்தார். மகளின் ஸ்தம்பிப்பை பார்த்தவருக்கு அவ்வளவு கூடவா புரியாது.

"தப்பா எடுத்துக்காதே பெரியவளே... நான் உன்னை தாழ்வாவோ, பாரமாவோ கருதிச் சொல்லலை.... ஒரு அப்பனா என் மனசுல பட்டதை பேசினேன்.

- அவளும் மெல்ல விடுபட்டாள்.

"அப்பா.... நீங்க இனி எப்படிப் பேசினாலும் நான் பாரம்ங்கறதுதாம்ப்பா பெரிய நிஜம். இவ்வளவு நாள் நீங்க என்னை வளர்த்ததே பெருசுன்னுதாம்ப்பா மனசுக்கு தோணுது..."

- கன்னங்களில் கண்ணீர் உருண்டிட ஜெயந்தி சொன்னதை கேட்டு அதுவரை படுத்துக் கொண்டிருநத நந்தினி எழுந்து அமர்ந்தாள். அப்படியே காலிரண்டையும் கூரைபோல கூமார்ச்சியாக உயர்த்தி நிறுத்தி அதைக் கட்டிக் கொண்டு ஜெயந்தியையும், அப்பா சதாசிவத்தையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"எழுந்திரு கண்ணு.... மணி ஏழை தாண்டிச்சு பார்... புள்ளைங்கல்லாம் வேற ட்யூஷனுக்கு வர்ற நேரம்" என்று அவள் பார்க்கவும் அவளை உசுப்பிவிட்டார். அவளும்

மென்னமாக எழுந்து கலைந்த தலையைக் கட்டிக் கொண்டு போர்வையை முதலில் இரண்டாக பின் நான்காக அதற்குப்பின் எட்டாக மடித்து வைத்துவிட்டு ராகவியையும்எழுப்பிவிட்டாள். பின் பாத்ரூமுக்கு போய் முகம் கழுவிக் கொண்டு பிரஷ் செய்யத் தொடங்கினாள்.

'கிணுங்.. கிணுங்..' சைக்கிள் மணி சப்தம் கேட்டது. சீரான இடைவெளி விட்டு இரண்டிரண்டு முறை என்று தொடரவுமே அவளுக்குப் புரிந்துவிட்டது.

மெல்ல முகம் துடைத்தபடி வாசற் பக்கம் வந்தாள்.

பார்த்திபன் ஜாகிங் உடையில் வீட்டு வாசலில் தன் ஸ்போர்ட்ஸ் சைக்கிளை நிறுத்திக் கொண்டு அதில் ஏதோ கோளாறு ஏற்பட்டு அதை சரிசெய்பவன் போல கண்ணில் பட்டான்.

அவளுக்கு முகம் பூவாணம் போல ஒரே ஜொலிப்பாகி விட்டது. அவளும் கோலம் போடத் தயாரானவள் போல கோல மாவை ஒரு கையிலும், ஒரு பிளாஸ்டிக் பக்கெட்டில் தண்ணீரையும் நிரப்பிக் கொண்டு வாசல் நோக்கி நடந்தாள். தண்ணீர் தெளித்து கோலம் போடுபவள் போல அவனிடம் பேசவும் தொடங்கி விட்டாள்.

"இப்படியா காலங்கார்த்தால வீட்டு வாசலுக்கு வருவீங்க?"

"ஏன் வரக்கூடாது... வந்தாதானே தேவிதரிசனம் கிடைக்கும்."

"அப்புறம் தேவிக்கு தர்மசங்கடமும் கிடைக்க ஆரம்பிச்சிடும். முதல்ல சைக்கிளை எடுத்துக்கிட்டு நகர்ற வழிய பாருங்க."



"இது கவர்மெண்ட் ரோடு... என்னை எல்லாம் யாரும் விரட்ட வேண்டாம்..."

"ஐயோ! அக்கா பாத்துடப் போறா. ஏற்கெனவே அவ நம்ம விஷயத்துல பெரிய நந்தி. இதுல இன்னிக்கு அப்பா அவகிட்ட கல்யாணப் பேச்செடுத்து காலை லேயே அவள மூட் அவுட் பண்ணிட்டார்..."

இருவரும் கிசுகிசுப்பாகதான் பேசிக் கொண்டார்கள். ஆனால், அது தற்செயலாக வாசல் வரை வந்து விட்ட சதாசிவம் காதில் விழுந்துவிட்டதை இருவருமே உணரவில்லை.

"உங்கக்காக்கு கல்யாணம் ஆகும்னு நீகூடவா நம்பறே?"

"அவளுக்கே அந்த நம்பிக்கை இல்ல... ஆனா, அப்பாதான் விடமாட்டேங்கறார்..."

"அதுசரி... பெத்த அப்பாகூட பேசாட்டி அப்புறம் வேற யார் பேசுவா, பேசாம ஒரு நல்ல நொண்டி மாப்ளையை பார்க்கச் சொல். நொண்டிக்கு நொண்டி தான் மேட்ச் ஆகும். நமக்கும் லைன் க்ளியர் ஆகும்!"

அவன் பேச்சோடு மெல்ல திரும்பினான். சதாசிவம் நிழல் தெரியவும், விதிர்த்துப் போய் எழுந்து நின்றான். நந்தினிக்கும் பகீர் என்றானது. கூடவே மயக்கமும் வந்து விட்டது!

மயக்கம் நீங்கி கண் விழித்தவள் எழுந்து அமர்ந்த போது வெளியே திண்ணைப் பக்கம் ட்யூஷன் மாணவர்களின் குரல் கேட்டது.

'ஹோம் ஒர்க் பண்ணாட்டி ட்யூஷனுக்கு வராதே... என் பேச்சக் கேக்காத ஒரு ஸ்டூடண்ட் எனக்கு தேவையே இல்லை...'

அப்பா சதாசிவத்தின் குரலும் கேட்டது. சமையல் கட்டில் ஜெயந்தி மும்முரமாய் இருக்க, கடைக்குட்டி ராகவி வில்வ இலையை மாலையாக கட்டிக் கொண்டிருந்தாள்.

மெல்ல எழுந்திருந்த நந்தினி, ஜெயந்தியை நோக்கித் தான் சென்றாள். கால் கொலுசு சப்தம் அவர்களையும் திரும்பிப் பார்க்க வைத்தது. ஜெயந்தியை சமீபித்தவளிடம் திரும்பவும் தலைசுற்றல்.... அடிவயிற்றில் ஒரு பந்து பிரள்வது போல ஒரு சன்னமான அவஸ்தை.

திரும்பவும் மயங்கி விட்டாள். இந்த மயக்கத்துக்கு காரணம் பயம்!

## 2

'**ஒ**ரு மனிதனின் வாழ்வில் அவன் தலை எழுத்தை வழி நடத்துவதில் பெரும்பங்கு வகிப்பது அவன் பிறந்த இடமும் அதற்கான சூழலும்தான்! இந்த சூழலில் எப்படிப்பட்ட மனிதர்கள் வாழ்கிறார்கள், எந்த மாதிரியான விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன என்பதே அவரவர் மனஅமைப்பு, யோசிக்கும் முறை போன்றவற்றுக்கு காரணமாகிறது. கிட்டத்தட்ட 18 வயது வரை ஒரு மனிதனை சூழலே வளர்த்துகிறது. அதன் பிறகே மெல்ல சூழலில் இருந்து விடுபட்டு சுயமாக தன்னை உணர்ந்து கொள்கிறான். அப்படியே உணர்ந்து கொண்டாலும் நூற்றுக்கு தொண்ணூறு பேரால் முற்றிலுமாக சூழலில் இருந்து விடுவித்துக் கொண்டு தான் விரும்பும் ஒரு புதிய வாழ்வை வாழ்ந்திட முடிவதில்லை.



பெரும்பாலும் மனித வாழ்க்கை என்பது சூழல் சார்ந்ததாகவே உள்ளது. சூழலே வழி நடத்துகிறது, வளைக்கிறது, திசை திருப்புகிறது, கட்டுப்படுத்துகிறது, எல்லாமுமாய் இருக்கிறது. இதனால்தான் மேலாடை இன்றி சுதந்திரமாய் வீட்டு வாசலில் அமரக் கூட சிலர் கூச்சப்படுகின்றனர்.

சூழல்... சூழல்... சூழல்தான் மனித வாழ்வில் எல்லாமுமாய் உள்ளது. இதுவே ஆண்டி முதல் அரசன் வரை ஆட்சி செய்கிறது. சூழலில் ஒரு எழுத்து ஒரு சுழற்சியை இழக்க, சுழல் என்பது உருவாகிறது. ஆம்! சூழலே சுழல்! சுழலில் சிக்கியவர்களுக்கு சுயமான செயல்பாடு எப்படி இருக்க முடியும்? ஒவ்வொரு மனிதனும், ஏன் ஒவ்வொரு உயிரியுமே கூட சுழலில் சிக்கியிருப்பவையே... முளைவிட்டு வளர்ந்திருக்கும் ஒரு புல் பூண்டுக்கு சுயமாக தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வல்லமை கிடையாது... ஆடும் மாடும் வந்து தின்னும்போது அவை வதைபட்டுத்தான் தீர வேண்டும். இதை எல்லாம் உணர்ந்து வாழ்க்கையின் பூகோளச் சிறையில் இருந்து விடுபட எவரெல்லாம் முயன்றார்களோ அவர்களெல்லாம் சித்தம் விளங்கிக் கொண்ட சித்தர்களாயினர்!'

**ந**ந்தினியிடம் திரும்பவும் மயக்கம்!

பாடம் நடத்திக் கொண்டிருந்த சதாசிவம் திண்ணையில் இருந்தபடியே உள்ளே பார்த்தார்.

"என்னம்மா...?" - உட்கார்ந்த இடத்தில் இருந்தபடியே கேட்டார்.

"ஒண்ணுமில்லப்பா..." நந்தினிக்கு திரும்ப தலை சுத்தல்...

"தப்பா பண்ணிகிட்டிருக்கால்ல... எல்லாமே சுத்தும் அவளுக்கு..."

- என்று சற்று கோபமாக பதில் சொன்னவருக்கு, மாணவர்கள் முன்னால் அதற்கு மேல் பேசுவது விவேக மாய் தோன்றவில்லை. அவர் எழுந்து வரப் போவது மில்லை என்பது ஜெயந்திக்கும் புரிந்தது. அப்படியே சமையல்கட்டிலேயே அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவித்தாள். எழுந்து அமர்ந்தவ ளுக்கு வாந்தியும் வர ஆரம்பித்தது. ஜெயந்திக்குள் ஒரு வித பகீர் உணர்ச்சி பரவத் தொடங்கியது. நந்தினி எழுந்து போய் வாந்தி எடுத்துவிட்டு முகத்தை துடைத்த படியே வந்தாள். ஜெயந்தியும் ராகவியும் நட்டமரம் போல நின்றுகொண்டு வெறித்தபடி இருந்தனர். அவர்கள் சாதாரணமாக பார்க்கவில்லை என்பதும் பளிச்சென்று விளங்கியது.

நந்தினியை அதுவே சங்கடப்படுத்தி தலையை சாயச் செய்தது.

"முதல்ல மயக்கம்... அப்புறம் வாந்தி... பயமா இருக்கு நந்தி..."

- ஜெயந்தி ஆரம்பித்தாள்.

"வீட்டு வாசலுக்கே வந்து சைட் அடிக்கற அளவுக்கு அவனுக்குத்தான் எம்புட்டு தெகிரியம். ஏ நந்தினி... எத்தினி மாசமா இது நடக்குது?" - இளையவள் ராகவியும் கேட்டாள்.

"வாயத் தெறந்து பேசு புள்ள... நீ இங்க மயங்கவும் அந்த பக்கமாய் நோட்டுப் புத்தகத்தோட பசங்க வந்துட் டாங்க. அதான் நீ இப்ப தப்பிச்சு நின்னுகிட்டிருக்கே... அப்பா இவ்வளவு அமைதியா பாடம் நடத்தறார்னாலே அவங்க எல்லாம் போன பொறவு வந்து பட்டை உரிக்கப் போறார்னுதான் அர்த்தம்... எவ்வளவு தெகிரியம் உனக்கு...?

ஜெயந்தியிடம் கேள்வியோடு ஒரு படபடப்பும் வெளிப்பட்டது.

"ஆமா யார் அது... அண்ணாச்சிக்கு அம்மிணி மேலே இருக்கறது தெய்வீக காதலா, இல்ல சும்மா டைம் பாஸிங்குக்கு அலையறாரா?" - ராகவி திரும்ப கிண்டினாள். நந்தினியும் மெல்ல நிமிர்ந்தாள். இருவரையும் மாறி மாறி பார்த்தவள், "பார்த்திக்கு பக்கத்து தெரு தான். தியாகராஜாவில் இன்ஜினியரிங் கடைசி வருசம் படிச்சிகிட்டிருக்கு. அவங்கப்பா பெட்ரோல் பங்க், ஹோட்டல்னு பெரிய வியாபாரி. சொந்தமா ரெண்டு கார்கூட வெச்சிருக்காங்க..."

"ஓ... ஹோட்டல்காரர் ராமலிங்கம் வீடா! நான் கூட கேள்விப்பட்டிருக்கேன். பெரிய இடம்தான். அதான் பையன் கண்ணடிக்கவும் சரின்னு சொல்லிட் டீங்களோ?"

"ஏ சும்மா இருடி... நான் எங்க போனாலும் விடாம துரத்திக்கிட்டு வந்து ஐ லவ் யூன்னா நான் என்னத்த பண்ண?"

"செருப்பால அடிப்பேன்னு சொல்லணும். அவங்க எங்க, நாம எங்க? நம்ம குடும்ப இருப்பு உனக்கு தெரியாது... நீ என்ன சின்ன புள்ளையா?"

"நம்ம குடும்ப இருப்பு தெரிஞ்சதாலதான் நான் அவர் ஐ லவ் யூ சொன்னப்ப மறுப்பா எதுவும் சொல்லலை...." - நந்தினியின் பதிலில் ஒரு மெல்லிய காரம் தட்டுப்படத் தொடங்கியது. ஜெயந்தியும் ராகவி யும் அதிர்வுடன் அவளை பார்த்தனர்.

"அப்படிப் பார்க்காதக்கா... உனக்கு கல்யாணம் பண்றதே அப்பாவுக்கு பெரும்பாடு. அதுவும் எப்ப நடக்கும், எப்படி நடக்கும்னு தெரியாது. இந்த நிலைல நானாவது அப்பாவுக்கு சிரமத்தை குறைப்போமேன்னு தான் பார்த்தி காதலிச்சப்போ சரின்னேன். அது மட்டு மில்ல.... அப்பா பாக்கற மாப்ளை நிச்சயம் இந்த அளவு காசு பணத்தோட காரு, பங்களான்னு இருக்குமான்னு சொல்ல முடியாது. ஒரு வகைல நான் காசு பணத்தோட இருந்தா உங்களுக்கெல்லாமும் ஏதாவது உதவி செய்ய லாம் பாருங்க..."

- நந்தினியின் பேச்சில் அவளுக்குள் இருப்பது காதலே அல்ல என்பதில் இருந்து அவள் கணக்கு போட்டு உறவாடியிருக்கிறாள் என்பதும் தெரிய வரவும், இருவரிடமும் பேச்சு மூச்சு இல்லை.

காதல்கூட பிழையில்லை... அது நடு இதயக்கசிவு! அதை பொருட்படுத்தலாம்... இது கணக்கு! இதை எப்படி எடுத்துக் கொள்வது?

"ஜெயந்திக்கா இவ பயங்கரமானவக்கா... எப்படி எப்படியெல்லாம் கணக்கு போட்டிருக்கா பார்த்தியா? இன்னிக்கு மட்டும் சில விஷயம் தெரியவராம போயிருந்தா இவ ஓடிப் போய் மாலையும் கழுத்துமாவே வந்து நின்னுருப்பாக்கா..."

- ராகவி, ஜெயந்தியிடம் தன் ஆதங்கத்தையும் கோபத்தையும் காட்டியபோது வெளியே ட்யூஷன் ஒரு முடிவுக்கு வந்திருந்தது. ராகவி திண்ணைப்பக்கம் பார்த்துவிட்டு, "ட்யூஷன் முடிஞ்சிடிச்சு... அப்பா இங்க தான் நேரா வருவாரு. எங்ககிட்ட உளறின மாதிரி உளறாம அந்த பையன்தான் சுத்தி வர்றான். நான்



இனிமே அவன் முகத்துலகூட முழிக்க மாட்டேன்னு சொல்லு...." என்று ராகவி எடுத்து வேறு கொடுத்தாள்.

அவரும் வந்து நின்றனர்.

மூவரையும் ஆழமாக பார்க்கத் தொடங்கினார்.

மூச்சு ஓட்டத்தில் ஒரு இயல்பில்லை.

மெல்ல பேசத் தொடங்கினார்.

"கண்ணுங்களா.... அப்பா ஏழைதான். ஆனா, மானஸ்தன்றது உங்களுக்கு நல்லா தெரியும். தாயில்லாத உங்க கிட்ட நான் தாயாவும் இருந்து வந்துருக்கேன். உங்க மேல எல்லாம் எனக்கு மலையளவுக்கு நம்பிக்கை... அதை நீங்க காப்பாத்திகிட்டாகணும். யார் ஒருத்தர் தப்பு பண்ணாலும் அது அவங்களோட போயிடாது... மத்த வங்களையும் பலமா பாதிக்கும். புரிஞ்சு நடந்துக்குங்க."

-என்று கனிவாக பேசியவர், நந்தினியை மட்டும் நேருக்கு நேர் பார்த்தவராக, "நீ தப்பு பண்ணிட்டதாவே நான் நினைக்கல... உன் வயசு அப்படி! இனி பண்ணாதே. அதே சமயம் பெரியவளுக்கு ஒரு கல்யாணம் வேகமா நடந்தாதான் உங்களுக்கெல்லாம் ஒரு வழி பொறக்கும் கறது எனக்கு தெரியாம இல்லை.

என்னை மாதிரி காசுபணமில்லாத ஏழைக் கெல்லாம் கடவுளா பாத்து கை கொடுத்தாத்தான் உண்டு. கண்ட கர்மத்தால மனுசப் பிறப்பெடுத்துட் டோம். அதை கர்மத்துக்கு தகுந்த மாதிரி அனுபவிச்சுத் தான் தீர்க்கணும்... உங்களுக்கெல்லாம் நல்லது நடந்து நீங்க நல்லாருக்கணும் எல்லா கர்மமும் என்னோட போயிடணும்னுதான் பூலோக கைலாசம்கற சதுர கிரிக்கு நான் மாசம் தவறாம போய்ட்டு வரேன்.

இன்னிக்கு போறத பத்தி கொஞ்சம் யோசிச்சேன். நீ அந்த பயகிட்ட பேசின பேச்சு எனக்குள்ள பயத்தை உருவாக்கிடிச்சு... அந்த பயம் அதிகமாகி என்னை கலங்கடப் படுத்திடக் கூடாதுன்னுதான் ட்யூஷனுக்கு வந்த பசங்கள நான் திருப்பி அனுப்பல. அவங்களுக்கு முன்ன விட அதிக அக்கறையோட பாடம் சொல்லித் தந்தேன். அதே அக்கறையோட நான் இன்னிக்கு மலை ஏறப் போறேன். இது எனக்கு நூறாவது மலை... இன்னும் எட்டு மலை நான் ஏறி இறங்கறதுக்குள்ள என் சாமி, பெரியவளே! உனக்கு ஒரு நல்ல வழிய காட்டணும். அப்படி காட்டுனாதான் அது சாமி. இல்லாட்டி அந்த சாமியை நான் எப்பவும் நினைக்க மாட்டேன். அதுவரை அப்பாவை கலங்கப்படுத்திடாம நல்ல விதமா இருங்க பசங்களா... அப்பா உங்கள கெஞ்சி கேட்டுக்கறேன்..."

- சதாசிவம் பவ்யமாக பேசிவிட்டு நகர்ந்து கொண்டார். மூவருக்குள்ளேயும் ஒரு நெகிழ்ச்சி... அவர் கோபமாக கத்தியிருந்தால்கூட அவர்களுக்குள் அப்படி ஒரு நெகிழ்ச்சியோ இல்லை அது தொடர்பான எண்ணங்களோ ஏற்பட்டிருக்காது.

ஜெயந்தி நந்தினியை பார்த்து, "நந்தி... நீ இன்னிக்கு தப்பிச்சேடா! அப்பா பட்டை உரிக்கப் போறார்னு தான் நினைச்சேன். நல்லவேளை... இப்பகூட கெட்டுப் போயிடல. அவனை மறந்துடு. நானும் அவனைப் பார்த்தா பக்குவமா சொல்லி வைக்கிறேன்..." என்றாள். நந்தினியின் கண்ணிரண்டும் கலங்கி பொலபொல வென்று கண்ணீர் பெருக்கெடுக்கத் தொடங்கி விட்டது.

"ஏம்ப்பா அழறே.... அப்பாவை நோகடிச்சுட் டோம்னா?"



"இல்லக்கா"

"பின்ன...?"

"அக்கா..."

"சொல்லுப்பா... அந்த பார்த்திபன் விடாம ஏதாவது பண்ணுவான்னு பயப்படறியா..."

"இனி பண்ண என்னக்கா இருக்கு... அதான் எல்லாம் முடிஞ்சிடிச்சே..."

"என்னடி சொல்றே..."

"அக்கா...!"

"அட எழவெடுத்தவளே...வாயத் திறந்து சொல்லு..."

"அக்கா நான் வாந்தி எடுத்ததை பார்த்துமா உனக்கு புரியல...?"

நந்தினி கண்ணீரோடு கேட்ட விதமே ஜெயந்தியை உலுக்கிவிட்டது.

"நந்தினி..." என்றாள் அதிர்ந்த நிலையில்!

அம்மாடிஈஈ...' என்றொரு பலமான குரல்... மூவரும் பார்த்தபோது சதாசிவம் நெஞ்சைக் கையில் பிடித்தபடி கீழே விழுவது தெரிந்தது!

**வ**த்றாயிருப்பு பேருந்து நிலையம்!

மதுரையில் இருந்து வந்திருந்த பேருந்தில் இருந்து நிறையவே பயணிகள் உதிர்ந்தனர். அவர்களில் தியாகவும் ஒருவனாக இருந்தான். ஜீன்ஸ் பேண்ட், டி ஷர்ட், சுருட்டை முடி கூட்டத்துக்குள் ஏற்றிவிட்ட நிலையில் சிக்கிக் கொண்டிருக்கும் கூலிங் கிளாஸ் சகிதம் நவநாகரிக பிரதிநிதியாகத்தான் தெரிந்தான். இடது

தோளில் ஒரு தோல்பை தொங்கியபடி இருந்தது. காலில் ரேபான் ஷூஸ்!

இறங்கிய இரண்டாவது நிமிடம் சிகரெட் ஒன்றை தேடி எடுத்து இதழிற்குள் செருகிக் கொண்டான். புகைக்கவும் தொடங்கி விட்டான். இடுப்புத் தோல் கூட்டுக்குள் செல்போன் இருந்து 'தோழியா என் காதலியா யாரடி நீ பெண்ணே?' என்கிற சினிமா பாடல் ரிங்டோனாய் ஒலிக்கவும் எடுத்து காதைக் கொடுத்தான்.

"வந்துட்டீங்களா தியாகு தம்பி..."

"உம்.... உங்க ஊர் பஸ் ஸ்டாண்டுலதான் நிக்க றேன்... நீங்க எங்க இருக்கீங்க சுப்புண்ணா..."

"நான் வந்துகிட்டே இருக்கேன். பஸ் ஸ்டாண் டுக்கு வெளிய இனிப்புசேவு கடை ஒண்ணு இருக்கும். அது வாசல்ல நில்லுங்க. வந்துடறேன்..." சுப்புண்ணா என்று அவனால் அழைக்கப்பட்ட சுப்புரத்தினம் என்பவ ரிடம் பேசி முடித்த நிலையில் அந்த சேவு கடையை நோக்கிதான் நடந்தான்.

அப்படி ஒரு இனிப்பு பலகாரத்தை அவன் சென்னையில் பார்த்ததுகூட கிடையாது. கடையில் சூரியன் எஃப்.எம். அலறிக் கொண்டிருந்தது. ஒரு பக்கம் டீக்கடை..... ஊதி ஊதி சூப்பியபடி ஒரு கூட்டம். பலர் உதட்டில் பீடி இருந்தது. எல்லாமே லாகிரி ஐட்டங்கள். இவை எல்லாம் இல்லாவிட்டால் மனித சமூகம் என்ன செய்யும் என்று ஒரு குறும்பான கேள்வி அந்த வேளையில் தியாகுவுக்குள் ஓடியது.

குறிப்பாக சிகரெட் இல்லாவிட்டால் தான் என்னாவேன் என்று எண்ணிப் பார்த்தவன், பேசாமல் தற்கொலை செய்து கொண்டுவிடலாம் என்றும்



எண்ணிக் கொண்டான். அப்படியே ஒரு தாவர இலையை சிகரெட்டாக்கிய மனித மூளைக்கு நோபல் பரிசுகூட தரலாம் என்றெல்லாம் அவனுக்குத் தோன்றியது.

இந்த மனிதனுக்குத்தான் எப்படி ஒரு தேடல் புத்தி?

இலைக்குள் புகை இருப்பதை அவன் எப்படி கண்டுபிடித்திருப்பான்..

சிகரெட்டை விடுங்கள்... இந்த கள்ளச்சாராயம்?

அழுகல் வாழைப்பழம், பழைய அரிசிக் கழுநீர், உடைந்த பேட்டரித்துண்டுகள் என்று சாக்கடைக்கு போக வேண்டிய ஐயிட்டங்களுக்குள் தலையைச் சுற்ற வைக்கும் ஒரு திரவம் சாராயம் என்ற பெயரில் ஒளிந் திருப்பதை கண்டுபிடித்தவனுக்கு ஒரு நாட்டையே எழுதித் தந்தாலும் தவறில்லை என்றும் தோன்றியது அவனுக்கு.

அந்த வேளைக்கு எங்காவது சாராயம் கிடைத் தால் பரம சுகமாய் இருக்கும் என்றும் தோன்றியது. பக்கத்தில் ஒரு பெருசு கதகளி ஆடியபடியே கடைக்கு வந்தது. அனுபவிக்கத் தெரிந்த ஜென்மம்! பார்த்த மாத்திரத்தில் தியாகுவை குஷி தொற்றிக் கொண்டது.

"அண்ணாச்சி கொஞ்சம் இப்படி வாங்க..."

அந்த நபரும் வந்தார்... உடம்பில்தான் நிற்க முடியாத தள்ளாட்டம்.

"உள்ள இறங்கியிருக்கறது டாஸ்மாக் சரக்கா.... இல்ல காச்சுன சரக்கா?"

"எதா இருந்தா உனக்கென்ன?"

"பாத்தியா... வெறைக்கிறியே." எனக்கு டாஸ்மாக் போரடிச்சுப் போச்சுப்பா. காய்ச்சுனது வேணும். அதான் கேட்டேன்..."

“அப்படியா விஷயம். நீ நம்மாளுதான்! இந்த ஊர்ல காச்சுன சரக்கு வேணும்னா மலையாளத்தார் தோப்புக்குப் போனா கிடைக்கும். சடையன் கடை போட்ருக்கறது அங்குதான்... நீல்லாம் ஒரு கிளாஸுக்கு தாங்க மாட்டே... நான்லாம் நாலு கிளாஸை ஏத்திகிட்டு எப்படி ஸ்டெடியா நிக்கறேன் பார்த்தியா?” என்று அந்த பெருசு ஒரு ஆட்டம் ஆடியது.

ஆடுவதே குடிகாரர்கள் வரையில் ஸ்டெடிதான்...

‘ஆஹா... மலையாளத்தார் தோப்புல கிடைக்குமா... அப்ப போற வழியிலையே போட்டுக்க வேண்டியதுதான்...’ அவன் தனக்குள் தீர்மானித்துக் கொண்டபோது ஒரு டிவிஎஸ் ஃபிஃப்டியில் சுப்புண்ணா என்று அவன் அழைத்திருந்த நபர் வந்து சேர்ந்திருந்தார்.

“தியாகு !”

“அடடே... அண்ணே வந்துட்டீங்களா?”

“வராம... நீ வரப் போறேன்னு போன் வந்ததுல இருந்தேல்ல வீட்ல காத்துக்கிட்டு இருக்கேன்...”

“ஆமா, இந்த வண்டியிலயா போகப் போறோம்?”

“ஏன் தியாகு... ஏறி உக்கார். எப்படி இழுக்குதுன்னு பார்.”

“பாவம்ணே... இப்ப டி.வி.எஸ். கம்பெனியிலேயே இதை அவ்வளவா தயாரிக்கறதில்ல. அவங்க பைக்குக்கு மாறிட்டாங்க.”

“இப்ப எதுக்கு இதை சொல்றே?”

“இல்ல... இது உங்கள இழுக்கறதே பெருசு... நான் வேற சேர்ந்தா என்னாகும். யோசிச்சு பாருங்க...”



“வந்த உடனேயே கச்சேரியை ஆரம்பிச்சிட்டியா... ரகளையான பார்ட்டிப்பா நீ ! உக்கார், உக்கார்...”

அவர் புன்னகைக்க, அவனும் தொற்றிக் கொள்ள, கொஞ்சம் திணறினாலும் சமாளித்து வேகம் எடுத்து உருள ஆரம்பித்தது அந்த வாகனம்.

“போற வழியில அப்படியே மலையாளத்தார் தோப்பு பக்கம் போய்ட்டு போங்க... கொஞ்சம் சுருதி சேர்த்துக்கறேன்...”

“அடப்பாவி... வந்து இறங்குன அஞ்சு நிமிஷத்துல ஐயிட்டம் எங்க கிடைக்கும்னு தெரிஞ்சிகிட்டியாக்கும்?”

“போங்கண்ணே... வாழப்போற காலமே அறுபது வருசமோ, எழுபது வருசமோ... இதுல வாலிபம் ஒரு பத்து பதினஞ்சு வருசம் இருந்தா அதிகம். இப்ப அனுபவிக்காம வேற எப்ப அனுபவிக்கறதாம்...”

“தத்துவம்லாம் பேச ஆரம்பிச்சிட்டியாக்கும்.... ஆமா, நீ எப்படி தியாகு மலை ஏறப் போறே?”

அவர் கேட்டபடியே ஓரம்கட்டி வண்டியை நிறுத்தவும் செய்தார்.

“ஏண்ணே... சுருதி சேத்துக்கறதுக்கும் மலை ஏற்றத்துக்கும் என்ன சம்பந்தம்?”

“தியாகு! உனக்கு எங்க ஊர் மலை பத்தி சரியா தெரியல... இது ஒண்ணும் பரங்கி மலை மாதிரி இல்லப்பா. சித்தர்கள் நடமாட்டமுள்ள பூமி. இங்க பயபக்தி ரொம்ப முக்கியம்...”

“அப்படின்னா...?” தியாகு கேட்டுவிட்டு பெரிதாக சிரிக்கவும் தொடங்கினான்.

# 3

'சதுரகிரி மலையில் மனிதச் சூழலிலிருந்தும், சமுதாயத்தின் மற்ற அவ்வளவு சூழலில் இருந்தும் விடுபெற்று தங்களை எந்தவித கோளின் ஆதிக்கத் துக்கும் இடம்கொடுத்துவிடாமல் வழிநடத்திக் கொள்ளும் சித்தர்கள் ஏராளமானவர்கள் உள்ளனர்.

இவர்கள் நினைத்தால் ஒரு மனிதனின் வாழ்க் கையையே தலைகீழாக மாற்றி விடுவார்கள். அது எந்தவிதமாகவும் இருக்கலாம்.

இந்த சித்த புருஷர்கள் மனிதவடிவில் நட மாடும் தெய்வங்கள் என்று சொன்னால் ஆச்சரியப் படத் தேவையில்லை.

சித்த சாகசங்கள் மொத்தம் எட்டு... அனிமா, மகிமா, இலஹிமா, கரிமா, பிராகாமியம் (கூடுவிட்டு கூடு பாய்தல்), வசித்வம், காமாவசாயித்வம், ஈசத்வம் என்று எட்டு சாகச நிலைகளை கூறுவார்கள்... இந்த எட்டையும் எட்டிவிட்டவர்கள் அந்த பரம்பொருளின் அவ்வளவு சக்தியையுமே பெற்றுவிட்டவர்கள் என்றால் மிகையில்லை.

இப்படிப்பட்டவர்களால் ஒரு புது உலகையே படைத்து அதில் உயிர்களையும் புகுத்தி அவைகளை நிர்வகிக்கவும் முடியும். ஆனபோதிலும் இவர்கள் பரம்பொருளாகிய ஈசனின் திருவடி நிழலில் கிடக் கவே விரும்புவார்கள்... இப்படி ஈசனோடு ஈசனாக கிடக்கும் பல சித்த புருஷர்களை கொண்ட சதுரகிரி மலையில் அவர்கள் நம் கண்களில் பட நமது ஜாதக அமைப்பு இடம் தர வேண்டும்!"



தியாகு சிரித்தான்.... குறிப்பாக சுப்புரத்தினம் பயபக்தி ரொம்ப முக்கியம் என்று கூறியதை கேட்டு அவன் வெகுவாகவே சிரிப்பான் என்பதும் சுப்புரத்தினம் எதிர்பார்த்த ஒன்றுதான்!

தியாகு சிரித்ததோடு நிற்கவில்லை.

"அண்ணே... உங்களை மாதிரி ஆட்கள்லாம் தாண்ணே இந்த உலகத்துல ரொம்ப இருக்கீங்க. நீங்கள் லாம் திருந்தவே மாட்டீங்களா?" என்று கேட்கவும் செய்தான்.

"ஆரம்பிச்சிட்டியா தியாகு... உன் பகுத்தறிவுப் பிரசாரத்தை தொடங்கிடாதே. உன்னைவிட நூறு மடங்கு கூடுதலான கேலியும் சிரிப்புமான ஆட்களை எல்லாம் இந்த மலை பார்த்திடுச்சு. அவங்க கேக்காத எந்த ஒரு கேள்வியையும் நீ கேட்டுடப் போறதில்ல. நீ எதுக்கு வந்தியோ அதை மட்டும் பேசு.." என்றார் சுப்பு ரத்தினம்.

"ரைட்ணே... ஸ்டார்ட்டிங்லையே பெரிய திண்டுக்கல் பூட்டா போட்டுட்டீங்க! நான் இப்ப இந்த மலைக்கு வந்துருக்கறது ஒரு கட்டுரை எழுதறதுக் காக. இந்த மலைல ஒரு சிவன் கோவில் இருக்குதாம். மகாலிங்க சாமி கோயில்னு அதுக்குப் பேராம். அந்த கோவிலுக்கும் இப்ப லட்சக்கணக்குல ஜனங்க வர ஆரம்பிச்சுட்டாங்களாம். ஒரு சபரி மலையை நார அடிக்கறது போதாதுன்னு இந்த மலையும் அந்த மாதிரி நாரப்போகுதுன்னு எங்க பத்திரிகையில் இருக்கிற பெரியவங்க கவலைப்படறாங்க. நம்ம மக்கள் கங்கை, காவேரி, தாமிரபரணின்னு ஆறுங்களை ஒரு வழி பண்ணாங்க. அப்புறம் திருப்பதி, பழனி, சபரி மலைன்னு

மலைகளையும் விட்டு வைக்கல. இப்போ சதுர கிரியையும் ஒரு வழி பண்ணப் போறாங்கன்னு கேள்வி. இவ்வளவுக்கும் காரணம் பேராசை, பயம்கற உணர்ச்சிகள். அதை பக்திங்கற பேரால மூடி மறைச்சுகிட்டு இன்னும் எவ்வளவு நாளைக்குதான் இந்த சமுதாயத்துல தானும் ஏமாந்து சமுதாயத்தையும் ஏமாத்தப் போறாங்களோ தெரியல..." என்றான்.

"ஜனங்க நல்ல வழிக்கு திரும்பறது உனக்கு இப்படி எல்லாம் தெரியுதாக்கும். ஒழியுது போ. கறுப்புக் கண்ணாடி போட்டுக்கிட்டு பார்க்கறவனுக்கு எல்லாம் கறுப்பாதான் தெரியும். நீ ஒரு விஷயத்தை புரிஞ்சுக் கணும்... மத்த மலைங்கள்லாம் எப்படியோ, இந்த சதுரகிரி அப்படி கிடையாது. இங்க தப்பும் தவறுமா யார் வந்தாலும் சரி, ஒரு வழி ஆகிடுவாங்க."

"என்னண்ணே மிரட்றீங்க... மொதல்ல எது தப்பு, எது சரிங்கறதுலையே உங்களுக்கெல்லாம் தெளிவில்ல. ஆமா... அப்படி என்னதான் நடந்துடும்?"

"அது எனக்கு தெரியாது... ஆளுக்கு தகுந்த மாதிரி நடக்கும், அது மட்டும் தெரியும்.."

"அப்ப நான் தண்ணிய போட்டுட்டு மலை ஏறினா எனக்கு சிக்கல்ங்கறீங்க?"

"வேண்டாம் தியாகு... வீம்புக்கு எதையாவது செய்யாதே. இந்த பூமில கோடிக்கணக்குல ஜனங்க இருக்கலாம். ஆனா, எல்லாராலயும் சதுரகிரி பக்கமெல்லாம் வர முடியாது. அதுகக்கு கொஞ்சமாவது புண்ணியம் பண்ணியிருக்கணும்னு சொல்வாங்க.... நீ செஞ்ச புண்ணியம்தான் கட்டுரை எழுதற சாக்கை வெச்சு இந்த பக்கம் வந்துருக்கே. வந்த வேலையை



மட்டும் பார். கடமையைச் செய்ய வந்த இடத்துல தண்ணி, போதை எல்லாம் தப்பு இல்லையா?"

"உண்மைதாண்ணே... டூட்டி பார்க்கும்போது தண்ணி சாப்பிடக்கூடாதுதான் - ஒத்துக்கறேன். ஆனா, தப்பா போனா நடக்கக் கூடாதது நடக்கும்னு நீங்க சொல்லிட்ட பிறகு அது என்னன்னு பார்த்துடணும். விடக்கூடாது. அதான் நல்ல தைரியமான பத்திரிகைக்காரனுக்கு அழகு!"

தியாகு சொன்னது மாத்திரமல்ல... மலையாளத்தார் தோப்பு நோக்கிச் செல்லவும் தொடங்கி விட்டான்.

சுப்புரத்தினம் தலையடித்துக் கொண்டு கூடவே செல்ல ஆரம்பித்தார்! அப்படியே பயப்படவும் செய்தது அவர் மனது.

அந்த பங்களா பார்ப்பதற்கு படு பகட்டாக இருந்தது. முகப்பில் கிராதிகம்பி கேட்டோ ஏதோ கோட்டை கதவு போல இருந்தது. ஒரு வாட்ச்மேன் வேறு முன்னால் யூனிஃபார்மில் காணப்பட்டான்.

சதாசிவமும் ஜெயந்தியும் அந்த பங்களா முகப்பில் நிற்படி இருந்தனர். சதாசிவம் முகத்தில் சுரத்தே இல்லை. ஆனால், ஜெயந்தியிடம் ஒரு மெல்லிய கோபமும், ஆவேசமும் தெரிந்தது.

"யாருங்க நீங்க.. என்ன வேணும்?" எ ாறு கேட்ட வாட்ச்மேனை முறைத்தவள், "உள்ள ( பாய் தமிழ் வாத்தியார் சதாசிவம் வந்திருக்கார்னு ( சால் - உங்க முதலாளிக்கு நல்லா தெரியும்.." என்றாள்

அடுத்த ஐந்தாவது நிமிடம் இருவ ,ம் ஹோட்டல் காரர், பங்க்காரர், தியேட்டர்காரர் எ ்று பலராலும்

பல மாதிரி அழைக்கப்படுகிற ராமலிங்கம் என்கிற கோடீஸ்வரர் முன்னால் அமர்ந்திருந்தார்கள்.

“வாங்க சார்... எங்க இவ்வளவு தூரம்?” என்று அவர் கேட்டபோது வெளியே இருந்து உள்ளே நுழைந்த பார்த்திபனும் அவர்களை பார்த்து ஒரு மாதிரி ஷாக் ஆனான். பின் சாதுவாக மாடிப் படியும் ஏறத் தொடங்கினான்.

சதாசிவம் பார்வையும், ஜெயந்தியின் பார்வையும் அவன் மேலேயே இருந்தது. ராமலிங்கமும் கவனித்தார்.

“சதாசிவம் சார்... என்ன விஷயம்னு சொல்லுங்க...” என அவர்கள் இருவரையும் கலைத்தார்.

சதாசிவம் ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்.

“என்ன சார்?”

“எனக்கு எப்படி ஆரம்பிக்கறதுன்னே தெரியலைங்க...” என்றார்.

“என்ன சார் ஏதாவது குடும்ப கஷ்டமா - பண உதவி ஏதாவது வேணுமா?” - ராமலிங்கம் தான் ஒரு பணக்காரன் என்பதை காட்டுவது போல் இருந்த அந்த கேள்வி ஜெயந்தியை கீறியது.

“மன்னிக்கணும்க... உங்ககிட்ட எந்த விதமான பண உதவியையும் எதிர்பார்த்து நாங்க வரலை. நாங்க இப்ப அப்படியே நொறுங்கிப் போய் இருக்கோம். நடந்தது என்னன்னு தெரிஞ்சா நீங்களும் நொறுங்கிப் போயிடுவீங்க...”

“என்னம்மா பீடிகை எல்லாம் பலமா போடறே?”

“உங்க வரைல பீடிகையா தெரியற விஷயம் என் வரைல பீதியை கிளப்பி எங்களை எல்லாம் கட்டுப் பொசுக்கிகிட்டு இருக்குங்க...”



“போதும்மா விஷயத்துக்கு வாம்மா...?” அவரும் சற்று பொறுமையை இழந்து சினத்துக்கு மாறினார். மாடியில் பார்த்திபனும், குறுகுறுத்த விழிகளோடு பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தான். நந்தினி கர்ப்பமாக இருக்கிறாள் என்று கூறுவதற்கான திராணி ஜெயந்தியிடம் இல்லை. எனவே சதாசிவமே தொண்டையை செருமிக்கொண்டு நடந்ததைக் கூறி முடித்தார். ராமலிங்கம் அப்படியே ஸ்தம்பித்து விட்டார்... நம்ப முடியாதபடி பார்வையை மகன் மேல் விட்டார். அவன் தலை தாழ்ந்து கொண்டது. அதுவே அவருக்கு சதாசிவம் சொல்வது பொய் இல்லை என்பதை புரிய வைத்துவிட்டது. “வாடா இங்க...” - என்று உட்கார்ந்த இடத்தில் இருந்து கத்தினார். அவனும் மெல்ல இறங்கி வந்தான். வந்த வேகத்தில் அவரிடம் மாறி மாறி அறைவாங்கத் தொடங்கினான்.

அவ்வளவு அறை வாங்கிக் கொண்டும் அசராமல் நின்றான்.

“பாவிப்பயலே... பாவிப்பயலே... உனக்கு கல்யாண ஆசை வந்திருந்தா அதை என்கிட்டதானேடா சொல்லணும். நீயா ஒரு பொண்ணை பார்த்து தாலி கட்டாமலே குடும்பமும் நடத்த ஆரம்பிச்சிட்டியேடா... படுபாவி... படுபாவி...”

அவர் கண்ணும், மூக்கும் சிவந்து போயிற்று.

அவனோ ஒரு சிலை போல நின்றபடி இருந்தான்.

அவர் மெல்ல சதாசிவம் பக்கம் திரும்பினர்.

“சரிங்க வாத்தியாரே, இப்ப என்ன பண்ணணும் கறீங்க?” என்று கொஞ்சம் அதிகாரத்தோடயே கேட்டார். அதுவே ஜெயந்திக்கு பிடிக்கவில்லை.

"என்ன பண்ணனும்னு அதிகாரமா கேட்டா எப்படிங்க... இது எவ்வளவு பெரிய தப்பு?" என்றாள் அவரைப் பார்த்து.

"அது சரி... என்னமோ என் மகன் கற்பழிச்சுட்ட மாதிரி பேசறியேம்மா.. உன் தங்கச்சியும் சம்மதிச்சு தானே தப்பு நடந்திருக்கு..." - ராமலிங்கத்தின் மடக்க லில் ஜெயந்திக்கு நெற்றி தெறித்துப்போனது.

"ஆமாங்க. என் மக தப்பு பண்ணிட்டா... உங்க மகனும் தப்பு பண்ணிட்டாரு. இந்த தப்பை பெரியவங்க நாமதான் சரிபண்ணனும்.." என்ற சதாசிவம் நெற்றி வேர்வையை வடியவிட்டார்.

"தெரியுமே... நீங்க எங்க வருவீங்கன்னுதான் நல்லா தெரியுமே. இதுக்கு நான் சம்மதிக்காட்டி என்ன பண்ணுவீங்களாம்?"

அவர் அப்படி ஒரு கேள்வியை கேட்பார் என்று ஜெயந்தியோ, சதாசிவமோ எதிர்பார்க்கவில்லை. அது அவர்கள் முகத்தில் அதிர்வலை பரவுவதில் நன்றாக தெரிந்தது.

"பெரியவங்க நீங்க இப்படிச் சொல்லலாமா..." - சதாசிவத்திடம் நாக்கு தழுதழுத்தது.

"வேற எப்படிச் சொல்ல? நாற்பது, அம்பது கோடி ரூபா சொத்து இருக்கு எனக்கு... ஒரு நாலஞ்சு லட்ச ரூபா தேறுமா உங்களுக்கு?"

"நீங்க என்ன சொல்றீங்க?"

"எனக்கு சம்பந்தி ஆகணும்னா அதுக்கு ஒரு தகுதி வேணும்கறேன்."

"என்கிட்ட அது இல்லதாங்கய்யா... நான் ஒரு ஏழை தமிழ் வாத்தியார்தான். ஆனா, மானஸ்தன்..."



"சரி, அப்ப அந்த மானத்தை அடகு வெச்சு பணம் வாங்கி ஒரு ஐந்நூறு பவுன் நகை போட்டு கல்யாணம் பண்ணித் தரேன்னு சொல்லுங்க. யோசிக்கறேன்..."

"ஐந்நூறு பவுனா?" - சதாசிவத்தின் வாய் பிளந்து விட்டது.

"ஆயிரம் பவுன் போட்டு கட்டிக்க எத்தனை பேர் இருக்காங்க தெரியுமா?"

"அத்தனை பேர் இருககும்போது எதுக்குங்க என் தங்கச்சி கிட்ட வந்து இவர் இழையணும்?" - ஜெயந்தி சீறினாள்.

"தோ பார், நொண்டிப் பொண்ணு... உன் கோப மெல்லாம் பத்து பைசாக்கு தேறாதுங்கறத தெரிஞ்சிக்க. திரும்பத் திரும்ப நீ உன் தங்கச்சி தப்பே பண்ணாத மாதிரியே பேசறே. என் பையன் தப்பு பண்ணிட்டான் கறதாலதான் நான் உங்களை உட்கார வெச்சு பேசிக்கிட் டிருக்கேன். அதை நீ கெடுத்துக்காதே..."

"சரிங்க....இப்ப நீங்க முடிவா என்னதான் சொல்றீங்க?"

"என் அந்தஸ்துக்கு ஏத்த மாதிரி ஐந்நூறு பவுன்கற இடத்துல ஒரு நானூறு பவுனாவது போடணும், அப்புறம் நாங்க எதிர்பார்க்கற மாதிரி சிறப்பா கல்யாணம் செய்து தரணும். முடியாதுன்னு எனக்கு இப்பவே நல்லா தெரி யும். ஆகையால நான் ஒண்ணு சொல்றேன், கேட்க நீங்களா?"

- சதாசிவமும் ஜெயந்தியும் அவரை வெறித்தனர்.

"நான் சொல்ற டாக்டர்கிட்ட போய் உங்க பொண்ணை காட்டி முதல்ல அபார்ஷன் பண்ணிடுங்க.

காதும் காதும் வெச்சமாதிரி வேற ஒரு நல்ல இடத்தை உங்க தகுதிக்கு தகுந்த மாதிரி பாருங்க. நானே கல்யாண செலவை ஏத்துக்கறேன்.. என்ன சொல்றீங்க?"

ராமலிங்கம் வியாபாரிகளிடம் பேரம் பேசுகிற அதே பாணியில் பேசினார். சதாசிவத்துக்கு நெஞ்சை அடைக்கத் தொடங்கியது.

பார்த்திபனோ எதுவுமே பேசாமல் அமைதியாக நின்றுகொண்டே இருந்தான்!

## 4

'ஒரு மனிதனைப் பொறுத்தவரையில் அவனது ஜாதகத்துக்கு மிக முக்கியப் பங்கு உள்ளது. தாயின் வயிற்றில் இருந்து வெளிவரும்போது நமக்காக நாமே நேரடியாக சுவாசிக்கும் முதல் காற்றின் துளியில் இருந்து நமது வாழ்நாள் தொடங்குகிறது! அந்த முதல் துளிக்கு பின்னாலேயே அதன் நீளமும் உள்ளது. அந்த நீளமே நமது வாழ்க்கையின் ஆயுள் காலம் எனப்படுகிறது. அந்த முதல் சுவாச வேளையில் உள்ள பூகோள அமைப்பு மற்றும் கிரக சஞ்சாரங்களை வைத்து அவைகளை கூட்டியும், கழித்தும், வகுத்தும், பெருக்கியும் நமது வாழ்க்கை எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ளலாம். ஒருவரது வாழ்க்கை பற்றி தெரிந்துகொள்ள கோள் ஞானம் மிக முக்கியம். கோள் ஞானம் உள்ளவர்களால் ஒருவரது வாழ்க்கை குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட நேரத்தில் எப்படி இருக்கும் என்றுகூட துல்லியமாக கூறிவிட முடியும். இதன் முன்னே விஞ்ஞானம் எல்லாம் மிக மிக



சாதாரணமான ஒரு ஞானமே... இருப்பினும் பலர் விஞ்ஞானத்தை மிக மேலானதாகவும், ஜோதிட ஞானத்தை பொய்யானதாகவும் கருதிப் பேசுகின்றனர். எப்படி அவர்கள் சிந்தித்துப் பேச வேண்டும் என்பதுகூட ஒருவித கோள் அமைப்புதான்.

இந்த கோள் அமைப்பு எனப்படும் ஜாதக கட்டத்துக்குள்தான் சித்த தரிசனம் - அவர்களால் பயனடைதல் போன்றவைகளும் ஒளிந்துள்ளன. அப்படி ஒரு விதிப்பாடு இல்லாதவர்கள் எதிரிலேயே சித்தர் பெருமக்களும் அவர்களது ஆற்றல்களும் தெரியவந்தாலும் அவைகளை சந்தேகப்பட்டு மறுத்து விடுவார்கள்.

அந்த பணக்காரர் இந்த உலகின் எல்லா பணக்காரர்களையும் போலத்தான் நானும் என்கிற மாதிரி பேசியது சதாசிவத்தை அப்படியே நொறுக்கி விட்டது. அவர் பேசியதைவிட கொடுமை, நந்தினியை காதலித்த அவரது மகனான பார்த்திபன், எனக்கென்ன என்பது போல பார்த்துக் கொண்டே நின்றதுதான். ஜெயந்திக்குள் அவனது மௌனம் எரிச்சலை வேக வேகமாக மூட்டியது.

"என்ன பார்த்திபன்.. உங்கப்பா இப்படிப் பேசறது உங்களை பாதிக்கலையா. என் தங்கை வயித்துல வளர்றது உங்க குழந்தை.. உங்க வாரிசு ஞாபகம் இருக்கட்டும்" என்றாள் கோபமான குரலில். அவன் அதற்கும் அசரவில்லை.. அப்படியேதான் நின்றான். ஆனால், ராமலிங்கத்துக்கு ஜெயந்தியின் பேச்சு கணிசமான கோபத்தை மூட்டியது.

"டேய், நீ போடா.. இனி எனக்குத் தெரியாம இவங்க யார்கூடப் பேசினாலும் நீ என் மகன் கிடையாது

இது அவ்வளவும் நான் உழைச்சு சம்பாதிச்ச காசு. இதுல காலணாவை அப்புறம் நான் உனக்கு தரமாட்டேன். தெரிஞ்சுக்கோ...'' என்றார்.

அவன் கீகொடுத்த பொம்மை போல ஆனான். மௌனமாக அந்த இடத்தைவிட்டு அகலத் தொடங்கினான். அதுவே ராமலிங்கம் முகத்தில் ஒரு எகத்தாள சிரிப்பையும் தோற்றுவித்தது.

"ஐயா! அது அநியாயம், நியாயம் கேட்டு வந்த எங்களை நீங்க இவ்வளவு மலிவா நினைக்கக் கூடாது. இப்படி விலை பேசவும் கூடாது."

ஜெயந்தியின் கண்களில் நீர் துளிர்த்து விட்டது.

சதாசிவம் மெல்ல கல்லாகிக் கொண்டிருந்தார். அவருக்கு அப்போதே தெரிந்துவிட்டது. இந்த இடத்தில் நியாயம் கிடைக்காது... போராடிய நிலையில் இங்கே தன் பெண் வாழ வந்தாலும் அந்த வாழ்வில் நிம்மதி இருக்காது. இவர்கள் பொருளைப் பெரிதாக நினைப்பவர்கள். பொருளைக் கொண்டு அருளையே வாங்கி விட முடியும் என்று நம்புபவர்கள்...

ராமலிங்கத்தின் பதிலும் அப்படித்தான் இருந்தது.

"சரிம்மா... நீங்க நல்ல நேரத்துல புறப்படுங்க. நான் சொல்ல வேண்டியத சொல்லிட்டேன். போலீஸ் புகார், கோர்ட்ல வழக்குன்னு நீங்க போராட விரும்பினாலும் எனக்கு ஆட்சேபணையில்லை. அதை எல்லாம் ஒரு போன்கால்ல ஒண்ணுமில்லாம பண்ண என்னால முடியும். எப்பவும் தகுதி தெரிஞ்சு நடந்துக்கணும். நல்ல பணக்கார இடத்துப் பையன மயக்கிட்டா காலமெல்லாம் சந்தோஷமா இருக்கலாம்னு முடிவு பண்ணாலே சிக்கல்தான்'' என்ற ராமலிங்கத்தின் முன்னால்



அதற்குமேல் அமர்ந்திருக்க சதாசிவம் விரும்பவில்லை. வலிக்கின்ற நெஞ்சோடு விருட்டென்று எழுந்தார்.

"ஐயா... உங்கள உண்மையான பெரிய மனுஷன்னு நம்பித்தான் வந்தேன். நீங்க சராசரிக்கும் கீழான வர்ங்கறது தெரிஞ்சு போச்சு. எப்பவும் கண்ணாடி பாத்திரம்தான் அதிக ஜாக்கிரதையா இருக்கணும். அது மேலே மோதரக் கல்லுக்கு ஒரு சேதமும் கிடையாது. என் பொண்ணு ஒரு கண்ணாடி பாத்திரம். ஜாக்கிரதைக் குறைவால உடைஞ்சு போயிட்டா... இனி அதை ஒட்ட வெச்செல்லாம் சரிசெய்ய முடியாது. பரவால்ல...! இதை நான் என் தலை எழுத்தா நினைச்சிக்கறேன். நீங்க நல்லா இருங்க. என் பொண்ணு கெட்டுப் போனதுக்கு உங்க மகன்தான் காரணம்கறதை தப்பித் தவறிகூட யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன். அதே சமயம் உங்ககிட்ட இனி எந்த காரணம் கொண்டும் வர மாட்டேன்... நான் வரேன்.''

மிடுக்காக கை எடுத்து ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் புறப்பட்டார். ஜெயந்திக்கே அவரது செய்கை ஆச்சரியமாகத்தான் இருந்தது. ராமலிங்கத்திடம்கூட ஆச்சரியமும் அதிர்ச்சியும் வந்து கூடாரம் போட்டது.

மலையாளத்தார் தோப்பில்.... சரக்கு தயாராக இருந்தது. இடுப்பில் ஒரு பருத்த பாட்டிலில் இருந்த சரக்கை பேப்பர் கப் ஒன்றில் வழிய வழிய ஊற்றியபடி நீட்டினான் சடையன். புளிப்பும் காரமுமான ஒருவித வாடை தியாகுவின் மூக்கிலும் ஏறியது. சுர்ர் என்றும் இருந்தது. அதை ஒரே மூச்சில் குடித்துவிட்டு குளத்தில் விழுந்த கோழி தன் உடம்பை உதறிவிட்டுக் கொள்வது போல உதறியும் விட்டுக் கொண்டான். இன்னொரு கப்பும் கேட்டு வாங்கிக் கொண்டான். சுப்புரத்தினம் வேண்டாம் என்று சொல்லிப் பார்த்துவிட்டு ஒதுங்கி

விட்டார். "என்னண்ணே.... உங்களுக்கு?" என்று அவரிடமும் கேட்டான் சடையன்.

"நான் என்னிக்குடா இந்த கர்மத்தை எல்லாம் குடிச்சிருக்கேன்" என்றார் சுப்புரத்தினம்.

தியாகுவுக்குள் உடம்பு முழுக்க ஒரு வித உஷ்ணம் பரவத் தொடங்கியது. எடை இரண்டும் காந்தத் தொடங்கியது. சரிபாதி என உடம்பை விட்டு நீக்கி விட்டது போல உணர்ந்தான். மிச்சம் மீதி எடை கொண்ட உடம்பும் கூட மிதக்கிற மாதிரி இருந்தது.

"சார்... ஒரு தடவை குடிச்சுப் பாருங்க சார். இந்த உடம்புக்குள்ள நிறைய மர்மம் இருக்கு. அதெல்லாம் குடிச்சாதான் தெரியவரும். நம்ம உடம்புல மாயமா ஒரு ரக்கை முளைக்கும். அப்படியே நம்மளும் பறக்க ஆரம்பிப்போம். அதனாலதான் ஆதாம் ஏவாள் காலத்துல இருந்தே மதுன்னா ஒரு கிரேஸ்... அவ்வளவு ஏன் உங்க புருடா புராணக்கதைகள்கூட தேவலோகத்துல சோம பானம்கற பேர்ல சரக்கு இருக்கு. தேவர்கள் தலைவன்கற இந்திரனே ஒரு பெரிய தண்ணி வண்டின்னுதான் நான் கேள்விப்பட்டிருக்கேன்.

போதைக்கு பயந்து போன சிலர் மதுன்னா பாவம், மதுன்னா குற்றம்னு சொல்லி உங்களை எல்லாம் கோழை ஆக்கி வச்சிருக்காங்க..."

- தியாகு உளறுகிறானா, இல்லை சிந்தித்துதான் பேசுகிறானா என்று சுப்புரத்தினத்துக்கு சந்தேகமாக இருந்தது.

"சரிப்பா.. தண்ணி அடிச்சிட்டேல்ல. ஆகாசத்துல ரம்பை, ஊர்வசி ஆடற டான்ஸெல்லாம்கூட தெரியுதுன்னு சொல்வே நீ! போகட்டும். இப்ப உன் திட்டம் என்ன சொல்..."



"என்ன சுப்பு சார் பெரிய திட்டம் - ஐந்தாண்டுத் திட்டம். இப்படியே மலை ஏற வேண்டியதுதான்.."

"தண்ணி போட்ட இந்த போதையோடயா?

"போதை இருந்தா என்ன சார்.. நான் ஸ்டெடியா தானே நிக்கறேன்?"

"இப்ப ஸ்டெடியா நிக்கறே.. ஆனா, மலை ஏறும் போது சாஞ்சிட்டா.."

"சாயறதா... நானா.." - அவன் உதட்டைச் சுழித்து சிரித்தான்.

"நான் சொல்றத கொஞ்சம் கேளுப்பா. இருட்ட வேற போகுது. இதுக்கு மேல மலை ஏறறது ரொம்ப கஷ்டம். வழியில கூதக்காத்து பின்னி எடுக்கும். போதைக்கும் அதுக்கும் நீபாட்டுக்கு வழியில எங்கேயாவது விழுந்து வெச்சா வம்பா போயிடும். ராத்திரி நேரத்துல காட்டு யானை நிறைய நடமாடும். அதுங்க காலடில கிடக்கறது கட்டைன்னு பாக்காது, கல்லுன்னு பாக்காது. மிதிச்சு பிதுக்கி எடுத்துடும்..."

சுப்புரத்தினத்தின் பேச்சு தியாகுவுக்குள் தீவிரத்தைத்தான் கூட்டிவிட்டது. குடிகாரனிடம் சாதிக்க வேண்டும் என்றால் நேர் எதிராக பேச வேண்டும். அந்த நேக் சுப்புரத்தினத்திடம் இல்லை.

"சுப்பு சார்... எப்ப நீங்க யானை பூனைன்னு சொல்லி என்னை மிரட்டினீங்களோ அப்பவே நான் முடிவு கட்டிட்டேன் சார்... இன்னிக்கு போயே தீர்றதுன்னு..."

"வேண்டாம் தியாகு... நீ படிச்சவன் - அனுபவப்பட்டவன் நான் சொல்றத கேள்..."

"கரெக்ட்! நான் படிச்சவன்தான். அதனாலதான் நீங்க காட்ற பூச்சாண்டிக்கெல்லாம் நான் மடங்கறதா இல்லை. அப்புறம் சுப்புண்ணே! ராத்திரி நேரத்துலதான் இந்த கோமணம் கட்டாத சித்தர் சாமிங்கல்லாம் நிறைய நடமாடுவாங்க. அவங்களை எல்லாமும் பார்க்கணும், அவங்கள போட்டோ பிடிக்கணும், பேட்டி எடுக்கணும்னா நைட் டைம்தான் கரெக்ட். என்ன நான் சொல்றது?" என்று ஒரு குட்டி ஆட்டமும் ஆடினான். சுப்புரத்தினத்தால் அதற்கு மேல் அவனைத் தடுக்க முடியவில்லை. கூப்பிடு தூரத்தில் தாணிப்பாறை என்னும் அடிவாரப் பகுதி கண்ணில் தெரிந்தது. அங்கேதான் பிலாவடி கருப்பசாமிக்கும் ஒரு கோவில் இருக்கிறது. மொத்த சதுரகிரி மலைக்கும் காவல் தெய்வமே அதுதான்... பத்தியோடு வருகின்றவர்களுக்கும் காவல். கருப்பச்சாமி அங்கே ஒரு நாய் வடிவில்தான் காவல்காத்து வருகிறது. கன்னங்கரேலென்றிருக்கும் நாட்டு நாயின் தோற்றம். பார்க்க வெடவெடவென்றிருக்கும். சுப்புரத்தினமும், தியாகுவும் அடிவாரத்தில் வந்து நிற்கவும் குடுகுடுவென்று எங்கிருந்தோ ஓடி வந்து இருவரையும் மூச்சிரைப்போடு பார்த்தது. சுப்புரத்தினம் கைகூப்பி வணங்கத் தொடங்கினார். தியாகு சிரித்தான்.

"என்னண்ணே! நாயை எல்லாம் கும்புடறீங்க?"

"சும்மா இருப்பா. இது நாய் இல்ல... கருப்பச்சாமி."

"பார்றா... கறுப்பா இருந்தா கருப்பச்சாமியா?"

"தியாகு பேசாம வாப்பா... இங்க கருப்புதான் காவல் தெய்வம். நீ இங்கேயே அப்படி உட்காந்திரு. நான் போய் தோப்புல வண்டியை ஒரு ஓரமா நிறுத்திட்டு வந்துடறேன்."



- என்றபடி விலகினார். மிகச் சரியான அந்த நேரத்தில் கருப்பு முன் கற்பூரம் ஏற்றிக் கொண்டிருந்தார் சதாசிவம். கற்பூர சுடர் ஒளியில் அவர் முகம் பளிச்சென்று தெரிந்தது. சாமி கும்பிட்டு முடித்த அவரை அந்த நாய் ஒரு முறைக்கு மூன்று முறை சுற்றி வந்தது. அவரும், "கருப்பா... நான் மலை ஏறணும். என் கூட துணைக்கு வர்றீயா?', என்று கேட்க, அது உம் நான் தயார் என்பதுபோல இரண்டு முறை குரைத்தது.

அவர் முகத்தில் உடனேயே ஒரு திருப்தி. அப்படியே மனதுக்குள் ஒரு புலம்பல்! "கருப்பா! இதான் என்னோட கடைசி தரிசனம்... உன்கிட்ட எல்லாம் சொல்லிகிட்டுப் போகத்தான் வந்தேன். ஒரு தடவைக்கு நூறு தடவை உன்ன நம்பி வந்து தரிசனம் பண்ண வந்த நான் நாளைக்கு இந்த நேரம் குடும்பத்தோட விஷம் குடிச்சி தற்கொலை செய்துகிட்ட விஷயம் ஊர்பூரா பரவிக்கிட்டு இருக்கும்! எனக்கு வேற வழி தெரியல. மானம் பெருசுன்னா நாங்க அவ்வளவு பேரும் செத்துத்தான் தீரணும்... உன்னோட காவலும் அருளும் இருந்துருந்தா நானும் என் குடும்பமும் விஷம் குடிச்சு சாகப்போற ஒரு மோசமான நிலை ஏற்பட்டிருக்காது. ஆனா, அது இல்லேங்கறதுதான் தெளிவா தெரியுதே... இருந்திருந்தா என் மக இப்படி அநியாயமா கெட்டுப் போய் வந்து நின்னுருப்பாளா? அந்த பணக்காரன்தான் அந்த பேச்சு பேசியிருப்பானா?"

- அவர் மனம் கருப்பச்சாமி சந்நிதி முன் குமுறி முடித்தது. பின்னர் மலை ஏறும் பாதை மேல் அவர் நடக்கத் தொடங்கவும், அந்த நாயும் அவரைத் தொடர்ந்து செல்ல ஆரம்பித்தது. பார்த்துக் கொண்டே இருந்த தியாகுவுக்கு ஒரு சிகரெட் பிடிக்க

வேண்டும் போல தோன்றியது. நல்ல குளிர் காற்று வேறு - எடுத்து வந்திருந்த சிகரெட் பெட்டியை திறந்து ஒரு தம் பற்றவைத்துக் கொண்டு ஆழமாய் இழுத்து புகை விடவும் செய்தான்.

முதல் இழுப்பு... இரண்டாவது இழுப்பு... மூன்றாவது இழுப்பின்போது 'ஸ்ஸ்ஸ்!' என்று ஒரு சீற்றம்.. சப்தம் வந்த பக்கம் திரும்பினான். ஒரு நாகம் அவனுக்கருக்கிலான பாறை ஒன்றின்மேல் படம் விரித்தபடி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது!

## 5

'**சி**த்தர்கள் என்பவர்களே மிக மிக புதிரானவர்கள்! முனிவர்கள், ரிஷிகள், யோகிகள், தவசிகள் என்று ஆன்மீகப் பாதையில் நடப்பவர்களுக்கு வித விதமான அடையாளங்கள் உண்டு. முனைந்து தவம் செய்பவர்கள் என்பதே முனைவர் ஆகி பின் முனிவர் என்றானது. அடுத்து ரிஷிகள்.. இவர்கள் வேள்விகளும் புரியக்கூடியவர்கள். வேத வழியில் நடக்க வேண்டும் என்பது இவர்களுக்கான கட்டாயமாகும். யோகிகள் கால நேரம் அறிந்து செயலாற்றுபவர்கள்.. காலகதியில் உள்ள சக்திகளை பயன்படுத்த தெரிந்தவர்கள். தவசிகளோ புலன்களை அடக்கி தவத்தை மட்டுமே புரிபவர்கள்... இவர்களில் சித்தர்கள் எப்படி வேறுபடுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். சித்தம் என்றால் மனது என்றும் ஒரு பொருள் உண்டு. மனது என்று வந்துவிட்டாலே சப்தம் வந்து விடுகிறது.

இந்த சப்தம்கூட இரு வகையாகும். இது அமைதி, ஆராவாரம் என இரு கூறுகளில் அடங்கி



விடும். மனதை எப்பொழுதும் அமைதியாகவே வைத்திருத்தல் அசாத்தியம். அது சமயங்களில் நிம்மதியிழந்து கூச்சல் போடும். மனித வாழ்வில் மனிதர்கள் தவம் கிடப்பதே அமைதிக்காகத்தான். ஆனால், அதுவோ அரிதானது. இப்படி மனமாகிய சித்தம் பற்றி சிந்திக்கும்போது இந்த இரு கூறுகள் நம்மை பாடாய்படுத்துவதை உணரலாம். இது ஏன், எதனால், எப்படி என்று ஆராய்ந்து இந்த மனதை அமைதி, ஆரவாரம் இரண்டுக்கும் நடுவில் எட்டிப் போட முடிந்தவர் எவரோ அவரே சித்தர் ஆவார்.

மனதையே வென்றவர், கட்டிப் போட்டவர் என்பதாலேயே சித்தம் வென்ற அவரை சித்தர் என்கிறோம். அடக்க முடியாத சித்தத்தையே அடக்கி விட்டவர்களுக்கு மற்ற விஷயங்கள் எல்லாம் ஒரு பொருட்டே இல்லை என்றுதான் கூற வேண்டும்!

அது சரி, எவை அந்த மற்ற விஷயங்கள்?

**தி**யாகுவுக்கு பாம்பின் அந்த சீற்றம் பகீர் என்றாக்கி அவன் வயிற்றுக்குள் அமிலத்தையே சுரக்க வைத்துவிட்டது. பயந்த வேகத்தில் எழுந்து கொண்டான். சிகரெட்டும் கையில் இருந்து நழுவிக் கீழே விழும் காட்சியைப் பார்த்தார். அவருக்குப் பார்த்த மாத்திரத்தில் புரிந்துவிட்டது.

"தியாகு.... என்னா தப்பு பண்ணேப்பா. கருப்பு கோயில் நாகம் படம் விரிச்சு நிக்குதே.." என்றவர், வேகமாக கைகளைக் கூப்பியவராக "சாமி.. தம்பி எந்த தப்பு பண்ணியிருந்தாலும் நான் மன்னிப்பு கேட்டுக்கறேன். மன்னிச்சிடு தாயே.." என்றார். அதுவும் தழைந்து அப்படியே பின்னால் இறங்கி புதர்களில் புகுந்து மறைந்தும் போனது.

லேசான போதை, சுமாரான குளிர், இதற்கு நடுவில் சிகரெட்டின் புகையோட்டம் என்று மூன்றின் கலவைக்குள் இருந்த தியாகுவுக்கு பயம் போய் சிரிப்பு வர ஆரம்பித்து விட்டது. சிரித்தான்.

"எதுக்குப்பா சிரிக்கறே?"

"சிரிக்காம... பாம்பை பார்த்தா கல் எடுத்து அடிச்சுக் கொல்வாங்க. இல்ல அதை விரட்டறதுக்கு வழிய பாக்கணும் இது என்னண்ணே கொடுமை... பாம்பு கூட பேசறீங்க? உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா பாம்புங்களுக்கு காதுன்னே ஒண்ணு கிடையாது."

- சுப்புரத்தினம் அவன் பகுத்தறிவுக்குள் புகுந்து விட்டதை அடுத்த நொடியே உணர்ந்து முறைக்கத் தொடங்கினார். அவன் அதை எல்லாம் சட்டை செய்ய வில்லை.

"பாம்பை பார்க்கவும் பகீர்னு ஆயிடிச்சு... இதால சிகரெட் வேற கீழ விழுந்துடிச்சு. நல்ல வேளை அணை யில..." என்று குனிந்து கீழே கிடந்ததை எடுத்து திரும்ப உதட்டில் செருகிக் கொண்டான்.

"வேண்டாம் தியாகு- அந்த சிகரெட்டை தூக்கிப் போடு."

"அதுசரி... ஒரு சிகரெட் ஒண்ணே முக்கா ரூவாண்ணே..."

"இல்ல தியாகு... இது சாதாரண இடம் இல்ல. இங்க ஒவ்வொரு பாறையும் ஒரு சித்தர் சாமி... நல்ல எண்ணத்தோடயும், பக்தியோடயும் வந்தா அதுக்கு இங்க கிடைக்கிற மதிப்பே தனி.



"போதுன்னே... சிகரெட் பிடிக்கறது என்னோட தனிப்பட்ட விஷயம். தண்ணி அடிக்கறதும் அப்படித் தான்.. இந்த மலைல நான் ஏதாவது மரத்தை வெட்டி னாலோ, இல்ல மிருகங்களை வேட்டையாடினாலோ தான் தப்பு. இந்த பத்திரிகைக்காரன் அந்த மாதிரி தப்பை எல்லாம் செய்ய மாட்டான். மத்தபடி எது எல்லாம் இங்க உண்மையோ அதை எல்லாம் கண்டுபிடிச்சு அனுபவிச்சு எழுதத்தான் நான் வந்துருக்கேன்..."

"இப்படி எல்லாம் பேசாதே... பாம்பு உனக்கு எச்சரிக்கை விட்ருக்கு. அதை புரிஞ்சுக்கோ..."

"பாம்பு எச்சரிக்கை விட்டுச்சா... காடுங்கறது அதோட இடம். படம் விரிக்கறது அதோட குணம், இதை எப்படிண்ணே இவ்வளவு கேவலமா ட்ரான்ஸ் லேட் பண்றீங்க..?"

சுப்புரத்தினத்துக்கு அவனது அடுத்தடுத்த பதில்கள் எரிச்சலை மூட்டியது. தொடர்ந்து அவனோடு சேர்ந்து மலை ஏறவும் பயமாக இருந்தது. நிச்சயம் அவனுக்கு மலைத் தலத்தில் ஒரு தண்டனையோ, இல்லை படிப்பினையோ இருப்பதை அப்போதே அவரால் உணர முடிந்தது. அவனையே வெறித்துப் பார்த்தவர், "சரி, தியாகு... நீ கிளம்பு - உன் கூட நான் வர பிரியப்படலை. உன் கூட வர்றதுக்கான தைரியமும் எனக்கில்லை..." என்ற சுப்புரத்தினம் அவனது பதிலைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் தான் நிறுத்தி விட்டு வந்த டி.வி.எஸ்.50ஐ நோக்கி திரும்பி நடக்கத் தொடங்கினார்.

தியாகுவுக்கு அப்பொழுதும் சிரிப்புத்தான் வந்தது! கை கடிகாரத்தைப் பார்த்தான். இரவு மணி ஒன்பதை எட்டிக் கொண்டிருந்தது!

அதே நேரம்... மதுரையில் சதாசிவத்தின் வீட்டில் ஐயனார் கோவில் உருவாரம் போல எங்கோ வெறித்த படி அமர்ந்திருந்தாள் நந்தினி. சமையல்கட்டில் கேஸ் அடுப்பை துடைத்து சுத்தம் செய்துவிட்டு சிலிண்டரை யும் மூடி விட்டு திரும்பிய ஜெயந்தியும், மெயின் கேட் டில் இருந்து கதவையும் தாழிட்டபடி வரும் ராகவியும் அடுத்து அவளருகில்தான் வந்து அமர்ந்தனர்.

"பண்றதெல்லாம் பண்ணிட்டு எப்படி உக்காந் துருக்கா பாருக்கா... இப்படி உக்காந்துட்டா எல்லாம் சரியாயிடுமாக்கா..." என்று ராகவி ஆரம்பிக்க, "பேசாம இருடி... அடுத்து என்ன பண்றது, எந்த திசைல போற துன்னே தெரியாம நான் எவ்வளவு பெரிய குழப்பத்துல இருக்கேன் தெரியுமா."

"இவள்ல அப்படி இருக்கணும்... நீ இருக்கேன் கறே..?"

"அவ இல்லை இல்லையா... அதான் அவளுக்கும் சேர்த்து நான் இருக்கேன். உங்களுக்கெல்லாம் முன் னால மூத்தவளா வேற பொறந்துட்டேன் இல்லையா? நான்தானே கவலைப்பட்டாகணும்?"

இருவரிடம் ஒரு குட்டி மோதல் வெடிக்கும்போல தோன்றியது. ஆனால், அதை வளரவிட விரும்பாதவள் போல, "கொஞ்சம் அமைதியா இருக்கீங்களா?" என்று அதட்டலாய் முறைத்தாள் நந்தினி.

"அமைதியாவா... இந்த வீட்லயா..?" ராகவி விட வில்லை.

"வாயை மூடு ராகவி... நான் தப்பு பண்ணிட்டேன் தான். ஆனா, எனக்கு என் பார்த்தி மேல நிறையவே நம்பிக்கை இருக்கு... தெரிஞ்சுக்கோ..."



"போடி போ... பார்த்தியாம் பார்த்தி. அப்பா அப்படியே கதறிவிட்டு பிச்சை எடுக்கற மாதிரி கெஞ்சறாரு. அந்த ஆள் என்னடான்னா அபார்ஷன் பண்ணிடுங்கறான். உன் பார்த்தி எனக்கென்னன்னு பனைமரம் மாதிரி நின்னுகிட்டுதான் இருந்தான். தெரிஞ்சுக்கோ..."

"அதுக்காக பெத்த தகப்பனுக்கு எதிரா சண்டையா போட முடியும்?"

"காதல் மட்டும் பண்ணலாமோ?"

"அது... அது..."

"எது...? எப்படிப்பட்ட ஒரு கிரிட்டிகல் ஸ்டேஜ்ல இப்ப நீ இருக்க. உன் வயத்துல இப்ப வளர்ந்துகிட் டிருக்கறது அந்த குடும்பத்தோட வரிசு. இன்னும் சொல்லப்போனா அந்த ஆளோட பேரனோ, பேத்தியோ... அப்படிப்பட்ட அவங்க வாரிசை போய் கழுவி அழிச் சிட்டு வந்துடுங்கன்னா என்னடி அர்த்தம்?"

"இது சாதாரணமா எல்லாரும் சொல்றதுதான்... முதல்ல அப்படித்தான் சொல்வாங்க. அப்புறம் எல்லாம் சரியாயிடும்..."

"போடி போ... நீ இப்படி எல்லாம்கூட அசட்டு நம்பிக்கையில இருக்கியா?"

"அசட்டு நம்பிக்கை இல்லக்கா... என் நம்பிக்கை நல்ல நம்பிக்கை! நீ வேணா பார் நாளைக்கு காலைல என்னை பார்க்க பார்த்தி வருவாரு. உங்ககிட்டல்லாமும் மன்னிப்பு கேட்டுக்குவார் பாரு."

"எங்ககிட்ட மன்னிப்பெல்லாம் கேட்க வேண்டாம். உன்னை கேட்டா போதும். முதல்ல தலைல கட்டி

உன்னை அனுப்பிட்டுதான் மறுவேலை பார்ப்போம்.. ஆனா நாங்க ஒண்ணும் உன்னை மாதிரி பகல் கனவு காணத் தயாராயில்லை."

"அப்பா மலைக்கு கிளம்பும்போது என்ன சொல் விட்டுப் போனாரு ஞாபகம் இருக்குல்ல..?" ராகவியிடம் ஆத்திரமும், ஆவேசமும் சம விகிதத்தில் இருந்தது.

"அப்பா ஏதோ ஒரு கோபத்துல 'இதுதான் என் கடைசி மலை. இன்னும் ரெண்டு நாள்தான் நமக் கெல்லாமும் இந்த உலக வாசம்'னு சொல்லியிருக்கலாம். ஆனா, எனக்கு நிறையவே நம்பிக்கை இருக்கு.."

- நந்தினியிடம் வெளிப்பட்ட நம்பிக்கை அவர்கள் இருவருக்குமேகூட வெகுவான ஒரு ஆச்சரியம்தான்..

ஆனால்..?

"மகாலிங்கத்துக்கு அரோகரா..

சந்தனலிங்கத்துக்கு அரோகரா..

மகாலிங்கத்துக்கு அரோகரா..

சந்தனலிங்கத்துக்கு அரோகரா..

அந்த இரவு வேளையில் சதாசிவம் இறை நாமத்தை சொல்லிக் கொண்டே நடந்து கொண்டிருந் தார். கைவசம் டார்ச்லைட் விட்டமாய் வெளிச்சம் போட்டு பாதையை காட்டியபடி இருக்க, அவரது நடை யிலும் ஒரு வேகம். தோளில் ஒரு துணிப்பை தொங்கிய படி இருக்க, அதனுள் வில்வமாலையும், ஒரு எவர்சில்வர் பாத்திரத்தில் அபிஷேக பாலும் இருந்தது.

அவருக்கு ஒரு கிலோ மீட்டர் இடைவெளியில் பின்னாலேயே நீந்தபடி இருந்தான் தியாகு.



அவனுக்கு முன்னும் பின்னுமாகக் கூட அங்கங்கே சிலர் நடந்து கொண்டுதான் இருந்தனர். பலர் அரோ கரா கோஷம் போட்டபடி இருக்க, தியாகு மட்டும் விசிலும் சினிமாப் பாட்டின் முணுமுணுப்புமாக நடந்த படி இருந்தான். இருபுறமும் யானைக் கூட்டம் திமு திமுவென்று நிற்பது போல மலைப் பாறைகள்... மெலிதாக வீசியபடி இருக்கும் காற்றிடம் கனமான பனி. அவனது தோளில் தோல்பையும் அதனுள் டேப்ரிக் கார்டர், காமிரா என்கிற சகலவிதமான பத்திரிகை யாளர்களுக்குண்டான ஐட்டங்களும் இருந்தன.

வழியில் ஒரு மரத்தின் கிளை ஒன்றை ஒடித்து கையில் குச்சிபோல பிடித்துக் கொண்டான். சில இடங்களில் நாய்கள் கூட்டமாக கடந்து போவது போல நரிக்கூட்டம் கடந்து போயிற்று. அனேக இடங்களில் யானை லத்தி கிடந்தது.. அதுவே யானைகள் நட மாட்டத்தை ஊர்ஜிதப்படுத்தியது.

தியாகு வரையில் அவனுக்கு அந்த காட்சிகள் எல்லாமே த்ரில்லாகத்தான் இருந்தன. போதையே சுத்தமாக இல்லை. குளிர்காற்றுக்கு ஒரு குவார்ட்டர் அடித்தால் அதுவும் ரம் வாங்கிக் குடித்தால் உடம்புக்குள் ஓடும் ரத்தமே வெந்நீர் ஆகிவிடும். பின் குளிரவே குளிராது என்று தோன்றியது. ஒரு இடத்தில் ஒரு புதருக்குள் இருந்து கஞ்சாப் புகை வெளிவந்தபடி இருக்க அவனுக்கு புரிந்துவிட்டது. ஏதோ ஒரு சித்தர் சாமிதான் உள்ளே கஞ்சா அடித்தபடி இருக்கிறது என்று.. அவனுக்கும் கஞ்சாவை கசக்க வேண்டும் போல் தோன்றவே, அந்த புதருக்குள் மெல்ல டார்ச்லைட் வெளிச்சத்தை உருட்டியபடியே எட்டிப் பார்த்தான். ஒரு சடை விழுந்த சாமிதான் 'பக்.. பக்..' என்று ஊதியபடி இருந்தது.

"என்ன சாமி... சரக்கடிக்கிறயாக்கும்?" என்று அவரிடம் எகத்தாளமாக கேட்டான் தியாகு. ஆனால், அவர் அவனுக்கு பதில் கூறத் தயாரில்லை. எங்கோ வெறித்தபடி கஞ்சா புகைத்தபடி இருக்க, அருகில் ஒரு சிறு தீக்குண்டம். குளிருக்கு இதமாய் அதனுள் சுள்ளிகள் தீப்பிடித்தபடி இருந்தன. தியாகுவுக்கு அந்த சாமியின் அலட்சியம் கோபத்தை அளித்தது.

"ஏ சாமி... நான் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீ பாட்டுக்கும் உட்காந்துகிட்டிருந்தா என்ன அர்த்தம்?" என்று சற்று அதட்டலான குரலுக்கு மாறினான். சாமி துளிகூட மசியவே இல்லை. காது கேட்காத மாதிரியே நடந்து கொண்டது. காது கேளாவிட்டால் என்ன... கண் தான் நன்றாக தெரியுமே..? அவனுக்குள் ஆத்திரம் பீறிட்டது. இந்த முறை அந்த சாமியின் தோளைத் தொட்டு உசுப்ப முனைந்தான். அப்படி அவன் அவர் தோளைத் தொட்டபோது ஒரு ட்ரான்ஸ்ஃபார்மரைத் தொட்டது போல உடம்பெங்கும் ஒருவித மின் சாரத் தாக்கம் ஏற்பட்டு அப்படியே தூக்கி வீசப் பட்டான். தோளில் சுமந்து கொண்டிருந்த அந்த பை ஒரு பக்கம் போய் விழுந்தது. விழுந்த அவனுக்கு எழ முயற்சித்த போது அந்த உண்மை தெரிந்தது. அவன் கால் எலும்பு முறிந்துவிட்டிருந்தது! காலை தரையில் ஊன்ற முடியாதபடி எழுந்த வேகத்தில் அம்மா என்கிற பெரும் குரலோடு அப்படியே மடங்கி விழுந்தான்.

மிகச்சரியாக அதே நேரம் சதாசிவம் அவர் எப் போதும் விரும்பிச் சென்று தரிசனம் செய்யும் கம்பளிச் சித்தர் முன்னாலே நின்றுகொண்டிருந்தார். கம்பளிச் சித்தரோ தியானத்தில் இருந்தார். அவரைக் கலைக் காமல் "சாமி... இதுதான் நான் உங்கள சந்திக்கிற கடைசி



சந்திப்பு... மனசு ஒடிஞ்ச நிலையிலும் நான் உங்கள தரிசிக்க எப்படியோ வந்துட்டேன். முன்ன எல்லாம் என் பெண்கள் கல்யாணமாகி நல்லபடியா வாழணும்னு வேண்டிக்குவேன். இப்ப நாங்க நல்லபடியா சாகணும்கற வரத்தை கேக்கறேன். வாழ்க்கையைத் தரத்தான் உங்க ளால முடியல... எங்களுக்கு சாவையாவது நல்லபடி தாங்க சாமி.. நான் வரேன்..." என்றபடியே கொண்டு வந்திருந்த வில்வமாலையை அவரது காலடியிலும், பாலை அவருக்கு பக்கத்திலுமாய் வைத்துவிட்டு திரும்பினார். அவர் திரும்பிச் செல்லவும் கண் திறந்து கொண்ட கம்பளிச் சாமி அர்த்தபுஷ்டியுள்ள ஒரு சிரிப்பு சிரித்தார்! சதாசிவத்தோடு துணையாக வந்திருந்த நாய் இப்போது எங்கிருந்தோ அவர் முன் வந்து நின்றது!

# 6

'**சி**த்தர்களின் அளப்பரிய சக்திகளில் முதலில் நிற்பது அவர்களது முக்கால ஊடுருவல்தான்! ஒரு முறை பார்த்த மாத்திரத்தில் அவர் நேற்று எப்படி இருந்தார், இன்று எப்படி இருக்கிறார், நாளை எப்படி இருக்கப் போகிறார் என்பதை எல்லாம் வெகு சீக்கிரமே அனுமானித்து விடுவார்கள். இதற்கு காரணம் அவர்களது ஜோதிட அறிவுதான். ஜோதிடம் எனும்போதே பலரும் அதையும் ஒரு மாய மந்திரம் போல்தான் எண்ணுகிறார்கள். அது மிகப் பெரிய தவறாகும். ஜோதிடம் என்றால் வான்கணிதம் என்பதே சரியாகும். கணிதம் என்றாலே கூட்டல், கழித்தல், வகுத்தல் போன்ற சகலமும் வந்துவிடும். எனவே சித்த புருஷர்களும் அந்த வகையில் வேகமாய்

கணக்குப் போட்டுத்தான் முக்காலத்தையும் கண்டறிகிறார்கள்.

கூடவே சாமுத்ரிகா லட்சணத்தையும், தலை முடி அமைப்பையும், அவர்கள் உடம்பில் இருந்து வெளிப்படும் வியர்வை வாசத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்வார்கள். சித்த புருஷர்கள் தங்கள் எதிரில் உள்ளவர்களை உற்றுப் பார்ப்பதே அதற்காகத்தான்!

இதெல்லாம் எப்படி ஒருவரைப் பற்றி அறிய உதவும் என்று சிலர் கேட்கலாம். எதுவுமே விளங்காத வரைதான் புதிராகத் தெரியும். விளங்கி விட்டால் சித்தர்கள் போடும் கணக்கை சாதாரணமாய் எல்லோரும் போட்டு விடுவோம். அப்படிப் போட முடிவதால்தான் ஜோதிடர்கள் என்று ஒரு இனமே உருவாகியுள்ளது.

கூட்டி கழித்து வகுத்துப் பெருக்கி ஒரு ஜோதிடன் கணக்குப் போட சில மணி நேரங்களை எடுத்துக் கொள்வார். சித்தர்களுக்கோ அதற்கு சில நொடிகளே போதுமானது. ஏனென்றால், அவர்களது மன சக்தியே அவ்வளவு வேகமானது!"

**த**ன் எதிரில் வந்து நின்ற நாயைப் பார்த்த சித்தர் அதைப் பார்த்ததும் சிரித்தார். பின் "போ... போய் அவனுக்கு காட்ட வேண்டியவனைக் காட்டு. உயிரை விடறதுக்கும் ஒரு விதி வேணும். அதெல்லாம் அந்த சதாசிவத்துககு இல்லை... நீ போ" என்றார்.

அந்த நாயும் ஏதோ எஜமானர் இட்ட கட்டளையை உடனேயே செயல்படுத்தும் ஒரு நன்றியுள்ள நாயைப் போல திரும்பி ஓடத் தொடங்கியது.



குரைத்தபடி தனக்குப் பின்னால் வரும் அந்த நாயை மெல்லிய இருட்டில் திரும்பிப் பார்த்தார் சதாசிவம். அதுவும் அவரை பார்த்துவிட்டு அவருக்கு முன்னால் ஓட ஆரம்பித்தது.

அப்படி அது ஓடினால் அதற்கு பொருள் 'நான் முன்னால் செல்கிறேன் - என் பின்னாலேயே வா...' என்பதுதான்!

சதாசிவமும் அதை பின்தொடர்ந்தார்.

கரடுமுரடான மலைப்பாதை... இருளில் அந்த பாதையில் நடக்க அசாத்திய மன உறுதியும், திடமான பக்தியும் வேண்டும். சதாசிவத்திடம் அது ஏராளமாகவே இருந்தது. ஆனால், வாழ்க்கைப் பாதை என்பதுதான் அவர் வரையில் மிகவே கரடு முரடாகவும் கடக்க முடியாததாகவும் இருக்கிறது!

**அ**ந்த நள்ளிரவும் அதனுள் பெய்ய ஆரம்பித்து விட்ட குளிரும் தியாகுவை ஒரு உலுக்கு உலுக்கத் தொடங்கிவிட்டிருந்தன. பல ஆயிரம் மதிப்புள்ள காமிராவும் அதன் பையும் எங்கோ விழுந்து விட்ட நிலையில் தன்னால் எழுந்து நிற்கக்கூட முடியாததை முதல் தடவையாக சற்று அதிர்வோடும், சுப்புரத்தினம் விடுத்த எச்சரிக்கையோடும் சேர்த்துப் பார்த்து சிந்திக்கத் தொடங்கினான் தியாகு. அப்படி நினைத்துக் கொண்ட வேகத்தில் அதை அழைத்தும் கொண்டான்.

கீழே விழுந்தால் கால் உடைவது இயற்கையான விஷயம், இதற்கு போய் பயப்படுவது மூட த்தனம் என்று அவன் எண்ணும்போதே அவன் யாரைத் தொட்டதால் தூக்கி எரியப்பட்டானோ அந்த கஞ்சா சித்தர் அவன் எதிரில் வந்தபடி இருந்தார். காலில் நடையில் தள்ளாடலோ தடுமாற்றமோ இல்லை.

அவனும் அவர் தனக்கு உதவத்தான் வருகிறார் என்றுதான் நினைத்தான். ஆனால், அவரோ அவனை தாண்டிக் கொண்டு நடந்தார். அவனுக்கு அது அதிர்ச்சியாககூட இருந்தது. அவரைக் கூப்பிட்டு உதவி கேட்பது மிக கேவலமாக மனதுக்குள் உலுக்கியது.

ஒரு சராசரி மனிதாபிமானம்கூட இல்லாத இவரெல்லாம் என்ன ஒரு சித்தர் என்கிற எண்ணம் ஏற்பட்டு அது கோபமாய் மாறியது. கூடவே காலில் எலும்பு உடைந்த பாகத்தில் வலியும் வெட்டி வெட்டி இழுக்கத் தொடங்கியது. அதே வேளையில் அவனுக்கு எதிர் திசையில் உள்ள மலைச்சரிவில் பொழுது விடிவது போல ஒரு வெளிச்சம் பரவிட கேரளத்து பாணியில் ஒரு கோயில் கண்ணில் படத் தொடங்கியது.

தியாகு தன் இரு கண்களையும் கசக்கிவிட்டுக் கொண்டான். அந்த கோயில் அங்கே ஏற்கெனவே இருந்து பொழுது விடிவதால் அது கண்ணில் படுகிறதா இல்லை அப்போதுதான் ஒருவகை படம் போல கண் எதிரில் உருவாகின்றதா என்கிற சந்தேகம் அவனை ஆட்கொள்ள ஆரம்பித்தது.

இமைக்ககூட விடாமல் எதிரில் தெரிந்த அந்த காட்சியை வெறித்துப் பார்த்தான். இவனை ஒரு குப்பை போல கருதி தாண்டிச் சென்ற அந்த கஞ்சா சித்தர்கூட அந்த கோயிலை நோக்கிச் செல்வது அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. பனிச்சென்று தெரியத் தொடங்கிவிட்ட அந்த கோயிலின் மையத்தில் ஒரு தங்க கோபுரம்– அது தகதகவென மின்னியபடி தியாகுவின் கண்களை கூச வைத்தது. முதன்முதலாய் அந்த கோபுரத்தை பார்த்த போது அப்படி ஒரு தங்கக் கோபுரமோ இல்லை அங்கே



ஒரு ஜொலிஜொலிப்போ இல்லவே இல்லை. இப்போது அது எப்படித் திடீரென்று முளைத்தது என்று தெரியவில்லை.

அதன் ஒளியில் நாலாபுறமுமே ஜொலித்தது. குங்கலியம் (சாம்பிராணி) போட்டதுபோல கோவிலைச் சுற்றி புகை மண்டலம் வேறு. கஞ்சா சித்தரைப் போலவே பல சித்தர்கள் அந்த சரிவில் இறங்கி கோயில் நோக்கி நடந்தபடி இருநதனர். பலரது உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லை. ஒரு சித்தர் தன் சடாமுடியை தரதரவென தரையில் உரசிட அதை இழுத்துச சென்றபடி இருந்தார்.

தியாகுவுக்கு அந்த காட்சியை படம்பிடிக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால் காமிரா பை எங்கே கிடக்கிறது என்றே தெரியாத நிலையில் அவனுக்கு தவிப்பான தவிப்பு–

அப்போது அவன் காதுகளில் நாய் குரைத்திடும் சப்தமும் கேட்கத் தொடங்கியது. சப்தம் வந்த திசையை திரும்பிப் பார்த்தான். அவன் அடிவாரத்தில் பார்த்த அதே கறுப்பு நாய்தான்... பளிச்சென்று விடிந்து விட்ட வெளிச்சத்தில் நாயும், நாயைத் தொடர்ந்து பின்னாலேயே சதாசிவமும் நடந்து வருவது தெரிந்தது. அவர்களைப் பார்த்துவிட்டு திரும்பிய நொடி எதிரில் கோவில் இல்லை, தங்க கோபுரம் இல்லை, சித்தர்கள் இல்லை– புகைமூட்டம் இல்லை பனி மூடிய மலைச்சரிவு தான் தெரிந்தது.

பகீரென்றது!

சற்று முன் தான் கண்ட காட்சி கனவா இல்லை நனவா? குழப்பம் ஏற்பட்டு அவன் தன் சிரத்தை உதறி

விட்டுக் கொள்ள, அந்த கறுப்பு நாய் அவனருகில் வந்து நின்றது. அவனை அது பரிதாபமாகப் பார்த்தபடியே அவனை சுற்றிச் சுற்றி வந்து விட்டு திரும்பவும் சதாசிவம் நோக்கி ஓடியது.

அவரும் அவனை மிகவே நெருங்கிவிட்டார். தியாகு அவரை மிகவும் பரிதாபமாக பார்த்தான்.

"தம்பி நீங்க யாரு... ஏன் ஒரு மாதிரி உக்கார்ந்து கிட்டிருக்கிங்க?" அவர் பேச்சைத் தொடங்கினார்.

"ஐயா! எனக்கு கால்ல அடிபட்டிருச்சு... அனேகமா ஃப்ராக்சரா இருக்கணும். என்னால எழுந்து நிற்ககூட முடியலீங்க..."

"அப்படியா.... தம்பி என்ன சாமி தரிசனத்துக்காக வந்திங்களோ?

"இல்ல... ஆமாம்..." அவனிடம் தடுமாற்றத் தொற்று...

"இல்ல.. ஆமாவா.. என்ன பதில் இது?"

"அதாவது... நான்... நான்... ஒரு பத்திரிகையாளன். இந்த மலையை பத்தி எழுதலாம்னு வந்தேன். வந்த இடத்துலதான்..."

"ஓ பத்திரிகைக்காரங்களா... ஆமா பத்திரிகை காரர்ங்கறீங்க கைல பை, பேக்குன்னு எதையும் காணோமே..?"

"இருந்தது. ராத்திரி தவறி தடுக்கி விழுந்ததுல அதெல்லாம் இங்கதான் எங்கயோ விழுந்து கிடக்கணும்..."

அவன் சொல்லும்போதே கறுப்பு நாய் ஓடிப் போய் ஒரு பிரண்டைச் செடி புதர் அருகில் நின்று குரைத்தது. "கருப்பன் அங்க நின்னு குரைக்கறத பார்த்தா



உங்க பேக் அங்கதான் கிடக்கணும்னு தோணுது" என்ற படியே அவரும் அந்த இடம் நோக்கி நடந்தார்.

உண்மைதான்!

பேக் அங்கேதான் கிடந்தது...

பிரண்டைப் புதர் நடுவே கட்டித் தொங்க விட்டது போல தொங்கிக் கொண்டிருந்தது. மெல்ல கையை விட்டு எடுத்து வந்து தியாகுவிடம் தந்தார். அவனும் வாங்கிப் பார்த்துவிட்டு ரொம்ப நன்றிங்க" என்றான்.

"இப்ப என்ன தம்பி பண்ணப் போறீங்க?"

"திரும்பிப் போகணும் சார்... கால் வலி உயிர் போகுது..."

"அடடே... எழுந்து நடக்க முடியுமா?"

"முடியாதுங்க... நீங்கதான் ஏதாவது பண்ணி என்னை தூக்கிக்கிட்டுப் போகணும்."

"நானா...?" சதாசிவத்துக்கு சற்று சுருக்கென்றது.

"புரியுது... உங்க வயசுக்கு என்னை சுமக்க முடியாது தான். கொஞ்சம் அடிவாரம் வரை போய் ஒரு நாலு பேரை கூட்டிக்கிட்டு வந்து..."

அவன் சொல்லி முடிக்கு முன் அந்த கஞ்சா சித்தர் எங்கிருந்தோ வருவதுபோல வந்து கொண்டிருந்தார். சதாசிவம் அவரைப் பார்க்கவும், நின்ற இடத்திலேயே மண்டி போட்டு வணங்க ஆரம்பித்தார்.

"சாமிக்கு நமஸ்காரம்."

"யாருடாது... ஓ சதாசிவமா?"

"ஆமாம் சாமி..."

"என்ன தரிசனமெல்லாம் ஆச்சா...?"

"ஆச்சு சாமி..."

"அடப்பாவி... நீ கூட பொய் சொல்றியே..."

அவர் மடக்கவும், சதாசிவம் முகம் சூம்பிப் போனது.

அவர் உடனே சிரித்தார்.

"ஆமா இந்த குடிகாரன்கூட நீ என்ன பண்றே?"

அவர் கேட்ட கேள்வி தியாகுவை இடித்தது.

"சாமி என்ன சொல்றீங்க..?"

"போடா போ... எல்லாம் புத்திதான்னு பேசற புடுங்கிகள்ல இவனும் ஒருத்தன். பாரு கீழ விழுந்து கால் ஒடிஞ்சு கிடக்கான். இவன் புத்தி இப்ப மட்டும் எந்த சுய மரியாதையும் பார்க்காது. வலிக்குதில்லையா... கெஞ்ச ஆரம்பிச்சிடும்."

அவர் பேச்சில் நையாண்டியும், குத்தலும் பளிச் சென்று வெளிப்பட்டது. தியாகுவை அது என்னென்னவோ செய்தது.

"ஏ கஞ்சா சாமி... என்ன நீபாட்டும் ஏதேதோ பேசறே. உன்னை தொட்டுத்தான் நான் இப்படி ஆனேன். உன்னோடது உடம்பா இல்ல எலெக்ட்ரிக் ட்ரான்ஸ் ஃபார்மரா..?"

"கண்டுபிடி... கண்டுபிடிடா பத்திரிகைக்காரா... கண்டுபிடி! எங்க எவன் என்ன செய்யறான், யார் யார் கூட படுக்கறாங்க... எந்த நடிகைக்கு பெரிய மார்புன்னு தேடித் தேடி அலைஞ்சு படமா எடுத்து போடறியே... உன் புலனாய்வை என் கிட்டேயும் செய்..."

அந்த கஞ்சா சித்தரிடம் கணிசமான அளவு கோபம் ஒருவித கிண்டலாக வெளிப்பட்டது. தியாகுவுக்கு அதுவே பலத்த ஆச்சரியம்தான்.



தான் கூறாமலே தன்னை ஒரு பத்திரிகைக்காரன் என்று எப்படி அவரால் தெரிந்துகொள்ள முடிந்தது? தான் குடித்துவிட்டு வந்ததும் எப்படி இவருக்கு தெரியும்?

கேள்விகளில் சிக்கிக் கொண்டான்.

அவரோ, "அப்புறம் சதாசிவம்... வீட்டுக்கு போய் இன்னியோட உன் உலக வாழ்க்கையை முடிச்சுக்க போறேன்னு சொல்.." என்று சதாசிவம் பக்கமாய் திரும்பினார்.

அவரிடம் கேட்ட கேள்வி அவன் வரையில் பிடரியில் உரசிய தீக்கங்கு போல சதாசிவத்தை பார்க்கச் செய்தது.

சதாசிவம் அழ ஆரம்பித்து விட்டார்.

"சாமி! உங்களுக்கு தெரியாதது இல்ல. ஒரு பணக்காரனை நம்பி என் ரெண்டாவது மக ஏமாந்துட்டு வந்து நிக்கறா, சும்மா வந்தாகூட பரவாயில்ல. மூணு மாச கர்ப்பம் வேற! அந்த பணக்காரன் கிட்ட போய் நியாயம் கேட்டா உன் அந்தஸ்து என்ன, என் அந்தஸ்து என்னன்னு என்னைப் பார்த்து கேள்வியா கேட்கறான். ஐந்நூறு பவுன் போட்டா மருமகளாக்கிக்குவாராம். நான் எங்க சாமி போவேன். மானம் போய் உயிர் வாழறதுக்கு போய்ச் சேர்ந்துடறது நல்லதுதானே?"

கண்ணீர் வழிய அவர் கேட்ட விதம் தியாகுவையும் உருக்கியது. அந்த கஞ்சா சித்தர் ஒரு பார்வை தியாகுவையும் பார்த்துவிட்டு, "விடு... எல்லாத்தையும் இவன் பார்த்துப்பான். விவகாரத்துக்கு அலையறவன் தானே இவன்..?" என்று திரும்பவும் சிரித்தார். அவர் தன்னைக் காட்டி சொன்னதை கேட்டு தியாகுவுக்கேகூட மலைப்புதான்.

"கொஞ்சம் இரு வரேன்..." அவர் வேகமாக சற்று தள்ளித் தெரிந்த பாறை ஒன்றை நோக்கி நடந்து மறைந்தார்.

தியாகு, சதாசிவத்திடம் கேட்டான்.

"ஏன் சார்... இவர் யார்? எப்படி நாம எதுவும் சொல்லாமலே நம்ம மனசுல இருக்கறத அப்படியே சொல்றார்?"

"என்ன தம்பி நீங்க... சித்தருங்கன்னா என்னன்னு நினைச்சிங்க. அதுவும் இந்த ஜவ்வாது சித்தர் பெரிய ஆள்... இவரோட பெருமைய வார்த்தைல சொல்ல முடியாது."

"என்னங்க நீங்க... எப்பப் பார் கஞ்சா குடிச்சிகிட்டு சோம்பிக் கிடக்கற இவரா பெரிய ஆள்...?"

"கஞ்சாங்கறது இவங்க வரைல மருந்து மாதிரி. அதை தவிர சாப்பாடு தண்ணி எதுவுமே கிடையாது. இவங்களுக்கு மனச ஒருமுகப்படுத்திக்கதான் கஞ்சா... அப்படி ஒருமுகப்படுத்திகிட்டா ஒரு மாசம்கூட அசையாம உட்கார்ந்த இடத்துல தியானத்துல ஆழ்ந்துடுவாங்க. அப்படி இவங்க எவ்வளவு பேருங்க இருக்காங்க தெரியுமா?"

"ஐயா! நீங்க சொல்றதெல்லாம் எனக்கு புதிரா இருக்கு. இதே இடத்துல கொஞ்சம் முந்தி நான் ஒரு பெரிய தங்கக் கோயில் பார்த்தேன். உங்கள பார்க்கறதுக்காக திரும்பிட்டு திரும்பினா அந்த கோயில் இல்ல... எல்லாமே பெரிய மேஜிக்கா இருக்கு..."

"பரவாயில்லையே, தங்கக் கோயில் தரிசனம் உங்களுக்கு கிடைச்சிருக்கே. எனக்குகூட நான் இந்த



மலைக்குப் போன தடவை 99-வது தடவையா வந்தப்பா கிடைச்சது. இது என் வரைல நூறாவது மலை!"

"அடேங்கப்பா... இந்த மலைக்கு நீங்க 100 தடவை வந்துருக்கிங்களா... அப்ப உங்ககிட்ட நான் பேசினாலே எனக்கு நிறைய விஷயம் தெரியும் போல இருக்கே...?"

"எது வேணாலும் தாராளமா கேளுங்க. அதை எல்லாம் இப்பவே கேட்க ஆரம்பிச்சிடுங்க. ஏன்னா இன்னிக்கு சாயந்திரம் வரைதான் எனக்கும் அவகாசம் இருக்கு..."

"அப்புறமா செத்துப் போயிடப் போறீங்களோ?"

அவனும் அவரின் அந்த முக்கியமான முடிவைத் தொடங்கினான். அவரிடம் கனமான மௌனம். அதே சமயம் பாறை பின்னால் மறைந்த அந்த ஜவ்வாது சித்தர் கையில் சில மூங்கில் பட்டை மற்றும் சில மூலிகை கட்டுகளுடன் அவர்களை நோக்கி வந்தபடி இருந்தார்.

"சாமி மருந்தோட வர்றாரு... தம்பி! நீங்க நடந்துடுவீங்க பாருங்க..." என்றார் சதாசிவம்.

தியாகுவுக்கும் புதிதாக ஒரு தெம்பு வந்தது போல் இருந்தது!

## 7

**'சி**த்த சாகசங்களில் மாயமாய் மறைவதென்பது ஒரு நுட்பமான விஷயம்... கண் எதிரில் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மறைந்துவிடுவது என்பது ஒன்றும் சாதாரணமான விஷயமல்ல.

ஒவ்வொரு உயிருமேகூட ஒரு துளி உயிர் அணுவின் வளர்ச்சியால் வளர்ந்து பெரிதான

வையே... கண்ணுக்குள் அடங்கிடாத ஒரு ஆலமரம் கூட ஒரு மைத்துளி அளவு விதைக்குள் இருந்து வந்ததுதான்...

ஒரு விதையோ (அ) உயிர்த் துளியோ இயக்க கதியில் பஞ்சபூதங்களோடு சேர்ந்து கிரியை புரிந்து ஒன்று இரண்டாகி, இரண்டு நான்காகி, நான்கு எட்டாகி, எட்டு பதினாறாகி என்கிற கணக்கில் வளர்ந்தே பெரிதாகின்றன.

இந்த வளர்ச்சி என்பது பூமியில் ஊன்றிய நிலையில் ஆகாயத்தில், அதாவது வெட்டவெளியில் உயர்ந்து வளருவதில்தான் இருக்கிறது. கீழிருந்து மேல் நோக்கி நடைபெறும் இந்த வளர்ச்சியை தடுத்து நிறுத்திக் கொண்டு, பின் அப்படியே திரும்பி மீண்டும் உயிர்ப்புள்ளியை அடைவதில்தான் இந்த மறைந்துபோதல் என்கிற விஷயம் நிகழ்கிறது.

இது எப்படி சாத்தியம் - கற்பனை செய்துகூட பார்க்க முடியாத ஒன்றாக இது உள்ளதே என்று வாதம் செய்யலாம்தான்... ஆனால், சித்தர்கள் வரையில் நம்மால் கற்பனைகூட செய்து பார்க்க முடியாத இந்த மாதிரி விஷயங்கள் மிகச் சாதாரண மானவை.

சித்தர்கள் உடல் - மனம் எனும் இரண்டையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள். ஆகையால் அவர்களால் எதையும் செய்ய முடியும். நாம் நம் மனம் - உடல் ஆகிய இரண்டையும் அதன் பிடியில் விட்டு வைத்திருக்கிறோம். நமது உடலைப் பற்றியோ, நமது உடலின் உயிரோட்டம் பற்றியோ நமக்கு எதுவுமே தெரியாது என்பதே உண்மை. சுவாசிப்பது என்கிற ஒரு விஷயத்தைக்



கூட நாம் தவறாகவே பேசி வருகிறோம். அதாவது நாம் முயற்சி செய்து சுவாசிப்பது போல நான் மூச்சு விடுகிறேன் என்கிறோம்.

உண்மை அதுவல்ல!

சுவாசகதி என்பது தானாக நிகழ்ந்திடும் ஒன்று. நாம் நம் முயற்சியால் தற்காலிகமாக அதை நிறுத்தி வேண்டுமானால் வைக்கலாம்.

இப்படி நாம் நம்மை பற்றி தவறாகக் கொண் டிருக்கும் விஷயங்கள் நிறையவே உள்ளன. சித்தர்களோ இப்படிப்பட்ட தவறுகள் துளிகூட இல்லாதவர்கள். சித்த சாகசங்களில் மறைந்து போவதைப் போலவே விஸ்வரூபம் எடுப்பது, அதாவது மிகப்பெரிதாக வளர்ந்து தெரிவது என்பதும் ஒன்று!'

சதாசிவம் உற்சாகமாய் பேசிட, தியாகுவும் பதிலுக்கு உற்சாகப்பட்டிட, ஜவ்வாது சித்தர் என்கிற அந்த மனிதர் தியாகுவை நெருங்கி தான் கொண்டுவந்திருந்த மரப்பட்டைகளை காலின் எலும்பு முறிந்த பாகத்தில் வைத்து கட்டு போடத் தொடங்கினார்.

அவர் கை அவன் மேல் பட்ட நொடியே அவனிடம் ஒரு தனித் தெம்பு வந்து விட்டது.

"இந்த பட்டைகள் ஒதிய மரத்தோடது- ஒதியம் பட்டை சிராய்ப்புக் காயத்துல இருந்து சீழ் பிடிச்ச புண்வரை பலவிதமான காயங்களை ஆத்தும். இந்த பட்டைக்குள் இருக்கற ரசத்தோட சக்தியால காயம் ஆறிடும். அதே சமயம் உள்ள முறிஞ்ச எலும்பு சேர மூணு வாரம் ஆகும். அந்த மூணு வார காலம் நீ காலை இப்படி அப்படி அசைக்கக் கூடாது. அசைச்சா மூணு

வாரம்கறது மூணு மாசமாயிடும். இந்தா... இந்த பஸ்பத்தை தேன்ல குழைச்சு சாப்பிடு. கூடவே இந்தா இந்த எண்ணெயை இந்த மூங்கில் பட்டை மேல அப்பப்ப விடு... எண்ணெய் சொதசொதப்பு இருந்துகிட்டே இருக்கணும். இதுக்கு நடுவுல தினசரி தூங்கப் போகும் போது கத்தாழைச்சோற்றுல நாலு மிளகு சேர்த்து துளி பால் விட்டு பிசைஞ்சு சாப்ட்டுட்டுப் படுக்கணும். கால் சரியான பிறகு 22-வது நாள் நீ என்னைப் பார்க்க வரே. வரும்போது மது, புகை கூடாது. கீழ கருப்பனை கும்பிட்டுட்டு அங்க தர்ற விபூதியால நெத்தியை நிரம்பிக்கிட்டு வர்றே... என்ன?"

என்று வெகு அதட்டலான குரலோடு பஸ்பம், எண்ணெய் பாட்டில் என்கிற ஐட்டங்களையும் அவனிடம் கொடுத்தார்.

"அப்ப நான் வேற டாக்டர் கிட்டல்லாம் காட்ட வேண்டாமா?"

என்று ஒரு கேள்வி தோன்றவே, அதை கேட்டு விட்டான் தியாகு.

"இங்க நான் யாருடா... என்னோட சித்த மருந்தை எல்லாம்விட ஒரு மருந்தை எந்த டாக்டர்தான் தருவான்?"

என்று அவர் திருப்பிக் கேட்டதில் ஒரு சன்னமான கோபமும் தென்பட்டது.

"சாமி! விடுங்க சாமி... தம்பி இந்த மலைக்குப் புதுசு! உங்கள மாதிரி சாமிங்களையே இப்பதான் தம்பி பாக்குது. அதனால அதுக்கு என்ன பேசறதுன்னு தெரியலை..." என்று சதாசிவம் அவனுக்காக வக்காலத்து வாங்கினார்.



"நீ இவனைச் சொல்றியாக்கும்... நீ ரொம்ப தெளிவா பேசறவனாக்கும்...?" அவர் திருப்பிக் கேட்டார்.

"சாமி..."

"என்ன சாமி... ஊமி... மாசம் தவறாம மலைக்கு வர்ற நீ மரணத்தைப் பத்தி நினைக்கலாமா?"

ஜவ்வாது சித்தர், சதாசிவத்திடம் பாயின்ட்டை பிடித்தார்.

"அது வந்து சாமி..."

"எது வந்து... எங்கள நம்பிட்டவங்கள நாம் விட்ருவோமா?"

"சாமி..." சதாசிவத்திடம் சிலிர்ப்பு தோன்றியது.

"போடா போ... வாழறதபத்தி யோசி, மூச்சு நிக்கற நேரம் வரும்போது அதுதானா நின்னுடும். ஒரு மூச்சை கூட்டவோ இல்ல குறையவோ இது வரை யாரும் விட்டதில்ல... இனியும் விடப்போறதுமில்லை."

"சாமி... உங்க சித்தாந்தம் என் பொண்ணு கர்ப்பத்தை தான் தடுத்துடுமா இல்ல ஐந்நூறு பவுனை கேட்ட அந்த பணக்காரன் மனசைதான் மாத்திடுமா சாமி. சோத்துக்கில்லாமகூட இருக்கலாம். மானம் போய் எப்படி சாமி வாழறது..."

"பார்றா.... பேசினதையே பேசறியே நீ. அது எப்படிடா நாங்கல்லாம் இருக்கும்போது உன் மானம் போகும்? தா... இவனோட புறப்பட்டு போ. 22-வது நாள் நல்லா நடந்து இவனோட வா. அப்ப நீ இப்படி பேசிகிட்டு வரமாட்டே.... பல விஷயங்கள் தலைகீழா மாறி இருக்கும்."

அவர் அந்தப் பேச்சோடு திரும்பி நடக்கத் தொடங்கினார். தியாகுவும் காலை ஊன்றி நின்றிருந்தான். அவ்வளவாக வலி இல்லை. காலையும் அசைக்க முடிந்தது. அசைத்து சில அடிகள் போட்டான். லேசான தடுமாற்றம் ஏற்படவும் சதாசிவத்தை பிடித்துக் கொண்டான்.

அவரும், "பிடிச்சுகிட்டே வாங்க தம்பி... முதல்ல அடிவாரத்துக்குப் போவோம். பிறகு மத்த விஷயத்த பேசுவோம்..." என்றார். கை கடிகாரத்தில் மணி ஆறரையை தொட்டிருந்தது!

அதே காலை நேரம்!

ஜெயந்தி வாசலில் கோலம் போடுவதற்காக புறப்பட்டபோது காத்திருந்தது போல வந்து கோல டப்பாவை பிடுங்கினாள் நந்தினி.

"அக்கா நீ விடு... நான் போடறேன்..."

"வேண்டாம்.. நீ எதுக்காக கோலம் போடப் போறேன்னு எனக்கு தெரியும். உன் ஆசைக்காதலன் ஜாகிங் வருவான். பாக்கலாம்னுதானே?"

"ஆமாம்கா.. நீதானே சொன்னே, அவர் வரப் போறதில்லைன்னு... அவர் கட்டாயம் வருவாருக்கா. வந்து உங்க மூஞ்சில கரி பூசப் போறார் பாரு..."

நந்தினியின் நம்பிக்கை வீண் போகவில்லை. சப்தம் கேட்டு இளையவளான ராகவியும் எழுந்து கொண்டாள். நந்தினி கோல டப்பாவோடு வாசலுக்குப் போகும்போது கச்சிதமாக பார்த்திபன் என்கிற அவனும் வந்துவிட்டான்.

அவளோ அவளை வெறித்தாள்.



வந்தவன், "வெரிஸாரி நந்தினி... உங்கப்பாவும், அக்காவும் வந்தபோது என்னால எதுவுமே பேச முடியலை..." என்றான். அவள் எதுவுமே பேசவில்லை. தொடர்ந்து வெறித்தாள்.

"அப்படிப் பாக்காதே... அப்பாகிட்ட எதிர்த்துப் பேசறது ஒரு விஷயமில்லை. ஆனா, அவ்வளவு சொத்தும் அவர் சம்பாதிச்சது. நாளைக்கே கால் காசு கூட சொத்துல பங்கு கிடையாதுன்னு அவர் சொல்லிட்டா எனக்கு பெருசா ஏமாற்றமில்லை.. உனக்குத்தான் ஏமாற்றமாயிடும். அதான்..."

அவன் சொன்னது கட்டைக்கால்களுடன் நடந்து வந்த ஜெயந்தி காதுகளிலும் விழுந்தது.

"அப்ப சொத்துதான் உனக்கு பெருசு... என் தங்கையோ அவ வயித்துல வளர்ற குழந்தையோ கிடையாது. அப்படித்தானே?" என்று அவனை நெருங்கிய வேகத்தில் அவளும் கேட்டாள்.

"நீங்க தப்பா புரிஞ்சிட்டிருக்கீங்க... உங்க தங்கையை நான் பெருசா நினைக்கலேன்னா இவ்வளவு தூரம் வந்திருப்பேனா...?"

"வந்து என்ன புண்ணியம்... நீ கேக்கற ஸாரியால இவ வாழ்க்கை திரும்பிடப் போறதில்லை மிஸ்டர் பார்த்திபன்."

"வேண்டாங்க... இப்படி வாசல்ல நின்னு பேச வேண்டாம். நான் உள்ள வரேன். எனக்குன்னு தோணியிருக்கற சில ஐடியாக்களை சொல்றேன். அதை கேட்டுட்டு பிறகு ஒரு முடிவு சொல்லுங்க..."

அவன் அப்படிச் சொல்லவும், ஜெயந்தியால் அதற்கு மேல் அவனிடம் வாதிக்க முடியவில்லை.

சரி, உள்ளே வா, என்பது போல உள்ளே செல்லத் தொடங்கினாள்.

அவனும் பின்தொடர்ந்தான்...

தொடரும் போதே "சார் இல்ல போல இருக்கே?" என்று மிகச் சரியாக கேட்டான்.

"ஆமாம்... அப்பா மலைக்குப் போயிருக்காரு..."

"நானும் எங்க கல்யாணம் நல்லபடியா நடந்து முடிஞ்சா சதுரகிரி மலைக்குப்போய் முடி இறக்கறேன்னு வேண்டிக்கிட்டிருக்கேன்..."

ஜெயந்தியும், ராகவியும் ஆச்சரியப்படும் ஒரு பதிலோடு ஹாலில் கிடந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தான். நந்தினியும் வந்து கை கட்டியபடி அருகில் நின்று கொண்டாள். அவனே பேச்சை ஆரம்பித்தான்.

"நான் இப்ப சொல்றத நல்லா கேட்டுக்குங்க... இந்த ஜென்மத்துல நந்தினிதான் என் மனைவி. இதுல எந்த மாற்றமும் இல்லை. ஒரு பதினைஞ்சு நாள் பொறுத்துக்குங்க. நான் எங்க வீட்ல அப்பா கிட்ட பேசி அப்பாவை எப்படியாவது சமாதானப்படுத்திடறேன். ஒரு வேளை அவர் சமாதானம் ஆகலைன்னா நானே ஐந்நூறு பவுனை நந்தினிக்கு போட்டு அப்பா கேட்டா நீங்க போட்டதுன்னு சொல்லி சமாளிச்சுக்கறேன். என்னை நம்புங்க..." என்றான்.

அந்த பேச்சும் அவனிடம் தொனித்த கெஞ்சலும் ஜெயந்தியையும், ராகவியையும் அப்பாடா என்று லேசாக்கியது. இருந்தும் ராகவிக்குள் ஒரு சிறு சந்தேகம்.

"பதினைஞ்சு நாள் கழிச்சு பல்டி அடிக்க மாட்டீங்களே...?



"சேச்சே... என்ன நீங்க...?"

"எது எப்படியோ எங்கக்கா நல்லா இருந்தா அதுவே போதும்..."

"என் வரைல உங்கக்கா மட்டுமில்ல... அவ வயத்துல வளர்ற என் குழந்தையும் ஒருசேர நல்லா இருக்கணும். அதுக்காக பாருங்க நான் குங்குமப் பூவெல்லாம் வாங்கிட்டு வந்துருக்கறத..." என்றபடி தன் ஜாகிங் பேண்ட்டில் இருந்து ஒரு சிறு டப்பா ஒன்றை வெளியில் எடுத்துக் காட்டினான்.

அதைப் பார்த்த மாத்திரத்தில் நந்தினிக்கு மளுக்கென்று கண்களில் நீர் கோத்துக் கொண்டது.

"இவ்வளவு பாசத்தை மனசுல வெச்சுக்கிட்டுதான் நேத்து அப்பா அக்கா எதிர்ல சிலை மாதிரி நின்னீங்களாக்கும்?" என்று கோபமாய் சிணுங்கினாள்.

ராகவி அந்த காட்சியை பார்த்தபடியே, "இருங்க. காபி போட்டுக் கொண்டுவரேன்..." என்று சமையல்கட்டு நோக்கி ஓடினாள்.

"அப்படியே உங்கக்காவுக்கு ஒரு டம்ளர்ல பால் கொண்டுவாம்மா... இந்த குங்குமப்பூவை என் கையால இங்கேயே இப்பவே போட்டு கொடுத்திடறேன்..." என்றான் பார்த்திபன்.

ராகவியும் அவனுக்கு காபியும், நந்தினிக்கு பாலும் கொண்டு வந்தாள். அவனும் அவர்கள் எதிரில் ஒரு சிட்டிகை பாலில் கலந்து அதை நந்தினியை நோக்கி நீட்டினான்.

நந்தினியும் அதை வாங்கிக் குடித்தாள்.

அவன் கண்களில் தன் நம்பிக்கை ஜெயித்துவிட்ட பெருமிதம் பொங்கி வழிந்தபடி இருந்தது.

அவனும் காபியை குடித்து முடித்தான்.

ராகவியை பார்த்து "என் இளைய மைத்துனியே... நீ போட்ட காபி சூப்பர்..." என்றான். ராகவிக்கு அப்போதே சிறகு முளைத்து விட்டது.

ஜெயந்தி அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். அவனும் அவர்களிடம் சொல்லிக் கொண்டு கிளம்ப ஆயத்தமானான்.

"நந்தினி... தவறாம குங்குமப்பூவை கலந்து சாப்பிடணும். இது தீர 15 நாளாகும். அடுத்த டப்பாவை நான் இந்த வாரமே வாங்கிடுவேன். பாத்தும்மா... வயத்தை பட்டினி போடாதே.... மனசுல எந்த கவலையையும் வெச்சுக்காதே, அப்புறம் என் பிள்ளைதான் பாதிக்கப்படும்.." என்று நந்தினியிடமும் உரிமையோடு பேசிவிட்டு வெளியேறினான்.

தெருவில் இறங்கிய அவன் உருவம் மறையும்வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

அவன் தலை மறையவும்தான் திரும்பினாள்.

ஜெயந்தியும் ராகவியும் மெல்ல நெருங்கி வந்தனர்.

ஜெயந்தி, நந்தினிக்கு திருஷ்டி கழித்தாள்.

ராகவி தன் மார்பை தாலாட்டியவளாக,

"நந்தினிக்காக... அப்பா மலைக்குப் போய் அங்க கதறியழுத பலன் இங்க இப்படி வேலை செய்யுதுன்னு நினைக்கிறேன்" என்றாள்.



"நான்தான் சொன்னேனே... என் பார்த்தியை பத்தி எனக்கா தெரியாது..." நந்தினியிடமும் செருக்கு பெருமிதமாய் வெளிப்பட்டது.

"அப்பா வந்து விஷயத்தை கேள்விப்பட்டா அப்படியே நெகிழ்ந்து போயிடுவாரு..."

"பாவம் அப்பா... அவரை அந்த பணக்காரர் நல்லாவே காயப்படுத்திட்டார்..."

அவர்கள் தங்களுக்குள் லேசாகி பலவாறு பேசிக் கொள்ள, அதே சமயம் அவன் தெருவில் ஜாகிங் போனபடியே தன் செல்போனை எடுத்திருந்தான்.

போனில் அவன் தந்தையிடம்தான் பேசினான்.

"அப்பா... நீங்க சொன்னபடியே அந்த விஷம் கலந்த குங்குமப்பூ டப்பாவை நந்தினி கிட்ட சேர்த்துட்டேன். என் கையாலயே ஒரு ஸ்பூன் பால்ல கலந்தும் கொடுத்துட்டேன். ஒரு வாரத்துல அவளோட கரு கலையப் போறது நிச்சயம்..."

"சபாஷ்... ஏதோ இந்த காரியத்தையாவது நான் சொன்ன மாதிரி செய்தியே.... அந்த மட்டுல சந்தோஷம். கரு கலையட்டும் அந்த வாத்தி என்ன பண்றான்னு பாக்கறேன்..." என்கிற பதிலும் மறுபுறத்தில் இருந்து ஒலித்து அடங்கியது. அவன் முகத்திலும் எதையோ பெரிதாக சாதித்துவிட்டது போல ஒரு வெற்றிச் சிரிப்பு...

# 8

**வி**ஸ்வரூபம் எடுப்பது என்பதைப் பற்றி எண்ணிடும்போதே போர்க்களத்தில் அர்ஜுனன் முன்னே கண்ணன் எடுத்த விஸ்வரூபம்தான் நமது

நினைவுக்கு வரும். அடுத்து இலங்கை நோக்கிப் பறந்திடும் முன் அனுமன் எடுத்த விஸ்வரூபம் நம் நினைவுக்கு வரும்.

ஒரு மனிதனோ, இல்லை ஒரு ஜடப் பொருளோ தன் இயல்பான தன்மையில் இருந்து மாறுபட்டு பல மடங்கு பெரிதாக தெரிவதே விஸ்வரூபம் எனப்படும்... அஷ்டமா சித்திகளில் இந்த வகை சாகசத்துக்கு பெயர் மஹிமா எனப்படும்.

அணிமா என்னும் ஆற்றலால் கண்ணுக்கு புலப்படாத அளவு ஒரு புள்ளியாக மாற முடிவதுபோலவே பெரிதாகுதல் என்னும் இந்த சித்தியும் சித்த உலகில் சாத்தியமான ஒரு விஷயமே. கண்ணனும், அனுமனும் விசுவரூபம் எடுத்ததே இவ்வகை சித்தியால்தான் என்பது சித்த உலகின் கருத்து.

அது எப்படிப் பெரிதாக முடியும் என்கிற ஒரு கேள்வியை புத்தி எழுப்பத்தான் செய்யும்... உள்ளங்கையில் அடங்கி விடும் ஒரு தென்னங்கன்று பூமியில் புதைக்கப்பட்ட நிலையில் பஞ்சபூத சேர்க்கை காரணமாக கிட்டத்தட்ட எண்பது மீட்டர் உயரத்துக்கு வளர்கிறது. அது மட்டுமல்ல... அத்தனை உயரத்தில் ஆயிரக்கணக்கான காய்களை காய்த்து காய்த்து தள்ளுகிறது. இவைகளில் இளநீரும் அந்த இளநீருக்குள் நாம் குடித்து மகிழ்ந்திடும் நீரும் இருப்பது நமக்கு இயற்கை புரியும் ஒரு அன்றாட விஷயமாக இருக்கலாம்... நாம் இது குறித்து யோசிக்கும்போது தான் எந்தச் சக்தி அவ்வளவு நீரை மரத்தண்டு வழியாக மேலே ஏற்றி அங்கு காய்க்குள் காய்களுக்குள் செலுத்துகிறது என்கிற கேள்வியை எழுகிறது. அதுதான் இயற்கை என்று இதற்கு ஒரு



வார்த்தையில் பதில் கூறிவிடுவது சுலபம். அந்த இயற்கை எப்படிப்பட்டது, அது எவ்வாறு இப்படி உயரத்தில் செயல்படுகிறது என்கிற ஆய்வுகளில் இறங்கினால் பல நுட்பமான செய்திகள் நமக்கு கிடைக்கும்.

அந்த செய்திக்குள்தான் சித்தர்களின் விஸ்வரூபமெடுக்கும் ஆற்றலுக்கான விடையும் ஒளிந்துள்ளது. விஸ்வரூபத்தை அடுத்து வரும் சாகசம் மலைபோல கனத்தல்!

**பா**ர்த்திபன் அந்த சதிச் செய்தியை சொல்லி விட்டு தொடர்ந்து ஜாகிங் செய்தபடி ஓட ஆரம்பித்தான்.

பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கு காதலும், காமமும் கடைத்தெருவில் பிளாட்பாரக் கடை ஒன்றில் மலிவான விலைக்கு ஒரு பொருளை வாங்குகின்ற மாதிரி என்று ஒரு கருத்து இருக்கிறது.

பார்த்திபன் அதை உறுதி செய்கின்றவன் என்பது அவனது ஓட்டத்தில் புலனானது. எதிரில் போலீஸ் டி.எஸ்.பி. ஒருவர் இரைக்க இரைக்க ஜாகிங் செய்தபடி வந்து கொண்டிருந்தார். பார்த்திபனை பார்க்கவும் நின்று நலம் விசாரித்தார். அவனை மட்டுமல்ல... அவன் அப்பா ராமலிங்கம் பற்றியும் விசாரித்தார்.

“தம்பி... அப்பாவை நான் ரொம்ப கேட்டதா சொல்லுங்க..என்று அவர் காட்டிய மரியாதையில் அவர் எந்த அளவு ராமலிஙகத்துக்கு நெருங்கியவர் என்பது புலனானது.

பார்த்திபன் உற்சாகமாக ஓடத் தொடங்கினான்.

**தா**ணிப் பாறை கருப்பு கோவில்! சதாசிவமும் தியாகுவும் வியர்க்க விறுவிறுக்க வந்து சேர்ந்தனர்.

அதுவரை நடந்து வந்ததே தியாகு வரையில் பெரிய ஆச்சரியமூட்டும் ஒரு விஷயமாகத்தான் இருந்தது. ஆனால் அதற்கு மேல் நடக்க முடியாதபடி ஒரு வித வலி தொடைப் பகுதியில் உருவாகத் தொடங்கியது.

தியாகுவுக்கு சுப்புரத்தினத்தின் ஞாபகம் வந்தது. அவருக்கு போன் செய்தால் அவர் வந்து விடுவார். பின் அவர் உதவியோடு சென்னைக்கு காரில் சென்று விடுவது சுலபம் என்று தோன்றவே செல்போனை எடுத்து அவ ரோடு தொடர்பு கொள்ள முயன்றான்.

ஆனால், அங்கே சிக்னலே கிடைக்கவில்லை.

சதாசிவமும் கவனித்தார்.

“யாருக்கு தம்பி போன் பண்றீங்க?”

“இங்க சுப்புரத்தினம்னு எனக்கு வேண்டியவர் இருக்கார். அவருக்குத் தான்.”

“அப்ப அவரோட கிளம்பிப் போகப் போறீங் களா?”

“ஆமாங்க... ஏதோ உங்க உதவியால நான் இவ் வளவு தூரம் வந்துட்டேன். சுப்புரத்தினத்துகிட்ட ஒரு கார் எடுத்துக்கிட்டு வாங்கன்னா வந்துடுவார்... அந்த கார்லயே போற வழியில உங்கள மதுரைல இறக்கி விட்டுட்டு நான் சென்னை போய் எங்க வீட்ல ஓய்வு எடுக்கலாம்னு நினைக்கிறேன்...”

“ஒரு வகைல நல்ல முடிவுதான்... ஆனா, அங்க உங்களால இந்த காலை பக்குவமா பாத்துக்க முடியுமா?”

“பாத்துக்கிட்டுதானே தீரணும். எனக்கு இப்படி ஆன விஷயம் மட்டும் என் பத்திரிகை ஆசிரியருக்கு தெரிஞ்சா போதும்... அவர் அப்பல்லோ, காளியப்



பான்னு சென்னைல இருக்கற அவ்வளவு ஆஸ்பத்தி ரிக்கும் தகவல் கொடுத்து அங்க இருந்து ஆம்புலன்ஸே நேரா வந்துடும்.”

“தம்பி... நீங்க இனி எந்த டாக்டரையும் பார்க்கத் தேவையில்லை. பஸ்பத்தை தேன்ல குழைச்சு சாப்டுக் கிட்டு அந்த எண்ணெயை எலும்பு முறிஞ்ச இடத்துல பூசிக்கிட்டு வந்தாலே போதும். சித்தர்சாமி சொன்ன மாதிரி 21 நாள்ல சரியாகிவிடும்...

சதாசிவத்தின் கருத்துக்கு ஒரு பதில் கருத்தை தெரிவிக்க முடியாத தினுசில் அவரை அவன் வெறித் தான்.

“என்ன யோசிக்கறீங்க?”

“நான் இப்ப குழப்பத்துல இருக்கேங்க. உங்களுக்கு நான் ஒரு விஷயத்தை அவசியம் சொல்லியாகணும்...”

“என்ன தம்பி...?”

“நான் ஒரு கடவுள் நம்பிக்கை இல்லாத நாத்திகன்...”

“சரி, அதுக்கென்ன தம்பி..” சதாசிவம் எந்த அதிர்ச்சியும் இன்றி வெகு இயல்பாய் திருப்பிக் கேட்டார்.

“என்னங்க... நான் நாத்திகன்கறது உங்களை பாதிக்கலையா?”

“அது ஒரு நிலைப்பாடு... அது எப்படி என்னை பாதிக்க முடியும்..”

“இல்ல.. அப்படி ஒரு நிலைப்பாடுள்ள நான் இந்த சித்தர்கள் பேச்சை எல்லாம் பெருசா எடுத்துக்குவேன்னு நம்பறீங்களா?”

"சித்தர்கள்லயே பல பேர் கருத்து நாத்திக கருத்து தானே் தம்பி..." சதாசிவம் முதல் முறையாக தியாகுவுக்கு அதிர்ச்சியளித்தார்.

"நிஜமாவா..?"

"ஆமாம்... சிவவாக்கியர்னு ஒரு சித்தர். எல்லா குழந்தைகளும் 'குவா குவா'ன்னு அழுதப்ப இவர் மட்டும் 'சிவா, சிவா'ன்னு அழுதாராம். இவர் நிறைய பாட்டு பாடி இருக்காரு. அதுல ஒரு பாட்டு அறிஞர்கள், உலகத்துல ரொம்பவே ஃபேமஸ்."

சதாசிவம் கருப்பு கோவில் மரத்தடி நிழலில் காலை நீட்டி அமாந்து கொண்டதோடு, அப்படியே கால்களை பிடித்துப் பிடித்துவிட்டுக் கொண்டே சொல்ல ஆரம் பித்த அந்த விஷயம் அந்த நேரத்துக்கு தியாகுவுக்கு ஒரு கதை கேட்கும் சுவாரஸ்யத்தைத் தந்திருந்தது.

அவனுக்கு தொடையில் ஏற்பட்ட வலிக்கு அங்கே உட்கார்ந்திருப்பதும், அவரோடு பேசுவதும் இதமான ஒரு விஷயமாகவும் இருந்தது. சதாசிவம், சிவவாக்கியர் பற்றி தொடர்ந்து சொல்லத் தொடங்கினார்.

"இந்த சிவவாக்கியர் பாடின ஒரு பாட்டு அறிஞர் கள் உலகத்துல ரொம்ப பிரபலம்னு சொன்னே னில்லையா? அந்த பாட்டை கேளுங்க. அனேகமா ஒரு பத்திரிகைக்காரரான உங்களுக்குகூட இந்த பாட்டு ஏற்கெனவே கேள்விப்பட்ட ஒரு விஷயமா இருக்கலாம்.

**"நட்ட கல்லை சுத்தி வந்து நாலு புஷ்பம் சாத்தியே**
**முட்டநின்று முணுமுணென்று சொல்லும்**
**மந்திரம் ஏதடா?**



**நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்...**
**சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?"**

ங்கறது அவர் பாடின பாட்டு.

அதாவது கடவுள்ங்கறவர் வெளில இல்லை. நமக்குள்ளேயேதான் இருக்காரு... மந்திரம் சொல்றது, பூஜை பண்றதெல்லாம் வேஸ்ட்டுங்கறது சிவ வாக்கியர் அபிப்பிராயம்..."

சதாசிவம் சொல்லி நிறுத்தவும், தியாகு முகத்தில் ஒரு ஆச்சரியப் பரவல்.

"நல்லாருக்கே இந்த சிந்தனை... அப்ப சித்தர்கள்ல நம்மள மாதிரி யோசிக்கறவங்களும் இருக்காங்கன்னு சொல்லுங்க..."

"என்ன தம்பி சந்தடி சாக்குல உங்களையும் அவங்க ளோட போய் சேர்த்துக்கறீங்க? உங்களுக்கு நாத்திகம் தான் உணர்வுன்னா அதுல நீங்க நூறு சதவிகிதம் இருக்கணும். நாத்திகம்கறது ஒண்ணும் சாதாரண மில்லை தம்பி. நம்மை சுத்தி நூத்துக்கு தொண்ணூறு பேர் பக்தியோட இருக்கறது ஒரு சாதாரண விஷயம். ஆனா பக்தியை மறுத்து கடவுளை புறந்தள்ளிவிட்டு ஒருத்தர் தன்னை மட்டும் நம்பி வாழறது ஒண்ணும் சாதாரண விஷயமில்ல.. நீங்க அப்படி வாழற ஒருத்தரா இருந்தாதான் நீங்க சில சித்தர்களோட உங்களையும் சேர்த்துக்கலாம். அதுக்காக எல்லா சித்தர்களையும் நீங்க சிவவாக்கியர் மாதிரி நினைச்சுடாதீங்க. பல சித்தர்கள் அந்த மகாலிங்கமான ஈஸ்வரனை கும்பிடறவங்க. சில சித்தர்கள் முருகனையும், இன்னும் சில சித்தர்கள் ஆதி சக்தியையும் கும்பிடறவங்க.

ஆனா, எல்லா சித்தர்களும் ஒரு விஷயத்துல ஒண்ணு! மந்திரம் சொல்றது, யாகம் பண்றது, விரதம்

இருக்கறது, வரம் கேக்கறது, கோவில் கோவிலா ஏறி இறங்கி சாமி கும்பிடுவது, பூஜை புனஸ்காரம், அபிஷேகம் அப்படி இப்படின்னு இருக்கறது, இது எதுவும் இல்லாம ஒரு முழ கோமணத்தோட எனக்கென்னன்னு மலை பக்கமா வந்து ஒரு குகைக்குள்ள உக்காந்துகிட்டு தங்களையே ஜெயிச்சவங்கதான் சித்தருங்க.. நாம பாத்த ஜவ்வாது சித்தரும் அப்படித்தான். பச்சைத் தண்ணில விளக்கேத்துவார் அவரு. சமயத்துல அவர் உடம்பை தொட்டா அனலாக் கொதிக்கும். சமயத்துல பனிக்கட்டியா ஜில்லுன்னு இருக்கும். மனுஷன் பெரிய ஜித்தன். பாத்துக்கிட்டு இருக்கும்போதே காக்கா குருவி மாதிரி மாறி சர்ருன்னு வானத்துல ஏறி பறந்துடுவாரு.

மதுரைல என் வீட்டுக்கு கிளி வடிவத்துல எத்தனை தடவை வந்துருக்காரு தெரியுமா?''

சதாசிவம் பேச்சோடு பேச்சாக சொன்ன செய்திகளில் பச்சைத் தண்ணீரில் விளக்கேற்றுவார் என்கிற விஷயம் கூட தியாகுவை பாதிக்கவில்லை. கிளி வடிவில் வீட்டிற்கு வந்திருக்கிறார் என்ற செய்தி அவனைக் கிள்ளிற்று. இருந்தும் அவனது சந்தேகப்படும் அறிவு அதைக் கேட்ட மாத்திரத்தில் சிரித்தது.

"என்ன தம்பி சிரிக்கறீங்க?"

"சிரிக்காம என்னங்க பண்ண - நல்லாதான் பேசிக்கிட்டே வந்தீங்க. நடுவுல டமீல்னு சித்தர் கிளியா வருவாருன்னு அம்புலி மாமா கதைல வர்ற மாதிரி ரீல் விட்டா என்னங்க அர்த்தம்?''

தியாகு கேட்ட விதம் சதாசிவத்தை ஒன்றும் கோபப்படுத்தவில்லை. பதிலுக்கு, "தம்பி... நீங்க நாத்திகவாதின்னு உங்கள சொல்லிக்கலாம். நாத்திகவாதியாகவும் இருக்கலாம். அதை பத்தி எல்லாம் சித்தர்



சாமிங்களுக்கு கணக்கு கிடையாது. ஆனா, அவங்களை நம்மளை மாதிரி சராசரி மனுஷங்க பாக்கறதுக்கு ஒரு விதிக்கணக்கு இருக்கு. அந்த கணக்குல இல்லாம அவங்கள்ல ஒருத்தரைகூட யாரும் சந்திச்சுட முடியாது. மாசாமாசம் பௌர்ணமிக்கு பௌர்ணமி லட்சக் கணக்குலதான் இந்த மலைக்கு கூட்டம் வருது. ஆனா, அதுல ஒரு நாலு அஞ்சு பேருக்கு சித்த தரிசனம் கிடைச்சா பெரிய விஷயம்... அந்த நாலைஞ்சு பேர்ல நான் ஒருத்தன். இப்ப எனக்கு தெரிஞ்சு உங்களுக்கும் சித்தர் சாமி தரிசனம் கொடுத்துருக்காரு. தரிசனத்தோட உங்க காலுக்கு அவரே வைத்தியமும் பார்த்திருக்காரு.

எப்படி இவ்வளவு தூரம் அவர் வந்துட்டாரோ அப்ப அவரே ஒரு நாள் கிளி வடிவத்துல உங்க முன்னால வந்து என்ன பண்றீங்கன்னு பாத்துட்டுப் போவாரு. அப்ப உங்களுக்கு தெரிஞ்சிட்டுப் போவுது... இது அம்புலி மாமா விஷயமா இல்லை நமக்குப் புரியாத ஒரு விஷயமான்னு."

சதாசிவத்தின் பதிலில் நல்ல நிதானம். நல்ல அழுத்தமும்கூட.

கால் வலியும் கொஞ்சம் அடங்கியது போல் இருந்தது. செல்போனை எடுத்து திரும்பவும் சுப்புரத்தினத்துக்காக முயற்சித்துப் பார்த்தான். சிக்னல் கிடைக்கவில்லை.

"சிக்னல் கிடைக்கலையா?"

"ஆமாம்.. இன்னும் கொஞ்ச தூரம் நடந்து போய் பார்த்தா கிடைக்கலாம். ஆனா, என்னால ஒரு அடி கூட இனி நடக்க முடியாது."

"இப்படி சொன்ன நீங்கதான் மலைல ஏழு கிலோ மீட்டர் தூரத்துக்கும் மேலே நடந்து வந்துருக்கீங்க. தெரிஞ்சிக்குங்க.."

"வாஸ்தவம்தாங்க.. ஆனா, இனிமே முடியாது."

"அது சரி.. இந்த இடம் வரைக்கும் வாகனம் வர வழி இருக்குன்னு நம்ம அடி மனசுக்கு தெரிஞ்சு போச்சு இல்லயா..? அது இனி முடியாது முடியாதுன்னுதான் சொல்லும்.."

"ஒரு வகைல நீங்க சொல்றதும் சரிதான்.. மனசுக்கு எப்பவும் நிர்ப்பந்தம்கறது பெரிய தேவையா இருக்கு. அது நீங்கிட்டா அது உடனே சுருண்டு படுத்துடுது.."

"போகட்டும். நீங்க யாரை இங்க கூப்பிட நினைச்சீங்களோ அவங்கள ஆழமா நினைச்சுக்கிட்டு இந்த கருப்பை கும்பிட்டுக்குங்க. அவங்க நீங்க போன் பண்ணாமலே உங்களை தேடிக்கிட்டு வந்துடுவாங்க.."

"இது என்ன... அடுத்த அம்புலிமாமா விஷயமா?"

"எதுக்கு சந்தேகம்... நினைச்சுத்தான் பாருங்களேன்.."

"நீங்க டெலிபதி முறைய பத்தி சொல்றீங்கன்னு நினைக்கறேன்.."

"இங்கிலீஷ்ல அதுக்கு இப்படி ஒரு பேர் இருக்கா.. இருந்துட்டுப் போகட்டும். யார் அவர்... சொல்லுங்க. நான் அவரை இங்க வர வைக்கறேன்."

"அவர் பேர் சுப்புரத்தினம். வரும்போதே காரோட வரணும். வரவைப்பீங்களா?"

"ஜவ்வாது சித்தர் எனக்கு அப்பப்ப இந்த மாதிரி சில விஷயங்கள சொல்லிக் கொடுத்துருக்காரு. இப்ப



இருந்து அதிகபட்சம் அரை மணி நேரத்துல அவர் காரோடயே வருவார் பாருங்க.."

சதாசிவம் அப்படியே கைகளை கட்டிக்கொண்டு பிலாவடிக் கருப்பை பார்த்தார். அந்த கறுப்பு நாயும் அவர் பார்த்த நொடி முன்னால் வந்தது.

அவர் மனதுக்குள், "சுப்புரத்தினமய்யா.. நீங்க எங்க இருந்தாலும் சரி, ஒரு வாடகைக் காரை எடுத்துக்கிட்டு அடிவாரத்துக்கு வாங்க. உங்களுக்காக தியாகு தம்பி காத்துக்கிட்டிருக்காரு.."

என்கிற எண்ணத்தை திரும்பத் திரும்ப சொல்லத் தொடங்கினார். அப்படிச் சொல்லும்போது இடகலையாக சுவாசிக்க வேண்டி வலது நாசித்துவாரத்தை அடைத்துக் கொண்டார்.

அவரது அந்த முயற்சியை ஆச்சரியம் குறையாமல் பார்க்கத் தொடங்கினான் தியாகு. சொல்லிவைத்தது போல அரை மணி நேரம் கழிந்த நிலையில், "பாம் பாம்.." என்கிற ஹாரன் சப்தமுடன் கார் ஒன்று அந்த பிராந்தியத்தில் நுழையும் சப்தம் கேட்டது.

# 9

'அஷ்டமா சித்திகளில் கரிமா சித்தி என்பது கனத்து திகழ்வது... இப்பொழுதும் சில இடங்களில் கரத்தோடு கரம் சேர்த்துக் கொண்டு கரத்திற்கு இரு புறத்தில் கடிக்கும் தேளை விட்ட நிலையில் ஒருவர் மேல் ஒருவர் ஆதிக்கம் செலுத்துவார்கள்... அப்போது மொத்த பலத்தையும் இருவருமே கை விரல்களுக்கு கொண்டு வந்து ஒருவரை ஒருவர் வீழ்த்தப்

பார்ப்பார்கள். இந்த மோதல் பலத்தை பிரயோகித்தல்! இதே மோதலில் ஒருவரின் கரத்தை துளிகூட அசைக்க முடியாத ஒரு நிலை எப்போது ஏற்படுகிறதோ அப்போது கரிமா அவருக்கு வசமாகி விட்டது என்று பொருள்.

இதற்கு உதாரணங்கள் பல உண்டு. பாரதத்தில் பீமசேனன் காட்டு வழி சென்றபடி இருக்கிறான். வழியில் ஆஞ்சநேய மூர்த்தி கிழப்பருவம் எய்திய நிலையில் ராமநாமத்தை ஜெபித்தபடி அமர்ந்திருக்கிறார். அவரது வால் நீண்ட நிலையில் தரை மேல் கிடக்கிறது. அவ்வழியாக வரும் பீமசேனன் அந்த வாலைத் தாண்ட விரும்பாமல் அதை சுருட்டிக் கொள்ளும்படி அனுமனைப் பார்த்து சொல்கிறான்.

ஆனால், அனுமனோ நீ அதை தூக்கி விலக்கிய நிலையில் கடந்து போ என்கிறார். பீமனுக்கு கோபம் வருகிறது. நீயாக சுருட்டிக் கொள்கிறாயா, இல்லை வாலை பிய்த்து எறியட்டுமா என்று கேட்க, அனுமனும் சிரித்தபடி முடிந்தால் அவ்வாறே செய்து கொள் என்கிறார். ஆனால், அவரால் வாலை துளி கூட அசைக்க முடியவில்லை... பல குன்றுகளையே தூக்கி வானில் எறிந்த பீமசேனனுக்கு அந்த சாதாரண வால் அப்படி கனக்கிறது. அப்போதுதான் அது சாதாரண வானரம் அல்ல என்பது புரிந்து நீங்கள் யார் என்று கேட்டிட, நான்தான் அனுமன் என்று அவருக்கு அனுமனும் காட்சி தருகிறான். இதைதான் கரிமா சக்தி என்பார்கள். நமது மொத்த பலத்தை ஒரு புள்ளியில் பிரயோகித்து மலை போல கனத்தல் என்பது கரிமாவுக்கான அடிப்படையாகும். பல சித்த



புருஷர்கள் இந்த சித்தியில் தலைசிறந்து விளங்கினார்கள்.

அஷ்டமாசித்து வரிசையில் நாம் அடுத்து விளக்கப்போவது இலஹிமா எனும் பஞ்சு போல மிதக்கும் தன்மை... இந்த சித்து புரிபவர்களால்தான் நீர் மேல் நடக்க முடியும் மிதக்கவும் முடியும்!"

**கா**ர் ஹாரன் சப்தம் கேட்டு தியாகு திரும்பிப் பார்த்தான். சுப்புரத்தினம்தான் வந்திருந்தார். தியாகுவால் அதை நம்ப முடியவில்லை. திருதிருவென விழித்தான்! ஆனால், சதாசிவம் அதை பெரிதாக நினைக்கவில்லை. 'பார்த்தீங்களா தம்பி– நான் சொன்ன மாதிரியே வந்துட்டாரு..' என்று சொல்லி காட்டி பெரிதாக சந்தோஷப்படவும் இல்லை.

சுப்புரத்தினமும் நெருங்கி வந்தார். கால் கட்டோடு அமர்ந்திருந்த தியாகுவை பார்த்தார். அவருக்கு முதலில் வந்தது சிரிப்புதான்.

"நின்னச்சேன்... நினைச்சேன்... இப்படி எல்லாம் ஏதாவது ஆகும்னு நினைச்சேன்.. அதே மாதிரி ஆயிடிச்சி. என்ன தம்பி எங்க போய் இப்படி காலை ஒடிச்சிக்கிட்டீங்க...." என்று முகத்தில் சிரிப்பு மாறாமல் கேட்டார்.

"சார்... சிரிக்கறத நிறுத்துங்க... நீங்க எப்படி இந்த பக்கம் கார்ல - நான் வரச் சொல்லலியே..." என்றான் தியாகு.

"அட என்ன தம்பி நீங்க... நீங்க தனியா வேற சொல்லணுமாக்கும். வீறாப்பா இந்த மலைல ஏறுனாலே இப்படி ஏதாவது ஆகும்னுதான் தெரியுமே. அத்தோட என்னன்னு தெரியல. அடிவாரத்துல நீங்க ஏதோ

கஷ்டத்துல சிக்கிக்கிட்டு எனக்காக காத்துக் கிடக்கிற மாதிரியே ஒரு எண்ணம். அதான் பார்த்தேன் எதுக்கும் இருக்கட்டுமேன்னு வாடகை கார் புடிச்சி கூட்டிக் கிட்டும் வந்துட்டேன். வந்த பிறகுல்ல தெரியுது நான் நினைச்சது எவ்வளவு சரின்னு..."

சுப்புரத்தினம் விளக்கத்தோடு சதாசிவம் சாரையும் பார்த்தார். அவரிடம் ஒரு சின்ன சிரிப்பு.

"சார் நீங்க...?"

"நான் சொல்றேன் சார்... சார் பேர் சதாசிவம். இந்த மலைக்குப் பல வருஷங்களா வந்து போறவரு. இவராலதான் காலை ஒடிச்சிகிட்ட நான் இவ்வளவு தூரமாவது வந்திருக்கேன். சாருக்கு சொந்த ஊர் மதுரை..." என்று தியாகு அவருக்கான அறிமுகத்தை முடித்தான். சுப்புரத்தினம் பதிலுக்கு வணக்கம் சொன்னவராய் "நல்ல நேரத்துக்கு வந்து சேர்ந்தீங்க... இந்த கார்ல தான் தம்பி சென்னை போய்ச் சேரணும்..." என்றார்.

"சார்... நீங்களும் மதுரைக்குப் போகணும். அதை ஏன் விட்டுட்டீங்க?"

"எனக்கென்ன தம்பி கால் நல்லாதானே இருக்கு நடந்தேகூட போயிடுவேன். உங்களுக்குதானே இப்ப காருங்கறது ரொம்ப முக்கியம்..."

"ஆமாம். எப்படி தம்பி இப்படி ஆச்சு... எங்க விழுந்து வெச்சீங்க...?"

- சுப்புரத்தினம் அந்த கேள்வியை விடவில்லை.

"போய்க்கிட்டே பேசலாமே..." என்றார் சதாசிவம்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவர்கள் காரில் ஏறிக் கொள்ள, ஒரு பாறை மேல் அந்த கறுப்பு நாய் ஏறிவந்து



நின்று அவர்கள் புறப்படுவதை பார்க்கவும் செய்தது. ராஜபாளையத்தில் இருந்து ஒரு பஸ் வந்ததில் கூட்டம் வேறு இறங்கிக் கொண்டிருந்தது. காரும் புறப்பட்டது. சதாசிவம் கண்ணாடி கதவு வழியாக கறுப்பு நாயைப் பார்த்து ஏதோ பழகியவர்களிடம் சொல்லிக் கொள் வதை போல 'போய்ட்டு வரேன் கருப்பா...' என்றார். சுப்புரத்தினத்துக்கு அந்த ஒரு செயலே அவரது பக்தியை புரிய வைத்து விட்டது.

"சதாசிவம் சாமி ரொம்ப வருஷமா மலைக்கு வர்றீங்களோ?" என்கிற கேள்வியுடன் பேச்சை ஆரம் பித்தார். முன் பக்கம் டிரைவிங் ஸீட் அருகில் அமர்ந்த படி இருந்தார். திரும்பிப் பார்த்து பேசுவது கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது.

சதாசிவமும் பதில் சொல்லத் தொடங்கினார்.

"ஆமாங்க... இது எனக்கு நூறாவது மலை..."

"அடேயப்பா நூறு மலை கண்டவர்னா சித்தர் சாமிங்க தரிசனம் வாச்சிருக்கணுமே?"

"ஆமாங்க... ஜவ்வாது சித்தர் என்னை உரிமையா பேர் சொல்லிக் கூப்பிடுவார். அந்த அளவுக்கு ஒரு நெருக்கம்."

ஜவ்வாது சித்தர் பேரை சொன்ன மாத்திரத்தில் சுப்புரத்தினத்துக்கு தூக்கிவாரிப்போட்டது. நம்ப முடியாதபடி பார்த்தார்.

"என்னங்க நம்பமுடியிலயா?"

"சேச்சே... அப்படி எல்லாம் இல்லை. ஜவ்வாது சித்தரையே பாத்துட்டீங்கன்னா நீங்க பெரிய ஆளா தான் இருக்கணும். அவர்தானே மலைல தங்கம் செய்யற

ரசவாத தைலக் கிணத்தை காவல் காக்கறதா சொல்வாங்க..."

சுப்புரத்தினம் சொன்ன விளக்கத்தில் தியாகுவிடம் ஒரு சுரீர் வியப்பு.

"என்ன சுப்புண்ணே சொல்றீங்க... தங்கம் செய்யற ரசவாத தைல கிணறா?"

"ஆமாம் தம்பி... ஆனா, நீங்கதான் சாமியும் கிடையாது, பூதமும் கிடையாது ரகமாச்சே. இதை நீங்க நம்மமாட்டீங்க... ஜவ்வாது சித்தர் கூடுவிட்டு கூடு பாயறதுலயும் பெரிய ஆள். கிளியா வருவாரு, பாம்பா வருவாரு.. செத்துப்போன ஒரு பிச்சைக்காரன் உடம்புல எல்லாம் பூந்து வந்துருக்காரே..."

சுப்புரத்தினம் பேசப் பேச தியாகுவுக்கு தலையை சுற்றியது.

"தம்பி நம்பறாரோ நம்பலையோ அவருக்கும் ஜவ்வாது சித்தர் கருணை இருக்கு. அதான் அவரே தம்பியோட உடைஞ்ச காலுக்கு கட்டு போட்டுருக்காரு..." என்றார் சதாசிவம். அடுத்த நொடி சுப்புரத்தினம் விக்கித்துப் போய்...

"என்னய்யா சொல்றீங்க... தியாகு தம்பி ஜவ்வாது சித்தரை பார்த்தாரா?"

"அட என்ன நீங்க.. அவர் கிட்டயே கேளுங்க.."

சதாசிவம் திருப்பிவிட சுப்புரத்தினம், தியாகுவிடம் ஊன்ற, அவனிடம் ஒரு வித சங்கோஜ பாவனை. நெளிந்தான்.

"தம்பி நெசமாவா?"

"ஒரு சித்தர் சாமி கட்டு போட்டாரு... இவர் சொல்லித்தான் அவர்தான் ஜவ்வாது சித்தர்ங்கறதே எனக்குத் தெரியும்.."



"தம்பி... சாமியாவது பூதமாவது... எல்லாம் புத்திதான்னு பேசுன உங்களுக்கா ஜவ்வாது சித்தர் தரிசனம் கிடைச்சது?"

"ஒரு வகைல இந்த காலை உடைச்சதேகூட அவர் தான். கஞ்சா அடிச்சிகிட்டு எனக்கென்னன்னு உக்காந்து கிட்ருந்தவரை நான்தான் தோளை தொட்டு உசுப்பப் பார்த்தேன்... அந்த செகண்டுல ஷாக் அடிச்ச மாதிரி இருந்தது. தூக்கி எறியப்பட்டேன்., கால் ஒடிஞ்சு போச்சு..."

"பார்றா... அவரை தீண்டவேற செஞ்சிங்களா? இதை நான் என்னன்னு சொல்ல... போகட்டும். இப்பவாவது எங்க சதுரகிரிமலை சாதாரணமில்லன்னு ஒத்துக்கறீங்களா?"

சுப்புரத்தினம் கேட்ட கேள்விக்கு தியாகு அவ்வளவு சீக்கிரத்தில் ஆமோதித்து விடவில்லை.

"சுப்புண்ணே... நான் இப்ப குழப்பத்துல இருக்கேன். உங்க லாஜிக்படியே வர்றேன். நான் சாமி பூதம் இல்லேங்கற விஞ்ஞானம் பெருசுங்கற ஆள்தான். உங்க சாமிங்க எனக்கு எதுக்கு தரிசனம் தரணும்? நம்பிக்கை இருக்கற உங்களுக்கு.. இதோ சாருக்கு அவங்க தரிசனம் தர்றதோ இல்ல உதவறதோ செய்யலாமே...?"

"இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க... சுத்தி வளைக்காம சொல்லுங்க."

"அந்த ஜவ்வாது சித்தர் கிட்ட என்னவோ இருக்கு. அது ஏதாவது தந்திரமாகூட இருக்கலாம். கேரளாவுல ஒரு பொண்ணு இருக்கா. அவ ஹெவி ட்ரான்ஸ்ஃபார்மர்ல கைவெச்சாலும் கரண்ட் அவளை ஒண்ணும் பண்ணாது. அஸ்ஸாம்ல ஒருத்தர் தன் தாடியில ஐம்பது கிலோ கல்ல கட்டி தூக்கிடறார்.

பன்னெண்டு வயசுல ஒரு பையன்... ஒரிஸ்ஸாவுல இருக்கான் பல்லாலையே மாருதி காரை கட்டி இழுத்துடறான். இப்படி உலகம் பூரா பல விதமான சக்தி படைச்சவங்க இருக்காங்க. எங்க பத்திரிகைக்கு அந்த மாதிரி நியூஸ் எவ்வளவு வருது தெரியுமா?"

அவன் பதில் சொன்ன விதத்திலேயே அவன் இன்னமும் அந்த மலைத்தலத்தையோ இல்லை ஜவ்வாது சித்தரையோ துளிகூட ஏற்கவில்லை என்பது அப்பட்டமாக தெரிந்தது. அவன் மேலும் தொடர்ந்தான்.

"அதுமட்டுமில்லேண்ணே... நூறு தடவையா மலைக்கு வந்துருக்கற இவருக்கு எவ்வளவு பெரிய பிரச்சினை எல்லாம் இருக்கு தெரியுமா... இவருக்கு வாழப்பிடிக்கலேண்ணே... வீட்டுக்குப்போய் தற்கொலைதான் பண்ணிக்கப் போறாரு' இதுக்கு நீங்க என்ன சொல்றீங்க?"

தியாகுவின் அந்த கேள்வி நியாயம் சதாசிவத்தையே கூட வாயடைக்க வைத்துவிட்டது. கப்புரத்தினம் சதாசிவம் மேல் பார்வையை விட்டார்.

"தம்பி சொல்றது ஒரு விதத்துல சரிதான்... என்ன தான் சாமிங்க பார்வையும் ஆசீர்வாதமும் இருந்தாலும் அதனால வாழ்க்கைல பெருசா சந்தோஷம் இல்ல... என் ரெண்டாவது பொண்ணை ஒரு பணக்கார பையன் கர்ப்பமாக்கிட்டு இப்ப நான் இல்லைங்கறான். மானத்தோட வாழணும்னா சாகத்தானே வேணும்? எதிர்த்துப் போராடினா அவன்தான் கெடுத்தான்கறத வேணும்னா நிரூபிக்கலாம். அவன் மனசு ஒப்பி சந்தோஷமா என் பொண்ணை ஏத்துக்குவான்னு எதை வெச்சு நம்பறது மானம் போனது போனதுதானே?"



சதாசிவம் மெல்லிய குரலில் கேட்டபோது கப்புரத்தினம் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. காரும் நின்றது. ஆனால், கப்புரத்தினம் உள்ளே இருந்த நிலையில் "ஐயா தியாகு சின்ன பையன். இந்த காலத்து ஆளு... பொறக்கும்போதே டி.வி., செல்போனுன்னு எல்லா வசதிகளுக்கும் நடுவுல பொறந்து வளர்றாங்க! அவங்களுக்கு விஞ்ஞான பாதிப்பு நிறைய இருக்கும். அதை அவங்களும் பெருசா நினைக்கறதும், பக்தி சார்ந்த விஷயங்களை முட்டாள்தனமா யோசிக்கறதும் ரொம்ப சகஜம். நீங்க அப்படி இல்லை... ஈஸ்வரனே ஆனாலும் கர்ம வினைக்கு பதில் சொல்லணும்கறது தெரியாதவரா நீங்க... நீங்களும் மனசு விட்ட மாதிரி பேசறீங்களே..." என்று அழகாக கேட்டார்.

"இல்ல சார்... நான் மனசு விடலை! சாமி இந்த முறை எனக்கு கொஞ்சம் நம்பிக்கை தந்துருக்கார். அதோட வினைவுகள் போகப் போகத் தெரியலாம்..." என்றார் சதாசிவம்.

"அப்ப நீங்க தற்கொலை எல்லாம் செய்துக்க மாட்டேன்னு சொல்லுங்க."

சதாசிவம் பதிலுக்கு சிரித்தார். இருந்தும், "அது என் கைல இல்ல சாமி... ஆனா, ஒண்ணு. மானம் போய் நான் ஒரு நாள் உயிர் வாழமாட்டேன். தற்கொலை பெரிய பாவம்னு எனக்கும் தெரியும். மானம் போய் நடைபிணமா வாழற கொடுமைக்கு முன்னால அது பெருசில்லங்கறது எனக்கு மட்டும்தான் தெரியும். ஆகையால நடக்க நடக்கத்தான் எதுவும் தெரியும். சித்தர் சாமிக்கு இப்ப என் பிரச்சினை தெரிஞ்சுபோச்சு. அவர் நிச்சயம் ஏதாவது செய்வார். பார்ப்போம்..." என்கிற அவரது நம்பிக்கையான பேச்சு கப்புரத்தினத்தையும் யோசிக்க வைத்தது.

"சார்– ரொம்ப பக்குவப்பட்டவரா தெரியறீங்க. தியாகு உங்களோட சேர்ந்ததுகூட ஒரு வகைல நல்லதுக்குங்கற மாதிரிதான் எனக்கு தோணுது. அடுத்து நீங்க மலைக்கு வரும்போது உங்க பிரச்சினை சரியா போச்சுன்னு நீங்க சொல்லணும்" என்றபடியே காரை விட்டு இறங்கியவர் "தியாகு தம்பி, பார்த்து போய்ட்டு வாங்க. சென்னைக்கு போய் காருக்கு உரிய தொகையை கொடுத்து திருப்பி அனுப்பிடுங்க" என்றார். காரும் திரும்ப கிளம்பியது. அந்த காருக்குமேலேயே ஒரு கிளி அமர்ந்திருப்பது கார் புறப்பட்டு விட்ட நிலையில் தான் சுப்புரத்தினத்துக்கு தெரிந்தது. உடனேயே மனம் பரவசமாகிப்போனது.

'சாமி... நீங்களும் கூடதான் போறீங்களா!' என்றார் மனதுக்குள்.

# 10

**'அஷ்டமாசித்திகளில் இலஹிமா சித்தி என்பது பஞ்சுபோல் லேசாவதை குறிக்கிறது. மிக மிக பாரமான எடையுள்ள நாம் இலஹிமாசித்தி புரியத் தெரிந்தால் போதும், பஞ்சுபோல லேசாகி விடுவோம். அது எப்படி நமது நிறையை நீக்கிக் கொண்டு லேசாகிட முடியும் என்று கேட்கலாம். ஆகாய விமானம்கூட மிக மிக கனமானதுதான். பல டன் எடையுள்ள அது வானில் மிதந்தபடிதான் பறக்கிறது - அது எப்படி சாத்தியம் என்கிற கேள்விக்கு அது காற்றை உள்வாங்கிச் சமன் செய்து மிதந்தபடி பறக்கிறது என்று ஒரு பதில் இருக்கிறது. அதே போல தான் ஒருவர் தன்னை லேசாக்கிக் கொள்வதும்.**



**திருநாவுக்கரசரை சமணர்கள் கடலில் தூக்கிப் போடுகின்றனர். ஆனால், அவரோ கடலில் மூழ்கி விடாமல் மிதந்தார்... இது இலஹிமா சித்தியால் மட்டுமே சாத்தியம். ஒருவரது எடைப்பாட்டிற்கு பின்னால் பூமியின் புவிஈர்ப்பு விசை என்பது பெரிய காரணமாக உள்ளது. இந்த புவிஈர்ப்பு விசையின் தன்மையை விளங்கிக் கொண்டு சித்தி புரியத் தெரிய வேண்டும். அது பயிற்சியால்தான் சாத்தியமாகும். இந்த வித்தை தெரிந்த சித்த புருஷர்கள் சாதாரணமாக நீர் மேல் நடப்பர்... குளங்களில் மிதந்து சாகசம் செய்வார்கள்!'**

சுப்புரத்தினம் பரவசப்பட்டபடி பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த கார் நெடுந்தூரம் போய் விட்டது. சுப்புரத்தினத்துக்கு ஒரு விஷயம் மட்டும் அப்போது தெளிவாக புரிந்தது. ஜவ்வாது சித்தர் நிச்சயம் தியாகுவுக்கு பெரிய அளவில் பாடம் கற்றுக் கொடுத்து அவனை ஒரு பெரிய சித்தானுபவத்துக்கு உள்ளாக்கப் போகிறார் என்பதுதான் அது–

சுப்புரத்தினம் அந்த எண்ணத்தோடு நடக்க கால் எடுத்தபோது, அவரை நோக்கி இரண்டு பேர் வந்தனர். வேட்டி சட்டை, தோளில் தொங்கும் ஒரு நூல்பை என்று ஒருவர், இன்னொருவன் நவீனமாக ஜீன்ஸ் பேண்ட், டிஷர்ட், கையில் செல்போனுடன் காட்சி தந்தான்.

வந்தவர்கள் சுப்புரத்தினத்தை நைச்சியமாக சிரித்தபடி வணங்கினர்.

"வணக்கங்க–"

"வணக்கம்– நீங்க?"

"நாங்க திருவண்ணாமலை பக்கம் செஞ்சியில் இருந்து வர்றோம். என் பேர் ஆனைமுத்து, இவர் பேர் சேகர்."

"நல்லது! நான் என்ன பண்ணணும்?"

"சுப்புரத்தினம்கறது நீங்கதானே?"

"நானேதான்... நானேதான்..."

"அப்ப நாங்க தேடி வந்துருக்கறதும் உங்களத் தாங்க."

"என்ன விஷயம்னு தெரிஞ்சுக்கலாமா?"

"சொல்றோம்... நாங்க சைவ சித்தாந்தத்துல ரொம்ப ஈடுபாடுள்ளவங்க. இந்த பூமியில எங்கல்லாம் சிவன் கோயில் இருக்கோ அங்கெல்லாம் போய் அந்த சாமியை கும்புடணும்கறது எங்க ஆசை... அதுக்காக தான் இங்க சதுரகிரி மலைப்பக்கமும் வந்தோம். அப்படி அந்த மலைக்குப் போகும்போது வழிகாட்டவும், உதவி செய்யவும் யாராவது இருந்தா நல்லா இருக்குமேன்னு நாங்க ஆசைப்பட்டப்போ எங்க ஊர்லயே இருக்கற சுந்தரராமன்கற ஒரு தமிழாசிரியர் உங்கள பத்தி சொல்லி அவரோட நீங்க எடுத்துக்கிட்ட போட்டோவையும் காட்டினார். அதான் உங்கள பார்த்த உடனேயே நீங்கதான் சுப்புரத்தினமா இருக்கணும்னு முடிவு பண்ணி வந்து கேட்டோம்..."

"ஓ... நீங்க தமிழாசிரியர் சுந்தர்ராமனுக்கு வேண்டியவங்களா... பலே! அவர் என்னோட பால்ய கால நண்பர். 50 வருஷ பழக்கம் எங்க பழக்கம்!"

"ஆமாமா... அவரும் உங்கள பத்தி நிறையவே சொல்லி இருக்காரு."

"சரி... இப்ப நீங்க ஏதாவது வாகனத்துல வந்துருக்கீங்களா?"



"நாங்க பஸ்லதான் வந்தோம். எங்களுக்கு சதுரகிரிக்குப் போகணும். அதான் இப்ப நோக்கம். உங்களால எங்க கூட வர முடியுமா?"

அவர்கள் கேட்க, சுப்புரத்தினம் யோசிக்கத் தொடங்கினார்.

"என்ன யோசிக்கிறீங்க... உங்களால கூட வர முடியலேன்னாலும் பரவால்ல, நாங்க எப்படிப் போகணும்... அப்புறமா மலைல முக்கியமான இடங்கள்லாம் எது எதுன்னு சொன்னாகூட போதும்..."

"அது ஒண்ணும் பெரிய விஷயமில்லை. இங்க இருந்து ஒரு ஆட்டோவுலகூட நீங்க போகலாம். சதுரகிரி மலை அடிவாரம் வரை ஆட்டோல போய் இறங்கிட்டு, பிறகு அங்க இருந்து நடந்துதான் மலை ஏறணும். மலைல பல மைல் தூரம் நடக்கணும். திருப்பதி, பழனி மாதிரி பாதை எல்லாம் போடப்படலை. கல்லும் முள்ளுமாதான் இருக்கும்."

"அதனால என்ன... எங்க ஆசை மலைலயே ஒரு மாசம்னாலும் தங்கி இருக்கணும்கறதுதான். அதுக்கு மலைல உங்களுக்கு தெரிஞ்சி யாராவது இருக்காங்களா?" அவர்கள் இருவரும் பாய்ண்ட்டை தொட்டனர்.

சுப்புரத்தினம் யோசித்தவராக தாடையை தடவ ஆரம்பித்து விட்டார்.

"என்னங்க, யாரும் இருக்கற மாதிரி தெரியலியா? நீங்க அந்த மலைல பழம் தின்னு கொட்டை போட்டவர்னும் கேள்விப்பட்டோம்..."

"வாஸ்தவம்தான். முந்தி எல்லாம் நினைச்சா மலை ஏறிடுவேன். ஆனா இப்ப, அப்படி இல்லை. வயசாயிடிச்சு... உடம்புலயும் பெருசா தெம்பு இல்லை."

"அதனால பரவால்ல... உங்கள மாதிரியே மலைல எல்லா இடங்களையும் தெரிஞ்ச யாராவது இருந்த அவங்கள கூட நீங்க அனுப்பித் தரலாம்..."

சுப்புரத்தினம் திரும்பவும் யோசித்தவராக "ஊமையன் ஒருத்தன் இருக்கான். அவனுக்கு மலைல எல்லா இடங்களும் அத்துபடி. நான் அவனை வேணா அனுப்பிவைக்கறேன். பாவம் அவன் ஒரு அநாதை... எல்லாரும் சொல்ற வேலைகளை கேட்டு அதை செய்து பிழைக்கறவன்" என்றார்.

"ரொம்ப சௌகர்யமா போச்சு... ஊமையன்னு சொல்றீங்களே... நாங்க சொல்றது புரிஞ்சுகிட்டு நடந்துப்பானா?'

"அதெல்லாம் ரொம்பவே கெட்டிக்காரன்... மலைல அவனுக்கு சித்தர்கள் தரிசனமெல்லாமே கிடைச்சிருக்கே..."

சுப்புரத்தினம் சொல்லச் சொல்ல ஆனைமுத்து என்பவரின் முகம் மிகவே பிரகாசமானது.

"நிஜமாவா சொல்றீங்க?" - என்று திருப்பிக் கேட்டார்.

"ஆமாங்க... ஊமையன் ஒரு விசித்திரமான பிறவி. பேச்சு வராட்டியும் சித்த வைத்தியமெல்லாமும் தெரிஞ்சவன். கொஞ்சம்கூட பசிக்காம இருக்க ஒரு மூலிகை இருக்கு. அதை சாப்ட்டுட்டு வாரக்கணக்கில் சும்மா இருப்பான். திரும்ப பசி எடுக்கணும்னா பதிலுக்கு ஒரு மூலிகை சாப்பிடணும். அதை சாப்ட்டுட்டு சாப்பிட ஆரம்பிப்பான். அவன் சாப்பிட ஆரம்பிச்சாலும் நமக்கு போட்டு கட்டுப்படியாகாது.



ஊமையன் பற்றி சுப்புரத்தினம் சொன்ன தகவல்கள் ஆனைமுத்துவையும், சேகரையும் மிகவே பாதித்துவிட்டன.

"ஐயா... அப்ப எங்ககூட அவரையே அனுப்பி வையுங்க. எங்கள்ல ஒருத்தரா அவரை பாத்துக்கறோம். நூறு இருநூறு எதிர்பார்த்தா கொடுத்துடறோம்" - என்றான் சேகர்.

"சரி, வாங்க போகலாம்..." என்று சுப்புரத்தினமும் அவர்களை அழைத்துக் கொண்டு நடந்தார்.

சில அடி தூரம்தான் போயிருப்பார்கள்.

ஆனைமுத்து மிக நைச்சியமாக சுப்புரத்தினத்தைப் பார்த்து, "ஐயா... இந்த மலைக்கு பக்தர்கள் மட்டும்தான் வருவாங்களா, இல்ல இந்த மலைல சந்தனமரம் வெட்றேன், உடும்பு பிடிக்கறேன்னுல்லாம் களவாணிங்களும் வருவாங்களா?" என்று கேட்டார்.

"ஏன் அப்படிக் கேட்கறீங்க?"

"இல்ல... சதுரகிரி மலைல தங்கம் செய்யப் பயன்படற ரசவாத தைலம் உள்ள கிணறு ஒண்ணு இருக்குதாம்ல..."

"ஆமாம்... கருப்பச்சாமில்ல அதுக்கு காவல்..."

"எந்த கருப்பசாமியை நீங்க சொல்றீங்க... கவர்மெண்ட்ல அப்படி ஒரு வாட்ச்மேனை வேலைக்கு வெச்சிருக்காங்களா என்ன?" - சேகர் கேட்ட தொனி சுப்புரத்தினத்தை சற்று நெருடியது.

"தம்பி... நீங்க தெரிஞ்சு பேசறீங்களா இல்ல, தெரியாம பேசறீங்களா... நான் சொன்னது எல்லாரும் கும்புடற கருப்பச்சாமியை..."

"அட... அப்ப சாமியே அந்த கிணத்தை காவல் காக்குதுன்னா அதுகிட்டயே யாரும் போக முடியாதுன்னு சொல்லுங்க..."

"ஆமா. நீங்க சாமி கும்பிட வந்தீங்களா. இல்ல இந்த மாதிரி எடக்குமுடக்கா ஏதாவது பண்ண வந்தீங்களா?"

"அட என்னங்க நீங்க... நான் ஒரு ஆர்வத்துல கேட்டேங்க."

"வேண்டாம் தம்பி. இந்த மாதிரி ஆர்வமெல்லாம் ரொம்ப ஆபத்தானது. இந்த மலைல... இப்பதான் ஒரு பத்திரிகைக்கார தம்பி இந்த மலையை ஆராய்ச்சி பண்ணப் போறேன்னு போய் காலை உடைச்சுகிட்டு திரும்பி போய்க்கிட்டு இருக்கார்! உங்களுக்கும் ஏதாவது ஆயிடப் போகுது."

கப்புரத்தினத்தின் எச்சரிக்கை சேகரை அதிரச் செய்தது. ஆனைமுத்துவும் ஒரு அர்த்தபுஷ்டியுள்ள பார்வையை சேகரை நோக்கிச் செலுத்தினார். அந்த பார்வைப் பரிமாற்றத்துக்குள் ஏராளமான ரகசியங்கள்!

**பா**ம் பாம்..! கார் ஹாரன் சப்தத்தை வைத்து வெளியே எட்டிப் பார்த்தாள் கடைக்குட்டியான ராகவி.

சதாசிவம்தான், காரை விட்டு இறங்கிக் கொண்டிருந்தார்.

ராகவி முகத்தில் உடனே ஆச்சரியம்.

"அக்கா... அப்பா வந்துட்டாரு. அதிசயமா கார்ல வந்து இறங்கியிருக்காருக்கா..." என்ற அவள் குரல் மறுபக்கமாய் காரை விட்டு கஷ்டப்பட்டு இறங்க ஆரம்பித்திருந்த தியாகு காதிலும் விழுந்தது.



சதாசிவம், தியாகுவை வீட்டுக்குள் வந்து ஒரு காபி குடித்துவிட்டுப் போகச் சொல்லியிருந்தார். ராகவியின் குரல் நந்தினி, ஜெயந்தி என்று இருவரையுமே வாசல் பக்கம் வரவழைத்து விட்டது.

அவர்களும் ஆவலாக தியாகுவை பார்த்தனர்.

தியாகுவும் அவர்களைப் பார்த்தான். குறிப்பாக ஸ்லிப்பர் லெக்குடன் ஜெயந்தியை பார்த்தவனுக்கு பார்த்த மாத்திரத்தில் நெஞ்சில் ஒரு இனம் தெரியாத பரிதாப உணர்வு. ஜெயந்தியின் முகமே அவன் வரையில் ஒரு காணக் கிடைக்காத ஒன்றாகவும் தோன்றியது. கார் அருகிலேயே அப்படியே தேங்கி நின்று விட்டான்.

சதாசிவம்தான், "ஆமா, என்ன தம்பி நின்னுட்டீங்க... வாங்க..." என்று அவன் பிரக்ஞையை கலைத்து உள்ளே அழைத்துச் சென்றார்.

கெந்திக் கெந்தி நடந்து வீட்டினுள் நுழைந்த தியாகுவுக்கு அந்த வீடே ஒரு கோவில் போலத்தான் தோன்றியது. அழகான திரைச்சீலைகள், எம்பிராய்டரி செய்யப்பட்ட டி.வி. கவர், ஹாலின் ஷெல்ஃப்பில் அழகாய் அடுக்கப்பட்ட நிலையில் புத்தகங்கள், அளந்து பார்த்து போட்டது போல நாற்காலிகள். மெல்லிய ஊதுபத்தி வாசம், ஷெல்ஃப்பில் ஒரு சிறிய சிவலிங்கம் முன்னால் எரியும் அடக்கமான குட்டி தீபம் என்று பார்க்கும் இடம் எல்லாம் மிக தூய்மையாக கண்ணுக்கு குளிர்ச்சியாக நறுக்கென்று இருந்தது.

அவனுக்கு உடனேயே அவனது அறை நினைவுதான் வந்தது. திரும்பிய பக்கமெல்லாம் சிகரெட் துண்டும், ஸ்ரீதேவியில் ஆரம்பித்து த்ரிஷா வரையிலான ப்ளோ அப் படங்கள், அவிழ்த்துப் போட்ட நிலையில்

கோணல் மாணலாக தொங்கும் லுங்கிகள், அழுக்குச் சட்டைகள் குப்பைக் கூடையில் நிரம்பி வழியும் எல்லாவிதமான குப்பைகள், பிராந்தி பீர்பாட்டில்கள்...

தான் ஒரு வரக்கூடாத இடத்துக்கு வந்து விட்டது போலத்தான் அவன் உணர்ந்தான்.

"நிக்கறீங்களே, உக்காருங்க தம்பி..." என்றார் சதாசிவம். அவனும் அமர்ந்தான். ஜெயந்தி யாருப்பா இவர் என்று கண்ணாலேயே கேட்டாள்.

"மலைல பார்த்தேன்மா. தம்பி ஒரு பத்திரிகையாளர்! பேரு தியாகுவாம். மலைக்கு வந்த இடத்துல காலை உடைச்சிகிட்டாரு... அதான் கார் பயணம். தம்பியோட ஊர் சென்னை... போற வழில உதவி செய்த என்னை நம்ம வீட்ல இறக்கி விட்டுட்டுப் போக வந்துருக்காரு. இவ்வளவு தூரம் வந்தவர் ஒரு காபிகூட சாப்பிடாட்டி எப்படி?" - என்று கேட்டார்.

ஜெயந்திக்கு புரிந்துவிட்டது. மௌனமாக சமையல்கட்டை நோக்கி நடந்தாள். ராகவியோ "அப்பா உங்களுக்கொரு சந்தோஷமான விஷயம். உள்ற வாங்க சொல்றேன்...' என்று சதாசிவத்தை அழைத்துச் சென்று பார்த்திபன் விஷயத்தை கூறி முடித்தாள். ஆனால், சதாசிவத்திடம் பெரிதாக மகிழ்ச்சி இல்லை.

"என்னப்பா... நான் எவ்வளவு பெரிய விஷயத்தை சொல்லியிருக்கேன். உங்க மூஞ்சில ஒரு சந்தோஷமே இல்லையே" என்றாள். மௌனமாக நந்தினி அவரை பார்த்தபடியே இருந்தாள்.

"அம்மாடி... அந்த பையன் தற்காலிகமாக ஏதோ சமாளிக்கற மாதிரிதான் தெரியுது. ஒரு வேளை அந்த



பையன் நம்ம நந்தினியை கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் அந்த வீட்டுல கௌரவமாவும் சந்தோஷமாவும் வாழ முடியாதும்மா. அந்த வீட்டுக்காரங்களுக்கு குணம் ஒரு விஷயமில்ல, பணம்தாம்மா விஷயம்..."

"இருக்கலாம்ப்பா... அதுக்காக கர்ப்பமா இருக்கற நம்ம நந்தினியால இனி வேற யாரை கல்யாணம் செய்துக்க முடியும். சாகற முடிவுல இருந்த நமக்கு இது ஒரு நல்ல மாற்றம்தானேப்பா?" - ராகவிக்கு சதாசிவத்தால் பதில் கூற முடியவில்லை.

"அப்பா... அந்த பார்த்திபன் நம்ம நந்தினிக்கு குழந்தை நல்ல விதமா பிறக்கணும்னு குங்குமப் பூவெல்லாம் வாங்கிட்டு வந்து கொடுத்துருக்காருப்பா... பார்க்கறீங்களா?" என்று உள்ளே ஓடிப்போய் குங்குமப்பூ டப்பாவை எடுத்து வந்து காட்டினாள். அவள் சதாசிவம் எதிரே அந்த டப்பாவை உள்ளங் கையில் வைத்து நீட்டிய போது படபடவென்று சிறகசைத்தபடி ஒரு பச்சைக்கிளி இடையில் புகுந்து பறந்து செல்ல, அந்த டப்பா கீழே விழுந்து அவ்வளவு குங்குமப்பூவும் சிதறியது. அந்தக் கிளியும் ஹாலில் ஷெல்ஃப்பில் உள்ள சிவலிங்கம் மேல் சென்று அமர்ந்து கொண்டது.

தியாகு வரையில் அது ஒரு ஆச்சரியமூட்டும் காட்சி!

# 11

**சி**த்த சாகசங்களில் இதுவரையில் 'அணிமா, மஹிமா, இலஹிமா, கரிமா,' எனும் நால்வகை சக்திகளைப் பார்த்தோம். ஐந்தாவது சித்தி பிராப்தி எனப்படுவதாகும். ஒருவர்க்கு ஒன்று கிடைப்பதைத்

தான் பிராப்தம் என்கிறோம். நல்ல கணவன், நல்ல மனைவி, பொருத்தமான அமைப்பு என்கிற எல்லாமே பிராப்தியின் அடிப்படையில்தான் அமைகிறது. பாமர ஜனங்களின் பாஷையில் சொல்வதனால் கொடுத்து வைத்திருத்தல் என்பதாகும்.

இந்த பிராப்தி சித்தி என்பது சித்தர்கள் வரையில் மிகச் சாதாரணமாக நிகழும். ஒரு சித்தர் தான் அடைய விரும்புகிற ஒன்றை அடைய முடிவதே பிராப்தி எனப்படும். கொங்கணர் என்று ஒரு சித்தர்... இந்த உலகையே ஆட்டிப்படைக்க விரும்பினார். மனித குலத்துக்கே பூ உலகில் தான் தலைவனாக, தகப்பனாக, கடவுளாக எல்லாமுமாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அதற்காக அவர் தேடாத குரு இல்லை, செய்யாத தவம் இல்லை, செய்யாத விரதமோ யாகங்களோ இல்லை. பின் இறுதியில் இப்படிப்பட்ட ஆசையே மிகத்தவறானது. சித்தன் முதலில் துச்சமாக கருதவேண்டியதே இந்த உலகம் பெரிதாக கருதிடும் ஒன்றைத்தான் என்பதை அவர் மிகத் தாமதமாக புரிந்து கொண்டார். யாசம், வேள்வி போன்றவைகளை கை விட்டு ஆழ்ந்த தவத்தில் அவர் ஈடுபட்டபோது இந்த பிராப்தி சித்தி அவருக்கு மிக எளிதாக வாய்த்தது. அதன்பின் ஒரு பிணத்தைப் பார்த்து அதற்கு உயிர் வர வேண்டும் என்று விரும்பினாலும் அவ்வாறே நிகழ்ந்தது!

**ஹா**லில் உள்ள ஷெல்ஃப்பில் இருக்கும் எளிய சிவலிங்கம் மேல் சென்று அமர்ந்து கொண்டுவிட்ட அந்த கிளியைப் பார்த்த மாத்திரத்தில் சதாசிவத்துக்கு புரிந்துவிட்டது. "சாமி நீங்களா...?" என்று பரவசத்தோடு கேட்டு விட்டு அப்படியே சாஷ்டாங்கமாக கீழே விழுந்து கும்பிடத் தொடங்கி விட்டார்.



அதே சமயம் கீழே கொட்டி விட்ட அந்த குங்குமப் பூவை வழித்து எடுப்பதில் வேகமானாள் ராகவி. அள்ளி திரும்பவும் டப்பாவில் போட்டுவிட்டு எழுந்தபோது காத்திருந்தது போல திரும்பவும் பறந்து வந்து தட்டி விட்டது அந்த கிளி!

சதாசிவத்துக்குப் புரிந்துவிட்டது.

"அம்மாடி... அதை தூக்கி எறி, சாமி அதை எடுக்காதேன்னு சொல்றார்..." என்றார். ஆமோதிப்பது போல சிறகை அசைத்து ஒரு படபடப்பு சப்தத்தை காட்டிவிட்டு வந்தது போலவே அந்த கிளி திரும்பப் பறந்து செல்ல ஆரம்பித்தது.

ராகவி முகத்தில் ஒரு வித சலனம்... பார்த்திபன் ஆசையாக கொடுத்தது இப்படி குப்பைக்குப் போகப் போகிறதே என்கிற கவலை. ஆனால், சதாசிவத்துக்கு அதில் ஏதோ காரணம் இருக்கிறது என்பது தெரிந்தது... ஆமோதிப்பது போல கீழே சிதறிய குங்குமப்பூவை நோக்கி வந்த ஒன்றிரண்டு எறும்புகள் அப்படியே செத்துச் சுருண்டு விட்டன. உற்றுப் பார்த்த சதாசிவத்துக்கும் சரி, தியாகுவுக்கும் சரி, பகீரென்றது.

"அம்மாடி... பாத்தியா, இதை முகர்ந்து பார்த்த எறும்பு செத்துப் போனதை! அந்த பாவி, குழந்தை நல்லா இருக்கணும்னு இந்த குங்குமப்பூவை தரலை. கொல்றதுக்காக தந்திருக்கான்" என்று சட்டென்று விஷயத்துக்கும் வந்து விட்டார்.

ராகவிக்கு கைகள் நடுங்கின. பக்கத்திலேயே குப்பைக் கூடை. அதில் மிக வேகமாக அதை தூக்கிப் போட்டாள். அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்திக்கு கண்ணீர் பீறிட்டது. எப்பேர்ப்பட்ட

ஏமாற்று வேலை இது? இதை விட ஒரு துரோகம் இருக்க முடியுமா என்ன?'

நந்தினி மயங்கியே விழுந்துவிட்டாள்.

சதாசிவம் பரிதாபமாக தியாகுவைப் பார்த்தார்.

தியாகு தன் செல்போனை எடுத்து யாருக்கோ போன் செய்தான்.

"யாரு ராமகிருஷ்ணனா?"

"ஆமாம் சார்..."

"கொஞ்சம் நான் சொல்ற அட்ரஸுக்கு வர முடியுமா?" - என்று கேட்டுவிட்டு அட்ரஸ் சொல்லும்படி போனை ராகவியிடம் கொடுத்தான். அவளும் சொல்லி முடித்தாள். போனை அணைத்தான். சற்று தெம்பாய் சதாசிவத்தைப் பார்த்தான்.

"சார்... நான் இப்ப எங்க பத்திரிகையோட மதுரை ரிப்போட்டரைத்தான் வரச் சொல்லியிருக்கேன். இவர் வந்ததும் இந்த குங்குமப்பூவை கொடுத்து Labல பரிசோதிக்கச் சொல்லப் போறேன். இதுல என்ன கலந்திருக்குங்கறது பிறகு தெரிஞ்சிடும். இப்போதைக்கு அந்த பணக்காரப் பையன்கிட்ட இங்க நடந்த எதையும் காட்டிக்க வேண்டாம். குங்குமப்பூவுல கலந்துருக்கற விஷம் இன்னன்னு மட்டும் தெரியட்டும். மிச்சத்தை நான் பாத்துக்கறேன்... பத்திரிகைங்கற ஆயுதத்துக்கு முன்னால பிரதம மந்திரியே ஒண்ணும் கிடையாது. எங்க தாரக மந்திரமே நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமேங்கறதுதான்..." என்றான் தியாகு.

"ஐயோ தம்பி... அவசரப்பட்டு இந்த ஏமாத்து வேலையை உங்க பத்திரிகைல எழுதிடாதீங்க. இப்போதைக்கு என் பொண்ணு கர்ப்பங்கறது நமக்கு மட்டும்தான் தெரியும். பிறகு ஊருக்கே அது தெரிஞ்ச விஷயமாயிடும்..." என்று தன் நியாயமான பயத்தைக் காட்டினார் சதாசிவம்.



"இப்படி பயந்தா எப்படி சார்... தப்புக்கு எதிரா துணிஞ்சு நின்னாதானே தப்பு செய்யறவங்களுக்கு ஒரு பயம் இருக்கும்?"

"இல்ல தம்பி... சாமி இந்த பிரச்சினையை பாத்துக்குவார். அவர் இதை நான் கவனிச்சுக்கறேன்னு சொல்லப் போய்தான் கூடவே கிளி வடிவத்துல வந்து தட்டி விட்டுருக்கார். அவருக்குத் தெரியும் அந்த கேடு கெட்டவனை என்ன செய்யணுமின்னு..."

தியாகு, சதாசிவத்தை பதிலுக்கு சோர்வோடு பார்த்தான். கிளி வடிவில் வந்தது ஜவ்வாது சித்தர் என்பதை ஏனோ அவனால் ஏற்கவே முடியவில்லை. அதே சமயம் ஒரு முறைக்கு இரு முறை அந்த கிளி தட்டி விட்டதை ஒரு தற்செயல் சம்பவமாகவும் நினைக்க முடியவில்லை. எனவே குழப்பத்தோடு தலையை உதறிக் கொண்டான்.

"என்ன தம்பி... வந்தது ஜவ்வாது சித்தர்தான்கறது நம்ப முடியலியா?"

"எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலீங்க..."

"மலை அடிவாரத்துல நான் சந்திச்ச சுப்புரத்தினங்கறவர் சொன்னதுதான் நினைவுக்கு வருது. இந்த காலத்து பிள்ளைங்க பிறக்கும்போதே செல்போன், டி.வி, கார், கம்ப்யூட்டர், இன்டர்நெட்டுன்னு விஞ்ஞான சௌகர்யங்களுக்கு நடுவுல பிறக்கறாங்க. அதனால இந்த மாதிரி நம்பிக்கை வெச்சு ஏற்க வேண்டிய

விஷயங்களை நம்பறதுக்கு கஷ்டமாத்தான் இருக்கும் என்றார்.

"இல்லீங்க... இந்த மாதிரி அதிசயங்கள பார்க்கும் என் புத்தி பல கேள்விகளை கேட்குது. நம்ம நாடு ராணுவத்துக்குதான் மிக அதிக அளவு பணம் செலவு செய்யுது. அந்த அளவு தொகை விவசாயம், மின்சார வசதிக்குகூட கிடையாது. ஏன்னா நாட்டோட பாது காப்புங்கறது அவ்வளவு முக்கியமான விஷயம். அப்படி பாதுகாக்கற ராணுவ விஷயங்கள்ல எதிரியோட பலம் எப்படிப்பட்டதுங்கறத தெரிஞ்சு வெச்சுக்கறதும் ஒண்ணு. அதுக்காக உளவாளிகளைப் பயன்படுத்தறது தான் எல்லா நாட்டு ராணுவத்தோட ஒரே வழக்கம். அப்புறமா சில விஞ்ஞான கருவிகள்...

ஒருத்தர் இப்படி கிளியா மாற முடியும்னா அப்படிப்பட்ட ஒருத்தர் நம்ம ராணுவத்துலயும் இருந்தா நமக்கு எவ்வளவு செலவு மிச்சம்கறத யோசிச்சுப் பாருங்க."

தியாகு எங்கோ போய்விட்டான். சதாசிவத்தால் கூட தியாகுவின் அப்படி ஒரு கேள்விக்கு ஒரு தெளிவான பதிலைக் கூற முடியவில்லை.

ஆனால், தியாகுவிடம் ஒரு தீர்மானம்.

"சார்... நான் இப்ப சென்னை போகப் போறதில்ல சார். இருபத்தியோரு நாள் கழிச்சு உங்களோட திரும்ப வரச் சொன்ன ஜவ்வாது சித்தரை அடுத்து சந்திக் கறதுதான் என் ஒரே நோக்கம். இப்போ... அந்த இருபத்தியோரு நாளும் நான் இங்க உங்க வீட்ல ஒரு பேயிங் கெஸ்ட்டா இருக்கறதுல உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபனை இல்லையே...?"



தியாகு அப்படி ஒரு கேள்வி கேட்பான் என்று சதாசிவம் எதிர்பார்க்கவேயில்லை.

"தாராளமா இருந்துக்குங்க தம்பி. பேயிங் கெஸ்ட் டால்லாம் வேண்டாம். நீங்க என்னோட மதிப்புக்குரிய கெஸ்ட். ஜவ்வாது சித்தராலேயே வைத்தியம் பார்க்கப் பட்ட ஒருத்தர் சாதாரண ஆளா இருக்க முடியாது. அதுலயும் நான் இப்ப இருக்கற மனநிலையில் உங்கள போல ஒருத்தர் கூட இருக்கறதும் ஒருவிதத்துல எனக்கு தெம்பாத்தான் இருக்கும்..."

"நான் அதையும் யோசிச்சுத்தான் முடிவுக்கு வந்தேன்..." என்றவன், டிரைவரை அழைக்கத் திரும்பி னான். ராகவி புரிந்துகொண்டு ஓடிப்போய் அவனை அழைத்து வந்தாள். அவரிடம் பர்ஸைத் திறந்து அவ ருக்கான தொகையை செட்டில் செய்து திருப்பி அனுப்பினான்.

நடுவில் ஜெயந்தி போட்ட சூடான காபி வந்தது. அதன் ருசியும் சரி, அவளது முகமும் சரி, தனி ருசியாக விளங்கி அவனை சொக்க விட்டது. அப்படியே நந்தினியை அருகில் அழைத்தான். அவள் தளர்ந்தும் சோர்ந்தும் அழுது வீங்கிய முகத்தோடு இருந்தாள்.

"கவலைப்படாதம்மா... உன் காதலன் எவ்வளவு மோசமான நபரா இருந்தாலும் சரி, அவனை உன் கழுத்துல நான் தாலி கட்ட வைப்பேன். அதுவும் நல்ல படியா மாறிட்ட ஒருத்தனா..." என்றான்.

"இல்ல... எனக்கு அவன் வேண்டாம். அவன் ஒரு துரோகி, வீடு தேடி வந்து விஷம் கொடுத்தவன் அவன். அவன் வாரிசை சுமக்கறதவிட கருவிலேயே அதை அழிச்சிடறது எவ்வளவோ, மேல..." - நந்தினி விசும்பி

வெடித்தாள். சதாசிவம் வெறித்துப்பார்த்துக் கொண்டேயிருந்தார்.

**ச**துரகிரி மலையடிவாரம்! ஆனைமுத்து, சேகர் என்கிற இருவரோடும் ஊமையன் காக்கி பேண்ட் அணிந்து சிகப்பு நிறத்தில் டிஷர்ட் போட்டிருந்தான். கை கால்களில் எதனாலோ இரும்பு வளையங்கள். மூக்கிலும் ஒரு வளவி. தலைமுடி சாமிக்கு வேண்டிக் கொண்டவர்களின் வருடாந்திரத் தலை போல பாகவதர் கிராப்புத்தலையாக புதர் போன்ற தாடியோடு காட்சி அளித்தது.

சற்றே பூனைக் கண்கள். சென்னையில் இருக்கும் சினிமா இயக்குனர்கள் யாராவது ஊமையனைப் பார்த்தால் தங்கள் படங்களில் அவனுக்கு வில்லன் வேடம் கொடுக்க உடனேயே முடிவுக்கு வந்துவிடுவார்கள்! அப்படி ஒரு தோற்றம்.

பொழுது இருட்டிக் கொண்டு வந்தபடி இருந்தது. ஈசான மூலையில் எலியைத் துரத்தும் பூனை போல மேகக்கூட்டத்துக்குள் மின்னல் கோடுகள். சாதாரணமாகவே மலைக்காற்று ஜில்லென்ற குணத்தோடு மிகுந்த கனமானது. அதில் மழையும் சேர்ந்து கொண்டால் கேட்கவே வேண்டாம்.

அடிவாரத்தில் பிலாவடிக் கருப்பு கோயிலில் விபூதி வாங்கிப் பூசியபடியே அந்த மேகக் கூட்டத்தை பார்த்த ஊமையன், சேகரிடமும் ஆனைமுத்துவிடமும் மழை பொழிந்து முடித்து விட்ட நிலையில் அதிகாலை மலை ஏறலாமே என்பது போலப் பார்த்தான். அவர்களுக்கும் அதுதான் சரி என்று தோன்றியது. ஆனால் ஒதுங்குவதற்கு ஒரு குடிசைகூட இல்லை. சேகர் தன்



முதுகில் ஒரு பெரிய கிட் பேக்கை பள்ளிப் பிள்ளைகள் போல சுமந்து கொண்டிருந்தான். மலை ஏறும் பயிற்சி புரிபவர்களும் கிட்டத்தட்ட அப்படி ஒரு பேக்கைத்தான் வைத்திருப்பார்கள். அதனுள் கூடாரம் அடிக்கத் தேவையான டெரின் கிளாத்தில் இருந்து கயிறு, சுத்தி, நிலக் கம்பிகள், கிளிப்புகள், மடக்குகம்புகள் என்று எல்லாம் இருக்கும்.

சேகரும் அப்படி ஒரு டெரின் கிளாத்தை எடுத்து உதறி விரித்தபோது ஒரு யானையை உள்ளடக்கலாம் எனும் அளவு பெரிய கூடாரத் துணியாக அது காட்சி அளித்தது. அதைக் கொண்டு அடுத்த அரை மணியில் ஒரு கூடாரம் போட்டதோடு கூடாரத்தை சுற்றி நான்கு கம்பு நட்டு அவைகளை ஒரு கயிறு கொண்டு வேலி போல இணைத்துக் கட்டி அந்த கயிற்றின் மேல் நீல நிற பாலிதீன் கிளாத் ஒன்றை தொங்க விடவும் டென்ட்டை சுற்றி நீல நிறத்தில் சுவர் எழும்பி டென்ட் மிக பாதுகாப்பான ஒன்றாகவும் மாறிவிட்டது.

அடுத்த பத்தாவது நிமிடம் ஒன்றுக்கு மூன்று மடக்கு கட்டில்களை எடுத்து விரிக்கவும், பிளாஸ்டிக் நாடா கொண்டு பின்னப்பட்ட ஒரு கட்டில் ஒரு நபர் அதில் படுக்கலாம் எனும் அளவுக்கு தயாராகி விட்டது.

ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் இன்ஸ்டண்ட் டீத்தூள் பொட்டலங்கள், சர்க்கரை பொட்டலங்கள், இன்னொரு டப்பாவில் ஏராளமான சிகரெட் பாக்கெட்டுகள், அதனுள் விதவிதமான செல்போன் சிம் கார்டுகள், சேகரும் ஆனைமுத்துவும் மிகுந்த முன்னேற்பாட்டோடுதான் வந்திருக்கிறார்கள் என்பது ஊமையனுக்கும் புரிந்து விட்டது.

டென்ட்டுக்குள் கட்டிலைப் போட்டு காற்றுத் தலையணையை வாயால் ஊதி பெரிதாக உருவாக்கி, அதைப் போட்டுக் கொண்டு படுக்கவும் மிக சுகமாக இருந்தது.

இடையில் அங்கே சேகரின் செல்போன் சிக்னல் கிடைத்து பேசப்பட்டதுதான் ஆச்சரியம். அவனோடு யாரோ ஒரு பெண் பேசினாள். அவள் பெயர்கூட ஊர்வசி என்பது சேகரின் பேச்சில் தெரிந்தது.

“ஊர்வசி.. இப்ப அடிவாரத்துலதான் இருக்கோம். மழை வர்றமாதிரி இருக்கு. காலைலதான் மேல ஏறப் போறோம். நீ கவலையே படாதே.. அந்த தைலக்கிணறு இருக்கற இடத்தை கண்டுபிடிக்காமலோ, இல்ல மலைல ஒரு சாமியாரா நடமாடிக்கிட்டிருக்கறதா நீ சொல்ற உன் அண்ணன் மதிவாணனை பார்க்காமலோ நாங்க கீழே இறங்க மாட்டோம்!” - என்று அவன் பேசியது ஊமையனை மிகவும் யோசிக்க வைத்து விட்டது!

# 12

**சி**த்த சாகசங்களில் எல்லோராலும் பெரிதும் வியப்புடனும் ஆச்சரியத்துடனும் பார்க்கப்படும் ஒரு சித்திதான் பிராகாமிய சித்தி எனப்படும் கூடுவிட்டு கூடு மாறும் சித்தி... திருமூலர் என்னும்சித்தர் மூலமாக இதுபற்றி நிறையவே சிந்திக்க முடிகிறது. இவர் தன் உடம்பை விட்டு இறந்துகிடக்கும் ஒரு இடையன் உடம்புக்குள் புகுவதில்தான் இந்த சாகசமே தொடங்குகிறது.

திருமூலர் போலவே அரசர்களில் விக்கிர மாதித்தன் கூடுவிட்டு கூடு பாய்வதில் பெரிதும்



தேர்ந்தவனாக இருந்தான்.

மேலோட்டமாக பார்க்கப்படும்போது இரு ஒரு Fantasy எனப்படும் நம்ப முடியாத மாயாஜாலம் போல தோன்றும். ஆனால், இது சாத்தியமே... வரும் காலத்தில் விஞ்ஞானமே இதை விளங்கிக் கொண்டு சாகசங்களைச் செய்து காட்டும் என்கிற கருத்தும் பலரிடம் உள்ளது.

இந்த சாகசத்தை பற்றி சிந்திக்கும்போது உடம்பு வேறு - உயிர் வேறு. இரண்டும் கலந்தால் தான் இயக்கம் என்கிற ஒரு எண்ணம் ஏற்படுகிறது. என்றைக்கு பிறந்தாலும் உடம்பை விட்டு உயிர் நீங்கத்தான் போகிறது. தானாக ஒரு நாள் விலகிப் போகும் உயிரை ஏன் நாம் விரும்பும்போது விரும்பிய வாறு நீக்கியும் சேர்த்தும் கொள்ளக் கூடாது என்கிற கேள்வியால் விளைந்ததுதான் கூடுவிட்டு கூடுபாயும் இந்த சாகசம்.

சில அதிசயமான சம்பவங்களும் இப்படி கேள்வி எழும்பிட காரணம். இறந்துவிட்டதாக கருதி சிலருக்கு மயானத்தில் தீயிடும்போது அவர்கள் விழித்துக் கொண்டு எழுந்த சம்பவங்கள் இந்த மண்ணில் நிறையவே நிகழ்ந்துள்ளன. அப்போது அவர்கள் தாங்கள் இதுவரை பார்த்தறியாத உலகத்தில் தாங்கள் சஞ்சரித்ததாக கூறியவைகளை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது உயிரானது பிரியக்கூடியது மட்டுமல்ல, சேரக்கூடியதும்கூட என்பது தெரியவருகிறது.

இப்படி உடம்பு, உயிர் சம்பந்தமான கேள்விகள் - ஆய்வுகள் - அதன் விடைகள் இவைகளின் தளத்தில் நிகழ்வதுதான் கூடுவிட்டு கூடுபாயும் சாகசமான

பிராகாமியம் என்பதாகும்!

சேகரின் பேச்சு ஊமையனிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியதை ஆனைமுத்து கவனித்தார். ஆனைமுத்து ஒருவர் முகத்தைப் பார்த்து மனதை படிக்க முடிந்த சாமர்த்தியசாலி. நல்ல அனுபவஸ்தர்! அவருக்கு ஊமையன் தங்களை தவறாக கருதத் தொடங்கிவிட்டது போல் தோன்றவே, அந்த எண்ணத்தை மாற்றி விட வேண்டும் என்னும் விருப்பத்தோடு பேச ஆரம்பித்தார்.

"தம்பி... இங்க வாங்க! சேகர் பேச்சைக் கேட்டு ஆச்சரியமா இருக்குதா. நாங்க இங்க சாமி கும்பிட மட்டும் வரலை. எங்க உறவுக்காரர் ஒருத்தர் எனக்கு வாழறதுல விருப்பமில்லை. நான் சந்நியாசம் வாங்கிக் கறேன்னு சொல்லி இந்த மலைப்பக்கம் கிளம்பி வந்துட்டதா தகவல். அவர் வந்துட்டாரு. ஆனா, அவரோட குடும்பம் அவரை பிரிஞ்சு கஷ்டப்படுது. ஆகையால அவரைப் பார்த்து முடிஞ்சா எங்க கூடவே கூட்டிக்கிட்டும் போயிடணும்கறதுதான் எங்க எண்ணம். அதைதான் சேகர் பேசிக்கிட்டிருக்கான்... என்றார்.

ஊமையனிடம் சுமாரான ஒரு சமாதானம்!

சேகரும் சிரித்து வழிந்தவனாக, "ஆமாம்ப்பா... இவ்வளவு தூரம் வந்த நாங்க அவரையும் தேடிக் கண்டு பிடிக்கறதுக்காகத்தான் உன் உதவியை சுப்பு சார் மூலமா கேட்டோம்" என்றான். மழையும் வெளுத்து வாங்க ஆரம்பித்தது. வயர் கட்டிலில் காலை மடித்துக் கொண்டு மூவரும் அமர்ந்து கொண்டனர். சரியான இடி சப்தம் வேறு... வானில் மின்னல் பூச்சி ஒன்று ஓடி முடிந்தது. காற்றிலும் குளிர் கூட ஆரம்பித்தது. என்ன தான் டென்ட் போட்டிருந்தபோதிலும் காற்று மழை



முன்னால் அந்த டென்ட் பிய்த்துக் கொண்டு பறந்து விடுவது போலத்தான் தோன்றியது. ஒரு கட்டத்தில் அப்படித்தான் ஆகிவிட்டது. ஒரு வீச்சலான காற்றில் டென்ட் பிடுங்கப்பட்டு அப்படியே வானில் பறக்க ஆரம்பித்தது. மூவரும் தெப்பலாக நனையத் தொடங்கினர்.

அவர்கள் கொண்டு வந்திருந்த லெதர் பேக்கும் சூட்கேஸ் போன்றவையும் தண்ணீரில் மிதக்கத் தொடங்கின.

ஊமையன் அதற்குமேல் அங்கே இருக்க விரும்பாமல் அங்கிருந்து நகரத் தொடங்கினான். அவர்கள் இருவரையும் கூட பேக்கையும் சூட்கேஸையும் எடுத்துக் கொண்டு பின்னால் வரச் சொன்னான்.

"எங்கப்பா கூப்பிடறே... இந்த இருட்டுல எங்கன்னு போக?" என்று ஆனைமுத்து கேட்டதற்கு அவனிடம் பதிலில்லை. மாறாக மின்னல் வெளிச்சத்தில் அவன் ஒரு பெரிய பாறை மேல் ஏறுவது தெரிந்தது.

"மாமா! அந்த பக்கம் ஏதாவது குகை இருக்கும். அதான் ஊமையன் அந்த பக்கம் போறான். இந்த பக்கத்துல எங்கேயும் ஒதுங்க ஒரு குடிசைகூட இல்லை பேசாம அவன் பின்னாலேயே போவோம். மிகவும் சிரமப்பட்டு பேக்கில் இருந்து ஒரு டார்ச் லைட்டை எடுத்து அடித்தபடியே ஊமையன் சென்ற திசை வழியே செல்லத் தொடங்கினார்.

மழை என்பதே பாடாய்ப்படுத்தக் கூடியது. அதிலும் காட்டு மழை என்பது கடுமையானது. அதைச் சமாளிக்க பெரிய அளவில் அனுபவம் வேண்டும். காட்டு மழை மிக ஆபத்தானதும் கூட— இடியும் மின்னலும் எந்த இடத்தில்

வேண்டுமானால் விழலாம். அப்படி விழுகின்ற இடத்தில் மனிதர்கள் இருந்தால் கருகிவிடக்கூடிய ஆபத்து உண்டு. குறைந்தபட்சம் கண்பார்வை முற்றாக போய் விடும். எனவே காட்டு மழைக்கு மரத்தடியில் ஒதுங்குவதை விட நனைவது மேலானது என்று சிலர் நனைவார்கள். பாறைகளை அண்டி நிற்கும்போது உள்ளே பதுங்கிக் கிடக்கும் மண்ணுளிப் பாம்புகளில் இருந்து நண்டு வாக்கிளிகள் வரை வெளியே வரும். அப்போது அவை வசம் சிக்குவது ஆபத்தானது.

இதை பற்றி எல்லாம் எந்த விதத்திலும் தெரிந்திராத ஆனைமுத்துவும், சேகரும் ஊமையன் ஏறிய பாறைமேல் ஏறி மறுபக்கமாக டார்ச்சை அடித்துப் பார்த்தனர். ஊமையன் ஒரு பெரிய பாறைக்கு கீழே ஒதுங்கியிருந்தான். டார்ச்சை அடிக்கவும் அருகே வரும்படி சைகை காட்டினான். அவர்களும் அவனை நோக்கி ஓடினர். வழியில் காலை இடறியது ஒரு சிறு பாறை. சேகர் அப்படியே தலைக்குப்புற விழுந்தான். விழுந்த வேகத்தில் உருண்டு ஊமையன் காலடியில் ஒரு உதை பந்து போல் போய் விழுந்தான். நெற்றி, தோள் பட்டையில் எல்லாம் நல்ல அடி!

நல்ல வேளையாக அந்த பாறைக்கு கீழே ஒரு பத்து பேர் தாராளமாக ஒதுங்கலாம் எனும் அளவுக்கு இடம் இருந்தது. அதனால் மழையில் நனைவது தவிர்க்கப்பட்டது. மிகச்சரியான அவ்வேளையில் எந்த பாறையின் மேல் ஆனைமுத்துவும் சேகரும் சில நொடிகள்முன் நின்றிருந்தார்களோ மிகச்சரியாக அந்த இடத்தில் ஒரு பெரிய இடியானது ஆகாயத்தில் இருந்து ஆவேசமாக எறியப்பட்ட ஒரு ஈட்டிபோல வந்து விழுந்து முடிந்தது. சேகருக்கும் ஆனைமுத்துவுக்கும் அதைப் பார்த்த நிலையில் கண்ணிரண்டும் பல நொடிகளுக்கு செயலற்றுப்



போய் ஒரே ஒளிப்பிழம்பாகத்தான் பார்க்கும் இடமெல்லாம் தெரிந்தது.

ஊமையன் அதைப் பார்த்த நிலையில் ஆகாயத்தை பார்த்து கைகளை கூப்பினான். அதாவது கடவுளுக்கு நன்றி சொல்வது போல இருந்தது அவனது செயல்.

"மாமா... இப்பதான் கண் பார்வையே தெரிய ஆரம்பிச்சிருக்கு.. உங்களுக்கு?"

"எனக்கும்தான் சேகர்... ரெண்டு பேருக்குமே ஆயுசு கெட்டி. கொஞ்சம் தாமதிச்சிருந்தாலும் கரிக்கட்டையாகியிருப்போம்."

"சரி, மாமா.. முதல் நாள் தொடக்கமே நம்ம வரையில இப்படி இருக்கே.. நம்மால மொத்த மலையையும் சுத்தி வந்து நாம நினைச்சதை சாதிக்க முடியுமா மாமா..?"

"என்னப்பா... ஒரு மழைக்கே அசந்துட்டே! உலகமே திரும்பிப் பாக்கற தங்க வியாபாரிகளா நாம ஆகணும்னா இதைவிடவும் கஷ்டப்பட நாம தயாரா இருக்கணும். மெக்கனஸ் கோல்டுன்னு ஒரு இங்கிலீஷ் படம் பாத்துருக்கியா?"

"அதுக்கென்ன மாமா?"

"அதுல வந்த கஷ்டங்களை விடவும் இந்த காட்டுல நாம கூடவே சந்திக்க வேண்டி வரலாம். அசந்துடாதே. அப்புறம் பேசும்போது பாத்து பேசு." என்றார். அப்போது ஊமையன் ஒரு ஓரமாக பாறை ஒன்றின் மேல் குத்துக் காலிட்டு குரங்கு ஒன்று அமர்ந்திருப்பது போல அமர்ந்திருந்தான்.

அவனைத்தான் அவர் சொல்கிறார் என்பது சேகருக்கும் புரிந்தது. மழை சற்றும் வேகத்தைதான்

குறைத்துக் கொண்டிருந்தது. முற்றாக நின்று விட வில்லை!

மதுரை!

சதாசிவம் இல்லம்...

குங்குமப்பூவை பரிசோதிப்பதற்காக எடுத்துப் போயிருந்த பத்திரிகையாளர் ராமகிருஷ்ணனின் மோட்டார் பைக் சப்தம் கேட்டு வாசல் பக்கம் பார்த் தாள் ராகவி!

ராமகிருஷ்ணனும் ஒரு புன்சிரிப்புடன் உள்ளே வந்தான். இளம் வயது... முகத்தில் அரும்பு மீசை துருதுருவென்று பார்வை... அவனை முதல் தடவையாக பார்த்தபோதே ராகவியிடம் ஒரு இனம் தெரியாத தடுமாற்றம். அதே தாக்கம்தான் அவனிடமும்...

உள்ளே காலை நீட்டிக் கொண்டு அமர்ந்திருந்தி தியாகு கையில் அன்றைய வார இதழ் ஒன்று இருந்தது. ராமகிருஷ்ணன் வரவும் இதழை ஓரம் கட்டினான்.

"வா ராம்கி... உக்கார்..."

"உக்கார்றது இருக்கட்டும் தியாகு சார். ரிப் போர்ட் என்னன்னு கேளுங்க..."

"சொல்லத்தானே வந்துருக்கே?"

"குங்குமப்பூல எத்திலின்கற பாய்சனை கலந் துருக்காங்க. இது இண்டியால அவ்வளவா கிடைக்காத ஒரு பாய்சன் வகை. அமெரிக்காவுல அமேசான் காட்டுல வசிக்கற சில காட்டு சிலந்தியோட உடம்புல இருந்து இந்த விஷம் எடுக்கப்பட்டு விவசாயத்துல சில குறிப் பிட்ட பூச்சி தாக்குதலுக்கு நூறு லிட்டருக்கு அஞ்சு கிராம்கற அளவுக்கு இதை கலந்து பயன்படுத்துவாங்க...



ஆனா, இந்த குங்குமப் பூவுல இது நிறையவே கலக்கப் பட்டிருக்கு. இது ரத்தத்துல கலந்து பரவும்போது ரத்த அணுக்களேகூட பெரிய அளவுல பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கு. அதே ரத்தம் மூளைக்குப்-போகும்போது அங்க இதோட தாக்கத்தால சில அணுக்கள் சிதைஞ்சாலும் போதும்... சிதையற அணுக்களைப் பொறுத்து கை கால் செயலிழப்பு, அப்புறம், மனநிலை பாதிக்கப்பட்டு ஞாபக மறதி ஏற்படறதுன்னு பெரிய பாதிப்புகள் எல்லாம் ஏற்பட்டிருக்கும். சுருக்கமா சொல்லப் போனா இதை இன்னும் இரண்டு தடவை சாப்பிட்டிருந்தாலேகூட சாப்பிட்டவங்களுக்கு கர்ப்பம் கலையறது மட்டுமல்ல, சாப்பிட்டவங்க பைத்தியமா மாறியிருக்கவும் வாய்ப்பு இருக்கு..." என்று ராமகிருஷ்ணன் சொல்லி முடிக்கடிவும் சதாசிவம் விறுவிறுத்துப் போய் "ஈஸ்வரா..." என்கிற முனங்கலுடன் ஷெல்ஃப்பில் உள்ள லிங்க உருவத்தைத் தான் பார்த்தார். மனதுக்குள் பறந்து வந்த கிளியும், அது தட்டிவிட்ட சம்பவமே சுற்றிச் சுற்றி சுழன்றது.

தியாகு முகத்தில் தீவிரமான சிந்தனை...

நந்தினியும் ஜெயந்தியும் அதைக் கேட்டு கலங்கி யிருக்க, ஜெயந்தி, நந்தினியை இதமாக அணைத்தபடி இருந்தாள்.

"என்ன தியாகு சார்... என் கைல லேப்ரிப்போர்ட் இருக்கு. என்ன செய்யலாம்?"

"அதான் ராம்கி யோசிக்கிறேன்?"

"இதைக் கொடுத்த அந்த பையன் வீடு எங்க இருக்கு சொல்லுங்க... போய் ஒரு ஷாக் கொடுத்துட்டு வரேன்."

"எப்படி?"

"நாம அதை லேப்ல டெஸ்ட்டுக்கு கொடுத்தோம் கறதே அவங்களுக்கு அதிர்ச்சியாதானே இருக்கும்?"

"அவங்க எதையும் விலைக்கு வாங்க முடியும்னு நினைக்கற பணக்காரங்க ராம்கி."

"நாமதான் கடவுளையே கேள்வி கேட்க உரிமை உடைய பத்திரிகையாளர்கள் ஆச்சே. இந்த பணக்காரன் லாம் என்ன சுண்டக்கா?"

"சரி... ஒரு அதிர்ச்சி வைத்தியத்த உன்னால கொடுக்க முடியும்னா தாராளமா போய்ட்டு வா. பைதபை- அந்த பையன் தண்டிக்கப்பட கூடாது. அவன் மனசு திருந்தணும். அதுதான் நமக்கு வேணும்."

"அதை என்னால இப்ப சொல்ல முடியாது. வீட்டுக்குப் போய் பையன் அப்பாகிட்ட மோதின பிறகுதான் சொல்ல முடியும்."

"இல்ல ராம்கி... இந்த இரண்டும் கெட்டான் பதிலே வேண்டாம். பையன் திருந்தணும். அந்த மாதிரி நடந்துக்க உன்னால முடியுமா?"

ராம்கியும் சற்று சிந்தித்துவிட்டு, "நிச்சயமா முடியும்" என்றபோது அந்த பதில் அந்த மூன்று பெண்கள் நடுவில் ஒரு ஆச்சரிய அதிர்வைத்தான் உருவாக்கியது.

சதாசிவம் மட்டும் மௌனமாகவே இருந்தார்.

"என்ன சார் யோசிக்கிறீங்க...?"

"இல்ல தம்பி.. அந்த பையனை திருத்த முடியாது. அவன் வேண்டாம். விட்ருங்க...?"

"அப்ப உங்க பொண்ணோட நிலை.."

"அவ கர்ப்பத்தை எல்லாம் கலைக்க வேண்டாம். குழந்தை பிறக்கட்டும். நான் இருக்கற வரை நான் பார்த்துக்கறேன்.."



"இப்ப அது பிரச்சினையில்லையே... பிறக்கப் போற குழந்தையோட அப்பா யார்னு ஊர் கேட்டா என்னன்னு சொல்வீங்க?"

"சாமின்னு சொல்லிட்டுப் போறேன்."

"விரக்தில இப்படித் தப்பா பேசாதீங்க சார். தயவு செய்து இந்த பிரச்சினைல நீங்க கொஞ்சம் தூர நில்லுங்க. நாங்க பாத்துக்கறோம். எங்க வீட்டுப் பெண்களுக்கு இப்படி ஆகியிருந்தா என்ன செய்வோமோ அதைத்தான் நாங்க இங்கேயும் செய்ய விரும்பறோம்."

"தைரியமா என் தோள்ல கை போட்டு பிடிச்சுக்குங்க. இப்ப மட்டுமல்ல... லைஃப் பூராவும்..."

அவன் அவ்வளவு துணிச்சலாக, அவ்வளவு வேகமாக விஷயத்துக்கு வருவான் என்று ராகவியே எதிர் பார்க்கவில்லை.

"ஸாரி ராகவி... எனக்கு சுத்தி வளைச்சு பேசவோ ஜொள்ளு விடவெல்லாம் தெரியாது. ஐயா எப்பவுமே வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு ஜாதி. உனக்கு என்னை பிடிச்சிருந்தா நான் சொன்னபடி நடந்துக்கோ. இது நம்ம குடும்பச் சிக்கல். நான் நிச்சயம் உங்க அக்கா காதலன் மாதிரி ஒரு கிரிமினலா நடந்துக்க மாட்டேன். உனக்கு ஏத்த நல்ல புருஷனா இருப்பேன்..."

அவனது அடுத்தடுத்த பேச்சும் அவளை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. நெடுநேரம் வரை தயங்கி விட்டு அவன் தோள் மேல் கை வைத்தாள். அவனிடம் ஒரு புது உற்சாகம்.

"நம்ம சகலபாடி இன்னிக்கு நம்மகிட்ட எப்படி மாட்டிக்கிட்டு முழிக்கிறார்னு பார்.." என்றபடியே பைக்கை அசுரவேகத்துக்கு கிளப்பினான்.

அந்த காட்சியை வாசற்புரமாக உள்ள மரத்தின் மேல் இருந்து கிளி வடிவில் ஜவ்வாது சித்தரும் பாத்த படியே இருந்தார்!

## 13

**சி**த்த சாகசங்களில் வசிய சக்திக்கு ஒரு தனி இடம் உண்டு. சில சித்த புருஷர்களின் முகமே தனிப்பொலிவோடு இருக்கும். குறிப்பாக அவர்களின் கண்கள் இரண்டும் மிக தீட்சண்யத்துடன் துளியும் கலங்கலோ, கீறல்களோ இன்றி பளிச்சென்று இருக்கும். அவர்கள் அருகே சென்றாலே உடம்பிலும் ஒருவித மணம் இருக்கும். அடர்வாய் வளர்ந் திருக்கும் தலைமுடியைகூட அவர்கள் படிய வாரி கட்டிப் போட்டிருப்பார்கள். இல்லாவிட்டால் அதன் போக்கில் அலைபாய விட்டிருப்பார்கள்.

எதையும் ஆராயாமல் ஏற்க மாட்டோம் என்று மார் தட்டுபவர்கள்கூட இப்படிப்பட்ட சித்தர்களிடம் வந்தால் பெரிய அ◦1வில் மௌனமாகி விடுவார்கள். என்ன பேசுவது? எதை பேசுவது? எங்கிருந்து ஆரம் பிப்பது என்பதில் எல்லாம் குழப்பம் ஏற்பட்டு விடும். அவர்களிடம் நறுக்கென்று ஒரு கேள்வி கேட்கத் தோன்றாது.

இதற்கெல்லாம் காரணம், அவர்களின் வசிய ஆற்றல்தான். வசிய ஆற்றலுக்கு அடிப்படை முதலில் தன்னை அறிதல், பின்னர் உடம்பை பேணுதல், அதன் பிறகு மனதை கட்டுப்படுத்தல், பின் மனதின் சக்தியைப் பல மடங்கு பெருக்கிக் கொள்ளுதல் போன்றவைகளே...



பொதுவாக நமது மனதில் எந்த எண்ணமும் இன்றி அதை தூய்மையாகவும், சப்தமற்ற நிசப்தத் திலும் வைக்கும்போது, எதிரில் இருப்பவர்களின் மனதில் உள்ள சப்தங்கள் நிசப்தமான மனதில் பட்டு எதிரொலிக்கும். இதன் காரணமாகவே பல சித்தர் கள் பிறர் மனதில் இருப்பதை அப்படியே கூற முடிந்தவர்களாக உள்ளனர்.

அப்படி மனதில் படும் பிறரின் எண்ணங் களையே பயன்படுத்தி அதோடு சேர்த்து நாம் விரும்பும் விதமான கட்டளையை அவர்களுக்குள் செலுத்தும்போது அவர்களும் நமக்கு கட்டுப்பட்டு நம் விருப்பப்படி நடக்கத் தொடங்குவர்.

இதைத்தான் வசியம் என்கிறோம். இந்த வசியத்திலும் விதங்கள் உண்டு. யந்திர வசியம், மைவசியம், ஆகர்ஷண வசியம், பார்வை வசியம், மனோவசியம் என்று வசியம்புரியும் விதத்திற்கு ஏற்ப அது மாறுபடும்!

**ரா**கவி, ராம்கி விரும்பியபடியே தோளைத் தொடவும், ராம்கியிடம் ஒது புது பரவசம்! இரவுப் பொழுதை விரட்டுவதற்காக கிழக்குத் திக்கில் சூரியன் உதித்து எழுந்த மாதிரி அவனுக்குள் காதல் சூரியன் உதிக்கத் தொடங்கி அவனே வெளிச்சமான மாதிரி எல்லாம் உணர்ந்தான்.

பைக்கும் நல்ல வேகமெடுக்க ஆரம்பித்தது. அருகாமை மரத்தின் மேல் ஒரு கிளிவடிவில் இருந்து கொண்டு பார்த்தபடி இருந்த ஜவ்வாது சித்தரும் அப் படியே வானில் ஏறி பறக்க ஆரம்பித்தார்!

ராம்கியின் புதிய வேகம் ராகவிக்கு பயத்தை கொடுத்தது.

"அட, என்னங்க இது... தோள்ல கை போட்டதுக்கே இந்த வேகமா? இன்னும் கட்டிப் பிடிச்சு முத்தமெல்லாம் கொடுத்தா ஆகாசத்துலயே பறப்பீங்க போல இருக்கே?" என்றாள். அவனும் ஆவலாக "ஆஹா.. நான் இப்பவே பறக்க ரெடி..." என்றான்.

"ஆசையைப் பாரு.." என்று அவள் சிணுங்கினாள். அதே வேகத்தில் அமைதியானாள்.

"என்ன மேடம் திடீர்னு அமைதியாயிட்டீங்க.."

"அமைதியாகாம..? ஏற்கெனவே ஒரு அக்கா காதல் சந்திசிரிக்கிற நிலை. அந்த பிரச்சினைக்காகதான் இப்ப போய்க்கிட்டிருக்கோம். அப்படி இருக்க போற வழியிலேயே போறவங்களே அதே காதல்ல சிக்கிக்கிறது எந்த வகைல நியாயம்னு கேட்டுகிட்டேன். மனசு அமைதியாயிடிச்சு.."

"சரிதான்... மேடம் நீங்க தப்பா யோசிக்கிறீங்க. நான் சொல்லற மாதிரி, மாத்தி யோசிச்சு பாருங்க. ஒரு காதல் தப்பாப் போகத் தொடங்கியிருக்கு. அதை ஒரு உண்மையான காதல் ஜோடி மாத்தப் போய்க்கிட்டிருக்காங்க. கடைசில உண்மையான ஜோடிதான் ஜெயிக்கவும் போறாங்க.."

அவன் சளைக்காமல் சொன்ன அந்த பதில் ராகவிக்கு மிகவே பிடித்திருந்தது. அதை ரசித்து சிரித்தாள். அப்படியே அவனுக்கு வழியைக் காட்டி பார்த்திபனின் பணக்கார பங்களாவையும் காட்டினாள். பங்களாவுக்கு வெளியே ஒரு பெரிய வாகை மரம். அதன் கீழே பைக்கை நிறுத்திய ராம்கி, "ராகவி! நீ இங்கேயே இரு. நான் உள்ளே போய்ட்டு வரேன். நீ என் கூட வந்தா



அவங்க வேற மாதிரி என்னைப் பார்ப்பாங்க" என்று அவளை மரத்தடியில் நிறுத்தி விட்டு மெயின் கேட்டை நோக்கி நடந்தான். வழக்கம் போல மெயின் கேட்டில் இருந்த செக்யூரிட்டி வாட்ச்மேனும் தடுத்து யார் என்று விசாரித்தான்.

"நான் ஒரு பத்திரிகைக்காரன். இந்தா விசிட்டிங் கார்டு. போய் கொடு.." என்று விசிட்டிங் கார்டை கொடுத்துவிட்டான்.

அவனும் போய்விட்டு வந்து உள்ளே விட்டான். உள்ளே நுழைந்த ராம்கியை முதலில் எதிர் கொண்டதே பார்த்திபனின் தந்தையான ராமலிங்கம்தான்.. அவரைப் பார்க்கவும் ராம்கி வணக்கத்தில் இருந்து ஆரம்பித்தான்.

"வணக்கம் சார்..."

"வணக்கம்... ஒரு பத்திரிகைக்காரர் என்னைப் பார்க்க வந்துருக்கறது நினைச்சா ஆச்சரியமா இருக்கு.."

"ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடையறா மாதிரி யார் நடந்துகிட்டாலும் நாங்க அவங்க முன்னால இருப்போம் சார்! ஏன்னா பத்திரிகைங்கறது ஒரு கண்ணாடி மாதிரி... சமுதாயத்துல நடக்கற நல்லது கெட்டதுகளை அப்படியே காட்டியாகணுமே?"

ராம்கியின் ஆரம்பமே ஒரு அதட்டலாகத்தான் இருந்தது.

"அப்படி நீங்க ஆச்சரியப்படற மாதிரியோ இல்ல அதிர்ச்சியடையற மாதிரியோ நான் என்ன பண்ணிட்டேன்னு தெரியலியே..."

ராமலிங்கமும் சுருதி சேர்த்தார்.

"உழைப்பால மேல மேல உயர்ந்துகிட்டே போறது ஆச்சரியம்தானே?"

“ஓ... நீங்க என் பிஸினஸ் சக்ஸஸ் பத்தி பேட்டி காண வந்திருக்கீங்கன்னு சொல்லுங்க...”

ராமலிங்கம் முகத்தில் புன்னகை மெல்ல பரவ ஆரம்பித்தது.

“அதை பத்தி மட்டுமில்ல... நீங்க ரொம்ப சாமர்த்தியமா பல காரியங்கள் செய்திருக்கீங்க. அது எல்லாத்த பத்தியும்தான்னும் வெச்சுக்குங்களேன்.”

திரும்பவும் ராம்கி பொடிவைத்துப் பேசினான்.

ராமலிங்கம் முகம் சுருங்கியது.

கச்சிதமாக அப்போது பார்த்திபனும் மாடியில் இருந்து இறங்கி வந்து ராமலிங்கம் அருகில் அமர்ந்து கொண்டான். ராமலிங்கம் அவனை அறிமுகம் செய்யத் தவறவில்லை.

“இவன் என் மகன் பார்த்திபன்... என் பிஸினஸை எல்லாம் எனக்கு அடுத்து இவன்தான் பார்த்துக்கப் போறான்.”

“அதுதானே உலக வழக்கம்... ஒரு அப்பா தனக்கு தெரிஞ்ச எல்லாத்தையும் பிள்ளைக்கு சொல்லிக் கொடுக்கறதுதானே நியாயமும்கூட...”

“சரியா சொன்னீங்க. சரி, நீங்க கேள்விய கேட்கலாமே...”

“தேங்க்யூசார்... சார் எந்த மாதிரியான பிஸினஸ் எல்லாம் செய்யறீங்கன்னு சொல்லமுடியுமா?”

“முதல் முதலா நான் தொழில்னு ஆரம்பிச்சது ஹோட்டல் தொழில்ல இருந்துதான்.. இப்ப இரண்டு பிராந்தி ஷாப், ஒரு மல்டிபிள் காம்ப்ளெக்ஸ் சென்டர், அப்புறமா ஒரு ஷாப்பிங் மால்னு வரிசையா



தொழில்கள்... இது போக ரியல் எஸ்டேட் தொழிலும் செய்யறேன்...”

“அடடே... இதுல குங்குமப்பூவை வாங்கி சப்ளை செய்யறதே வரலையே.”

ராம்கி இப்பொழுதுதான் மடக்கவே ஆரம்பித்தான். குபீர் என்று வியர்த்தது பார்த்திபனுக்கு.

“என்னது குங்குமப்பூவா..?” ராமலிங்கம் மட்டும் தெரியாத மாதிரி திருப்பி கேட்டார்.

“குங்குமப்பூவேதான் சார்... அதை சாப்பிட்டா கூட குழந்தை சிகப்பா பிறக்கும்னு சொல்வாங்களே...”

“நான் குங்குமப்பூவெல்லாம் வாங்கறதில்லையே...”

“குங்குமப்பூ வாங்கறதில்லையா... சரிதான். அதுல விதம் விதமா பாய்சன் கலந்து கருவிலேயே குழந்தைய அழிக்கற ஒரு புது ஃபார்முலாவையே நீங்கதான் கண்டு பிடிச்சிருக்கறதா பேசிக்கிறாங்களே..?”

ராம்கி மடக்கிப் போட்ட பிடிக்குள் பார்த்திபன் மிரண்டு போக, ராமலிங்கம் மட்டும்அவனை கூர்மையாகப் பார்த்தார். தொடர்ந்து பார்த்தபடியே இருந்தார். ராம்கியும் அசராமல், “நல்லா லுக் விடறீங்க சார்... சினிமாவுல வர்ற வில்லன் மாதிரியே..” என்று சிரித்தான். அவரிடம் பதிலுக்கு முகச்சிவப்பு. கூடவே கேள்வி.

“யார் நீ?”

“அதான் விசிட்டிங் கார்டுல பார்த்தீங்களே... என் பேர் ராமகிருஷ்ணன். மதுரை நிருபர்.”

“உன் மாச சம்பளம் என்ன? ஒரு அஞ்சாயிரம் இருக்குமா?”

"ஏன் சார்... கம்மியா நீங்க ஃபீல் பண்ணா நீங்க குடுப்பீங்களோ?"

"தம்பி ஒரு பத்திரிகை நிருபர்ங்கறவன் சாதாரண எலெக்ட்ரீஷியன் மாதிரி... அவன் வீட்டுல வயரிங் வேலைகளை தைரியமா பார்க்கலாம். நான் ஹெவி ட்ரான்ஸ்ஃபார்மர்! என் கிட்ட வந்தா ஷாக் அடிச்சு கருகிப் போயிடுவே..."

"தப்பு சார்! நிருபர்ங்கறவன் எலெக்ட்ரீஷியன் மாதிரி இல்ல. அவன் ஒரு மின்னல் மாதிரி. அவன் யார் தலையாவது விழுந்தா விழுந்த நபர்தான்கருகணும்."

"பார்க்கலாமா?"

"எப்படி?"

"ஒரு அஞ்சு நிமிஷம் பொறு... உனக்கே தெரியும்."

ராம்கியும் ஐந்து நிமிடங்கள் காத்திருக்க தொடங்கினான். பார்த்திபனுக்கோ தன் சதிவேலை எப்படி இவனுக்குத் தெரிய வந்தது என்கிற குடைச்சல்! சிந்தனையுடன் நகம் கடிக்க அரம்பித்துவிட்டான். ராம லிங்கமும் எழுந்து எங்கோ போனார்.

அந்த இடைவெளியில் ராம்கியே பார்த்திபனுடன் பேசத் தொடங்கினான்.

"மிஸ்டர் பார்த்திபன்! ஒரு வகைல நான் உங்களுக்கு சகலையும் கூட..."

"சகலைன்னா..."

"சரிதான்... சகலைன்னா தெரியாதா? நீங்க கட்டிக்கப்போற, ஸாரி கட்டி முடிச்சு பிள்ளையையும் கொடுக்கப்போற நந்தினியோட தங்கை ராகவியை நான் காதலிக்கறேன். ஆனா, சத்தியமா உங்க மாதிரி வரம்பு மீறி நடந்துக்கறது, அப்புறமா நல்லவன் வேஷம்



போட்டு வந்து கர்ப்பத்தை அழிக்க குங்குமப்பூவை கொடுக்கறதெல்லாம் எனக்குத் தெரியாது."

"ஆமா... நந்தினி அப்பா உங்க பத்திரிகைக்கு நான் விஷம் வெச்ச குங்குமப்பூ கொடுத்ததா ஏதாவது எழுதி கிழுதி போட்டாரா?"

"அவர் பாவம் பார்த்திபன்... இன்ஸ்பாக்ட் நீங்க ஏமாத்த நினைக்கற நந்தினியும் படு பாவம். இரண்டு பேருமே உங்களை தலைமுழுகிட்டு வாழவோ இல்ல தற்கொலை செய்துக்கவோதான் ஆசைப்பட்டாங்க. ஆனா நான்தான், அப்படி நடந்துக்கறது தப்பு, பார்த்திபனை திருத்த வேண்டியது என் கடமைன்னு சொல்லிட்டு இங்க வந்துருக்கேன்."

"அவ்வளவும் பொய்னு நான் மறுத்தா?"

"பின்ன... மறுக்கத்தானே நீங்க செய்வீங்க. ஒத்துக்கறதுக்கு நீங்க என்ன மனிதருள் மாணிக்கமா, இல்லை மகாத்மா காந்தியா?

"வேண்டாம் மிஸ்டர்... என் அப்பா தன்னை ட்ரான்ஸ்ஃபார்மர்னு மட்டும்தான் சொன்னார். ஆனா, உண்மைல அவர் அதுக்கும் மேல..."

"அதான் தெரியுமே... ட்ரான்ஸ்ஃபார்மரைகூட கிளவுஸ் கையால தொட முடியும். ஆனா, கொலைகாரன்கறவன் அதைவிட கொடுமையானவன்தானே?"

ராம்கியின் பதிலுக்கு பதில் பார்த்திபனை சற்று பதறவே விட்டது.

"மிஸ்டர் நிருபர்... உங்களால என்னய்யா பண்ண முடியும். உங்க பத்திரிகைல எழுதி மானத்தை வாங்குவீங்களோ?"

"அது கடைசி ஆயுதம் மிஸ்டர் பார்த்திபன். அதுக்கு முந்தி உங்க வரி ஏய்ப்பு. குறுக்கு வழி தப்புகள்னு எல்லாத்தையும் வரிசைப் படுத்த ஆரம்பிப்பேன்."

ராம்கி தீர்க்கமாக சொல்லி முடிக்க, அவன் பாக்கெட்டில் இருந்த செல்போன் சிணுங்கியது.

எடுத்து காதை கொடுத்தான். அப்படியே பேயடி பட்டவன் போல அவன் முகம் மாறத் தொடங்கியது. சிரித்துக் கொண்டே அவன் எதிரில் ராமலிங்கமும் வந்து நின்றார்.

## 14

இந்த உலகில் வசியம் என்கிற ஒரு விஷயம் மட்டும் எல்லா மதங்களிலும் ஒரு அவசியத்திற்கும் ஆய்வுக்கும் உரிய ஒன்றாக விளங்கி வருகிறது. சர்வ மதங்களிலும் குறிப்பிட்ட ஒருவர் மக்கள் கூட்டத்தை வசீகரித்து பெரும் வெற்றியாளராக திகழ்ந்திருக்கிறார். தோற்றம், கருத்து, பார்வை என்கிற மூன்று அம்சங்களே வசியத்தின் அடிப்படையாக இருந்து வந்திருக்கின்றன.

இதைத் தவிர்த்து மை வசியம் என்பதும் இன்னும் பலரால் பயன்படுத்தப்படுகிறது. விஞ்ஞான பூர்வமாக இவைகளை விளங்கிக் கொள்ளுதல் துளி கூட சாத்தியமில்லை.

சில மூலிகை வேர்கள் மற்றும் காய்கள், இவற்றோடு குறிப்பிட்ட ஒரு ஜீவராசியின் ரத்தம், எலும்பு மற்றும் உடற்கூறுகளைக் கொண்டு வசிய மைகள் உருவாக்கப்படுகின்றன.



இதற்கென்று கால நேரமும் அளவுகளும்கூட உள்ளன. ஒருவித பௌதீகமும், திடமுமான இவை மனதை எவ்வாறு மாற்றுகின்றன அல்லது கட்டுப்படுத்துகின்றன என்பதை விளங்கிக் கொள்ள முடிவதில்லை.

சித்தர்கள் இது போன்ற வசியங்களில் பெரும்பாலும் ஈடுபடுவதில்லை. அவர்கள் எண்ண அலைகளாலேயே நம் மனதுக்குள் தாக்கங்களை நிகழ்த்துபவர்களாக உள்ளனர். அது எப்படி என்று கேட்கின்றவர்களுக்கு அவர்கள் வார்த்தைகளில் பதில் கூறுவதே இல்லை. அவர்கள் வரையில் இந்த பிரபஞ்ச ரகசியங்கள் எதையும் ஒருவர் வார்த்தைகளால் விளக்கிவிட முடியாது. அது வார்த்தைக்கு அகப்படாத ஒன்று.. அனுபவ அறிவால் மட்டுமே விளங்கக் கூடியது.

அதே சமயம் சித்தர்களை விளங்கிக் கொள்ள நமக்கு மூன்று விஷயங்களில் ஆழ்ந்த சிந்தனை வேண்டும். ஒன்று, இந்த உடல் குறித்தது. அடுத்து, காற்று குறித்தது. மூன்றாவது, மனம் குறித்தது... இந்த மூன்றை பற்றியும் நாம் எவ்வளவு தீவிரமாகவும், நுட்பமாகவும் புரிந்து வைத்திருக்கிறோமோ அந்த அளவுக்கே சித்தர்களை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

அதில் காற்றைக் குறித்து நாம் பொதுவாக சற்று சிந்தித்து பார்ப்போமா?

ராம்கி முகத்தில் ஏற்பட்ட சலனமும், மாற்றமும் ராமலிங்கம் முகத்தில் கேலிச் சிரிப்பாகவும் வெற்றி மதர்ப்பாகவும் மாற ஆரம்பித்தது. அதை பார்த்திபனும் கவனித்தான்.

"என்னப்பா… யார்கிட்ட இருந்து போன். உங்க பத்திரிகை ஆபீஸ்ல இருந்தா?" ராமலிங்கமே கேட்க, மௌனமாக அவரை வெறித்தான்.

"என் விஷயத்துல நீ எந்த விதமாவும் மூக்கை நீட்டாதே. அது உன் வேலை இல்லைன்னு உன் எடிட்டரே சொல்லியிருப்பாரே?"

"சொன்னாரு… நான் இந்த மாதிரி திடீர் திருப்பங்களை சினிமாவுலதான் பாத்திருக்கேன். இப்பதான் நிஜத்துல நேர்ல அனுபவிக்கறேன்."

"இதெல்லாம் ரொம்ப கம்மி தம்பி. சினிமாங்கறது மட்டும் என்ன… ஆகாயத்துல இருந்தா குதிச்சிச்சு..? அதுவும் இந்த பூமில நாம நடந்துக்கறத வெச்சுத்தானே பண்ணப்படுது."

"ஆனா ஒண்ணு… சினிமால கதை எப்படி வேணா போகலாம். இங்கே ஒரே விதமாதான் போகும். நான் பத்திரிகைல உங்கள பத்தி எழுதறத வேணும்னா நீங்க இப்ப தடுத்திருக்கலாம். ஆனா, உங்களையும் உங்க சதிச் செயலையும் எதிர்த்து போலீஸ், கோர்ட்டுன்னு போக எனக்கு தைரியம் உண்டுங்கறத நீங்க மறந்துட வேண்டாம்."

"அட, என்ன தம்பி நீ… ஒரு பத்திரிகை ஆசிரியரையே கட்டிப் போட முடிஞ்ச என்னால போலீஸை விலைக்கு வாங்கறதா கஷ்டம். ஒரு விஷயத்த நீ தெளிவா புரிஞ்சுக்கோ… தைரியம், புத்தி, பணம் இந்த மூணும் ஒருத்தர் கிட்ட இருக்கும்போது அவனை யாராலயும் எதுவும் பண்ண முடியாது. இந்த மூணும் உள்ளவங்க கிட்ட பணிஞ்சுபோறதுதான் புத்திசாலித்தனம்.



மறுத்தா இப்ப நீ மூக்கை நுழைக்கக்கூடாதுன்னு சொன்ன உன் எடிட்டர் உன்னை வேலையை விட்டே தூக்கற நிலை வரலாம்… ஜாக்கிரதை…"

ராமலிங்கம் படுகித்தாப்பாக பேசியதை கேட்ட ராம்கியால் அதற்கு மேல் அவரிடம் பேச முடியவில்லை. மாறாக தன் பத்திரிகை மேலும் ஆசிரியர் மேலும்தான் கோபம் வந்தது. ராமலிங்கத்தையும் பார்த்திபனையும் முறைத்தபடி அந்த இடத்திலிருந்து புறப்பட்டான். பார்த்திபன் மட்டும் அப்போது ராமலிங்கம் சிரித்தது போல் எல்லாம் சிரிக்கவில்லை. அவனுக்குப் பெரிய அளவில் உறுத்தல் ஆரம்பமாகிவிட்டிருந்ததை ராம்கியால் உணர முடிந்தது!

**ம**ணி பன்னிரண்டு! சதுரகிரியில் நடந்தபடி இருந்த சேகர் வரையில் உச்சி சூரியனின் வெம்மையான கதிர்கள் மேனி மேல் பட்டும் அதனால் பெரிதாக எந்த வெப்பத் தாக்குதலும் இல்லை. ஒரு குச்சியை ஊன்றியபடியே நடந்து கொண்டிருந்தான்.

நாலாபுறமும் மலையின் விரிவான மேடு பள்ளமான சரிவுப் பகுதிகள்! அடையாளம் காண முடிந்தது போல நெல்லி மரங்கள் மட்டும் இருந்தன. கீழே நிறையவே காய்கள் விழுந்து கிடந்தன. அவைகளில் சிலவற்றை எடுத்து கடித்துச் சாப்பிட்டுவிட்டு சலசலவென மெல்லிய சப்தத்தோடு ஓடியபடி இருக்கும் ஓடை நீரை எடுத்து குடித்தபோது அந்த நீர் அப்படி ஒரு இனிப்பு இனித்தது. உடம்பின் ஒவ்வொரு மயிர்க்காலும் சிலிர்த்துப்போய் புதிதாக ஒரு தெம்பு தோன்றியது.

சேகருக்கும் ஆனைமுத்துவுக்கும் முன்னால் நடந்து கொண்டிருந்த ஊமையன் ஒரு தேவதாரு மரத்தின் கீழே

போய் அமர்ந்தான். அந்த மரத்தின் கிளை ஒன்றில் தேவாங்கு ஒன்று அமர்ந்து கொண்டு ஊமையன் மரத் தடிக்கு வரவும், ஒரு பருத்த கிளை ஒன்றின் பின்னால் போய் மறைந்து கொண்டது. அதே மரத்தின் மேல் கருடபட்சி ஒன்று'ம் அமர்ந்திருநதது.

சேகரும் ஆனைமுத்துவும் அந்த மரத்தடிக்கு வந்து சற்று இளைப்பாற விரும்பி அமர்ந்தனர். ஊமையன் மேலே மரக்கிளையைப் பார்ப்பதை வைத்து அவர்களும் பார்த்தனர்.

"மாமா! மரக்கிளைல பூனை மாதிரி ஏதோ ஒண்ணு... பூனைங்க மரம் ஏறுமா என்ன?'

"அடப்போடா பைத்தியக்காரா... அது பூனை இல்லை. தேவாங்கு."

"தேவாங்கா.. அப்படின்னா?"

"அதுவும் ஒரு விலங்கினம்தான். ஆனா, விசேஷ மான உயிரினம். தேவாங்கோட எச்சில் தோஷத்துக்கு மருந்து. அது கைபட்ட எந்த ஒண்ணையும் கெட்ட சக்திகள் தீண்டாதுன்னு சொல்வாங்க..."

"இது நம்பிக்கை அடிப்படையா.. இல்ல பலமான காரணம் ஏதாவது இருக்கா மாமா.."

"காரணம் இருக்கு சேகர். ஆனா, எனக்கு தெரி யாது. நாம தேவாங்கை பாக்கறதும் ரொம்ப நல்லது."

"அப்ப நமக்கு நாம தேடி வந்த விஷயம் நல்லபடியா நடக்கும்னு சொல்லுங்க..."

"சந்தேகமே படாதே... இதுவரை நாம இந்த மலைல மரம், செடி, கொடிகளைதான் பார்த்தோம். இப்பதான் ஒரு தேவாங்கை பார்த்துருக்கோம். அடுத்து



சித்தர்களை எப்படியாவது பார்த்து அங்களோட நாம் பேசிடணும். அது ரொம்ப முக்கியம்."

"ஊமையன் கிட்ட கேளுங்க. இந்த மலைல அவங்க எங்க இருப்பாங்க?"

ஆனைமுத்துவும் ஜாடை காட்டி கேட்டார். ஊமை யன் உட்கார்ந்த இடத்தில் இருந்து வெகுதூரத்தில் ஒரு குகை போன்ற ஒரு இடத்தை காட்டினான்.

"அங்கதான் சித்தருங்க இருக்காங்களா?" என்று சேகர் கேட்க, ஊமையன் தலை ஆடியது. "அப்ப இங்க உக்காறதுக்கு அங்க போய் சித்தர் சாமிய பார்க்க லாமே?" சேகரே கேட்டிட, "முதல்ல சந்தன மகா லிங்கத்தையும், சுந்தர மகாலிங்கத்தையும் கும்பிடுங்க. அப்புறமா எங்க வேணா போங்க" என்று ஜாடை யாலேயே பதில் சொல்லி முடித்தான் ஊமையன்.

ஆனால், சேகர் அதை ஏற்கவில்லை.

"சாமி எங்க போயிடப்போகுது... நாங்களும் இன்னிக்கே ஒண்ணும் திரும்பிப் போகப் போற தில்ல. முதல்ல யாராவது ஒரு சித்தர் சாமியையாவது பார்ப்போம். எங்களுக்கு நாங்க தேடி வந்த மதிவாணன் கறவரை கண்டுபிடிச்சாகணும். அதுதான் ரொம்ப முக்கியம்" என்றவன், எதிரே ஊமையன் காட்டிய அந்த குகை நோக்கி நடக்கத் தொடங்கி விட்டான்.

அந்த குகைக்கு என்று பாதை கிடையாது. மலைச் சரிவில் பாறைகளுக்கு நடுவில் புகுந்தும் ஏறியும் குதித்தும் தான் செல்ல வேண்டும். உடம்பில் நிறைய தெம்பு வேண்டும்.

மலைத் தலங்களில் எப்போதும் வேகம் கூடாது. வேகமாக நடந்தாலோ குதித்தாலோ மூச்சு இரைக்கும்

இதன் காரணமாக ஆக்ஸிஜன் நிறைய தேவைப்படும். ஆனால், அது தரைப்பகுதியில் உள்ளது போல அதிகம் இருக்காது. இதெல்லாம் எதுவும் தெரியாமல் ஒரு வேகம் எடுத்தான் சேகர். ஆனைமுத்துவுக்கும் ஊமைய னுக்கும் அவனை தொடர்வது பெரும்பாடாக இருந்தது. சில இடங்களில் மிருகங்களின் எலும்புகள் கண்ணில் பட்டன. மாமிசபட்சிணிகளான சிறுத்தை, சிங்கம் போன்றவை வேட்டையாடியிருக்க வேண்டும்!

குறிப்பிட்ட ஒரு இடத்தில் பருமனான மந்திக் குரங்கு ஒன்று பாறை ஒன்றின்மேல் சாகக் கிடப்பது போல கிடந்தது. பக்கத்திலேயே அந்த பாறையில் ஒரு பள்ளம். அதில் பச்சையாய் எண்ணெய்கணக்கான மழை நீரின் சேர்க்கை. அந்த மந்திக் குரங்கு அந்த நீரை குடித்துவிட்டுத்தான் சுருண்டு கிடந்தது.

பாறையில் நீரைப் பார்த்த சேகர் சுருண்டு கிடக்கும் குரங்கைப் பார்க்காமல் அந்த நீரை நெருங்கி தாகத்தின் நிமித்தம் ஒரு வாய் மொண்டு குடித்தான். குடித்த வேகத்தில் கொஞ்சம் போல விழுங்கியவன் அதை வேகமாக உமிழ்ந்தான். பிறகுதான் குரங்கைப் பார்த்தான். குரங்கும் அவனைப் பார்த்தது. அதன் வயிறு பாறை போல கனத்து வீங்கிக் கிடந்தது. அவ னுக்கும் வயிற்றில் மெல்ல ஒரு அவஸ்தை உருவாகத் தொடங்கியது. வயிற்றை தடவியபடியே குரங்கை தொடர்ந்து பார்த்தான். அது தன் கண்களை மெல்ல மூடி மூடித் திறந்துகொண்டே பாறை மேல் புரளத் தொடங்கியது.

சேகருக்கு அது உடல்நலமின்றி அவஸ்தைப் படுவது புரிந்து விட்டது. அதற்குள் ஊமையனும் அருகே வந்து விட்டான். வந்தவன் குரங்கை பரிதாபமாக பார்த்



தான். அவன் பார்த்த சில நொடிகளில் அதன் உயிரும் அதை விட்டுப் பிரிந்துவிட்டது.

ஊமையன் முகத்தில் சோகம் குடி கொள்ள ஆரம் பித்தது. அவனும் அந்த பாறை மேல் உள்ள குழி நீரைப் பார்த்தான். பார்த்த வேகத்தில் அதை காலாலேயே உதைத்து அவ்வளவு நீரையும் வெளியேறும்படி செய்தான். பாறை நீர் நாலாபக்கமும் தெறித்து வழிந்து அந்த பள்ளமும் நீரின்றி தெரியத் தொடங்கியது.

ஆனைமுத்து அவன் செயலில் அர்த்தமிருப்பதை உணர்ந்தவராக, எதுக்கு இப்படிச் செய்தே என்று கேட்க, சேகர் வயிற்று வலியோடு அவனைப் பார்த்தான்.

ஊமையன் உடனே வானை நோக்கி கை காட்டி னான். பின் பாறையை காட்டி அங்கிருந்து ஒன்று பாறைமேல விழுந்தது என்பதைக் கூறிய வினாடி ஆனை முத்து புரிந்து கொண்டார்.

"ஆகாசத்துல இருந்து பாறை மீது ஒண்ணு விழுணும்னா அது இடி மின்னலாதான் இருக்கணும்" என்றார்.

ஊமையனிடம் பலமான ஆமோதிப்பு,

"அப்ப இது இடி மின்னல் பாஞ்ச தண்ணி! இந்த தண்ணிக்கு உதகநீர்னு பேராச்சே..?"

அதற்கும் அவனிடம் ஆமோதிப்பு பாவனை.

"இதை குடிச்சா வயிறு கல்லாயிடும். இந்த நீரை கலந்துதான் அந்த காலத்துல கூரைல தளம் போடு வாங்க. குறிப்பா அரண்மனைகள்ல... ஏன்னா உதக நீருக்கு தன் வசம் சிக்கற கல் மண்ணுன்னு எதையும் இரும்பு மாதிரி மாத்திடற சக்தி உண்டுன்னு சொல் வாங்க. சரிதானே?"

ஊமையன் தொடர்ந்து ஆமோதித்தான்.

"ஆமா ரசவாதத்துல தங்கம் பண்றதுன்னாகூட இந்த தண்ணி வேணும்னு சொல்வாங்களே..." என்று கேட்டபோது மட்டும் ஊமையனிடம் ஆமோதிப்பில்லை. பதிலுக்கு வெறிப்பு.

அவர்கள் மூவரும் அந்த பாறைமேல் நின்றபடி பேசிக் கொண்டிருப்பதை ஊமையன் சுட்டிக் காட்டிய குகைக்கு வெளியே வந்திருந்த ஒரு சித்தரும் பார்த்துக் கொண்டுதானிருந்தார்!

# 15

**சி**த்தர்களைப் புரிந்துகொள்ள நமக்கு சில அடிப்படை பிரிவுகள் அவசியம். அதில் உடம்பை பற்றியும், மனதை பற்றியுமான பார்வையும், இதைக் கடந்து நமக்குள் வந்துவிட்டு செல்லும் வெளித் தொடர்பான காற்றைப் பற்றியும் நாம் உணர்தல் மிக அவசியம். அதாவது 'மனது - உடம்பு - காற்று' இந்த மூன்றைப் பற்றிய நுட்பமான அறிவு நமக்கிருந்தால் ஒரு சித்த புருஷரை நம்மால் எளிதாய் புரிந்து கொள்ள முடியும்.

முதலில் உடம்பு பற்றி! நமது உடம்பைப் பற்றி நமக்கு எவ்வளவு தூரம் தெரியும்? கை, கால், வயிறு, தலை, முதுகு என்று நம் உடம்பின் பாகங்களுக்கு பெயர் தெரியும். நமது உடம்புக்குள் என்னவெல்லாம் இருக்கிறது என்று தெரியுமா? வயிற்றிலே குடல் இருக்கிறது, தலையிலே மூளை இருக்கிறது... இப்படி ஓரளவு தெரியும்.



பள்ளியில் விஞ்ஞானம் படித்தவர்களுக்கு சற்று கூடுதலாக சிறுகுடல், பெருங்குடல், கல்லீரல், கணையம், சிறுநீரகம், மலப்பை, முதுகுத்தண்டுவடம் என்று சற்று கூடுதலாக தெரியும். இதைக் கடந்து தன் உடம்பைப் பற்றி அதன் முழுமையான செயல்திறம் பற்றி யாருக்காவது தெரியுமா? நமக்கு எப்போது பசி எடுக்கும், எப்போது சிறுநீர் கழிக்க வேண்டியிருக்கும், எப்போது தூக்கம் வரும் என்றாவது துல்லியமாக கூறமுடியுமா?

சுருக்கமாக சொல்லப்போனால் நமது உடம்பு என்பது நாம் அதைப் பற்றி எல்லாம் தெரிந்து கொள்ளத் தொடங்குவதற்கு முன்பாகவே இயங்கத் தொடங்கி விடுகிறது. அதன்பின் எப்போதும் அது நம்மை தன் பிடிக்குள்தான் வைத்திருக்கிறது. இதை அறிந்து கொண்ட நிலையிலும் மனதால் உடம்புக்கு எதிராகவோ அல்லது ஆதரவாகவோ எதையும் செய்ய முடியவில்லை. அதாவது அதற்கு வலி எடுக்கும்போது மனமானது அந்த வலியை உணராமல் போவதில்லை. அது சந்தோஷப்படும்போதும் இதேதான் நிலை. அந்த வகையில் முதலில் உடம்பு - பின்பு அதற்கு அடங்கிய மனது - இந்த இரண்டும் இந்த பூமியில் இயங்குவதற்கு பிரதானமானது காற்று. இந்த காற்று ஒன்று மட்டும் இடையறாதபடி வெளியே இருந்து உள்ளே வந்து விட்டு, பின் உள்ளிருந்து வெளியே செல்வதாக உள்ளது. நாம் உட்கொள்ளும் உணவுகூட கழிவாக வெளியேறிவிடுகிறது. குடிக்கும் நீரும் வெளியேறி விடுகிறது. இடையறாது வெளியேறாதபடி தொடர்போடு , இருப்பது காற்று மட்டும்தான்!

இந்த உண்மைகளை யோசித்துப் பார்க்கும் போது இதில் பெரிதாக யோசிக்க என்ன இருக்கிறது என்று தோன்றும். ஆனால், மனிதப் பிறப்பே இந்த விஷயங்களைப் பற்றி யோசித்து தெளிவு பெற்று முக்தி அடைவதற்காகதான்!

குறிப்பாக உடம்பைப் பற்றிய நுட்பமான பல விஷயங்கள் நமக்கு தெரியாது. அதில் முதலாவது உண்மை என்ன தெரியுமா? இந்த பூமியின் மைய விசைக்கும் நமது உடம்பின் மையப்பகுதிக்கும் கயிறு கட்டியது போல ஒரு தொடர்பு இருக்கிறது என்பது தான் அது!'

அந்த குகை வாசலில் இருந்து பார்த்த சித்தருக்கு ஆனைமுத்துவும் சரி, சேகரும் சரி, வெகுதூரத்தில் ஒரு புள்ளியாகத்தான் தெரிந்தனர். அவர் முகத்தில் பதிலுக்கு ஒரு முறுவல்... அந்த முறுவலுடன் அவர் புறப்பட்டுவிட்டார். அதே சமயத்தில் ஆனைமுத்துவும் ஊமையனும் வயிற்றுவலிக்கு ஆளாகிவிட்ட சேகரை என்ன செய்வது என்று தெரியாமல் பார்த்தனர்.

"அவசரப்பட்டு முன்னாலே வந்து இந்த தண்ணியை வேற குடிச்சு வெச்சே... நல்லவேளை அதிகமா குடிக்கல. குடிச்சியிருந்தா இந்த மந்தியோட கதிதான்..." என்ற ஆனைமுத்து, "கைவசம் ஏதாவது வயித்து வலி மாத்திரை இருந்தா எடுத்துப் போட்டுக்கோ..." என்றார்.

ஊமையனோ அதைக் கேட்டு பெரிதாய் தலையை ஆட்டி மறுத்தான். மாத்திரைக்கெல்லம் இந்த வலி அடங்காது என்பது போல முகபாவனைகளை காட்டினான். அப்படியே நாலாபுறமும் கண்களை இருக்கிக் கொண்டு பார்க்கத் தொடங்கினான். அவன் பார்க்கும்



விதத்தில் அவன் ஏதோ மூலிகைத் தாவரத்தை தேடுகிறான் என்பது தெரிந்தது. அவர்கள் இருவரையும் அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு வந்த வழியே திரும்பி ஓடத் தொடங்கினான்.

ஆனைமுத்து அதைப் பார்தது, "யப்பா! எங்களை விட்டுட்டு எங்க போறே. நில்லு..." என்று கத்திப் பார்த்தார். அவர்கள் வந்த வழியே ஓடை ஒன்று குறுக்கிட்டதில் சொல்ப அளவில் கைகளில் அள்ளிக் குடிக்கமுடிந்த தினுசில் நீர் ஓடியபடி இருந்தது. அந்த ஓடையின் ஈரம் மிகுந்த கரைப்பகுதியில் மிகவும் பொடிப் பொடியாக, அதே சமயம் தடித்த இலைப் பகுதியைக் கொண்ட ஒரு செடி ஒரு சாண் உயரத்திற்கு ஏராளமாக வளர்ந்திருந்தது. அவைகளை சாமியைக் கும்பிடுவது போல கும்பிட்டுவிட்டு பறித்த ஊமையன், அப்படியே சற்று தள்ளி ஊமத்தங்காய் போலவே முள்ளுருண்டையாகத் தெரிந்த காய் ஒன்றையும் பறித்துக் கொண்டு திரும்பவும் சேகரையும் ஆனைமுத்துவையும் நோக்கி ஓடத் தொடங்கினான்.

சேகர் இந்த இடைவெளியில் கற்பாறை ஒன்றின் மேல் பூமிக்குள் இருந்து தூக்கிப் போடப்பட்ட ஒரு புழு, அனல் தாங்காமல் நெளிவது போல நெளிந்து கொண்டிருந்தான். ஓடி வந்த ஊமையன் அந்த முள்ளுருண்டைக் காயை அப்படியே பாறை மேல் வைத்து நசுக்கி அதை உள்ளங்கையில் வைத்து கசக்கியவனாக அதன் சாற்றை சேகரின் வாய் மேல் விட்டான். உதட்டின் மேல் அந்த சாறு பட்ட நொடி சேகர் கசப்பு தாளாமல் 'தூ' என்று காறி உமிழ்ந்தவனாக, "ஐயோ அப்பா... இவ்வளவு கசப்பை எதுக்குப்பா கொடுக்கறே?" என்று சத்தம் போட்டு கத்தியே கேட்டான். ஊமையன் அதற்கு

பதிலெல்லாம் கூறிக்கொண்டிருக்காமல் திரும்பவும் அந்த காயை கசக்கி சேகரின் வாயில் அழுத்தமாக திணித்தான்... குழந்தைக்கு மருந்தை சங்கடையில் போட்டு ஊட்டுகிறார் போல்தான் இருந்தது.

அடுத்த சில நிமிடங்களில் வயிற்றைப் பிரட்டிக் கொண்டு வாந்தி எடுக்க ஆரம்பித்தான் சேகர். அவன் வயிற்றில் அவன் அன்று பொழுதில் சாப்பிட்டிருந்த அத்தனை ஐட்டங்களும் கிட்டத்தட்ட கல்போல ஆகி கன்னங்கரேர் என்று கறுப்பாக காட்சியளித்தன. வாந்தி எடுத்த வேகத்தில் வலியும் நின்றுவிட்டது. சேகர் பெரு மூச்சுவிடவும், அந்த சிறிய இலைச் செடியை அப்படியே கையில் கொடுத்து கொத்தமல்லியை கடித்து சாப் பிடுவது போல சாப்பிடச் சொன்னான். சேகரும் சாப்பிட்டான். நெல்லிக்காய் போல உவர்ப்பாக இருந் தது. சற்று முன் வரை கசந்த நாக்குக்கு இது எவ்வளவோ மேல் என்றும் தோன்றியது.

ஆனைமுத்து, ஊமையனைப் பார்த்து பிரமித்துப் போயிருந்தார்.

“யப்பா சாமி... உனக்கே இவ்வளவு தெரிஞ்சிருந்தா இங்க இருக்கற சாமிங்களுக்கு எவ்வளவு தெரிஞ் சிருக்கும்னு நினைச்சுப் பார்க்கவே முடியலயே.” என்றார். சேகர் முதல் தடவையாக தான் ஓடிவந்தது எவ்வளவு பெரிய தவறு என்பது போல உணர்ந்தவனாக வலி நீங்கிய நிலையில் ஊமையனைப் பார்த்தான்.

பின் மூவருமாக அந்த குகையை நோக்கி மெல்ல நடக்கத் தொடங்கினர்.

“சேகர்... ஊமையன் மட்டும் வராம போயிருந்தா நீயும் அந்த மந்தியை போல வயிறு கல்லாகி செத்



திருப்பே..” என்று ஆனைமுத்து சொல்லிக் கொண்டே நடந்தார். குகை வாசலை எட்டும் முன்பே மழை வேறு வரத் தொடங்கி விட்டது. அது வலுவாக வருமுன் குகைக்குள் நுழைந்துவிடும் வேகத்துடன் மூவரும் ஓடினர். ஆனால், வாசல் வந்த உடனேயே ஊமையன் தடுத்து ‘அவசரப்பட்டு உள்ளே போக வேண்டாம்’ என்கிற மாதிரி சமிக்ஞை செய்தான்.

“சேகர்... நில்லு. ஊமையன் சொல்றதுல அர்த்தம் இருக்கும்” என்றார் ஆனைமுத்து. ஊமையன் வெளியில் நின்றபடி பெரிதாக கத்தத் தொடங்கினான். சப்தம் கேட்டு உள்ளிருக்கும் சித்தர் தானாக வெளியே வந்து பார்க்க வேண்டும் என்கிறாற் போல் இருந்தது அவன் செயல்பாடு!

ஆனால், அவன் பல முறை சப்தமிட்டும் உள் ளிருந்து யாரும் வரவில்லை. ஊமையனும் சப்தம் போடுவதை நிறுத்திக் கொண்டு நன்கு மழையில் நனைந்த நிலையில் மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தான். உள்ளே ஒரு மூலையில் ஒரு சாண் உயர சிவலிங்கம் ஒன்றும் அதன் முன்னால் ஒரு அகல் விளக்கும் எரிந்தபடி இருந்தது. லிங்கத்தின் தலை மேல் ஏராளமாய் வில்வ இலைகள்! மற்றபடி உள்ளே சித்தர் என்று எவரும் இல்லை.

திரும்பிப் பார்த்த ஊமையன், உள்ளே யாரும் இல்லை என்று ஜாடை காட்டினான்.

“நாம உள்ள போய் உட்காருவோமே... மழைல நனையறதுக்கு உள்ளபோறது ஒண்ணும் தப்பு இல்லையே” என்று கேட்டான் சேகர். ஊமையனோ மறுத்தான். அது தப்பு என்கிற மாதிரி ஜாடை காட்டி னான். சேகருக்கோ அது தவறாக தெரியவில்லை.

"இந்த மலையும் சரி, குகையும் சரி... பொது வானவை... மழைல நனையறதுக்கு உள்ள போய் நம்மை காப்பாத்திக்கறது ஒண்ணும் தப்பே இல்லை..." என்றபடி செருப்பணிந்த கால்களுடன் அந்த குகைக்குள்ளும் நுழைந்து விட்டான். சற்று தயங்கினாலும் ஆனை முத்துவும் உள்ளே நுழைந்தார். ஊமையன் மட்டும் வெளியே நனைந்தபடியே நின்றான். மழையோ இப்போதைக்கு நிற்கப் போவதில்லை என்கிற மாதிரி பெய்து கொண்டே இருந்தது!

தியாகுவின் எலும்பு முறிந்த கால் பகுதி மேல் ஜவ்வாது சித்தர் கொடுத்திருந்த மூலிகை எண்ணெயை சொதம்பச் சொதம்ப விட்டு மெல்லிய ஒரு கிழிசல் வேஷ்டித் துணியால் கட்டுப் போட்டபடி இருந்தார் சதாசிவம். தியாகுவுக்கு அவர் தன் கால்களை பிடித்து செயல்படுவது ஒரு மாதிரி இருந்தது.

ஜெயந்தி, நந்தினி என்று இரண்டு பேரும் அந்த காட்சியையே பார்த்தபடி இருந்தனர். வாசலில் மோட்டார் பைக் வந்து நிற்கும் சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தனர். ராகவியும் ராம்கியும் இறங்கி உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர். இரண்டு பெண்களிடமும் ஆவல் முட்டி மோதத் தொடங்கியது. ஆனால், சதா சிவம் அவர்களை திரும்பிக்கூட பார்க்கவில்லை.

உள்ளே நுழைந்த ராம்கி முகத்தில் பலமான சோர்வு. தியாகுவும் படபடத்தான்.

"ராமகி என்னாச்சு?"

"என்னத்த சார் சொல்ல... அந்த ஆள் தான் ஒரு அக்மார்க் பணக்காரன்கறத நிரூபிச்சிட்டான்..."



"பீடிகை போடாம விஷயத்த சொல்..."

ராம்கியும் நடந்ததை சொல்லி முடித்தான். தியாகுவால் அதை நம்பவே முடியவில்லை.

"நம்ம எடிட்டரா உன்னை கட் பண்ணாரு. அவரா அந்த ஆள்கிட்ட மடங்கிப் போகச் சொன்னாரு."

"ஆமாம் தியாகு சார்... நீங்கதான் இப்ப அவர் கிட்ட நியாயம் கேட்கணும்."

தியாகுவும் ஆவேசமாகி செல்போனை கையில் எடுத்தான். சதாசிவம் வேகமாய் முன்வந்து தடுத்தார்.

"தம்பி விட்ருங்க... இதை நான் எதிர்பார்த்தேன். முன்பு நான் எடுத்த முடிவுதான் சரி... அவங்களுக்கு இதயமே கிடையாது. இப்படிப்பட்டவங்களோட என் மக வாழ்ந்துதான் எதை கண்டுடப் போறா? விட்ருங்க..."

சதாசிவம் சோர்வளித்தார். ஆனால், தியாகு விடுவ தாக தெரியவில்லை. தொலைபேசியில் ஆசிரியரைப் பிடித்தான்.

"சார்... என்ன சார் இது... ராம்கியை எதுக்காக இப்படிக் கடமையைச் செய்ய விடாம தடுத்தீங்க?"

"தியாகு! அதை நான் உன்கிட்ட போன்ல சொல்ல முடியாது. நீ நேர்ல வா, சொல்றேன்."

"சும்மா சொல்லுங்க... அந்த பணக்காரரை பார்த்து ஏன் பயப்படறீங்க சார்... இந்த நாட்டு பிரதமர் மேல கூட கேள்வி எழுப்ப தயங்காதவர் நீங்க..."

"பையத்தியக்காரா... பிரதமர் ரொம்ப கீழே இறங்கி வந்து மோசமான கொலைக்கு அஞ்சாத தாதா மூலமால்லாம் மிரட்ட மாட்டார். புரிஞ்சுக்கோ..."

"அப்ப நீங்க இப்ப மிரட்டப்பட்டிருக்கிங்களா?"

"நான்தான் நேர்ல வா பேசலாம்னு சொன்னேன்ல..."

"சார்.. இன்னும் ஒரு மாசத்துக்கு நான் எங்கேயுமே வர முடியாது. புரிஞ்சுக்குங்க."

"சரி, ஒரு மாசம் கழிச்சு வருவேல்ல?"

"அதுக்குள்ள இங்க நான் சாதிக்க நினைச்சது ஒண்ணுமில்லாமலே போயிடும்..."

"சரி, தியாகு... நீ வரும்போது நான் பேசறேன்."

எடிட்டர் போனை வைத்துவிட, தியாகு முகம் சிவந்து போனது. அவன் பேசியதில் இருந்தே அவர்களும் நடந்ததை புரிந்துகொண்டிருந்தனர். குறிப்பாக ஜெயந்திக்கு படபடவென்று வந்தது.

"என்னங்க இது.. யாரை யார் மிரட்டி இருக்காங்க. வேண்டாங்க - எங்களுக்காக சிரமமே படாதிங்க. எங்க தலையெழுத்துப்படி என்ன நடக்கணுமோ அப்படியே நடக்கட்டும்..." என்றாள்.

அவள் அப்படிச் சொல்லச் சொல்ல, தியாகுவுக்கு ஆவேசம்தான் அதிகரித்தது. சதாசிவத்தை கண்கள் கிளி சிவக்க பார்த்தவன், "சார்... உங்க சித்தர்சாமிங்க கிளி மாதிரியும் குரங்கு மாதிரியும்தான் வருவாங்களா இந்த மாதிரி பணக்காரங்களை கடிச்சுக் குதறுகிற சிங்கம் புலியால்லாம் வரமாட்டாங்களா?" என்று கேட்டான்.

"இதுக்கு நான் என்ன பதிலை தம்பி சொல்ல முடியும்... மனுஷன்தான் வன்முறைல நம்பிக்கை உடையவன். சாமிங்களும் அதை நம்பினா அப்புறம் என்னத்துக்காவறது?"



"அது சரி... இந்த பணக்காரன் மாதிரி ஆட்களை வேற யார்தான் வந்து தடுக்கறதாம்...?"

"இதே கேள்விதான் சார் எனக்குள்ளேயும். சினிமா ஹீரோவா இருந்தா பறந்து பறந்து அடிக்கலாம். மறை முகமாக இருந்து ஸ்டண்ட் மாஸ்டர் உதவி செய்வாரு. ஆனா, அச்சு அசலான வாழ்க்கையா போயிடிச்சு..."

ராம்கி சலித்துக் கொண்டான். நந்தினிக்கு கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய் விட்டது. ஒரு முடிவுக்கு வந்தவள் போல வேகமாக பக்கத்து அறைக்குள் சென்றவள் கதவை தாழிட்டுக் கொள்ளத் தொடங்கினாள்.

அவர்கள் அவ்வளவு பேருக்கும் அடுத்து அவள் என்ன செய்து கொள்ளப் போகிறாள் என்பது புரிந்து விட்டது. ராம்கி கதவை உடைக்கத் தொடங்கினான்.

## 16

"**ந**மது உடம்புக்கும் இந்த பிரபஞ்சத்துக்கும் பலவிதமான தொடர்புகள் இருக்கின்றன. இந்த தொடர்புகளில் வெப்பத்தையும் குளிரையும் தவிர மற்ற எதையும் நாம் பெரிதாக மட்டுமல்ல, சிறிதாக கூட உணரமுடியாதவர்களாகவே இருக்கிறோம். புவிஈர்ப்பு விசைப்பாடு, அதன் அழுத்தம், இதுபோக பலரது பார்வைத் தாக்கங்கள், எண்ணங்களின் தாக்கங்கள், அன்றைய தினம் நிலவும் நட்சத்திரங்களின் கதிர்த்தாக்கங்கள் என்று இந்த உடம்பு சந்திக்கும் விஷயங்கள் பலப்பல... இதில் எதையும் நாம் உணர்வு ரீதியாக உணர முடியாததால்

அறிவானது இவைகளை ஒப்புக் கொள்ள மறுக்கிறது. ஆனால், உண்மையில் இந்தத் தாக்கங்கள் நம்மைச் சுற்றி சதாசர்வ காலமும் நிகழ்ந்தபடியே உள்ளன.

இவைகளை நாம் உணர முடியும். அதற்கான உடலை நாம் உருவாக்கிக் கொண்டால் அது சாத்தியம். சித்த புருஷர்கள் அப்படி ஒரு உடம்பை உருவாக்கிக் கொண்டவர்களே. அதனால்தான் அவர்களுக்கு யாரும் சொல்லாமலே எதையும் பார்க்காமலே உட்கார்ந்த இடத்தில் உடம்பையும் மனதையும் ஒரு நிலைப்படுத்திக் கொண்டு அன்றைய நட்சத்திரம் எது? அன்றைய நாள் எது? தன் எதிரில் நிற்பவர் எந்த கிரகத்தின் பிடியில் அன்றைய தினத்தில் இருக்கிறார் போன்ற நுட்பங்களை எல்லாம் அறிய முடிகிறது. நமது உடம்பை நாம் யோக உடம்பாய் வைத்துக் கொள்வதில்தான் எல்லாம் இருக்கிறது.

ஒரு நல்ல கண்ணாடி, குப்பையில் தூசு தும்புகளுக்கு நடுவில் இருக்கிறது என்று வையுங்கள். அதன் வழியாக எதைப் பார்க்க முடியும்? அதே கண்ணாடியைத் துடைத்து சுத்தமாக வைத்திடும்போது அதன் வழியாக பல லட்சம் மைல்களுக்கு அப்பால் உள்ள நட்சத்திரங்களையும் பார்க்க முடியுமல்லவா?

அதே போலதான் உடம்பும்! இதை உணர்ந்தே ‘உள்ளம் கோவில் - ஊனுடம்பு ஆலயம்’ என்றார் திருமூலர். அவரே தொடர்ந்து ‘உடம்பை வளர்த்தேன் - உயிர் வளர்த்தேனே!’ என்றார்.

உடம்பை ஒரு பரிசாக கருதினால் மட்டுமே இந்த பார்வை. உடம்பை பாரமாக கருதினாலோ அது



வேறு மாதிரி சிந்திக்க வைத்து விடுகிறது. அப்படி சிந்தித்த சித்தர் பெருமக்களும் உள்ளனர்!"

எல்லோரும் பதைத்துப்போய் நிற்க, ராம்கி கதவை உடைக்க முற்பட்டான். நல்ல வேளையாக உட்புறத்தாழ்ப்பாள் உடைந்துபோய் நந்தினியை ஓடிச் சென்று தூக்கிப் பிடிக்க முடிந்தது. அதுவரை ஒரு ஓரமாக இருந்து ஒரு மௌனசாட்சியாக நடப்பதை எல்லாம் பார்த்தபடி இருந்த ஜெயந்தி, தன் நொண்டிக் கால்களுடன் கெந்திக் கெந்தி நடந்தவளாக அருகில் வந்தவள், நந்தினியின் கன்னத்தில் பளார் பளார் என்று அறையத் தொடங்கிவிட்டாள்.

ஒன்றுக்கு நான்கு அறை! பிறகே ஓய்ந்தாள். புயல் வீசி ஓய்ந்த மாதிரி இருந்தது.

“பாவி.. படுபாவி.. வயித்துல ஒரு சிசு இருக்கும் போது உயிரைப் போக்கிக்க தயாராயிட்டியே.. இந்த புத்தியும் ஒரு புத்தியாடி? எதுக்காக பெண்கள் விஷயத்துல எல்லாம் ஒரு கட்டுப்பாட்டோட இருக்காங்க..? இந்த மாதிரி ஆகிடக்கூடாதுங்கறதுக்காகத்தானே...? பெண்ணா இருந்தும் ஆம்பளை மாதிரி நடந்துகிட்டா இதுதான் முடிவு. ஆணும் பெண்ணும் இனத்துல மனித இனமா இருந்தாலும் பெண்ணுங்கறவ தன் மனசுல கண்ணாடி மாதிரி, ஆணுங்கறவனோ கல் மாதிரி.. கல் நூறு தடவை விழுந்தாலும் பெரிய சேதம் அதுக்கு கிடையாது. ஆனா, கண்ணாடி ஒரு தடவை விழுந்தாலும் நொறுங்கிப் போயிடும்டி..."

- ஜெயந்தி குமுறி வெடித்தாள். பதிலுக்கு அமர்ந்திருந்த தியாகு கை தட்டினான். எல்லோர் கவனமும் அவன் பக்கம் திரும்பியது.

"சபாஷ் ஜெயந்தி... அருமை... ஆணுக்கும் பெண் ணுக்கும் நீங்க கொடுத்த விளக்கம் அருமை. ஆமா டி.வி.-ல நிறைய மெகா சீரியல்கள் பார்ப்பீங்களோ?"

- அவன் குரலில் கிண்டல்.

"என்ன சார்... பாராட்டற மாதிரி என்னை கேலி செய்யறீங்களா?"

"கேலியா... சேச்சே! உங்கள எல்லாம் நினைச்சு வருத்தப்படறேன். உங்க தங்கைக்கு நடந்துருக்கறது ஒரு விபத்து. ரோட்ல போகும்போது விபத்து ஏற்பட்டு காயம் பட்டா மருந்து போட்டுக்கறதுதான் புத்தி சாலித்தனம். எப்படி எனக்கு காயம் ஏற்படலாம்னு அழறதால ஏதாவது பிரயோஜனம் உண்டா?"

"உடம்புல படற காயத்துக்கும், உள்ளுக்குள்ள படற காயத்துக்கும் வித்தியாசம் இருக்கு சார்..."

"திரும்பவும் டயலாக்கா... காயம் காயம்தான். அதில பெரிய காயம், சின்ன காயம், உள் காயம், வெளிக் காயம்கறதெல்லாம் ஒரு அடையாளத்துக்கு சொல்லப் படறதுதான். காயத்துக்கு மருந்து என்னன்னு மட்டும் தான் பார்க்கணும். அதை விட்டுட்டு இதுதான் சாக்குன்னு பெண்ணுன்னா அவ தனி... ஆம்பளைங் கறவன் தனின்னுல்லாம் பினாத்தக் கூடாது. இன் ஃபாக்ட், நான் ஒரு உண்மையை சொன்னா உங்களுக்கு வலிக்கும். உண்மைல பெண்கள்தான் ரொம்பவே சக்தி படைச்சவங்க. அவங்க மட்டும் தொடையை தட்டிட்டு யுத்தத்துக்கு கிளம்பிட்டா அவ்வளவுதான்..."

"நீங்க என்னதான் சொல்ல வர்றீங்க?"

"நான் கெட்டுப் போயிட்டேன், இனிமே என்னால வாழ முடியாதுன்னோ, இல்லை நான் வாழறதே தப்



புன்னோ நினைக்கறத நந்தினி முதல்ல விடணும். இந்த நிலைக்கு ஆளாக்கின நபரை உண்டு இல்லைன்னு பண்ணணும்."

"உங்களால பண்ண முடிஞ்சதா சார்?"

"இது என்ன கேள்வி... நானும் ராமகிருஷ்ணனும் தொடங்கியிருக்கற யுத்தம் இப்பதானே தொடங்கி யிருக்கு அதுக்குள்ள அவசரப்பட்டா எப்படி?"

"உங்க பத்திரிகை ஆசிரியரே பின்வாங்கிட்ட நிலைல உங்களால இனி என்ன பண்ண முடியும்?"

"என் பத்திரிகை ஆசிரியரை விடுங்க... அவர் ஒரு சாதாரண மனுஷர். உங்க ஜவ்வாது சித்தர் அப்படி இல்லையே?"

தியாகு யாரும் எதிர்பாராதபடி சித்தரிடம் வந்தது சதாசிவத்தை ஒரு உலுக்கு உலுக்கியது.

"தம்பி... நீங்க சொல்றது வாஸ்தவம்தான் தம்பி. நானும் அவரைத்தான் மலைபோல நம்பியிருக்கேன். ஒரு விதத்துல உங்க பத்திரிகை ஆசிரியர் பின்வாங்கினது எனக்கு சந்தோஷம்தான். ஏன்னா அப்பதானே நீங்க ஜவ்வாது சித்தர்கிட்ட வருவீங்க...?"

"அப்புறம் என்ன... இந்த அக்கிரமமான பதிலைச் சொன்ன துரோகியான அந்த பணக்காரர் ராமலிங்கத் தையும், அவர் மகனையும் உங்க ஜவ்வாது சித்தர் என்ன செய்யறாருன்னு நானும் பாக்கறேன்."

"நிச்சயமா தம்பி... நிச்சயமா!" சதாசிவம் சொன்ன கையோடு கைகளை கூப்பிக் கொண்டு ஜவ்வாது சித்தரை நினைத்து தியானிக்கத் தொடங்கி விட்டார்.

ராம்கி பிரச்சினை திசைமாறுவது போல உணர்ந்தவன்,

"சார் என்ன சார் இது- நம்ம பத்திரிகை இல்லேன்னா வேற பத்திரிகைக்குப் போவோம். போலீஸுக்கு போவோம். அதுவும் இல்லையா முதல்வரோட ஸ்பெஷல் செல்லுக்கு போய் மனு கொடுப்போம். நடுவுல இது யார் சார் ஜவ்வாது சித்தர்?"

"உனக்கு தெரியாது ராம்கி. இங்க என்னை சுத்தி அறிவுக்கு எட்டாத சில விஷயங்கள் நடந்துகிட்டிருக்கு. அதுல ஒரு விஷயத்துக்கு சொந்தக்காரர் ஜவ்வாது சித்தர்..."

"அவரால என்னசார் பண்ண முடியும்?"

"அது நடந்த பிறகுதான் தெரியும்..."

"எது நடந்த பிறகு?"

"எதுன்னு என்னால துல்லியமா சொல்ல முடியல. ஆனா, ஏதாவது நடக்கும்னு மட்டும் என் மனசுக்கு படுது-"

தியாகு முதல் தடவையாக ஒரு நம்பிக்கையை தன் குரலில் காட்டினான். சதுரகிரி மலை பற்றிய பெரிய பார்வையோ சித்தானுபவங்களோ இல்லாத ராம்கிக்கு அவன் முட்டாள்தனமாக பேசுவதாகத் தோன்றியது.

"அப்ப நம் எடிட்டரை நீங்க எதுவும் கேட்கப் போறது இல்லையா?"

"அவரை நான் விடவே போறதில்ல... அது ஒரு பக்கம், இது ஒரு பக்கம் ராம்கி..."

அவன் சொல்லச் சொல்ல சதாசிவம் பரவசமானார்.



"தம்பி. இப்பதான் நீங்க சரியாக யோசிக்கத் தொடங்கியிருக்கீங்க. உங்களுக்காகவே சாமி ஏதாவது பண்ணுவார் பாருங்க..." என்றார் கண்கள் பனிக்க.

ராகவி, நந்தினியை உள்ளே அழைத்துச் சென்று காதோடு காதாக தைரியமளித்துக் கொண்டிருந்தாள். ஜெயந்தியை தியாகு ஒரு பரிவான பார்வை பார்த்து, "சரி, மிஸ் ஜெயந்தி... உங்களை கேலி செய்யறது என் நோக்கம் இல்ல. தப்பா புரிஞ்சுக்காதீங்க.." என்றான். அவளும் ஒரு புன்சிரிப்போடு அதை ஏற்றுக் கொண்டாள்!

**ம**ழை நின்று வானமும் வெளுத்துவிட்டிருந்தது. குகைக்கு வெளியேயே தன்னடக்கமாக நின்றுவிட்ட ஊமையனை பார்த்தபடியே எதிரில் வந்து கொண்டிருந்தார் அந்த சித்தர். இடுப்பில் ஒரு நாலு முழ வேட்டி, தோளில் ஒரு துண்டு, தலையில் பல வருடத்து முடி. கண்ணிரண்டும் ஆசிட் போட்டு கழுவியது போல அவ்வளவு பளிச்சென்று இருந்தது. இதைத்தான் தீட்சண்யம் என்று சொல்கிறார்களோ என்று தோன்றியது.

அவரைப் பார்த்த நொடி ஊமையன் பணிவாக கும்பிட்டான்.

"அடடே கோம்பையனா...?" அவர் அவனை பெயர் சொல்லி அழைத்து விசாரித்தார். அவனுக்கு அவர் அப்படி அழைத்தது மிக இதமாகவும், சுகமாகவும் இருநதது.

"எங்க இவ்வளவு தூரம்?" ஒன்றும் தெரியாதவர் போல கேட்டார். ஜாடையிலேயே குகை நோக்கி கை காட்டினான். இருவரும் பேசிக் கொள்வதை கேட்ட

வர்களாக சேகரும் ஆனைமுத்துவும் உள்ளே இருந்து வெளிவந்தனர். அவரும் பார்த்தார். ஆனைமுத்து வணங்கினார்.

"சாமிக்கு நமஸ்காரம்.."

"நமஸ்காரமா.. சந்தோஷம்.." அந்த சித்தர் அங்கீகரித்த விதமே ஒரு தினுசாக இருந்தது.

"உங்களைப் பார்த்ததுல ரொம்ப சந்தோஷம்..."

"ஆமா என்ன பண்றீங்க உள்ள?"

"மழைக்காக ஒதுங்கினோம்...?"

"மழைக்காகவாவது ஒதுங்கினீங்களே..."

அவரது பதிலில் ஆழமான ஒரு உட்பொருள்.

"சாமி பேரு என்னன்னு தெரிஞ்சிக்கலாமா?"

"பேரா.. எனக்கா...?" அவர் பலமாக சிரித்தார்.

"ஏன் சாமி சிரிக்கிறீங்க... நான் ஏதாவது தப்பா கேட்டுட்டேனா?"

"ஆமாம்ப்பா.. உனக்கு ஒரு பேர் வேணும். ஏன்னா உன்னை ஒருத்தர் கூப்பிடணும், நீ யாரையாவது கூப்பிடணும்னாலும் அவங்களுக்கும் பேர் வேணும். என்னையோ யாரும் இங்கு கூப்பிடப்போறதில்லை. நானும் யாரையும் கூப்பிடப் போறதில்ல. அப்புறம் எனக்கு எதுக்கு பெயர்?"

அவர் பதிலில் ஆழ்ந்த உட்பொருள்.

"சாமி, இப்படிப் பேசினா எப்படிங்க. ரொம்ப தத்துவமா இருக்கே..." என்றான் சேகர்.

"நான் உள்ளதை சொன்னேன். போகட்டும், நான் வரட்டுமா?"



அவர் அங்கிருந்து விலகத் தொடங்கினார்.

"சாமி! சாமி.." தடுத்து நிறுத்தினார் ஆனைமுத்து.

"என்னப்பா.. உங்க குகை இங்க இருக்கும்போது நீங்க வேற எங்கயோ போறீங்களே.."

"அது என் குகையா...?" திரும்ப ஒரு சிரிப்பு சிரித்தார்.

"திரும்பவும் சிரிச்சா எப்படி சாமி..?"

"சிரிக்காம என்னப்பா பண்ண? இந்த தேசமே என்னோடது கிடையாது... விடற மூச்சு காத்தும் என்னோடது இல்ல, இந்த பூமி, அதுல இருக்கற இந்த மலை, அதுல இருக்கற இந்த குகை எல்லாமே அந்த சிவத்தோட சொத்துப்பா..."

"புரியுது சாமி... இருந்தாலும் இங்க நீங்க தங்கி இருந்ததை வெச்சு அப்படிச் சொன்னேன் சாமி.."

"இருக்கலாம்.. இனி என்னால அதுக்குள்ள இருக்க முடியாது. ஏன்னா, அதுக்குள்ள உங்க மூச்சு காத்து கலந்துடிச்சு..."

"அதனால என்ன சாமி?"

ஆனைமுத்து விடாது கேட்டார்.

"வேண்டாம்ப்பா... உங்க வழி வேற - என் வழி வேற.."

"இப்படியே வெட்டியே பேசினா எப்படிசாமி. நாங்க உங்கள மாதிரி சாமியாரை எல்லாம் பார்க்கணும் நிறைய நல்ல விஷயங்களை தெரிஞ்சுக்கணும்னு இந்த காட்டுக்கு வந்துருக்கோம் சாமி."

"நல்ல விஷயங்களையா?" ஒரு அழுத்தம் கொடுத்து அந்த சாமி கேட்ட விதத்தில் நிறைய ஏளனம்!

"ஆமாம் சாமி..."

"எனக்கு உனக்கு சொல்ற அளவுக்கு ஒரு நல்ல விஷயமும் தெரியாதுப்பா. நான் வரட்டுமா?"

அவர் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. ஆனால், ஞாபகமாக "வரட்டுமா கோம்பையா?" என்று ஊமைய னிடம் மட்டும் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.

ஆனைமுத்துவுக்கும் சேகருக்கும் பெரிய ஏமாற்ற மாகிவிட்டது. மாலைப் பொழுதில் சூரியனும் சரிந்து இரவுப் பொழுது வர ஆரம்பித்து விட்டது.

"மாமா! ஒரு விதத்துல இந்த குகையை விட்டுட்டு இந்த சித்தர் போனதும் நல்லதுக்குதான். இன்னிக்கு ராத்திரி பொழுதை இந்த குகைலயே கழிப்போம். குளிருக்கும் உள்பக்கம் ரொம்பவே கதகதப்பா இருக்கு." என்றார் சேகர். ஊமையனை அழைத்து குகை வாசலில் தீமூட்டச் செய்து சுமாராக குளிரும் காய்ந்து கொண்ட னர். அப்படியே, "சித்தர்கள்னா வேதாந்தம் பேசு வாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன்... அதுக்காக இவர் பேசின மாதிரி பேசக்கூடாது. பேரைக் கேட்டா பேரே இல்லை, யார் கூப்பிட இருக்கான்னு கேட்டா என்ன அர்த்தம்?"

சேகரின் குரலில் மெல்லிய கோபமும் வெளிப் பட்டது. நன்றாக இருட்டியும் விட்டது. ஊமையன் அப்படியே ஒரு பாறைமேல் படுத்து விட்டான். அந்த இரவின் ஆரம்பத்தில் வெகு தூரத்தில் ஒரு மலைப் பாறைமேல் தீப்பந்தமுடன் யாரோ ஒருவர் வந்து நிற்பது



போல் இருந்தது. சேகர் கவனித்துவிட்டு ஆனை முத்துவுக்கு சுட்டிக் காட்டினான்.

"மாமா... அங்க பாருங்க..."

"ஆமாம் சேகர் யாரோ தீப்பந்தத்தோடு நிக்கறாங்க."

சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த தீப்பந்த உருவம் அவர்களை நோக்கி வருவது போல குதித்துக் குதித்து முன் வரலாயிற்று!

# 17

"**சி**த்தர்களில் சிவவாக்கியர் எனும் சித்தர் சற்று எதிர்மறையான சிந்தனை கொண்டவராக திகழ்ந்தார். பிராந்தர் என்கிற சித்தரும் எதையும் நேராக கூறாமல் மறைமுகமாக உணர்த்துவதை வழக்கமாக கொண் டிருந்தார்.

சிவவாக்கியர் உருவ வழிபாட்டைவிட உருக்கமான உண்மையான வழிபாடு மேலானது என்றவர். அதனாலேயே 'நட்ட கல்லை சுற்றி வந்து நாலு புஷ்பம் சாத்தியே' என்கிற அவரது பாடலில் இறுதியில் 'நட்டகல்லும் பேசுமோ நாதன் உள் இருக்கையில்?' என்று கேட்டார்.

பிராந்தருக்கு யானைக்கால் வியாதி இருந்தது. ஆனால், அவர் அதை கர்ம வினையாக கருதி அனுப வித்தே தீர்க்க விரும்பினார். ஒருமுறை காளிதேவி அவருக்கு பிரசன்னமானாள். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்று காளிதேவி கேட்டிட 'நீ யார் எனக்கு வரம் தர?' என்று திரும்பி கேட்டவர் இவர்.

குறைந்த பட்சம் உன் யானைக்கால் நோய் குணமாக நான் அருளட்டுமா என்று காளிதேவி கேட்டிட, 'வேண்டாம் - நான் அதை அனுபவித்தே தீர்க்கிறேன்' என்று கூறிவிட்டவர். இப்படி தெய்வமாக பார்த்து தர விரும்பும் வரங்களையே மறுத்திடும் ஒரு துணிவான தெளிவான மனம் கொண்டவர்களே சித்தர்கள்!

கடுவெளிச் சித்தர் என்பவர் 'காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா!' என்று உடம்பை இகழ்கிறார். உடம்பை இகழ்வது என்பது அதை வெறுப்பதால் அல்ல... அது நம்மை தன் கையில் எடுத்துக் கொண்டால் நாம் ஆசைவயப் பட்டு கேடு கெட்டவர்களாகி விடுவோம் என்கிற எச்சரிக்கையால்தான் இப்படி உடம்பை பெரிதாக கருதாமல் பேசுகின்றனர். ஒரு வகையில் உடம்புக்கு அடிமையாகாமல், நாக்கை கட்டுப்படுத்தி வாழ்வது கூட மனதிற்கு பலம் தரும் ஒரு விஷயம்தான். சித்தர்களுக்கு பின்னாலே இப்படி நாம் சிந்திப்பதற்கு ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன!'

அந்த குளிர்ந்த இரவுப் பொழுதில் தீப்பந்தமுடன் தெரிந்த உருவம் அந்த மூவரையுமே ஆச்சரியத்தில் மூழ்கடித்தது. அந்த உருவமும் நெருங்கி வந்து நின்றது. திகுதிகுவென எரியும் தீயின் வெளிச்சத்தில் தெரிந்த முகத்தைப் பார்த்து சேகர் மகிழ்ச்சியில் அதிர்ந்தான். அது அவனது சகோதரனான மதிவாணன்.

அந்த மலைப்பகுதிக்கு அவர்கள் வர மதிவாணனும் ஒரு முக்கிய காரணம்.

"மதி..." என்று கூவினான் சேகர்.



"சேகரு... ஆனைமுத்து மாமா..." என்று மதிவாணனும் வந்து தீப்பந்தத்தை அருகில் ஒரு பாறை இடுக்கில் செருகியவனாக இருவரையும் கட்டிக் கொண்டான்.

"மதி... நாங்க இங்க இருக்கிறது உனக்கு எப்படி தெரியும்?"

"நான் நீங்க இந்த பக்கமாக வரும்போதே பார்த்துட்டேன். ஆனா, நான் அப்ப என் குருநாதரோட போய்க்கிட்டு இருந்தேன். அதான் உடனே வர முடியலை..."

"குருநாதரா... நாங்க அப்படி யாரையும் பார்க்கலையே..."

"இங்க எல்லா சித்தர் சாமிகளையும் பார்த்துட முடியாது. இப்பகூட இங்க பக்கமா சித்தர் சாமிங்க இருந்து நம்மை பாத்துக்கிட்டு இருக்கலாம். ஆனா, நாம அவங்கள பாக்க முடியாது..."

"அப்ப இங்க அந்த அளவு மாய மந்திரம் தெரிஞ்ச சாமியாருங்க இருக்காங்களா?"

"மாயமாவது மந்திரமாவது... அதெல்லாம் எதுவும் இந்த மலைல கிடையாது. சாமிங்களுக்கு நம்ம மனசு தான் கணக்கு."

"நீ சொல்றதே புரியலியே..."

"எல்லாத்தையும் போகப் போக சொல்றேன். ஆமா இது யாரு?" மதிவாணன் ஊமையனைக் காட்டி கேட்டான்.

"இவன் எங்க கூட துணைக்கு வந்தவன். பாவம் பேச்சு வராது. கீழ வத்றாயிருப்புல சுப்புரத்தினம்

கறவர்தான் இவனை எங்களுக்கு துணையா அனுப்பி வெச்சாரு..."

"சரி மாமா... இனி யார் துணையும் நமக்கு தேவைப்படாது. இந்த ஊமையனை அனுப்பிடுங்க. அதான் நான் வந்துட்டேன்ல..."

மதிவாணன் பதில் ஊமையன் காதிலும் விழுந்தது.

ஊமையனும் அப்ப நான் புறப்படுகிறேன் என்பது போல சைகை காட்டிவிட்டு இருட்டை கூட பெரிதாக கருதாமல் புறப்பட்டான்.

"அடேயப்பா... நீ இப்பவே புறப்பட்டுப் போகணுமா என்ன? காலைல போகலாமே..." என்றார் மாமா. ஆனால், ஊமையன் அதை லட்சியம் செய்யாமல் பதிலுக்கு பக்கத்து மரக்கிளை ஒன்றை ஒடித்து அதைக் கொண்டு ஒரு தீப்பந்தம் செய்ய முற்பட்டான்.

மதிவாணன் கொண்டு வந்திருந்த தீப்பந்தத்தின் உதவியுடன் வெகுதூரம் வரை போய் நிறைய இலைகளை பறித்து வந்திருந்தான். அது தீபகர்ப்ப மரத்தின் இலைகள்! அவைகளுக்குள் எண்ணெயின் தன்மை உண்டு. ஒரு இலையை சுருட்டி திரிபோல் ஆக்கி எரியவிட்டால் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் எரியும். அந்த இலைகளை எல்லாம் போட்டு தன்னிடம் இருந்த துண்டில் கட்டி அதை அப்படியே கல்லைக் கொண்டு நசித்து பின் அதில் தீயைப் பிடித்தான்... தயங்கித் தயங்கி பின் சீராக எரிய ஆரம்பித்தது அது.

பார்த்துக் கொண்டேயிருந்த சேகருக்கு அது ஒரு அரிய காட்சியாக இருந்தது.



"மாமா, என்ன மாமா இது... பச்சை இலை எரியுது?"

"அது பச்சை இலை இல்ல சேகர்... கொஞ்சம் காய்ஞ்ச இலைதான். தீபகர்ப்ப மரத்து இலை. இந்த இலைல சிவலிங்கத்துக்கு தீபம் போடறது ரொம்ப விசேஷம். இந்த ஜாதில இந்த காட்டுல பல மரங்கள் இருக்கு... அவைகளோட சாறு பெட்ரோல் மாதிரி எரியும் தெரியுமா?"

"ஓ! மூலிகைப் பெட்ரோல்னு இதைத்தான் சொல்றாங்களா?"

"ஆமாம்... ஆனா, அந்த மரம் எதுன்னு கண்டு பிடிக்கறது சாதாரணம் இல்ல..."

"மதி, நீ இங்க வந்து பல வருஷமாச்சு. நீகூடவா இதை எல்லாம் கண்டுபிடிக்கலை..."

"ஏதோ ஓரளவுக்கு நான் சில விஷயங்கள கண்டு பிடிச்சு வெச்சிருக்கேன். அதை எல்லாம் பிறகு பேசலாம்" என்றபடி ஊமையனைப் பார்த்தான். ஊமையன் ஒரு கும்பிடு போட்டுவிட்டு கிளம்பி விட்டான்.

எதனாலோ மாமாவை ஆழமாக பார்த்தவன் அண்ணாந்து வானத்தை பதிலுக்குப் பார்த்துவிட்டு நடந்தான்.

"என்ன மாமா உங்களை பார்த்துட்டு ஆகாசத்தை பாக்கறான்" என்று சேகரும் கேட்டான்.

"அவன் கிடக்கறான்... டேய், நீ போடா... மதிவாணன் விரட்டுவதுபோல பேசினான். ஊமையனும் நின்று ஒரு பார்வையை மிக ஆழமாக பார்த்துவிட்டு புறப்பட்டான்.

ஆனைமுத்து முகத்தில் ஒரு சோர்வு படரத் தொடங்கியது.

"என்ன மாமா... ஊமையனை நான் விரட்டற மாதிரி தோணுதா?"

"ஆமாம் மதி... பாவம் அவன்! இரண்டு நாளா அவன் எங்களுக்கு ரொம்பவே உபகாரமா இருந்தான். இடிக்குழி தண்ணியை குடிச்சிட்டு சேகர் கஷ்டப் பட்டப்போ ஊமையன்தான் ஓடிப் போய் மூலி கையைப் பறிச்சுக்கிட்டு வந்து தந்து சேகரை காப் பாற்றினவன்..."

"ஆமாம் மதி! ஊமையனுக்கு இந்த மலைக்காட் டுல எல்லா இடமும் தெரிஞ்சிருக்கு.." என்றான் சேகரும்...

அதைக் கேட்ட மதி என்கிற மதிவாணன் முகத்தில் ஒரு சிரிப்பு.

"எதுக்கு சிரிக்கறே?"

"சிரிக்காம என்னப்பா பண்ண... இந்த மலைக் காட்டை பத்தி நல்லா தெரிஞ்சவங்க தைலக் கிணத்து பக்கம் மட்டும் கூட்டிக்கிட்டே போக மாட்டாங்க.. அது தெரியுமா உங்களுக்கு?"

"ஏம்ப்பா அப்படி?"

"போய்ட்டு உயிரோட திரும்ப முடியாம போனா...? அந்த பயம்தான்!"

"ஓ... அது அவ்வளவு மோசமான இடமா?"

"மோசமான இடமாவா... நல்லா கேட்டீங்க போங்க. இத்தனை வருஷத்துல இப்பதான் நான் அது



இருக்கற திசையை கண்டுபிடிச்சிருக்கேன். இனிமேல் தான் அந்த பக்கமே போகணும்."

"அப்ப அந்த கிணத்தை கண்டுபிடிச்சுட்டா நாம வந்த நோக்கமும் பூர்த்தியாயிடும்னுதான் எனக்கு தோணுது."

"சரி, சரி.. குகைக்குள்ள போவோம்.. ஊதக்காத்து என்னை ஒண்ணும் பண்ணாது. உங்கள படுக்கப் போட்டுடும்.."

மதி அவர்கள் இருவரை அழைத்துக் கொண்டு குகைக்குள் நுழைந்தான். உள்ளே இதமாக இருந்தது. ஆனாலும் பாறையின் சிலுசிலுப்பு அப்பி எடுத்தது.

"அது சரி, இப்படியா வெறும் கையை வீசிகிட்டு வருவீங்க?" ஒரு பாறை மேல் மல்லாந்தபடி கேட்டவ னுக்கு, மழையும் காற்றும் அவர்களது டென்ட்டில் இருந்த சர்வ விஷயங்களையும் அள்ளிச் சென்றதை கூறி முடித்தார் ஆனைமுத்து.

மதியும் அதைக் கேட்டு, "சரி.. நாளைக்கு பொழுது விடியட்டும். நான் உங்களை என் இருப்பிடத்துககு கூட்டிக்கிட்டுப் போறேன். பௌர்ணமிக்கு இன்னும் நாள் இருக்கு. அதுவரை நாம பொறுமையா காத் திருப்போம்.." என்றான்.

"பௌர்ணமி வரைக்குமா?" வாயைப் பிளந்தான் சேகர்.

"ஆமாம் சேகர்... தைலக் கிணறு உள்ள காட்டுப் பக்கம் பௌர்ணமி நாள்லதான் போக முடியும். ரொம்ப ஜாக்கிரதையா சாமியாருங்க மாதிரி காவி வேட்டி கட்டி தலை மேல அபிஷேக சாமான்களை இருமுடி மாதிரி கட்டிக்கிட்டுப் போகணும்.

இதே மலைல சாமிக்குன்னு ஒரு கோவில் இருக்கு. அந்த சாமியை பௌர்ணமிக்கு பௌர்ணமி கும்பிடறதுக்காக சித்தர் சாமிங்கள்ல ஒரு கூட்டம் மட்டும் போகும். அவங்க பின்னாலேயே போயிடணும். போகும்போது மறக்காம சுரைக்குடுவையை கொண்டுகிட்டுப் போகணும். தைலக்கிணத்து தைலத்தை சுரைக்குடுவைலதான் எடுக்க முடியும்."

மதி சொல்லச் சொல்ல ஆனைமுத்து பரவசத்தின் உச்சிககே போனார்.

"மதி இந்த தைலம்தானே தங்கம் தயாரிக்க தேவை.."

"ஆனா, மாமா.. இதுல இரும்புத் துண்டை ஒரு மண்டலம் போட்டு வெச்சா அந்த இரும்பு தைலத்தால ரசவாதப்பட்டு தங்கமாயிடும்னு கேள்விப்பட்டேன்."

"ஆமா, அந்த தைலத்தை யாராவது எடுத்துக்கிட்டு வந்து நீ பார்த்துருக்கியா?"

"இல்ல மாமா! கேள்விதான் பட்டுருக்கேன். இந்த மலை பாக்க யாரும் இல்லாத ஒரு காடு மாதிரி தெரியலாம். ஆனா, கோடிக்கணக்கான ஜனங்க உள்ள ஒரு நகரத்தைவிட இது ஆபத்தானது. நாம இப்ப ரொம்ப பேச வேண்டாம். படுப்போம். பொழுது விடியட்டும். அதான் நடுவுல நிறைய நாள் இருக்கே..?

அவன் கேட்டதிலும் ஒரு அர்த்தம் இருக்கத்தான் செய்தது!

அம்மன் கோவில்!

கோவிலுக்கு நந்தினியை அழைத்துக் கொண்டு வந்திருந்தாள் ராகவி. அவர்களோடு ராம்கியும் வந்திருந்தான். மிக இறுக்கமாய் இருந்தான்.



ராகவி அவன் இறுக்கத்தை உடைக்க முயன்றாள்.

"எதுக்குங்க இப்படி உம்முன்னே இருக்கீங்க?"

"ஒண்ணுமில்ல ராகவி.."

"போதும்... ஒண்ணுமில்லேன்னா ஒரு விஷயம் மட்டுமில்ல, பல விஷயங்கள் இருக்குன்னுதானே அர்த்தம்?"

"ஆமாம். அது யார் ஜவ்வாது சித்தர்... பேரே எனக்கு சிரிப்ப தருது?"

"இப்ப அவர்தான் உங்க இறுக்கத்துக்கு காரணமா?"

ராகவி கோவிலை பிரதட்சணமாக சுற்றியபடியே கேட்டாள். நந்தினி மௌனமாக சுற்றி வந்து கொண்டிருந்தாள்.

"ஆமா, ராகவி... தியாகு சாரே அவரை நம்பறத நினைச்சா எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலை."

"ஆமா நீங்க சாமிய நம்புவீங்க... சித்தர்கள நம்ப மாட்டீங்களா?"

"பெரிய சித்தர்கள்..! இப்ப அப்படி எல்லாம் யாரும் கிடையாது ராகவி. சித்தர்கள் இப்பவும் இருக்காங்கன்னா நம்ம நாட்டுல ரகசியமா குண்டுகள் வெடிக்காது, அரசியல்வாதிகள் ஊழல் செய்ய மாட்டாங்க. காவேரில எப்பவும் தண்ணி வரும். இப்படி எவ்வளவோ நல்லது நடக்கும் ராகவி..."

"அது எப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க..?"

"அவங்களுக்குதான் எல்லா மாயாஜாலமும் தெரியுமே... எங்க எந்த தப்பு நடந்தாலும் கண்டுபிடிச்சு சொல்லிடுவாங்களே!"

"சித்தர்களை பத்தி அப்ப உங்களுக்கு தெரிஞ்சது இதுதானா?"

"வேற என்ன இருக்கு அவங்கள பத்தி யோசிக்க... எதையும் நேராவே சொல்ல மாட்டாங்க. புரியாத பாட்டா பாடி வைப்பாங்க இப்பப்டி கொஞ்சம் சொல்லலாம்..."

அவன் சற்று ஏளனமாய் சொன்னபோது

கோவில் வாசலில் ஒரு கார்... காரில் இருந்து நந்தினியை கைவிட்ட பார்த்திபனின் தாயான உமையாம்பிகை வந்து கொண்டிருந்தாள். அவளை பார்க்கவும் நந்தினியிடம் ஒரு வித பதட்டம்.

"நீ ஏண்டி பதறறே... தைரியமா இரு! ஊரை ஏமாத்தற இவங்களுக்கும் சாமி பக்திக்கு குறைச்சலில்ல..." என்று ராகவி முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு சிணுங்கினாள்!

அதைக் கேட்டு ராம்கிக்குள் பளிச்சென்று ஒரு எண்ணம்.

"ஓ! இந்தம்மாதான் அந்த பணக்காரன் பெண்டாட்டியா?"

"ஆமா... என் அருமை அக்காவுக்கு மாமியாரா வர வேண்டியவ..."

"வர வேண்டியவள்னு ஏன் டவுட்ல பேசுறே... வரப் போறவள்னு உறுதியா சொல்..." என்றவன், கொஞ்சமும் தாமதிக்காமல்,

"மேடம்... மேடம்..." என்றான். அவளும் அவனைப் பார்த்தாள்.



"ஐயோ இப்ப எதுக்கு அவங்கள கூப்பிடறீங்க?" ராகவி பதைத்தாள்.

"நீ சும்மா இரு..." என்றவன், உமையாம்பிகையை நெருங்கி, "அம்மா நீங்கதானே பார்த்திபன் அம்மா..." என்று கேட்க, அவளும் ஆமோதித்தாள். "நான் நேத்து உங்க பங்களாவுக்கு வந்திருந்தேன். உங்கள பாக்கலையே..."

"அப்படியா?"

"என்ன அப்படியா? அதோ அங்க நிக்குது பாருங்க ஒரு பொண்ணு..."

"ஆமா... அவளுக்கென்னப்பா?"

"அவதான் உங்க மருமகளா வரப்போறவ. உங்க மகன் அவளைத்தான் லவ் பண்றான். காதலிச்சதோட நிறுத்திட்டா பரவாயில்லை. கல்யாணத்துக்கு முந்தியே வயித்துல பிள்ளைய வேற கொடுத்துட்டான்..."

ராம்கி தேங்காய் உடைப்பதுபோல பேசியது அவளை திகைக்க வைத்தது.

"என்ன முழிக்கிறீங்க. அவ்வளவும் சத்தியம். ஆனா, உங்க வீட்டுக்காரர், நீ எங்க வேணா போய்க்கோ - யாரை வேணா பார்த்துக்கோன்னுட்டார். பணம் இருக்கற தைரியம்..." என்று மேலும் பேசினான்.

"தம்பி! நீ சொல்றது நிஜமா?"

"நிஜமாவா! சத்தியம்மா... சத்தியம்..."

அவள் உடனேயே யோசிக்கத் தொடங்கிட, ராகவி அவனை நெருங்கி "ராம்கி இப்படி பேசறதால எல்லாம் ஒரு பிரயோஜனமும் இல்ல. போகலாம் வாங்க..." என்றாள்.

உமையாம்பிகை அவளையும் பார்த்துவிட்டு,

"நீ யாரும்மா?" என்று கேட்டாள்.

"இவ உங்க மருமகளோட தங்கச்சி.." என்றான் ராம்கி.

திரும்பவும் அவளிடம் மௌனம்!

"என்னம்மா யோசிக்கிறீங்க... கோவிலுக்கு நிம்மதியா சாமி கும்புட வந்த இடத்துல இப்படி ஒரு அதிர்ச்சியை நீங்க எதிர்பார்க்கலையா... இல்ல அந்த விஷயம் தெரிஞ்சும் தெரியாத மாதிரி காட்டிக்கிறீங்களா?"

"அதெல்லாம் இல்லப்பா... என் வீட்டுக்காரரை எனக்குத் தெரியாதா? ஆனா, இப்ப அவர் எங்க இருக்கார் தெரியுமா?"

அவள் கேட்ட விதத்தில் ஒரு சோகம்.

"எங்கங்க..?"

"ஆஸ்பத்திரில.."

"அங்க என்ன பண்றார்?"

"அவருக்கு நேத்து ராத்திரி ரண ஜன்னி வந்து ரத்த ரத்தமா வாந்தி எடுத்தார். இப்ப ICU-வில இருக்கார். நான் சாமிகிட்ட தாலி பிச்சை கேட்டு வந்திருக்கேம்மா. என் பையனும் வந்துருக்கான். ஆனா, அவன் கார்லேயே இருக்கான். உள்ள வரமாட்டேன்னுட்டான்.." என்றாள்.

அந்த பதில் நந்தினியை உசுப்பிவிட, திரும்பி வெளியே பார்த்தாள். காரில் பார்த்திபன். அவனும் அப்போது அவளைப் பார்த்தான். அவனுக்கு சுரீர் என்றது!



# 18

**சி**த்தர்களைப் பற்றி சிந்திக்கும்போது பதினெட்டு என்று ஒரு கணக்கு எல்லோருக்கும் நினைவுக்கு வரும். குறிப்பாக பதினெட்டு சித்தர்கள் என்கிற எண்ணிக்கையும் நினைவுக்கு வரும்.

அது என்ன பதினெட்டு என்று ஒரு அளவு? ஏன் அதற்கு மேலோ கீழோ சித்தர்கள் இருக்கக் கூடாது என்றும் கேள்வி எழும்.

ஆனால், 18 என்பது ஒரு சூட்சமமான எண் என்பது நமக்கு புரிந்தால் இந்த கேள்விகளே எழாது. 18 என்கிற இந்த கணக்குக்கு பின்னாலே நாம் சிந்திக்க நிறைய விஷயங்கள் உள்ளன.

ஒன்று முதல் ஒன்பதுக்குள் எண்கள் முடிந்து விடுகின்றன. அதன் பின் வரும் பத்து முதல் பல கோடி வரையிலான எண்ணிக்கைக்கு தனியே எண் வடிவம் கிடையாது. இந்த ஒன்று முதல் உள்ள ஒன்பது எண் வடிவங்களைப் பயன்படுத்தியே எத்தனை கோடிகளைக்கூட நாம் எண் வடிவில் அடையலாம்.

இதில் ஒன்பதுக்கு மேலான முதல் பரிமாண வடிவம்தான் 18 ஆகும். அதாவது ஒன்பது முதல் உள்ள எட்டு. இதை கூட்டினால் வருவது ஒன்பது ஆக. இந்த '18' என்பதற்குள்ளும் ஒன்று முதல் ஒன்பது வரையான எண்கள் ஒளிந்துள்ளன. இதில் ஒன்பது மறைவாக ஒளிந்துள்ளது. அதாவது ஒன்றையும் எட்டையும் கூட்டினால்தான் ஒன்பது வரும். இந்த ஒன்றுக்கும் எட்டுக்கும் இடையில் 2,

3, 4, 5, 6, 7 ஆகியவை அடைந்து கிடக்கின்றன. இதை வேறு மாதிரியும் பார்க்கலாம். ஒன்றாகிய நாம் பஞ்சேந்திரியங்களால் ஆளப்பட்டு இயக்குகிறோம். நம்முடைய ஆறாவது அறிவே சப்தம் கொண்ட பேச்சாக வெளிப்படுகிறது. இந்த பேச்சாலே நாம் எட்டுவதும் எட்ட வேண்டியதும் இறைவனைத் தான். இறைவனே ஒன்பதாக நாம் சென்று ஒன்ப வேண்டியவனாக, அதாவது கலக்கத் தேவையான பரமாத்மாவாக உள்ளான். இந்த செய்தியை உள்ளடக்கமாக கொண்ட எண்ணே 18 ஆகும். அதனாலேயே சபரிமலையில் 18 படிகள்... அந்த 18 படிகளுக்கு மேல் அதன் தொகுப்பு சக்தியாக அந்த ஐயப்பன் இருக்கிறான். அவன் சிவ விஷ்ணு சேர்க்கையால் உருவானவன். இதில் விஷ்ணுவின் மோகினி கோலம் என்பது சக்தி வடிவம். எனவே ஐயப்பனை நாம் எட்டும்போது சைவ வைணவ சாக்தம் என்றும் முப்பரிமாண மூர்த்தியாகவே அவன் இருப்பதால் நாம் பரம்பொருளை எட்டி விடுவதாகத்தான் பொருள் கொள்ள வேண்டும்.

பாரத யுத்தம்கூட 18 நாட்கள்தான் நடந்தது. பாரத யுத்தத்தை தர்மயுத்தம் என்பார்கள். இதில் பாண்டவர்கள் ஐவர், கௌரவர்கள் நூறு பேர். அதாவது பஞ்சேந்திரியம் கொண்ட நாமே இங்கே பஞ்ச பாண்டவர்கள்! நம்முடைய ஆயுட்காலமாகிய 100 ஆண்டு வாழ்க்கை என்பதுதான் கௌரவர்கள். நமது வாழ்க்கையே ஒரு யுத்தம்தான். இதில் இந்திரியங்கள் அந்த கிருஷ்ணன் சொன்னபடி கேட்டால் கௌரவர்களான வாழ்நாளை வென்று விடலாம். அதற்கு நமக்கு உதவுவதுகூட 18 விதமான வழி



முறைகள்தான். இதை மறைவாக கூறுவதே பாரத யுத்தமும் அதன் 18 நாள் கணக்குமாகும்.

இப்படி 18-க்கு பின்னாலே சூட்சமப் பொருட்கள் நிறையவே உள்ளன. இதை வைத்தே 18 சித்தர்கள் என்று ஒரு கணக்கும் வந்தது. 18 சித்தர் பெருமக்கள் சொன்னபடி நாம் நடந்தால் போதும். நாம் நம் பிறவிப் பெருங்கடலை சுலபமாக நடந்து விடுவோம். ஒவ்வொரு சித்தரிடம் இருந்தும் ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் போதும்! நாம் கடைத்தேறி விடலாம்.

நந்தினியை பார்த்த பார்த்திபன் பார்த்த வேகத்தில் தவிக்கவும் ஆரம்பித்தான். அவன் நந்தினியை அங்கே கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை என்பது அவன் முகம் போன போக்கில் தெளிவாக தெரிந்தது. ராம்கிக்கு பார்த்திபன் வசமாக தன்னிடம் மாட்டிக் கொண்டு விட்டது போல தோன்றியது.

“அடடே! என்னோட சகலை.. ஏங்க அவர் கோவிலுக்கு வரமாட்டாருங்களா?” என்று ஒரு உறவு முறையை உருவாக்கிக் கொண்டு பேசினான் ராம்கி.

“தம்பி... இந்த உலகத்துல பணம் இருந்தா போதும், எதையும் சாதிச்சுடலாம்னு ரொம்ப பேர் நினைக்கறாங்க. என் புருஷனும் மகனும்கூட அந்த ரகம்தான். ஆனா, நான் பொன் பொருளை ஒரு விதத்துல பெரிய சாபமா பார்க்கறேன். அது நம்மை எல்லாவித பாவத்தையும் செய்ய வெச்சு மீள முடியாத ஒரு குழிக்குள்ளயும் தள்ளிடுது. என் புருஷன்கூட இப்ப வியாதிங்கற பெரிய குழிக்குள்ளதான் கிடக்கிறார். அவரை மீட்டு எடுக்கத்தான் கோவிலுக்கு வந்திருக்கேன்.

வந்தா இங்கேயும் அவங்க செஞ்ச பாவம் உங்க ரூபத்துல ஒரு நியாயத்தை கேட்குது..." என்கிறாள் பார்த்திபனின் தாயான உமையாம்பிகை...

அவள் பேச்சே அவள் எப்படிப்பட்டவள் என்பதை ராம்கிக்கும், நந்தினி மற்றும் ராகவிக்கும் புரிய வைத்து விட்டது. ராம்கி அவள் பேசியதை கேட்டவனாக ஒரு புது தெம்பு வந்தவன் போல பார்த்திபனை நோக்கி நடந்தான். ராம்கி அருகில் வர, பார்த்திபனுக்கும் நெருடலாக இருந்தது. முகத்தை திருப்பிக் கொண்டான்.

"என்ன பாஸ்... இங்க எங்களை எதிர்பார்க் கலையோ?" ஆரம்பமே அலட்டலாக இருந்தது. பார்த்திபனும் மௌனத்தை தொடர்ந்தான்.

"முகம் கொடுத்து பேசமாட்டீங்களோ...? கோவி லுக்குள்ளேயும் வராம வெளியவே நின்னுட்டீங்களே..! ரைட்... ரைட்... சாமி முகத்துல விழிக்கறதுக்கும் ஒரு தகுதி வேணும்தானே? அநியாயமா ஒரு பெண்ணோட வாழ்க்கைல விளையாடிவிட்டு, வருங்கால வாரிசுக்கு விஷம் வெச்சு கொல்லவும் துணிஞ்சிட்டு எந்த மூஞ்சி யோட கோவிலுக்குள்ள வர முடியும்?"

"அதுக்குன்னு ஒரு நெஞ்சழுத்தம் வேணுமே..?" ராம்கி கிண்டலான கருத்தும் கேள்வியும் பார்த்திபனை அப்படியே புழுங்க விட்டது. முறைக்க ஆரம்பித்தான்.

"ஐயோ, பாஸ்! அப்படி எல்லாம் பாக்காதீங்க.. ஆமா, உங்கப்பா ரத்த வாந்தியா எடுக்கறாராமுல்ல...? ரூபா நோட்டை காட்டி வர்ற ரத்தத்தை நிறுத்த வேண்டி யதுதானே? அது முடியல போல இருக்கு. அதுக்கு யாருக்கு போன் போட்டா காரியம் ஆகும்னும் தெரிய லயா... இல்ல தெரிஞ்சு சும்மா இருக்கீங்களா?"



ராம்கியின் பேச்சை அதற்கு மேல் பார்த்திபனால் கேட்க முடியவில்லை வெடுக்கென்று காரில் ஏறிக் கொண்டு காரையும் கிளப்பிக் கொண்டு போயே போய் விட்டான். அதை பார்த்தபடியே ராம்கியிடம் வந்தாள் உமையாம்பிகை. "என்ன தம்பி.. நாக்க பிடுங்கிக்கற மாதிரி பேசினீங்க போல தெரியுதே.. அவன் பிச்சுக் கிட்டு ஓடறதுலயே அது நல்லா தெரியுது. அவன் அவங்கப்பா மாதிரி" என்றாள் கொஞ்சம்கூட பதட் டமே இல்லாமல்!

"சரிங்கம்மா, நீங்க இப்ப எப்படி வீட்டுக்குப் போவீங்க?"

"ஏன்பா எனக்கு கால் நல்லாதானே இருக்கு. இல்ல ஒரு ஆட்டோ பிடிச்சு கிட்டுப் போறேன்."

"உங்ககிட்ட அதிகம் பேச தேவையே இல்லம்மா. ரொம்ப தெளிவா இருக்கீங்க."

"என்னப்பா பிரயோஜனம். பணத்தாசை பிடிச்ச புருஷன். அவரை உரிச்சுகிட்டு பொறந்துட்ட பிள்ளை."

"அதான் ரத்தவாந்தி எடுக்கத் தொடங்கிட்டாரே.. இனி திருந்தினாலும் கூட நல்லதுதானே?"

"திருந்தினா சந்தோஷம்தான்."

"இதை சொல்ற நீங்க எங்க பொண்ணுக்கும் ஒரு நல்ல வார்த்தை சொல்லுங்க."

"உங்க பொண்ணா... இவ என் மருமக!" உமை யாம்பிகை அப்படிச் சொல்லவும் ஜிலீர் என்றிருந்தது அவர்களுக்கு...

"அம்மா..."

"போங்க தம்பி. என் மகன்கிட்ட நான் பேசிக்கறேன். அவனுக்கு என்கிட்ட கொஞ்சம் பயம் உண்டு."

"பையன் சரி. புருஷன்?"

"பார்ப்போம்.. அவர்கிட்டேயும் மோதிப் பாக்கறேன். நீங்க நம்பிக்கையோட இருங்க."

- உமையாம்பிகை ஒரு நேர்த்தியான பதிலை சொல்லிவிட்டு ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டு விலகத் தொடங்கினாள். ராகவி சற்று பெருமிதத்தோடு ராம்கியை பார்த்தாள்.

"ஒண்ணுமே இல்லாம இருந்ததுக்கு இப்ப ஒரு பிடிப்பு ஏற்பட்டிருக்குல்ல?" கண்களை சிமிட்டிக் கொண்டே கேட்டான் ராம்கி. அப்போது அருகில் உள்ள கோவில் மரக்கிளை மேல் கிளி ஒன்று வந்து அமர்ந்து சப்தமிட்டது. அதைக் கேட்டு ராகவி, "அட.. இது நம்ம சாமி மாதிரி தெரியுதே.." என்றாள். அதுவும் ஆமோதிக்கற மாதிரி அவள் தலைக்குமேல் ஒரு வட்டம் போட்டுவிட்டு ஆகாயத்தில் ஏறிப் பறக்கத் தொடங்கி விட்டது.

ராம்கிக்குள் சற்று குழப்பம்.

"என்ன ராகவி.. அது நீ வளர்த்த கிளியா?" என்று கேட்டான்.

"ஐயோ! அது சித்தர் சாமி..."

"ஓ.. கிளிய எல்லாம்கூட சித்தர் சாமி லெவலுக்கு சொல்ல ஆரம்பிச்சிட்டியா?"

"அப்படி இல்ல.. சாமி கூடுவிட்டு கூடுபாய்ஞ்சு வந்துருக்காரு."



"என்ன ராகவி நீகூடவா இப்படி எல்லாம் உளறுவே. அது ஏதோ பெட்பேர்ட்.. நாய், பூனை மாதிரின்னு தான் நான் நினைச்சு கேட்டேன்."

"நீங்க ஆரம்பத்துல இருந்தே சித்தர் சாமிய நம்பாம பேசிட்டு வர்றீங்க. இது நல்லதில்ல, ஆமா.."

ராகவி எச்சரித்தாள்.

"சரி, எதுக்கு உன் சித்தர் இப்படி இங்க வந்து நம்மை பார்த்துட்டு போறார். நமக்கு இப்ப அதுவா தேவை? நாம எவ்வளவு பெரிய சிக்கல்ல இருக்கோம் அதுக்கு ஏதாவது அவர் உதவி செய்யலாம்தானே?"

அவன் கேள்வியிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்தது. ஆனால், அவர்கள் பேச்சு எதுவும் நந்தினி காதில் விழுந்த மாதிரி தெரியவில்லை. உமையாம்பிகை அவளை தன் மருமகள் என்று குறிப்பிட்டு பேசியதும், பார்த்திபன் தனக்கு பயந்து தன் பேச்சை கேட்டு நடப்பான் என்று சொன்னதும் அவளுக்குள் ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கியிருந்தது!

**வி**டிந்து விட்டது! அந்த மலைத்தலத்தின் மேல் சூரியனின் கதிர்கள் ஒளிக்கோடுகளாய் ஊடுருவிட பனிமூட்டமும் கலைந்து காலைப் பொழுதானது பறவைகளின் கூக்குரல்களுடன் எதிரொலிக்கத் தொடங்கியது.

மதிவாணன் குகைக்குள் கண் விழித்திருந்தான். அருகில் குளிருக்கு ஒரு மரவட்டை போல சுருண்டு விட்டிருந்த ஆனைமுத்துவையும், சேகரையும் தட்டி எழுப்பினான். இருவரும் சோம்பலோடு கண்முழித்தனர். கைக்கடிகாரம் மணி ஆறரை என்று காட்டியது.

"மாமா! நாம கிளம்பலாம். இனி இங்க நமக்கு எந்த வேலையும் இல்ல. நீங்க என் இருப்பிடத்துக்கு வந்து

டுங்க. அங்க இருந்துகிட்டு நாம அடுத்த கட்ட வேலைங் கள பார்ப்போம்...'' என்றான். அப்போதுதான் மதி வாணன் கண்களுக்கு சேகரின் கால்களில் அட்டைப் பூச்சி ஏறியிருப்பதே தெரிந்தது. ஒன்றுக்கு பத்து அட்டைகள்! இரண்டு கால் கணுப்பகுதியிலும் ஒட்டிக் கொண்டு ரத்தத்தை உறிஞ்சி ஒரு விரல் பருமனுக்கு ஊதிப் பருத்திருந்தன. மதிவாணன் பார்க்கவும் சேகரும் கவனித்தான். அட்டை காலில் ஒட்டிக் கொண்டு ரத்தத்தை உறிஞ்சும்போது அப்படி ஒரு சம்பவம் நடப்பதே தெரியாது. உணர்வுகளை தடை செய்து விட்டுத்தான் அட்டையானது ரத்தத்தையே உறிஞ்ச ஆரம்பிக்கும்.

சேகருக்கு அதை பார்க்க தூக்கிவாரிப் போட்டது. கைகளில் தொட்டுப் பிய்க்க முயன்றபோது மதிவாணன் தடுத்து விட்டான்.

"வேண்டாம் சேகர்.. அது நெருப்புக்குத்தான் அடங்கும். இரு வரேன்'' என்று குகைக்கு வெளியில் வந்தான். இரவில் அவன் கொண்டு வந்திருந்த தீப்பந்தம் அவிந்து அடங்கி விட்டிருந்தது. இரண்டு கற்களை எடுத்து வந்து அதை உரசி தீயை உருவாக்கப் பார்த்தான். ஆனால், காலைப் பனியின் ஈரத்தில் அந்த கற்களில் தீப்பொறி வரவேயில்லை.

சேகருக்கோ உடம்பு நடுங்க ஆரம்பித்து விட்டது. இறுதியில் வேறு வழியில்லாமல் பாக்கெட்டில் இருந்த பேனா கத்தியை எடுத்து அந்த அட்டைகளை குத்திக் கிழித்து வீழ்த்தவும் கால் பகுதியில் இருந்து குபுகுபு வென்று ரத்தம் கொட்ட ஆரம்பித்தது.

"இதுக்குத்தான் தீயால சுட்டு அட்டையை விலக்க நினைச்சேன். இந்த ரத்தம் நிக்கவே நிக்காது. ஒரு



கட்டத்துல உடம்புல இருக்கற ரத்தம் எல்லாமும் வெளி யேறி ரத்த சோகையே வந்துவிடும்'' என்ற மதிவாணனை ஆனைமுத்து பரிதாபமாக பார்த்தார். அவரது வேட்டியை கிழித்து காலில் கட்டு போட்ட மதிவாணன், சேகர் கஷ்டப்பட்டாவது என் கூட வா. உன் அதிர்ஷ் டத்துக்கு சித்தர் சாமிங்க வழில கண்ணுல பட்டா அவங்க இந்த ரத்தப் பெருக்கை நிறுத்திருவாங்க. அவங்களுக்குத்தான் ரத்தப் பெருக்கு, ரத்தக்கசிவு, ரண ஜன்னி மாதிரி ரத்த சம்பந்தமான வியாதிகளுக்கு எந்த மூலிகையை தரணும்னு தெரியும்.

செம்பருஞ்சாவின்னு ஒரு செடி. அதோட பூவை முகர்ந்து பார்த்தாலே உடம்புல எங்க ரத்தக் கசிவு இருந்தாலும் நின்னுடும். அந்த பூவை அரைச்சு பத்து போட்டா காயம் ஆறிடும். அதை பால்ல கரைச்சு குடிச்சா ரத்தம் ஊறும். ஆனா, அது இருக்கற இடம் எனக்குத் தெரியாது...'' என்று சேகரை தள்ளாடலோடு அழைத்துக் கொண்டு குகையை விட்டு வெளியே வந்தான்.

சேகருக்கு நல்ல அதிர்ஷ்டம். அவன் பார்க்க எதிரில் ஒன்றுக்கு ஒன்பது சித்தர்கள் 'இந்திர மடு' எனும் மலைக்குளம் ஒன்றில் குளிப்பதற்காக நடந்து கொண்டிருந்தனர்!

# 19

**பதினெட்டு என்கிற எண்ணின் கணக்கை பற்றி பார்த்தோம். பதினெட்டு சித்தர்கள் சொன்ன வழி அல்லது அவர்களின் வழிமுறைகளில் ஏதாவது ஒன் றினை நாம் பின்பற்றினாலும் போதும், நாம் இந்த பிறப்பை நல்ல விதமாய் வென்று விடலாம். இந்த**

வழிமுறைகள் என்ன? ஒவ்வொரு சித்தராய் பார்ப்போம். முத்தாய்ப்பாக அவர்கள் உணர்த்துவதையும் அறிவோம்.

சிவ வாக்கியர் என்று ஒரு சித்தர். எல்லா குழந்தைகளும் பிறக்கும்போது 'குவா குவா' என்று தான் அழும். இவர் மட்டும்தான் 'சிவா சிவா' என்று அழுதாராம். அதனாலேயே சிவ வாக்கியர் என இவர் அழைக்கப்பட்டார். இவர் பாடிய பாடல்கள் சித்த உலகில் மிக பிரபலம். அதில் முக்கியமான பாடல் 'நட்ட கல்லை சுற்றி வந்து நாலு புட்பம் சாத்தியே' என்கிற பாடல்.

இவருக்கு புறத்தைவிட அகம்தான் பெரியது. வெளியே எதுவும் இல்லை - எல்லாம் நம்முள்ளேயே இருக்கிறது என்பதுதான் இவர் வலியுறுத்திய கருத்தாகும். சுருக்கமாக சொல்வதானால் கடவுளை வெளியே தேடாதே, உன்னுள்ளேயே அவர் இருக்கிறார். அதை நீ அழுத்தமாக உணர்ந்திடும்போது நீயே கடவுளாகி விடுவாய் என்கிறார்.

இவர் துளிகூட பற்றே இல்லாதவராக அதாவது ஆசைகளை அடக்கி ஆள்பவராக இருந்தார். புத்தர் சொன்ன ஆசையே அனைத்து துன்பங்களுக்கும் காரணம் என்பதை கிட்டத்தட்ட இவர் வழிமொழிந்தார் எனலாம்.

ஆனால், புத்தர் சிவநாமம் சொல்லச் சொல்லவில்லை அந்த ஈசன் நமக்குள்ளே இருக்கிறான் என்றும் கூறவில்லை. இவர் அதைக் கூறி ஆசையை ஈசன் மேல் வைக்கச் சொன்னார். பதினெட்டு வழிகளில் ஒன்றாகவும், முதல் வழியாகவும் நாம் இதை எடுத்துக் கொள்ளலாமே.



அதே சமயம் 'ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின்' என்கிறார் திருமூலர். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

அவர் என்ன சொல்ல வருகிறார் என்று அடுத்துப் பார்ப்போம்.

மதிவாணனுக்கு அந்த சித்தர்களைப் பார்க்கவும் குபீர் என்று ஒரு சந்தோஷம். சேகரைப் பார்த்து "சேகர் நீ கொடுத்து வெச்சவன்... இந்த காலை நேரத்துல ஒரு சாமிக்கு ஒன்பது சாமிங்க கண்ணுல பட்டுருக்காங்க பார்.. வா, அவங்கள பிடிப்போம். அவங்க அனேகமா இந்திரமடு பக்கமாதான் போய்க்கிட்டிருக்கணும்" என்றபடி வேகமாய் நடக்கத் தொடங்கினான்.

"இந்திரமடுவா?" அப்படின்னா..?

"அது ஒரு மலைச் சுனை. எப்பவும் அதுல தண்ணி இருக்கும். அதுல குளிச்சா எவ்வளவு உடம்பு சூடும் அடங்கிவிடும். அந்த மடுவுல ஜல சமாதி செய்தா அது ஒரு நல்ல யோகப் பயிற்சி.." மதிவாணன் தான் அறிந்ததைக் கூறினான். கூறியபடியே படுவேகமாய் நடந்தான். ரத்த சகதியான தனது கால்களை வைத்துக் கொண்டு சேகருக்கு அவனை பின்தொடர்வது கஷ்டமாக இருந்தது. ஆனைமுத்துவுக்கோ தங்கள் வரையில் ஒரு வித்தியாசமான அனுபவம் காத்திருப்பது போல் தோன்றியது.

அந்த ஒன்பது சித்தர்களில் கடைசியாக போய்க் கொண்டிருந்த சித்தர் மிக குள்ளமானவராக காணப்பட்டார். யதார்த்தமாய் திரும்பிப் பார்த்தவர் மதிவாணன், சேகர், ஆனைமுத்துவோடு வருவதைப் பார்த்து சற்று அதிர்ந்து போய் நின்றார். மற்ற சித்தர்கள்

முன்னே சென்றபடியே இருந்தனர். ஓடிவந்த மதிவாணன் அந்த குள்ள சித்தர் முன் சென்று சேர்ந்தவனாய், வணக்கம் சாமி என்றான். அவரிடம் பதிலுக்கு எந்த ஒரு பேச்சும் இல்லை. மதிவாணனையே பார்த்தார்.

"என்ன சாமி பாக்கறீங்க... நாங்க ரொம்ப புண்ணியம் பண்ணியிருக்கணும் அதான் உங்க தரிசனம் எங்களுக்கு கிடைச்சிருக்கு..." மதிவாணன் பேச்சில் கனிவு. அவரும் "இந்த தலைக் காட்டுல உனக்கென்ன வேலை?" என்று எடுத்த எடுப்பில் கேட்டார். தைலக் கிணற்றுக்காகத்தான் வந்திருக்கிறோம் என்று சொல்ல அவன் என்ன மடையனா? அப்படியே மாற்றிப் பேசத் தொடங்கினான்.

"சாமி... நகர வாழ்க்கையே பிடிக்கல சாமி. அமைதிய தேடி இந்த மலைப்பக்கம் வந்துட்டோம்" என்றான்.

அந்த பதிலின் பொய் அவரை சிரிக்க வைத்தது.

"தைலக் கிணத்தை தேடி அலையற நீ, அழகா பொய் சொல்றியே... ஒவ்வொரு சித்தனும் மனசை ஊடுருவுவதுல தேர்ந்தவங்கன்னு உனக்கு தெரியலியே..."

அவர் அவன் அடி மனதில் இருந்ததை அப்படியே போட்டு உடைத்தார். மதிவாணன் தடுமாறி விட்டான். அவரோ தொடர்ந்தார்.

"யப்பா... நீ நிஜமா கொஞ்சம் புண்ணியம் செய்தவன்தான். இல்லேன்னா நாங்க யாரும் உன் கண்ணுல பட்டிருக்க மாட்டோம். அந்த புண்ணியம் தீர்ந்து போறதுக்குள்ள இந்த மலைக்காட்டை விட்டு போயிடு. உன்னோட லௌகீக ஆசைக்கும் இந்த மலைக்கும் கொஞ்சமும் சம்பந்தமில்ல. நீயும் உன் சமுதாயமும்



நகரங்களை நாசப்படுத்திகிட்டு இருக்கிறது போதும். உங்க கால்கள் இங்கேயும் பட்டு உங்க பேராசையால இந்த மலையும் பாழாயிட வேண்டாம். என் பேச்சை கேட்காம நீ இந்த மலைல நடமாடின எந்த காலத்துலயும் அதன் பிறகு நீ இந்த மலையை விட்டுப் போக மாட்டே. அதுமட்டுமல்ல, நீ யாருங்கறதே உனக்கும் மறந்து போயிடும்.. ஜாக்கிரதை.."

அந்த குள்ள சித்தர் எச்சரித்துவிட்டு விறுவிறுவென்று நடந்தார். கேட்டுக் கொண்டேயிருந்த ஆனைமுத்துவும் சேகரும்கூட அவர் பேசியதைக் கேட்டிருந்தனர். அவர்கள் முகத்தில் பலத்த ஏமாற்றம். சேகர் வரையில் காலில் ரத்தம் பெருக்கும் வலியும் வேறு சேர்ந்து கொண்டது!

மதிவாணன் முகத்தில் தீவிரமான எண்ண ஓட்டம்.

"என்ன மதி.. சாமி சொன்னது உன்னை ரொம்பவே பயமுறுத்திடிச்சா..?"

"ஆமாம் மாமா. இங்க இருக்கற சாமிங்க கிட்ட நாம எதையும் மறைக்க முடியாது. மனசுக்குள்ள இருக்கிறத பிடிக்கறதுல அவங்க கில்லாடிங்க.."

"பின்னே.. ஓலைச்சுவடில எப்பவோ நடக்கப்போறத எல்லாம் முன்னாலேயே சொல்லத் தெரிஞ்சவங்களுக்கு மூஞ்சிக்கு நேரா முகத்தைப் பார்த்து பேசறதா கஷ்டம்?"

"அப்ப பேசாம திரும்பிப் போயிடலாமா மாமா.."

"எனக்கும் அதுதான் நல்லதுன்னு தோணுது.."

ஆனைமுத்து சொன்னது சேகரை என்னவோ செய்தது. அவன் முகத்தில் ஒரு திகட்டல்.

"என்ன சேகர் யோசிக்கிறே?"

"இல்ல.. நாம தேடி வந்துருக்கறது ஒண்ணும் லேசுமான விஷயமில்ல. அதை தெரிஞ்சு வெச்சுகிட்டிருக்கற இந்த சாமிங்க இப்படித்தான் பேசுவாங்க. இல்லாட்டி நம்மளைப்போல பல பேர் வந்து அந்த கிணத்தையே சுரண்டி ஒண்ணுமில்லாமல்ல போயிடும்..?"

"அதனால?"

"சாமிங்க பேச்ச பெருசா எடுத்துக்க வேண்டாம். நாம நம்ம முயற்சியை தொடருவோம்."

"சாமி கடைசியா போகும்போது ஒண்ணு சொன்னாரே ஞாபகம் இருக்கா?"

"என்ன... நாம யாருங்கறதே நமக்கு மறந்து போயிடும்னு சொன்னதைத்தானே சொல்றீங்க?"

"பின்ன?"

"அது சும்மா மிரட்டல்... அது எப்படி நமக்கு நம்மளையே தெரியாம போகும். எல்லாம் சும்மா..."

"யப்பா மதி... நீ அந்த சாமிகிட்ட சாமர்த்தியமா பேசி மருந்தை வாங்காம விட்டுட்டியேப்பா..."

"என்ன மாமா... நீங்கதான் பாத்துக் கிட்டே இருந்தீங்களே... அவர் எங்க நின்னார். பேசினார், பறந்துட்டார்..."

"சரி, முதல்ல இந்த ரத்தப் பெருக்கை நிறுத்த ஒரு வழியைப் பார்..."

"சரி, வாங்க.. போகப் போக வேற யாராவது கண்ணுல படறாங்களான்னு பார்ப்போம்..."

மதிவாணன் திரும்ப நடக்கத் தொடங்கினான். கெந்திக் கெந்தி சேகரும் ஆனைமுத்துவும் அவனை பின் தொடர்ந்தனர்.



சேகருக்கு காலில் ரத்தம் அதிகமாகவே வெளிப்பட்டு அவன் காலடிபடும் இடங்களில் எல்லாம் ரத்தம் பிசுபிசுவென்று ஒட்டிக் கொண்டது!

**ஆ**ஸ்பத்திரி! டாக்டரின் டேபிள் முன் உட்கார்ந்திருந்தான் பார்த்திபன். கூடவே அவன் அம்மாவான உமையாளும் அமர்ந்திருந்தாள்.

டாக்டர் டெஸ்ட் ரிப்போர்ட்டுகளை எல்லாம் பார்த்தபடியே பேசத் தொடங்கினார்.

"அம்மா! உங்க கணவருக்கு வந்துருக்கற வியாதி ரொம்ப அபூர்வமானது. பத்து லட்சத்துல ஒருத்தருக்குதான் இந்த வியாதி வரும். ரத்தத்துல வெள்ளையணுக்கள் வேகமா செத்துப் போய் அதன் காரணமா ஏற்படற பாதிப்புகளால ரத்தம் ஒரு குறிப்பிட்ட அழுத்தத்துக்கு உள்ளாகி காது, மூக்கு ஏன் சமயங்கள்ல கண் வழியாவும் வெளிய வரும்.

இது கிட்டத்தட்ட கடல்ல ஏற்படற சுனாமி மாதிரின்னுகூட சொல்லலாம். பரந்த கடலுக்குள்ள அதோட ஆழமான பகுதியில் ஏற்படற மாற்றங்கள் மொத்த கடல் முழுவதும் பரவி கரையோரமா பெரிய பெரிய அலைகளா ஏற்படற மாதிரி, உடம்புல ஓடிக்கிட்டு இருக்கற ரத்தம் மூக்கு, காது, வாய் வழியா வெளியே வர முயற்சிக்குது.

இப்போதைக்கு ரத்த அணுக்கள் சீரா இருக்கவும், அதோட ஓட்டகதி சீரா இருககவும், ஹார்ட் பீட்ல இருந்து எல்லாத்தையும் மெஷின்களோட கண்ட்ரோல்ல வெச்சிருக்கோம். இப்படியே வெச்சுகிட்டிருக்க முடியாது. ஆபரேஷனோ, இல்ல வேற வழிமுறைலயோ இதை சரிசெய்ய முடியாது. சுருக்கமா சொல்லப் போனா இங்கிலீஷ் வைத்தியம்கள்

அலோபதில இதுக்கு மருந்து இதுவரை கண்டு பிடிக்கலை... எப்ப கேன்சர் எய்ட்ஸுக்கு எல்லாம் ப்ரவென்டிவ் மெடிசின்ஸ் மட்டும்தான் இருக்கோ அப்படிதான் இதுக்கும்..."

டாக்டர் நீண்ட தன் விளக்கத்தில் எங்கு வருகிறார் என்பது உமையாம்பிகைக்கு மெல்ல புரிய ஆரம்பித்தது. ஆனால், பார்த்திபன் கோபப்பட்டான்.

"என்ன டாக்டர் நீங்க. அப்பா இத்தனை நாள்ல ஒரு காய்ச்சல் குளிர்னு மாத்திரை சாப்பிட்டது கிடையாது. அவர் உடம்பு கல்லு மாதிரி. அவருக்கு எப்படி டாக்டர் இப்படி என்ன பேர்னுகூட சொல்ல முடியாத ஒரு வியாதி வரும்..?"

டாக்டர் அதைக் கேட்டு சற்று அமுக்கமாய் சிரித்தார். சிரித்துவிட்டு, "வியாதிங்கறது மட்டும் எப்ப வரும், எப்படி வரும்னு யாராலயும் சொல்ல முடியாது மிஸ்டர் பாத்திபன். வெளில தவழற காத்தை சுவாசிக்காம யாருமே வாழ முடியாது. அந்த காத்து இப்ப எந்த அளவு கெட்டுக் கிடக்கு தெரியுமா?

இது ஆடி மாசம்! காத்துல எவ்வளவு ஈரப்பதம் இருக்கணும் தெரியுமா? ஆனா, சித்திரை மாச உலர்ந்த காத்தாதான் இந்த காத்து இருக்கு. காரணம் பொலூஷன்!

இந்த பொலூடட் வேர்ல்டுல எந்த கிருமி எப்படி யார்கிட்ட இருந்து பரவும்னுல்லாம் சொல்லவே முடியாது.

அவர் பதில் அவனுக்கு திருப்தியை தரவில்லை. அவரே தொடர்ந்தவர்.

"இன்ஃபாக்ட் மருந்து தர்ற நாங்களே வியாதிகள் வரைல அது கர்ம வினையாலதான் வருதுங்கறத ஒத்துக்



கறவங்களாதான் இருக்கோம். பர்ட்டிகுலரா நான் அப்படித்தான் நினைக்கறேன்" என்றார்.

"என்ன டாக்டர், நீங்க இப்பதான் காத்து கெட்டுப் போய் இருக்கு. அதனால கிருமிகள் மூலமா யாருக்கு வேணா வியாதி வரும்னீங்க.. இப்ப கர்ம வினைங்கறீங்க. ஒரு டாக்டரான உங்களுக்கு இவ்வளவு குழப்பம் கூடாது."

"குழப்பமா.. எனக்கா? நெவர்! நோய்க்கு காரணம் கிருமி. ஆனா, அந்த கிருமி ஏன் உங்களையோ உங்க அம்மாவையோ அட்டாக் பண்ணாம உங்க அப்பாவை அட்டாக் பண்ணணும். அதுதான் என் கேள்வி. அதுக்கு பதில் அவர் கர்ம வினைங்கறதுதான்."

"முடிவா என்னதான் சொல்ல வர்றீங்க?" பார்த்திபன் கைகளை உயர்த்திக் கொண்டு கேட்ட விதம் அவ்வளவு நன்றாக இல்லை. டாக்டரும் அவன் பக்குவமில்லாதவன் என்பதை அதை வைத்தே புரிந்து கொண்டார்.

"ஸாரி மிஸ்டர் பார்த்திபன். உங்க அப்பாவை நீங்க வீட்டுக்கு தூக்கிட்டுப் போகலாம். எங்க டிஸ்பென்சரில அவரைக் குணப்படுத்த எனக்கு வழி தெரியலை. நீங்க அவரை எங்க வேணா கூட்டிக்கிட்டுப் போய் யார்கிட்ட வேணா காட்டிக்குங்க.."

"இதை முதல்லயே சொல்லாம கர்ம வினை கத்தரிக்கா வினைன்னு எதுக்கு லெக்சர் அடிச்சீங்க? சரி, டாக்டர்.. இவ்வளவு நாள் ட்ரீட்மெண்ட் எடுத்ததுக்கு பில் போட்ருப்பீங்களே... அது எவ்வளவு ஆயிரம்?"

"நீங்க பணம் கொடுக்க வேண்டாம். கூட்டிக் கிட்டுப் போனா போதும்."

டாக்டரின் பதிலில் ஒரு தெளிவும் கூர்மையும் இருப்பதை உமையாள் உணர்ந்து கொண்டு, "டாக்டர் என் மகன் பக்குவப்படாதவன். அவன் பேசியதை பெருசா எடுத்துக்காதீங்க. தயவுசெய்து நான் கேக்கற கேள்விக்கு பதில் சொல்லுங்க. என் கணவரை இந்த வியாதியில் இருந்து குணப்படுத்தவே முடியாதா?"

"அலோபதில முடியாதும்மா. எனக்கு தெரிஞ்ச மருந்து இல்லை."

"அப்ப வேற வைத்திய முறைல சாத்தியமா?"

"சித்த வைத்தியலத்துல மருந்து இதுக்கு இருந்திருக்கு. ஆனா, இப்ப ஆழமான சித்த வைத்திய அறிவு கொண்டவங்களே பெருசா இல்லையே."

"அப்படி யாராவது இருந்தா அவங்களால காப்பாத்த முடியுமா?"

உமையாம்பிகையின் கேள்வி முன் டாக்டர் மௌனமாக வெறித்தார்.

"என்ன டாக்டர் எதுவும் சொல்ல மாட்டேங்கறீங்க?"

"என்னத்தம்மா சொல்ல.. மிக அதிக பட்சம் உங்க கணவர் இன்னும் 1 வாரம் உயிரோட இருந்தா அதிசயம்மா. அதுக்குள்ள அவருக்கு தேர்ந்த வைத்தியம் பார்க்க எனக்கு தெரிஞ்ச யாரும் இல்லைன்னுதான் சொல்வேன்."

டாக்டர் சொன்னது உமையாம்பிகை நெஞ்சில் இடிபோல் இறங்கியது!



# 20

'சித்தர்களில் திருமூலர் தனித்து தெரிபவர். மற்ற சித்தர்கள் இந்த மண்ணில் ஒரு தாயின் கர்ப்பத்தில் பிறந்து வந்தவர்கள். ஆனால், திருமூலர் விண்ணிலே உள்ள கைலாயத்தில் இருந்து மண்ணுக்கு வந்தவர். கைலாயத்தில் அந்த சிவபெருமானைச் சுற்றி நந்திதேவர், பிருங்கி முனிவர், பதஞ்சலி முனிவர், வியாக்ரபாதர் மற்றும் சப்தரிஷிகள், நவநாயக சித்தர்கள், சிவ பூதகணங்கள் என்று ஒரு கூட்டம் உண்டு. இவர்கள் போக கைலாயத்தில் திருத்தொண்டு புரியும் பாலகர்களில் திருமூலர் ஒருவர். இவரது கைலாயப் பெயர் சுந்தரன். நால்வர் பெருமக்களில் ஒருவரான சுந்தரரும் இவரும் ஒருவரே என்றும் ஒரு கருத்து உண்டு. அதற்கும் வாய்ப்பு உள்ளது.

அந்த சுந்தரர் இறைவன் தனது பிம்ப சொரூபத்துக்கு உயிர் தந்திட உருவானவர். மண்மிசை திருவெண்ணெய் நல்லூரில் ஒரு அந்தணர்க்கு மகனாய் பிறந்து பல அரிய செயல்கள் செய்து பின் நண்பர் சேரமான் பெருமானோடு ஒருசேர கைலாயம் சென்றவர். பின் திரும்பவும் மானிடர் வாழ்வின் ஏற்ற இறக்கங்களை அனுபவபூர்வமாக அறியவும், மனித குலத்துக்கு வழிகாட்டவும் அவர் ஒரு சித்தராக பூமிக்கு அனுப்பப்பட்டார் என்பார்கள். மனித வாழ்வின் மாயைகளை விளங்கிக் கொள்ள பூமிக்கு வந்தவர் மூலன் என்றும், ஒரு மாடு மேய்ப்பவனின் இறந்த உடம்புக்குள் புகப் போய் திருமூலர் ஆகிறார்.

கூடுவிட்டு கூடுபாய்தல் என்னும் சிறந்த சாகசத்தை செய்வதில் இவர் அதிசமர்த்தர்!

அந்த சாகசத்தாலேயே அவர் சித்தர் ஆனார். கூடுவிட்டு கூடுபாய்வதற்கு அடிப்படையே மூச்சுக் கலை பயிற்சிதான். மூச்சுக்கலை பயிற்சி உடம்பின் நாடித் துடிப்போடு தொடர்புடையது. நாடிகள் ரத்த ஓட்டத்தின் வேகம், அழுத்தம் இவைகளை வைத்தே துடிக்கின்றன.

இவர் வரையில் ஒரு மனிதனின் உடம்பு என்பது வரப்பிரசாதமான விஷயம். உடம்பை ஒவ்வொருவரும் உரிய முறையில் பேண வேண்டும். அப்போதுதான் உடம்புக்குள் இயங்கும் மனமானது மகிழ்ச்சியாகவும் தூய்மையாகவும் இருக்கும் என்கிறார்.

இதனை வலியுறுத்தும் விதமாக இவர் பாடியது தான்–

*'உள்ளம் கோவில் - ஊனுடம்பு ஆலயம்*
*கள்ளப் புலனைந்தும் சூளா மணிவிளக்கு*
*தெள்ளத் தெளிந்தார்க்கு சிவன் சிவலிங்கம்'*

எனும் பாடல். உச்ச பட்சமாய்

*'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே..'*

என்கிறார்.

இவரது அரிய கருத்து உடம்பை யோக முறையில் பேண வேண்டும் என்பதாகும். இதை நாம் பதினெட்டு வழிகளில் இரண்டாவது வழியாக எடுத்துக் கொள்ளலாம். முதல் கருத்து, ஈசனை எப்போதும் நினைப்பது - இரண்டாவது, உடம்பை பேணுவது, மூன்றாவது...?



உமையாம்பிகை டாக்டரை வேறு வழியே இல்லையா என்பது போல பார்த்தாள். அவருக்கும் புரிந்தது. ஆனால், பார்த்திபன் அவர் எதிரிலேயே "விடும்மா... இவர் ஒருத்தர்தான் டாக்டரா... நாம அப்பாவை அவசியப்பட்டா அமெரிக்காவுக்குகூட கூட்டிக்கிட்டுப்போவோம்.." என்றவன் டாக்டரின் பக்கம் திரும்பி "எங்கப்பாவை நல்லவிதமா குணப்படுத்தி இங்க உங்க எதிர்க்கவே கூட்டிக்கிட்டு வந்து காட்டறேன்" என்று கூறியவனாக எழுந்தான். டாக்டர் மௌன மாகவே இருந்தார். ஆனால், உமையாம்பிகையால் அவரிடம் பேசாமல் இருக்க முடியவில்லை.

"டாக்டர் அவனுக்கு இள ரத்தம். அதான் அப்படிப் பேசறான். நீங்கதான் எனக்கு ஒரு நல்ல வழியைக் காட்டணும் ப்ளீஸ்.." கெஞ்சினாள்.

"உங்கள பாத்து நான் பரிதாபம்தாம்மா பட முடியும்."

நான் இவர் வியாதி பத்தின அந்த உண்மைகளையும் சொல்லாம இங்க ட்ரீட்மெண்ட் கொடுக்கற மாதிரி வெச்சிருந்து சீரியஸா ஆனதுக்கு பிறகு ஆபரேஷன் பண்ணணும், இதைப் பண்ணணும் அதைப் பண்ணணும்னு ஒரு பரபரப்பை உருவாக்கி நிறைய பணம் பார்க்கணும்னு ஆசைப்பட்டிருந்தா நான் அப்படித்தான் நடந்துகிட்டிருப்பேன். ஆனா, நேர்மையா இந்த தொழிலைச் செய்ய விரும்பற ஒரு டாக்டர். ஆகையால எல்லாத்தையும் உடைச்சி பேசிட்டேன். அது உங்க மகனுக்கு பிடிக்காம அவரும் படபடன்னு பேசிட்டார். இட்ஸ் ஓ.கே. திரும்பவும் சொல்றேன். கடவுளோட அருள், அதோட சஞ்சீவி மாதிரி உயிர் காக்கற மூலிகை

யோட பலம் இது இரண்டும் உங்க கணவருக்கு கிடைச்சா ஒரு வேளை இவர் பிழைக்கலாம்.

சில வருஷங்களுக்கு முன்னால கிட்டத்தட்ட உங்க கணவரைப் போலவே ஒரு கேஸ். என்னால எதுவும் செய்ய முடியலை. ஆனா, அவர் மனைவி ஒரு சிவ பக்தை. அவங்க அந்த சிவன் மேல பாரத்த போட்டு சதுரகிரி மகாலிங்க தரிசனத்துக்குப் போனாங்க. போற வழில அவங்களுக்கு சின்னதா ஒரு விபத்து ஏற்பட்டு ரத்த காயம் ஏற்பட்டது. அதை எதேச்சையா பார்த்த ஒரு சித்தர் உடனே ஒரு மூலிகையைக் கொடுத்து மென்னு சாப்பிடச் சொன்னாங்க. உடனே ரத்தப் பெருக்கு நின்னது. அதே மூலிகையை அந்த சித்தர்கிட்ட இருந்து வாங்கிட்டு வந்து அவங்க கணவருக்கும் கொடுத்தாங்க. அப்புறம் அவர் நாங்கல்லாம் ஆச்சரியப்படற அளவுக்கு குணமாகி இன்றைய தினம் வரை நல்லவிதமா இருக்கார். அந்த சம்பவத்தை நான் பார்த்த அனுபவத்துலதான் உங்ககிட்ட, ஆங்கில மருத்துவத்துல இதுக்கு மருந்து இல்லை, சித்த மருத்துவம் ஒரு வேளை கை கொடுக்கலாம்னு சொன்னேன்" என்று ஒரு நீண்ட விளக்கம் கொடுத்து முடித்தார். அதைக் கேட்ட நொடியே உமையாம்பிகையிடமும் ஒரு தீவிரமான சிந்தனை! ஆனால், பார்த்திபன் -

"எங்களையும் சதுரகிரிமலைக்கு சித்தர்களை தேடிக்கிட்டுப் போன்னு சொல்லாம சொல்றீங்களா டாக்டர்..?" என்று குதர்க்கமாக கேட்டான்.

டாக்டர் அவனுக்கு எந்த பதிலையும் சொல்ல விரும்பவில்லை. உமையாம்பிகையோ, "நல்லது டாக்டர்.. நான் கும்பிடற தெய்வம் என்னை கை விடாது.." என்றவளாக அங்கிருந்து கிளம்பினாள்.



**அ**ந்த காட்டுக்குள் அதற்கு மேல் நடக்க சேகரின் காலில் தெம்பில்லை. கிட்டத்தட்ட உடம்பிலிருந்து சரிபாதி ரத்தம் வெளியேறி விட்டிருந்தது. அவனை மெல்ல பசியும், மயக்கமும் வந்து அணைக்கப் பார்த்தது. ஒரு மரத்தடியில் அப்படியே உட்கார்ந்துவிட்டான். முன்னால் நடந்து கொண்டிருந்த ஆனைமுத்துவும், மதிவாணனும் அதைப் பார்த்துவிட்டு திரும்பி அவனருகில் வந்தார்கள். சேகரின் வாடிய முகமே அவனது நிலையை அப்படியே காட்டிக் கொடுத்தது.

"சேகர்! உனக்கு அதிர்ஷ்டமே இல்லப்பா.. அதான் ஒரு சித்தருக்கு நாலு பேரை பார்த்தும் அவங்களால உனக்கு பிரயோஜனம் இல்லாம போயிடுச்சு, அவங்க கிட்டேயும் ஒரு மோசமான விஷயம்.. நாம அவங்கள பார்க்கணும்னு நினைக்கும்போது எப்பவும் பார்க்கவே முடியாது. ப்ச்சி.." என்று சடைத்துக் கொண்டான் மதிவாணன்.

"மதிவாணா.. அப்ப ஏதாவது பண்ணணுமேப்பா."

"அட, என்ன மாமா நீங்க.. இது என்ன டவுனா.. ஒரு டாக்டர் இல்லாட்டி இன்னொரு டாக்டர்கிட்ட போக..? பாத்தீங்கல்ல.. இது அநியாயத்துக்கு ஒரு காடு."

"அது எனக்கும் தெரியுது. இங்க பல மாசமா சுத்திகிட்டு இருக்கற உனக்கு ஒரு சாதாரண ரத்தப் பெருக்கை நிறுத்த வழி தெரியலியே.. நீ இங்க சித்தர்களோட பழகி என்னத்த கத்துக்கிட்டே..?"

ஆனைமுத்து சடைத்துக் கொண்டார்.

"மாமா.. இந்த மலைல இருக்கற சித்தருங்க ஒண்ணும் நீங்க நினைக்கற மாதிரி இல்ல. அவங்ககிட்ட

நம்பிக்கையை சம்பாதிச்சிக்கறது ஒண்ணும் சாதாரண விஷயம் இல்ல."

"அதை நானும் ஒத்துக்கறேன். அவங்க செய்யறது பார்த்து கூடவே நீ எதையும் தெரிஞ்சுக்கல..?"

"நாம பாக்கற மாதிரியோ, இல்லை நமக்கு புரியற மாதிரியோ அவங்க ஒருபோதும் நடந்துக்க மாட்டாங்க மாமா."

"சரி, மதிவாணா... பசி வேற வயித்த கிள்ளுது. இந்த காட்டுல சாப்பிட காயி, பழம்னு கூடவா எதுவும் கிடைக்காது..?"

"பெரிய நெல்லிக்காய் கிடைக்கும். அதை சாப்பிட்டு தண்ணி குடிச்சா தாகம் தணியும். தெம்பாவும் இருக்கும். ஆனா, பசி அடங்காது. ரொம்ப பசி.. சாப்பிட்டே தீரணும்னா கோவில் கிட்ட போகணும். தினசரி மதிய நேரம் அன்ன தானம் உண்டு. புளியோதரை, தயிர்சாதம் கிடைக்கும்."

"அப்ப முதல்ல அந்த பக்கம் போவோமே?"

"அதுக்கு இங்க இருந்து ரொம்ப தூரம் போகணும் மாமா.

நாம இப்ப கோவிலுக்கு மேற்கு திசைல நடந்து கிட்டிருக்கோம். இந்த சதுரகிரி மலைக்கு உண்மைல சதுர் மலைன்னுதான் பேர். அதாவது நாலு மலைன்னு அர்த்தம். நாலு வேதமும் நாலு மலையா இங்க இருக்கறதா சொல்வாங்க. அதுல அதர்வண வேதம்கறது மாயம் மந்திரம்கற விஷயங்கள உள்ளடக்கினதாம். அதுலதான் பில்லி சூனியம் பத்தி எல்லாம் இருக்குமாம். அந்த அதர்வண வேதத்தை கொண்ட மலை வடக்கு பக்கம் இருக்கற மலை. இப்ப நாம அங்கதான் போய்க்



கிட்டு இருக்கோம். அங்கதான் நான் ஒரு நம்பூதிரியோட இருக்கேன். அந்த நம்பூதிரி இங்க பல ரகசிய வித்தைகளை கத்துக்க வந்தவரு. அவரும் என்னை மாதிரிதான் சித்தர்கள் சகாயத்துக்காக தினம் அலைஞ்சுகிட்டிருக்காரு. ஆனா, அவர் வரைல எதுவும் நடக்கலை. அவருக்கு ஜோசியம் பார்க்க தெரியும். சகுனங்களை வெச்சு சரியா பலன் சொல்வாரு. நாம இப்ப அவரை பார்ப்போம். அவர் உச்சி மேட்டுப் பக்கம் எல்லாம் போறவர். அங்க வாழை, பலாமரங்கள் நிறைய உண்டு. அந்த பழங்களை கொண்டு வந்து தேன்ல ஊறப் போட்டு வெச்சிருப்பார். பசிக்கும்போது சாப்பிடுவார். சும்மா அமிர்தமா இருக்கும் தெரியுமா?"

மதிவாணன் சொல்லும்போதே நாக்கில் நீர் ஊறியது. நடுவில் ஒரு செத்துப் போன மலை ஆட்டை தோளில் போட்டுக் கொண்டு இடையில் ஒரு துண்டு மட்டுமே கட்டியிருக்கும் பளியன் ஒருவன் அவர்களைக் கடந்து போனான். மதிவாணன் அவனை நிறுத்தி,

"எலேய்.. ஆட்டை நீதான் கொன்னியா?"

என்று கேட்க, "இல்ல சாமி.. மலப்பாம்பு ஒண்ணு வளைச்சு பிடிச்சு விழுங்கப் பார்த்துச்சு. நான் அதைப் பார்த்துட்டேன். உடனே தீயை மூட்டி அது மேல எறிந்தேன். வளைச்சு பிடிச்சதை விட்டுச்சு. ஆனா, உயிர் போயிடிச்சு சாமி. அதான் ஒரு நாலு நாளைக்கு ஆட்டுக் கறி சோறா திம்போமேன்னு தூக்கிட்டுப் போறேன்."

என்றான்.

அவன் சொன்னதை கேட்ட சேகருக்கு பகீர் என்றது. காலிலிருந்தும் ரத்தம் பெருகியபடி இருந்தது. அதை அந்த பளியனும் பார்த்து விட்டான்.

"என்ன சாமி கால்'ல காயமா?"

"ஆமாம்ப்பா.. ரத்தம் நிக்காம வந்துகிட்டே இருக்கு. நிறுத்தற வழி தெரியல.."

"அது சரி.. செம்பெருஞ்சாவிப் பூவை கசக்கி மோந்தா ரத்தப் பெருக்கு நின்னுடுது. அப்படியே உட்கார்ந்துகிட்டிருக்கற மரத்து இலையை நல்லா மென்னு தின்னா புது ரத்தம் பொங்கிகிட்டு வருமே."

ஏதோ மருத்துவன் போல அவன் சொன்னது கேட்டு மதிவாணனிடம் ஒரு நம்பிக்கை.

"அந்த செரும்பெருஞ்சாவிப் பூ எதுன்னு உனக்கு தெரியுமா?"

"அதை கை தட்டியில்ல கண்டுபிடிக்கணும்னு சொல்வாங்க..."

"கை தட்டியா?"

"ஆமாம்.. அந்த செடி எப்பவும் துவண்டு படுத்து கிடக்கும். நாம கை தட்டும்போது அந்த சப்தம் கேட்டு உடனே நிமிரும். அதை உத்துப் பார்த்தா மூக்குத்தி சைஸ்ல அதுல பூக்கள் இருக்கும். அதைதான் உள்ளங் கைல வெச்சு கசக்கி மோந்து பாக்கணும்பாங்க."

"என்னப்பா புதுசா என்னவோ சொல்றே.. செடிக்கு என்ன காதா இருக்கு.. நாம கை தட்டினா அது நிமிர்ந்து நிக்கறதுக்கு...?"

"நீங்க தட்டிப் பாருங்க அப்ப தெரியும்..."

அந்த பளியன் சொல்லிவிட்டு ஆட்டை இந்த தோளில் இருந்து அடுத்த தோளுக்கு இடம் மாற்றிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.



ஆனைமுத்துவும் மதிவாணனும் கைதட்டத் தயாராகி, சுற்றி இருக்கக் கூடிய ஒவ்வொரு செடி அருகிலும் சென்று கையையும் தட்டினர். ஆனால், ஒரு செடி கூட லேசாக அசைந்து கூட கொடுக்கவில்லை. ஆனைமுத்துவுக்கும் ஏமாற்றமாகவும் இருந்தது. ஆனால், மதிவாணன் நம்பிக்கையோடு ஒரு பாறை இடுக்கில் இருக்கும் பலதரப்பட்ட செடிகளுக்கு நடுவில் கை தட்டினான். அந்த செடிகளிடத்திடமும் ஒரு சலனம். குறிப்பாக ஒரு செடி மற்ற செடிகளை எல்லாம் விலக்கிக் கொண்டு மெல்ல நிமிர்ந்து யாராது என்கிற மாதிரி பார்த்தது. மதிவாணனும் "மாமா.. இங்க இருக்கு..." என்றான் உற்சாகத்தில்!

**ச**தாசிவம் வீடு! தியாகுவால் நன்றாக காலை ஊன்றி நடக்க முடிந்தது. அதை அவனால் நம்பவும் முடியவில்லை. ஜவ்வாது சித்தர் 21 நாட்கள் என்ற கணக்கு வைத்துதான் தைலம் தந்திருந்தார். ஆனால் 15 நாளிலேயே அவனால் நன்றாக நடக்க முடிந்தது. அவனுக்குள் பெரிய தெம்பையே கொடுத்திருந்தது. அதைப் பார்த்து ஜெயந்தியிடமும் ஒரு சந்தோஷம்.

அவன் ஜெயந்தியை அழைத்து, "ஜெயந்தி எனக்கு தடவின தைலத்தை நீ உன் காலுக்கும் தடவிக்கோ. எனக்கென்னவோ தோணுது" என்றான். அதைக் கேட்டு ஜெயந்தியும் சற்று பரவசப்பட்டாள். நந்தினி கிழிசல் துணிகளை தையல் மெஷினில் அமர்ந்து தைத்துக் கொண்டிருந்தாள். சதாசிவம் பூஜை அறையில் மெல்லிய குரலில் பஞ்சாட்சரம் ஜெபித்தபடி இருக்க வீட்டு வாசலில் ஒரு படகு கார். உள்ளே இருந்து உமையாம்பிகை இறங்கி கொண்டிருந்தாள்.

# 21

பிராந்தர் என்று ஒரு சித்தர். பிராந்தன் என்றாலே பைத்தியக்காரன் என்பதுதான் பொருள்! இவரும் பார்ப்பதற்கு பைத்தியம் போலத்தான் தெரிந்தார். ஆனால், உண்மையில் இவர் ஒரு மகாஞானி! சித்தர்களிலேயே மிக மிக மாறுபட்டவர். உபவாசம், யோகப் பயிற்சி, மந்த்ர ஜெபம் என்று எதுவும் பெரிய அளவில் இல்லாதவர். ஆனால், மனித பிறப்பை பற்றியும், இந்த உலகில் நிலவும் மாயையையும் மிகமிகப் புரிந்தவர். துளிகூட பயமே இல்லாதவர். இவருக்கு யானைக்கால் வியாதி இருந்தது. இவர் எப்பொழுதும் ஊரில் உள்ள மயானத்தில்தான் உறங்குவார். இறந்து பிணமாகிவிட்ட நிலையில் நாம் சென்று சேர வேண்டிய இடம். உயிருடன் இருக்கும் போதே அவர் அங்கே விரும்பிச் சென்றதுதான் ஆச்சரியம்.

ஒரு நாள் இரவில் சுடுகாட்டுப் பேய்கள் இவரை மிரட்டி ஓட வைக்க முயற்சி செய்தன. இவர் துளிகூட அசரவில்லை. இறுதியில் காளிதேவியே இவர் எதிரில் பிரசன்னமாகி மிரட்டிப் பார்த்தாள். இவரும் துளிகூட பயப்படாமல் 'என்னை எதற்கு உன் கோரப் பக்ளையும் முகத்தையும் காட்டி பய முறுத்துகிறாய்? அதனால் உனக்கு என்ன கிடைத்து விடப் போகிறது?' என்று கேட்டுவிட்டு திரும்பிப் படுத்துக் கொண்டார். அதைப் பார்த்து காளிதேவியே ஆச்சரியப்பட்டு 'உன்னை எனக்கு மிகப் பிடித்துப் போய்விட்டது. உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்' என்றாள்.



'ஒரு வரமும் வேண்டாம். ஒன்றை வேண்டும் என்று கேட்டவன் சித்தனாக மாட்டான். சொர்க்கத்தைக்கூட துச்சமாக கருதுபவனே சித்தனாவான். நான் அப்படி ஒரு சித்தன்' என்கிறார் பிராந்தர். காளி அதைக் கேட்டு பெரிதும் மகிழ்ந்து 'உன் யானைக் கால் வியாதியை போக்கிடும் ஒரு சந்தோஷத்தை யாவது எனக்கு கொடு' என்கிறாள்.

அதற்கும் பிராந்தர் மறுப்பு கூறி விடுகிறார். 'இது என் பூர்வ கர்மத்தாலே வந்தது. நான் இதை அனுபவித்துத் தீர்ப்பதுதான் சரி!' என்று கூறி காளியை அசர அடிக்கிறார்.

நம்மில் எத்தனை பேர் இப்படிச் சொல்வோம்

மனிதர்களிடம் நாம் ஒன்றை கேட்டால் அது யாசகம். இறைவனிடம் கேட்பதுகூடவா யாசகம்? பிராந்தர் கடவுளிடமே கூறி கேட்பது தவறு என்றவர். இவர் உணர்த்துவது ஒன்றைத்தான். எதற்கும் அச்சப்படத் தேவையில்லை... எது இல்லாமலும் நோயுற்ற உடம்போடும்கூட மகிழ்ச்சியாக வாழ முடியும். தேவை மனத் தெளிவு! எனவே, இவர் மூலமாக 'மனத் தெளிவை' ஒரு விஷயமாக நாம் உணரலாம்.

உமையாம்பிகையைப் பார்த்த அவ்வளவு பேருக்கும் ஷாக் அடித்து போய் இருந்தது. குறிப்பாக நந்தினிக்கு அப்பொழுதே அவளுக்கான கஷ்டங்கள் எல்லாம் நீங்கிவிட்ட மாதிரி இருந்தது. தையல் மெஷினும் நின்று போனது. ராம்கி, உமையாம்பிகையை வரவேற்றான். ஆனால், உமையாம்பிகை வாசலுக்கு வெளியிலேயே நின்றுகொண்டு சதாசிவத்தை பார்க்க விரும்புவதாக கூறினாள்.

"அவரைக் கொஞ்சம் வரச் சொல்லுங்க."

"நீங்க உள்ற வாங்கம்மா."

"இல்ல.. நான் இப்ப வரக்கூடாது. உங்க வீட்ல கால் வைக்கற தகுதி இந்த நிமிஷம் என் கிட்ட இல்லை. என் மகனோட சம்மதம், குறிப்பா என் வீட்டுக்கார ரோட பரிபூர்ண சம்மதத்தோட அவர்களோட சேர்ந்து நான் உள்ள வர்றதுதான் சரி..." உமையாம்பிகை சொல்லும்போதே பஞ்சாட்சரம் ஜெபித்தபடி இருந்த சதாசிவம் எழுந்து வெளியில் வந்து விட்டார் உமை யாம்பிகை பார்த்து நிதானமாக வணங்கவும் செய்தார்.

"ஐயா... உங்களால எனக்கு ஒரு உதவி ஆகணும். அதுக்காகதான் வந்திருக்கேன்."

"நான் என்னம்மா செய்யணும்.. அதுவும் உங்க ளுக்கு?"

"எங்களுக்குன்னா நாங்க என்ன ஆகாயத்துல இருந்து குதிச்சு வந்துட்டவங்களா என்ன?"

"நீங்க உள்ற வாங்கம்மா... உக்காந்து பேசலாம்."

"இல்லய்யா.. இது அதுக்கான நேரமில்லை. அங்க அவர் உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்கார். அவரை காப்பாத்தற மருந்து சதுரகிரி மலைல இருக்கறதா டாக்டர் சொன்னார். ஒரு வகைல இந்த வியாதி வந்ததுக் காக நான் சந்தோஷம்தான் படறேன். எல்லாம் நம்ம கைலன்னு நினைக்கற ஆணவம் பிடிச்சவங்களுக் கெல்லாம் எதுவும் நம்ம கைல இல்லைன்னு சொல்ற ஒரு விஷயம்தான் நோய். அப்படி ஒரு நோயில இருந்து என் கணவரை நான் மீட்டெடுத்தாகணும். அதுக்கு உங்க உதவி வேணும்."



"நான் என்னம்மா செய்யணும்?"

"என்கூட சதுரகிரி மலைக்கு வந்து அங்க இருக்கற சித்தர்களை எனக்கு அடையாளம் காட்ட முடியுமா?"

உமையாம்பிகையின் கேள்வி முன் சதாசிவம் துளி கூட யோசிக்கவில்லை. இப்பவே வரேன் என்பது போல உள்ளே சென்று சட்டையை மாட்டிக் கொண்டு ஒரு துண்டையும் போட்டுக் கொண்டு வெளியில் வந்தார். இதையெல்லாம் பார்த்துவிட்டு தியாகு பெரிதாக கை தட்டினான். இருவருமே அவனைத் திரும்பிப் பார்த்தனர்.

"சதாசிவம் சார்.. உங்க பெருந்தன்மையை இவங்க பாராட்டறாங்களோ இல்லையோ நான் பாராட்டறேன். 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்'னு திருவள்ளுவர் எழுதினதுக்கு இப்ப நீங்களே விளக்கம் கொடுத்துக்கிட்டு இருக்கீங்க. அம்மா பணக்கார வீட்டம்மா.. அது ஏம்மா ஊர்ல எவ்வளவோ பேர் இருக்க இவர்கிட்ட வந்தீங்க. இந்த ஏழை உங்க ளுக்கு உதவி செய்யறத உங்க பணக்கார கணவரோட தன்மானம் ஏத்துக்குமாம்மா?"

இதுதான் சந்தர்ப்பம் என்பது போல தியாகு உமையாம்பிகையை வார்த்தைகளால் வளைத்துப் பிடித்தான். அவள் அசரவில்லை.

"தம்பி! எனக்கு இங்க உரிமை இருச்கறதா நான் நினைக்கிறேன். இவர் யாரோ இல்ல. என் சம்பந்தி! உள்ள இருக்கறது என் மருமக! அவ வயத்துல வளர்ந்து கிட்டு வர்றது என் குடும்ப வாரிசு. இவங்களுக்கு முறையா கல்யாணம் நடக்காம இருந்திருக்கலாம். என் கணவர் ஏத்துக்க மறுத்திருக்கலாம். அதனால நான் சொன்ன

எது பொய்யாக்கிட முடியும்? அந்த உரிமை இருக்கறதால வந்தேன். அவருக்கு அப்படி ஒரு அடி விழவே இவரோட பெருமூச்சுகூட காரணமா இருக்கலாம். இவரே அவருக்கு உதவ முன்வரும்போது அது என் கணவரை யோசிக்க வெச்சு அவர் கண்ணையும் திறக்கலாம்தானே?"

உமையாம்பிகை எப்படிப்பட்டவள் என்பது தியாகுவுக்கு அப்போதே புரிந்துவிட்டது. சதாசிவம் கூட நெகிழ்ந்து போயிருந்தார்.

"அம்மா, நீங்க வாங்கம்மா... நீங்க ஆசைப்பட்ற நல்ல விஷயங்கள் நடக்கலைன்னாலும் பரவாயில்லை. இவ்வளவு நல்ல எண்ணம் உள்ள உங்களுக்கு உதவி செய்யறதை நான் பெருமையா நினைக்கிறேன்" என்றவராக சதாசிவம் கார் கதவை திறந்துகொண்டு முன் ஸீட்டில் அமர்ந்து கொண்டார். உமையாம்பிகையும் ஏறிக் கொள்ள, கார் சீறிக் கொண்டு கிளம்பியது.

பார்த்துக் கொண்டேயிருந்த நந்தினியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகத் தொடங்கியிருந்தது.

"இன்னும் ஒரு நாலைஞ்சு நாள்ல நான் ஓடியே நடக்க ஆரம்பிச்சிடுவேன். அப்ப நானும் மலைக்குப் போய்தான் தீரணும். 21 நாளுன்னு ஒரு கணக்கு வெச்சு, சாமி என்னை வரச் சொல்லியிருக்காரே... இந்தம்மா அவங்க கணவனுக்காக போறாங்க. நான் யாருக்காக போகப் போறேன் தெரியுமா?"

தியாகு, ராம்கியை பார்த்து கேட்டான்.

"தலைவா, உங்களோட நானும் வரேன். நீங்க எல்லாம் பேசப் பேச எனக்கும் அந்த மலைக்குப் போய்



அந்த மகாலிங்க சாமியை தரிசிக்கற ஆவல் அதிகமாகிகிட்டே போகுது."

"நீயும்தான் ராம்கி.. நீ இல்லாமலா? நான் கட்டுரையாளர்னா நீதான் போட்டோகிராபர். இந்த வருஷ தீபாவளி மலர்ல நம்ம கட்டுரைதான் நம்பர் ஒன்னா பேசப்படணும்."

"நிச்சயமா தலைவா.. ஆமா, நீங்க யாருக்காகவோ போகணும்னு சொன்னீங்களே.. யாருக்காக?"

தெரிந்தும் தெரியாதவன் போல கேட்டான்.

தியாகு பார்வை ஜெயந்தியை நோக்கித்தான் சென்றது. குறிப்பாக அவளது கால்கள் மேல்!

"ஓ! விஷயம் அப்படிப் போகுதாக்கும்?" என்றான் புன்னகையோடு.

"ஆமாம் ராம்கி... இந்த வீட்டுக்கு நான் கடமைப்பட்டிருக்கேன். சதாசிவம் சாருக்கு என்ன தலையெழுத்து, என்னை இங்க வெச்சு பாத்துக்கணும்னு! ஜெயந்திக்குதான் என்ன வேர்த்து வடியுது.. எனக்கெல்லாம் வடிச்சுக் கொட்டணும்னு.."

அவன் சொல்லச் சொல்ல ஜெயந்தியின் கண்களிரண்டும்கூட கலங்கிவிட்டன. ராகவியால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை.

"தயவுசெய்து இப்படி எல்லாம் பேசாதீங்க... நீங்க இங்க வரப்போய்தான் எங்களுக்கெல்லாம் ஒரு நம்பிக்கையே வந்துருக்கு. நந்தினி வாழ்க்கை ஒண்ணுமில்லாம போயிடுமோங்கற பயத்துல இருந்தோம். அப்பாகூட கடவுள் விட்ட வழின்னுதான் இருந்துட்டார். ஆனா,

உங்க போராட்டம் எங்களுக்கு எவ்வளவு பெரிய தெம்பைத் தந்திருக்கு தெரியுமா? அப்பாவோட பக்தியும் வீண் போகலை.. அதுதான் உங்க வடிவத்துல எங்களுக்கு இப்ப பெரிய ஆறுதலா இருக்கு. இன்னிக்கு இந்தம் மாவை எங்கப்பா கிட்டேயே உதவி கேட்கவும் வெச்சிருக்கு. எல்லாத்துக்கும் மேலா ஜெயந்தி அக்கா வாழ்க்கையிலும் ஒரு பெரிய விடியல் தோன்றப் போகுதே...?"

ராகவி அழகாக சொன்னவளாக அர்த்தபுஷ்டியோடு தியாகுவை பார்த்தாள்.

"என் சின்ன மச்சினி பயங்கர ஷார்ப்.." என்று தியாகு ஒரு உறவு முறையோடு அவளை பாராட்டவும் ஜெயந்திக்கு குப்பென்று முகமெல்லாம் சிவந்துவிட்டது. நந்தினி ஓடிப்போய் அவளை கட்டிக் கொண்டாள்.

"அக்கா.. நிச்சயம் நமக்கெல்லாம் இனி எல்லாம் நல்லாதான்க்கா நடக்கும். நீ வேணா பாரேன்.." என்று விசும்பத் தொடங்கி விட்டாள்.

ராம்கி இதுதான் சாக்கு என்று, "தலைவா... உங்க சின்ன மச்சினிதான் என்னோட வரும்காலம்..." என்றான் சற்று வெட்கத்துடன்..!

**சே**கரின் காலில் ரத்த காயம் அப்படியே ஆறி விட்டிருந்தது. உடம்பிலும் ஒரு புதுத் தெம்பு. ஆனை முத்து மாமாவும், மதிவாணனும்கூட ஆச்சரியத்தில் புதைந்து போயிருந்தனர்.

'யப்பா மதிவாணா... இது லேசுப்பட்ட மலை இல்லப்பா. ஜெகஜ்ஜால மலை. இங்க ஒரு மலைப் பளியனுக்கு இருக்கற மருத்துவ ஞானமே இந்த அளவு



இருந்தாக்க.. நம்ம சித்தர் சாமிங்களுக்கெல்லாம் எவ்வளவு தெரிஞ்சிருக்கும்?"

வியந்தபடியே நடந்ததில் நம்பூதிரி தங்கியிருக்கும் அந்த குகைப் பகுதி வந்துவிட்டது.

## 22

"**பி**ராந்தர் என்கிற சித்தரை மனத்தெளிவுக்கு உதாரணமாகக் கொண்டால் கொங்கண சித்தரை வைத்து நாம் கோபம் கொள்ளக்கூடாது என்பதை அறியலாம். மீறிக் கோபம் கொண்டால் வாழ்வில் எப்படிப்பட்ட பாடங்களை கற்றுக் கொள்ள வேண்டி வரும் என்பது புலனாகும். பிராந்தருக்கு எல்லா வகையிலும் கொங்கணர் நேர்எதிர். பிராந்தர் தெய்வமே நேரில் தோன்றி வரம் தந்திட முன்வந்தும் மறுத்து வெறுத்தவர். ஆனால், கொங்கணர் தெய்வத் தலங்களுக்காகவே காலம் கழித்தவர். அவர் நோக்கமே எல்லாவித வரசித்திகளையும் அடைந்து விட வேண்டும் என்பதுதான். அதற்காக அவர் புரிந்த யாகங்கள் பல! தன்னை வெல்ல ஒருவர்கூட இந்த உலகில் இருக்கக் கூடாது என்று கருதியவர் அவர்.

ஒரு சித்தனுக்கு இப்படிப்பட்ட நோக்கங்களே மிக மிகத் தவறாகும். இதை சப்த ரிஷிகளில் ஒருவரான கௌதமரே அவர் முன் தோன்றி அவரை நெறிப்படுத்த முயன்றார். ஆனால், கொங்கணர் அதை காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. அசுரர்கள்தான் வரசித்திக்காக தவம் இருப்பார்கள். வரம் கிடைத்த உடன் வரத்தை தந்த தெய்வத்திடமே தங்கள் வரத்தை சோதித்தும் பார்ப்பார்கள். ரிஷிகளோ, முனிவர்களோ தவம் செய்து இறைவன் என்ன

வரம் வேண்டும் என்று கேட்கும்போது திருவடி நிழலில் இடம் கிடைத்தால் போதும் என்பார்கள்.

கொங்கணருக்கு வள்ளுவன் மனைவி வாசுகி பாடம் கற்பித்தாள் என்பார்கள். வாசுகியும் வள்ளுவரும் வாழ்ந்து வந்த ஊருக்குள் நுழைகிறார் கொங்கணர். அப்போது வானில் பறந்தபடி இருந்த கொக்கு ஒன்று எச்சமிட்டு விடுகிறது. கோபத்தோடு அந்த கொக்கை கொங்கணர் பார்த்த நொடி அது கருகிச் சாம்பலாகி விடுகிறது. அதே கோபத்தோடு கொங்கணர் வாசுகி வீட்டுத் திண்ணையில் அமர்கிறார். உள்ளேயும் பார்த்து பிட்சை கேட்டு குரல் கொடுக்கிறார். வறியவர்கள் கேட்பதற்கு பேர் பிச்சை! அதுவே தபஸ்விகள் கேட்டால் அது பிட்சை! கொங்கணர் பிட்சை கேட்ட சமயம் வாசுகி வள்ளுவருக்கான பணிவிடைகளை செய்தபடி இருக்கிறாள். குறிப்பாக தோட்டத்தில் கிணற்றில் நீர் இறைத்தபடி இருப்பவள் வள்ளுவர் அழைக்கவும் அந்த கிணற்றுக் கயிறு அந்தரத்தில் திரும்ப வாசுகி வந்து பற்றும் வரை அப்படியே நிற்கிறது. அதைப் பார்த்து கொங்கணர் வியக்கிறார். வாசுகி இறுதியாக கொங்கணரிடம் வரவும், கொங்கணர் கோபமாக வாசுகியை முறைக்கிறார்.

'நான் ஒரு எப்பேர்ப்பட்ட தபஸ்வி. என்னைக் காண வருவதில் இத்தனை தாமதமா?' என்பது தான் அவர் முறைப்பின் நோக்கம். ஆனால், வாசுகி வேண்டுமென்று செய்யவில்லை. பதிசேவையை விட ஒரு பெரிய விஷயமோ சேவையோ இவ்வுலகில் இல்லை என்று வாழ்ந்து வருபவள் அவள். எனவே கொங்கணர் வானில் பறந்த கொக்கைப் பார்த்தது



போலவே கோபத்தோடு முறைத்தபோதும் வாசுகிக்கு ஏதும் ஆகவில்லை.

வாசுகியும் 'என்னை என்ன கொக்கென்று நினைத்தாயா கொங்கணா?' என்கிறாள். இந்த சொலவடை தமிழ் இலக்கியத்தில் மிக அதிகம் சிந்திக்கப்படும் ஒரு 'சொலவடை' ஆகும். இதற்கு பின்னே வேறு கதைகளும் உண்டு.

வாசுகி இப்படிக் கேட்கவும் கொங்கணருக்கு சப்த நாடியும் அடங்கிப் போகிறது. காடுமேடெல்லாம் அலைந்து காலம்காலமாய் செய்த தவமும் அதன் பயன்களும் ஒரு பதிவிரதை முன் ஒன்றுமே இல்லாமல் போவதையும் உணர்கிறார். ஆசையும் கோபமும் இருக்கும்வரை ஒருவரால் பெரிய நிலைகளை எட்ட முடியாது என்பதும் கொங்கணருக்கு அப்போது புரிகிறது. அதன் பிறகு கொங்கணர் ஞானம் பெற்றவராய் எதற்கும் ஆசைப்படாமல் வாழ்ந்து பின் பதினெட்டு சித்தர் பெருமக்களில் ஒருவராகவும் திகழ ஆரம்பித்தார்.

கொங்கணரின் வாழ்க்கை நம்மையும் ஆசை, கோபம் இரண்டிடமும் நாம் எவ்வளவு எச்சரிக்கையோடும் கவனத்தோடும் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தும். இவர் காட்டும் வழியாக 'அளவான ஆசை - சாந்தமானது மனது' என்பதை நாம் கொள்ளலாம்!

**ச**துரகிரி மலையின் அந்த அதர்வண கிரிப் பகுதியில் இருந்த நம்பூதிரி குகை முன்னால் மூவரும் ஒருசேர நின்றனர். உள்ளே தீப்பந்த வெளிச்சம் தெரிந்தது. அதை வைத்து நம்பூதிரி உள்ளிருப்பதாகக் கருதி மதிவாணன் மெல்ல எட்டிப் பார்த்தான்.

நம்பூதிரி பத்மாசனம் போட்டு நிஷ்டையில் இருந்தார். அவர் முன்னாலே ஒரு குறளி பொம்மை ஒன்று இருந்தது. அதற்கு அவர் பூ போட்டு பூஜை செய்திருந்தார். பூக்கள் ரத்தத்தில் தோய்ந்திருந்தன. நம்பூதிரியின் மணிக்கட்டு பகுதியிலும் ரத்தம் வேகமாக கசிந்தபடி இருந்தது.

அதர்வண பூஜைகள் சற்று கடினமானவை. அதர்வ ணாதி தேவதைகளும் ரத்தம், மாமிசம் என்று அலை பவை. எந்த ஒரு விஷயத்திற்குமே இரண்டு பக்கங்கள் இருப்பதை போல இறைவழிபாட்டிலும் இருவிதம் உண்டு. ஒருவிதம் சாத்வீகமான அபிஷேக ஆராதனை கள் என்றால் இன்னொரு விதம் ரத்தம் தோய்ந்த இது போன்ற பூஜைகள். ஆடுமாடுகளை பலி தந்து வழிபடும் வழிபாடுகளும் அதர்வணாதி ரகம்தான். அதே சமயம் எல்லோராலும் இதுபோன்ற பூஜை முறைகளில் ஈடு பட முடியாது. இதற்கென பிரத்தியேக விதியமைப்பு வேண்டும்.

ஒரு பெரிய பாறாங்கல்லை ஒரு பலசாலியால் மட்டுமே தூக்க முடியும், கோடான கோடி பேர் இருக்கின்றபோதிலும் சிலருக்கே குரல்வளம் இருக்கும். சிலராலேயே ஓவியம் வரைய முடியும். அதுபோலத்தான் இதுவும். இத்தகைய பூஜைகளில் நம்பூதிரிகள் பேர் போனவர்கள். பரம்பரை பரம்பரையாக அதில் அவர்கள் ஊறித் திளைத்திருப்பவர்கள். அப்படி ஒருவர்தான் இங்கே நிஷ்டையில் இருக்கும் கேசவன் நம்பூதிரி.

கேசவன் நம்பூதிரிக்கு இப்போது ஒரே லட்சியம் தான். சதுரகிரி மலையில் இருக்கும் அந்த தைலக் கிணற்றை கண்டுபிடிக்க அவர் ஏராளமான சித்து



வேலைகள் செய்யவும் தயாராக இருக்கிறார். அடுத்து எந்த வகையிலாவது கூடுவிட்டு கூடுபாயும் உத்தியையும் தெரிந்து கொண்டுவிட வேண்டும். இந்த இரண்டுக் காகவே அவர் இங்கே தவம் கிடக்கிறார். இந்த மலைக் காட்டுக்குள் நுழைந்து பல வருடங்கள் ஆகி விட்டன. இப்போதுதான் சில சித்தர்களின் தரிசனம் கிடைத் துள்ளது. அவர்களும் கேசவன் நம்பூதிரியை கிட்டே நெருங்கவிடவில்லை. பார்த்தால் சிரிப்பதோடு சரி. நம்பூதிரியும் விடுவதாக இல்லை. நம்பூதிரிக்கு மதிவாணனை பிடித்துப் போய்விட்டது. தன் தேடல் முயற்சிக்கு அவனை ஒரு துணையாக வைத்துக் கொள்வது என்று முடிவு செய்தே அவனை தன்னோடு பழக அனுமதித்திருந்தார். ஆனால், இப்பொழுது அவன் தன்னோடு சேர்ந்து இன்னும் இரண்டு பேருடன் வந்து நிற்கிறான்.

நிஷ்டை முடிந்து மெல்ல கண் திறந்த நம்பூதிரி முன் மதிவாணன் ஒரு நல்ல பிள்ளை போல பணிவாக நின்று கொண்டிருநதான். கண் திறக்கவும் அவரைப் பார்த்து, நமஸ்காரம் நம்பூதிரி என்று கைகளை கூப்பினான். நம்பூதிரி முகத்தில் ஒரு சிந்தனை... புருவங்களில் அவர் ஆஷாடமை பூசியிருந்தார். அன்று எதனாலோ கண் ணிரண்டிற்கும்கூட பெண்களைப் போல மை பூசி யிருந்தார். பார்க்கவே சற்று பயமளிக்கும் தோற்றம்.

"நமஸ்காரம் நம்பூதிரி... உங்க பார்வையே ஒரு மாதிரி இருக்கே. பயமா இருக்கு நம்பூதிரி..." என்றார் மதி.

"அது யார் அந்த ரெண்டு பேர்?" நம்பூதிரி கேட்ட விதமே அவனை அரட்டியது. இத்தனைக்கும் அவர்கள் உள்ளே வரவில்லை. மதிவாணனும் எதுவும் கூறவில்லை.

அதுதான் நம்பூதிரி. அவனது உபாசனை சக்தியான யட்சிணியும், அடிமைச் சக்தியான குறளிப் பேயும் அவனைச் சுற்றி நடப்பவைகளை அவனுக்கு உடனுக்குடன் சொல்லிக் கொண்டேயிருக்கும். இது பற்றி மதிவாணனும் அறிவான். அப்போதும் புரிந்து கொண்டு பதில் சொன்னான்.

"அவங்க என் உறவுக்காரங்க நம்பூதிரி... என்னை பார்க்கத்தான் இந்த மலைக்கு வந்துருக்காங்க."

"அப்படின்னா பார்த்துக்கிட்டுப் போகாம இங்க எதுக்கு கூட்டிக்கிட்டு வந்தே?"

"அது வந்து நம்பூதிரி... இந்த மலைல இருக்கற தைலக்கிணத்தை பத்தி எனக்கு தகவல் சொன்னவரே முதல்ல என் மாமாதான். நான் இங்க எதுக்கு வந்திருக்கேன்னு அவருக்கு தெரியும்."

"பல காலமா இருக்கற எனக்கு அந்த தைலக்கிணறு இருக்கற திசையே தெரியலை. அலையோ அலைன்னு அலையற உன்னாலயும் கண்டுபிடிக்க முடியில. இந்த லட்சணத்துல புதுசா இன்னும் இரண்டு பேரா?"

"அவங்க நம்ம முயற்சிக்கு உதவியாதான் இருப்பாங்க. நீங்க பயப்பட வேண்டாம்."

- மதிவாணன் சொன்னதைக் கேட்டு நம்பூதிரி இடி இடி என்று சிரிக்கத் தொடங்கிவிட்டான்.

"நம்பூதிரி இப்படி சிரிச்சா என்ன அர்த்தம்?"

"பிராந்தா... பயப்பட வேண்டாம்னு சொன்னியே அதைக் கேட்டே நான் சிரிச்சேன். பேயும் பிசாசும் என்னுடைய வேலைக்காரங்க. சுடுகாடு ஒருவகைல எனக்கு அம்பலம். நானாவது பயப்படறதாவது.."



"நான்தான் தப்பா சொல்லிட்டேன் நம்பூதிரி... மன்னிச்சிக்குங்க."

"சரி, நீ சொல்ப நிமிஷம் வெளிய போ... நான் உன்னைக் கூப்பிடும்போது அவங்களோட வா. இப்ப போய்க்கோ.."

நம்பூதிரி அவனை வெளியேற்றி விட்டு கண்களை இடுக்கிக் கொண்டு தனது யட்சிணி தேவதையை அழைத்தான். அதுவும் "இன்றைக்கு நீ என்னை முதல் தடவையாக விளித்திருக்கிறாய். இத்தோடு என்னை தொண்ணூற்றி ஏழு முறை அழைத்திருக்கிறாய். இன்னும் மூன்று முறை மட்டுமே நீ என்னை அழைக்க முடியும் அந்தக் கணக்கு வந்த நொடி உனக்கும் எனக்குமான மந்திரச் சாசனப்படி நான் உனக்கு கட்டுப்படாதபடி விடுதலை பெற்றிட நீயே எனக்கு பிதுர்லோகத்துக்கு நான் செல்ல வழிகாட்டி தர்ப்பணமும் செய்ய வேண்டும். மறந்து விடாதே" என்றது. அப்போதெல்லாம் நம்பூதிரி காதைப் பொத்திக் கொள்வான். "சரி, சரி.. ஒவ்வொரு பிரசன்னத்தின் போதும் நீ இதைச் சொல்லணுமாக்கும்" என்று சலித்தும் கொள்வான். அப்புறம்தான் விஷயத்துக்குள்ளும் நுழைவான் இன்றும்...

"யட்சிணி.. வந்திருக்கற இரண்டு பேரைப் பற்றியும் சொல்.."

"ஒருவர் ஆனைமுத்து. விவசாயியாக இருந்து சம்பாதிக்க முடியாதவன். தனப்ராப்தி இல்லாத ஜாதகம். அவனுக்கு மூணு மனைவிகள். ரெண்டு பேரைத்தான் ஊருக்கு தெரியும். மூணாவது நபர் மிக ரசியமானவர். மூணு பேருமே தங்கம்னா உயிரை விடற ரகம். அவங்களுக்கு நகைப் பண்ணிப் போடணும், தானும் பெரிய

செல்வந்தன் ஆகணும்... இதுதான் ஆனைமுத்துவோட லட்சியம். இவன் கொஞ்ச காலம் கடத்தல் தொழில் செய்தவனும்கூட. அப்ப நடந்த விஷயத்துல அவன் முதுகுல அடிபட்டதுல ஒரு தழும்புகூட இருக்கும். அடுத்தவன் சேகர்.. பாவம்.. இவன் ஒரு அல்பாத்மா! உனக்கு உதவி செய்து சாகணும்கறதுதான் இவனோட விதி. பேராசை அவனை இங்க தள்ளிக்கிட்டு வந்திருக்கு. நம்பூதிரி... இவன் மட்டுமில்ல. ஆனைமுத்துவும் இந்த மலைய விட்டு உயிரோட போகப் போறதில்லை. இவர்கள் உனக்கு வழிகாட்டவும் உதவி செய்யவுமே விதியால இங்க அழைத்து வரப்பட்டவர்கள். என்னோட நாழிகைக் கணக்கு முடிந்தது. நான் புறப்படறேன். அதற்கு முன் இறுதியாக ஒரு செய்தி.

இந்த மலைக்காட்டுக்குள் எப்பொழுதும் வரும் சதாசிவம்கற ஈஸ்வர பக்தரோடு உமையாம்பிகைன்னு ஒரு பணக்காரியும் வந்துகிட்டிருக்கா. அவளுக்கு அவள் கணவரை குணப்படுத்த தேவையான செம்பெருஞ் சாவிங்கற மூலிகை தேவை. இதுல சதாசிவம் மகள் ஒரு கர்ப்பிணி. உனக்கு திசைபலி கொடுக்க ஒரு கர்ப்பிணிப் பெண் தேவைதானே? அவர்கள வசப்படுத்திகிட்டா அந்தப் பெண் உனக்கு கிடைக்க வழி இருக்கு. நான் வரேன்."

யட்சிணி கூறிவிட்டு மறையவும் நம்பூதிரி முகத்தில் ஒரு தனித்த பூரிப்பு. நெடு நாட்களாக காத்துக் கொண்டிருந்த விஷயங்கள் அடுத்தடுத்து வேகமாக நடந்துவிடும் ஒரு சாத்தியம் தெரியவும் முகத்திலும் புன்னகை பரவத் தொடங்கியது! அதே மகிழ்ச்சியோடு எழுந்து குகைக்கு வெளியில் சென்றான். மூவரும் காத்துக் கொண்டிருந்தனர். ஆனைமுத்துவும் சேகரும் நம்பூதிரியைப் பார்த்து



சற்று மிரளவும் செய்தனர். அந்த மிரட்சியோடுதான் கை கூப்பினர். நம்பூதிரியின் பார்வை மதிவாணன் பக்கம் சென்றது.

"நம்பூதிரி..."

"மதி... இவங்களும் இனி இங்க என்கூடயே இருக்கட்டும். நாம எல்லாரும் இனி ஒண்ணு. ஆங்.. நீ இப்ப எனக்கொரு சகாயம் செய்யணுமே?"

நம்பூதிரி, மதியை அழைத்து அவன் காதில் சதாசிவம், உமையாம்பிகை பற்றி சொல்லத் தொடங்கினான்.

மதிவாணனும் ஆழமாக கேட்டுக் கொண்டு இறுதியாக, "அப்படியே செய்துடறேன் நம்பூதிரி.." என்றான்.

"மதிவாணா! வளர கவனமாயிட்டு இ காரியம் செய்யணும். எனக்கு ஆ கர்ப்பிணிப் பெண் வேணும்."

"அதுக்கு நான் பொறுப்பு நம்பூதிரி.."

"சபாஷ்.. ஆ பெண்குட்டி மட்டும் நம் வசம் சிக்கிவிட்டால் அந்த தைலக் கிணத்து கருப்பனை நான் வசியம் செய்து அடக்கும். பின்னே அந்த கிணறு நம்ம சொத்து..." என்று கூறி அமர்த்தலாக சிரிக்கவும் செய்தான்.

"அந்தப் பெண் இங்க வந்து சேர்றது என் பொறுப்பு நம்பூதிரி.."என்ற மதி, ஆனைமுத்து, சேகரிடம் சென்று, "நீங்க இரண்டு பேரும் இங்க நம்பூதிரிகூட இருங்க! நான் கொஞ்ச நேரத்துல வந்துடறேன்" என்றவனாக, சதாசிவத்தையும் உமையாம்பிகையையும் குறிவைத்தவனாக கிளம்பினான்.

சேகருக்குச் சாப்பிட பச்சையாக ஏதாவது கிடைத்தால்கூட போதும் என்று தோன்றியது. நம்பூதிரியும்

பார்த்த மாத்திரத்தில் புரிந்துகொண்டு, "வாங்க போய் பசியாறிட்டு வருவோம். இங்க ஒரு செவ்வாழைத் தோட்டம் இருக்கு.." என்றபடி மதிவாணனுக்கு நேர்எதிர் திசையில் அவர்களோடு நடக்கத் தொடங்கினான்.

அடிவாரப் பரப்பு!

சதாசிவமும், உமையாம்பிகையும் வந்த கார் தேங்கி நிற்க, இருவரும் இறங்கிக் கொண்டனர்.

"அம்மா இதுக்குமேல நடந்துதாம்மா போகணும். கார் இங்கேய இருக்கட்டும். நாம நடக்கலாமா.. இல்லை ஓய்வெடுப்போமா?" என்று கேட்டார்.

"கார்ல இரண்டு பேரும் உக்காந்து ஓய்வெடுத்துகிட்டுதானே வந்தோம். தாராளமா இப்பவே நடந்து மலை ஏறலாம்" என்று சொல்லிக்கொண்டே உமையாம்பிகை முன் நடக்கத் தொடங்கினாள்.

"அம்மா, அம்மா.. மலை ஏறுவதற்கு முந்தி கீழே பிலாவடிக் கருப்பனைக் கும்பிட்டுட்டு ஏறுவோம். சாமி இந்த மலைல நமக்கு துணைக்கு வரும்..." என்றார் சதாசிவம். சொன்ன வேகத்துக்கு அடிவாரத்தில் உள்ள கருப்பு கோயில் முன்னாலும் போய் நின்றார். அவர் பார்வை கருப்பு வடிவில் நடமாடும் அந்த நாயைத் தேடத் தொடங்கியது. உமையாம்பிகையும் கேட்டாள்.

"யாரைத் தேடறீங்க?"

"இங்க ஒரு நாய் இருக்கும்மா.. காவல் நாய் அதைத்தான் தேடறேன்.." அவர் சொல்லும்போதே அந்த கருப்பு நாயும் ஓடிவந்தது. அது குரைத்தபடி ஓடிவரவும், அவர் முகமும் மலரத் தொடங்கியது.

"வந்துடுச்சி.. வந்துடுச்சி... என் கருப்பன் வந்துட்டான்.." என்று அவரும் நெகிழ்ந்திட, அதுவும் பாசத்



தோடு தன் இரு கால்களை அவர் மார்பு மேல் வைத்து கொஞ்சி விளையாடத் தொடங்கியது.

"போதுண்டா.. போதுண்டா.." என்று அவரும் வருடிக் கொடுத்தார். அப்போது அங்கே மதிவாணனும் வந்து நின்றான். அவனைப் பார்த்த மாத்திரத்தில் அந்த நாய் அவன் மேல் ஆவேசமாக பாயத் தொடங்கியது. அவனும் அதை சற்றும் எதிர்பாராதவனாக திரும்பி ஓடத் தொடங்கினான். சதாசிவம் அதை பலத்த ஆச்சரியத்தோடு பார்த்தார்.

அது அவனை வெகு தூரத்துக்கு துரத்திச் சென்று காட்டுக்குள் அவன் தலைதெறிக்க ஓடிய பிறகே திரும்பி வரத் தொடங்கியது. அதை பார்த்துக் கொண்டிருந்த சதாசிவம், அம்மா இந்த நாய் நிஜமான பக்தியோட வர்றவங்களப் பார்த்தா குரைக்காது. அன்பு தான் காட்டும். அதே தப்பா யார் வந்தாலும் விடாது. அனேகமா வந்த அந்த நபர் ஒரு தப்பான பேர் வழியாத்தான் இருக்கணும்.." என்றார். பின் கும்பிட்டுவிட்டு நெற்றி நிறைய விபூதிப் பட்டையோடு, "சதுரகிரி மகாலிங்கத்துக்கு அரோகரா, சந்தன மகாலிங்கத்துக்கு அரோகரா. பிலாவடி கருப்பனுக்கு அரோகரா.." என்று உற்சாகமாய் கத்தியபடி மேலே ஏறத் தொடங்கினார்!

# 23

'**சி**த்தர்களில் கொங்கணர் மூலமாக சில சிறப்புகளை அறிந்தோம். அகப்பேய் சித்தர் என்று ஒருவர் இருந்தார். இவரது வாழ்க்கையை நாம் அறியும்போது நமது உள்ளமாகிய அகம் எப்படி இருக்க வேண்டும் என்பது புரியும். அடிப்படையில்

இவர் ஒரு துணி வியாபாரி. வேட்டி, புடவைகளை தோளில் சுமந்து கொண்டு சென்று கூவிக்கூவி அழைத்து விற்பவர்.

மானம் காப்பதற்கே நாம் ஆடை உடுத்து கிறோம். ஒரு ஆணுக்குகூட ஒரு முழம் கோவணம் போதும்.. பெண்களுக்கு ஆடைகள் தேவை மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்த ஆடையில் பகட்டு சேரும்போதுதான் எல்லா சிக்கலும் ஆரம்ப மாகிறது.

பெரும்பாலும் மானம் காப்பதற்காக மட்டுமின்றி அந்தஸ்தை வெளிக்காட்டிக் கொள்ளவும், பகட்டை வெளிக்காட்டிக் கொள்ளவும், பிறரை கவர்ந்திழுப்ப தற்காகவும் பயன்படுத்தும்போதுதான் துன்பம் வந்து சேர்கிறது. அதிலும் பெண் இனம் ஆடை விஷயத் தில் ஒரு பூரண திருப்தியை அவ்வளவு சுலபத்தில் அடைந்து விடுவதில்லை. வண்ணங்கள் ஏழுதான்! ஆனால், ஆயிரம் வண்ணங்கள் இருந்தாலும் நிறைவடையாமல் அலைமோதிய பெண்களை இந்த அகப்பேய் சித்தர் தன் வியாபாரத்தின்போது கண்டார். பெண்களுக்கு அடக்கம் மிக முக்கியம். சில ஆடை களும் அவைகளை அவர்கள் அணிகின்ற விதங்களும் அடக்கத்தை இல்லாது செய்து விடுவதை இவர் உணர்ந்திருந்தார். இவரிடம் ஒரு அரிய குணப்பாடும் இருந்தது. தான் வியாபாரத்திற்கு செல்லும்போது வழியில் ஆடையின்றியோ, கிழிந்த உடைகளுடனோ யாராவது தென்பட்டால் அவர்களுக்கு தனது புது ஆடைகளை இலவசமாகவே தந்து விடுவார். அதே போல ஆடைகளை விற்கும்போது அதன் அடக்கச் செலவை சொல்லி அதற்கு மேல் விருப்பம் போல



தரச் சொல்வார். சிலர் அடக்க விலைக்கு கேட்டால் அப்படியே கொடுத்து விடுவார். இதைப் பார்த்த சக வியாபாரிகள் நீ துணி விற்பதற்கே லாயக்கற்றவன், இப்படி நீ செயல்பட்டால் இந்த தொழிலில் நீ பெரும் நஷ்டத்தைத்தான் சந்திப்பாய் என்று இகழ்ந்தார்கள். இது இவரை மிக பாதித்தது. ஒரு புறம் ஆசைகளைத் தூண்டுவது இன்னொரு புறம் வியாபாரம் என்னும் பெயரில் லாபம் சம்பாதிப்பது இவர் வரையில் பிழையாக தோன்றியது. ஒரு கட்டத்தில் அப்படியே இந்த வியாபாரத்தை விட்டு விட்டு தவம் செய்யச் சென்று விட்டார். அந்த தவத்தின் விளைவாக எதையும் சமமாக பாவித்திடும் ஒரு மனநிலையை அடைந்தார். மனதுக்குள் புகும் ஆசையால்தான் எல்லா துன்பமும் ஏற்படுகிறது. அந்த ஆசையால் மனமே அழகற்று பேயாகி விடுகிறது. எனவே, மனது அழகாயும் அமைதியாகவும் திகழ ஆசைகளை வெல்ல வேண்டும் என்று உறுதிபடச் சொன்னார். இதே கருத்தைத்தான் புத்தர் பிரானும் கூறினார். ஆனாலும் புத்தரில் இருந்து இவர் பெரிதும் வேறுபட்டவர். இவர் ஆசையை அறவே நீக்கச் சொல்லவில்லை. பக்தி செய்ய ஆசைப்படு, தர்மம் செய்ய ஆசைப்படு, பிறருக்கு உதவிட ஆசைப்படு என்று ஆசைகளை சீரமைத்தவர் இவர். அப் பொழுதுதான் அகமானது பேயாகாமல் அழகிய தேவனாக திகழும் என்று இவர் கூறிய காரணத் தால் இவரை அகப்பேய் சித்தர் என்றும் கூறுவர். சைவக்குரவர்களில் ஒருவரான அப்பர் பிரான் தன் கையில் ஒரு ஆயுதத்தை வைத்திருப்பார். அதைக் கொண்டுதான் அவர் உழவாராப்பணி என்னும் திருப் பணியைச் செய்து வந்தார். அவரைப் போலவே

அகப்பை கரண்டியை கையில் வைத்திருந்த காரணத்தால் இவரை அகப்பைச் சித்தர் என்பார்கள். அகப்பேய் சித்தர் என்பது தவறான விளிப்பு என்று கூறுபவர்களும் உண்டு.

இந்த சித்தர் தன் கையில் அகப்பையை வைத்திருக்க ஒரு காரணம் இருந்தது. அகப்பை எப்போதும் சட்டியோடு தொடர்புடையது. சட்டியில் இருந்தால் மட்டுமே அகப்பையில் வரும். அதுபோல நமது விதியில் உள்ளபடியே அனைத்தும் நிகழும், இல்லாதது வாராது என்பது இதன் உட்பொருள் என்று அகப்பையைக் கொண்டு உணர்த்துகிறார் என்று கூறுபவர்களும் உண்டு.

மொத்தத்தில் நல்லதற்கு ஆசைப்பட வேண்டும் என்று இவர் கூறுவதாக நாம் கொள்ளலாம்!'

**அ**தர்வண கிரிப்பகுதியில் ஓரிடத்தில் வாழையும் பலாவும் திளைத்து வளர்ந்திருந்தன. பலா மரங்களில் பல இடங்களில் அரிசி மூடை போல தேன் அடைகள். கீழே தரைப் பாகத்தில் பாம்பானது வளைந்து வளைந்து செல்வது போல சலசலவென்று நீரோடை, அந்த சூழலே மிக ரம்யமாக இருந்தது. அங்கே ஒரு பளியன் இருந்து கொண்டு சில பசுமாடுகளுக்கு பச்சைப் புற்களை வெட்டி எடுத்து வந்து போட்டுக் கொண்டிருந்தான். நம்பூதிரியும் அவரோடு ஆனைமுத்துவும் சேகரும் அந்த பகுதிக்குள் நுழைவதைப் பார்த்துவிட்டு ஓடி வந்தான். நம்பூதிரி "இவங்க சாப்பிட ஏதாவது கொடு.." என்றார்.

அடுத்த நொடியே விறுவிறுவென்று ஒரு வாழைக் குலையைக் காய்ந்த வைக்கோல் மூட்டத்திற்கு நடுவில் இருந்து எடுத்து வந்து அவர்கள் முன் வைத்தான். பின் ஓடிச் சென்று ஒரு பலாப்பழத்தை வெட்டி எடுத்து



வந்தான். அது இயற்கையாகவே வெடித்திருந்தது.

வெடித்த பாகத்தில் ஏராளமான தேனீக்களும் ஈக்களும் மொய்த்துக் கொண்டிருந்தன. அவைகளை விலக்கிவிட்டு அவன் சுளைகளை எடுத்த விதமே அலாதியாக இருந்தது. மஞ்சள் சுளைகள் சேகரின் நாக்கில் நீரை ஊறச் செய்தன. வாழைப் பழங்களும் பசியைத் தூண்டின. ஒவ்வொரு பழமும் கைப் பருமனில் இருந்தது ரஸ்தாளிப் பழங்கள்! சரேலென்று பக்கத்து மரத்தில் வாழை இலையை கிழித்து வாழைப் பழத்தையும் பலாச் சுளைகளையும் அள்ளி வைத்து நீட்டினான். பின் எங்கோ போய் ஒரு வில்லையும் சில தட்டுக்குச்சியாய் ஆன அம்புகளையும் எடுத்து வந்தான். அந்த அம்புகளால் மேலே உள்ள தேனடைகளை குறிபார்த்து அடித்தான். தேனடைக்குள் செருகிக் கொண்ட அம்பின் நீண்ட பின்பாகம் வழியாக தேனானது ஓடிவந்து மழை நீர் பெய்கிற மாதிரி பெய்ய ஆரம்பித்தது. அதை வெகு வேகமாக ஒரு கொட்டாங்குச்சியில் பிடித்தான். அருகில் நிறைய கொட்டாங்குச்சிகள் கிடந்தன. அதை ஓடை நீரில் கழுவிவிட்டு தேனை அவன் பிடித்த விதமே ஏதோ ஓர் அரிய காட்சி போல இருந்தது. தேன் நிரம்பிய கொட்டாங்குச்சியை கொண்டு வந்து ஆனைமுத்துவிடம் சேகரிடமும் நீட்டினான்.

அவர்களுக்கு பிரமிப்பாக இருந்தது.

அவர்களுக்கிருந்த பசிக்கு அந்த பழங்களும் தேனும் ஒரு பெரும் விருந்தாகத்தான் தோன்றின. மளமளவென்று சாப்பிட்டு முடித்தனர். புதிய சுவை! அவர்கள் சாப்பிட்டு முடிப்பதற்குள் பசு மாட்டின் மடியில் பாலைக் கறந்து ஒரு மண் கலயத்தில் பிடித்து வந்து நீட்டினான். அவர்கள் அதையும் குடித்து முடித்

தனர். ஆனைமுத்துவுக்கு பேசாமல் அங்கேயே காலம் முழுவதும் தங்கிவிடலாமா என்றுகூடத் தோன்றியது.

நகர வாழ்க்கையில் சதா சர்வகாலமும் தலைக்கு மேல் மின்விசிறி ஓடியபடியே இருக்க வேண்டும். விலகினால் ஒரே வியர்வை.. போதாக்குறைக்கு வாகன சந்தடி, மாசுபட்ட காற்று, கலப்படமான உணவுப் பொருட்கள்..

அதோடு ஒப்பிடும்போது இதில்தான் எவ்வளவு ஆரோக்கியம்? சேகருக்கு பசி போன இடம் தெரியவில்லை. ஏனோ நம்பூதிரி எதையும் சாப்பிடவில்லை. அவர்கள் இருவர் சாப்பிடுவதையும் வேடிக்கைதான் பார்த்தபடி இருந்தார். அதே நேரம் மதிவாணன் "நம்பூதிரி! நம்பூதிரி" என்கிற ஒருவித கூக்குரலுடன் ஓடி வந்தபடி இருந்தான்.

மலைத் தலங்களில் மட்டும் ஓடவே கூடாது. மீறி ஓடினால் மிகப் பெரிய அளவில் மூச்சிரைக்கும். காற்றில் ஆகஸிஜன் தாறுமாறாக இருக்கும். மதிவாணனுக்கும் மூச்சிரைத்தது. நம்பூதிரிக்கு அவன் சொல்லாமலே அவன் எதனால் ஓடி வந்தான் என்பது புரிந்து விட்டது.

"என்னப்பா.. பிலாவடிக் கருப்பன் துரத்தினானா?"

என்று நறுக்குத் தெறித்த மாதிரி கேட்டான்.

"ஆமாம் நம்பூதிரி... அந்த நாய் புலி மாதிரில்ல துரத்திச்சு."

"அப்ப உன்னை கருப்பன் பார்த்துட்டான்னு தெரியுது. ஆமா, அவங்க இரண்டு பேரையும் பார்த்தியா?"

"அவங்க வந்துகிட்டிருக்காங்க. கூடவே அந்த நாயும் காவலா வந்துகிட்டிருக்கு.."



"அப்ப நீ என் கூடவா.." என்ற நம்பூதிரி சேகரையும் ஆனைமுத்துவையும் அங்கேயே விட்டு விட்டு வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

நடந்து கொண்டு இடுப்பு வேட்டி மடிப்பில் இருந்து ஒரு மைக் குப்பியை எடுத்து ஆள்காட்டி விரல் நுனியில் துளிபோல வழித்து அதை அப்படியே தன் நெற்றிப் புருவம் மேல் பூசிக் கொண்டார். திரும்பவும் வழித்து மதியின் புருவத்தின் மேலும் பூசி விட்டார்.

"இது எதுக்கு நம்பூதிரி?"

"இது வசியமை. எப்பேர்ப்பட்ட கொடிய மிருகங்களும் இனி உன்னை, என்னை ஒண்ணும் செய்யாது."

என்று அவர் சொன்னபோது முரடான ஒரு காட்டு எருமை ஒன்று அடர்ந்த புதர்க்கூட்டம் ஒன்றின் நடுவில் இருந்து நிமிர்ந்து பார்த்தது. அதன் முதுகின் மேல் சில காட்டுப் பறவைகளும் உட்கார்ந்திருந்தன. நம்பூதிரி தைரியமாக அந்த எருமையை நோக்கிச் சென்றார். எருமை ஏதோ வீட்டில் வளர்க்கும் ஸ்னேக பாவத்துடன் நம்பூதிரியை எதிர்கொண்டது. அந்த பறவைகளும் நம்பூதிரியைப் பார்த்துவிட்டு கலைந்தெல்லாம் பறக்கவில்லை.

மதிவாணனுக்கு பலத்த ஆச்சரியம்.

நம்பூதிரியும் திரும்பி வந்தார்.

"மதிவாணா... நீ எப்படியாவது அந்த இரண்டு பேரை நம்ம குகைப் பகுதிக்கு கூட்டி வந்துடு. அவங்களால நமக்கு நிறைய காரியங்கள் ஆக வேண்டியிருக்கு" என்றார். மதியும் அவர் சொன்னதைக் கேட்டு திரும்பிச் செல்ல தொடங்கினான்.

கிட்டத்தட்ட மூன்று மைல் தூரத்தை கடந்து விட்டிருந்தார்கள் அவர்கள் இரண்டு பேரும்! சதாசிவம் மினரல் வாட்டர் பாட்டில் ஒன்றை வாங்கி வந்திருந்தார். அதில் தண்ணீர் தீரவும் பக்கவாட்டில் ஒரு சரிவில் ஓடியபடி இருக்கும் ஓடை நீரைப் பிடித்து வந்து உமையாம்பிகையிடம் தந்தார்... அங்கங்கே தென்பட்ட நெல்லி மரங்களுக்கு கீழே உதிர்ந்திருந்த நெல்லிக் காய்களையும் கொண்டு வந்து தந்ததில் அந்த காய்களைத் தின்றுவிட்டு அந்த தண்ணீரையும் குடித்தபோது ஏதோ அமிர்தத்தையே அள்ளிக் குடிக்கின்ற மாதிரிதான் இருந்தது உமையாம்பிகைக்கு.

அவர்கள் வந்த நேரம் பெரிதாக ஜனக்கூட்டமும் இல்லை. கருப்பு நாய் அவர்களைச் சுற்றியே வந்தபடி இருந்தது.

"நாம இப்ப இந்த மலைல யாரைப் பார்க்கப் போறோம்..!" என்று சதாசிவத்திடம் கேட்டாள் உமையாம்பிகை.

"அம்மா! ஜவ்வாது சித்தர்னு எனக்கு தெரிஞ்சு ஒரு சித்தர் இருக்காரு... அவரைப் பார்த்துட்டா போதும். அவராலதான் நான் இப்ப உங்க முன்ன உயிரோடயே இருக்கேன். அவர் மட்டும் அந்த குங்குமப்பூ டப்பாவை கிளி வடிவத்துல வந்து தட்டி விடாம போயிருந்தா என் மகளும் செத்துப் போயிருப்பா..." என்றபோது அவர் கண்ணிரண்டும் கலங்கிவிட்டன. உமையாம்பிகைக்கும் அதைக் கேட்க சங்கடமாக இருந்தது.

"உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு... உங்களை அழிக்க நினைச்சார் என் புருஷன். ஆனா, இப்ப அவர் உயிருக்குப் போராடும்போது அவரைக் காப்பாத்த நீங்க



கொஞ்சம்கூட தயங்கலை. என் வீட்டுக்காரருக்கு மனிதர்களோட மதிப்பே எப்பவும் தெரிஞ்சதில்லை. அவர் வரைல பொன்னும் பொருளும்தான் பெருசு. இப்ப பொன்னும் பொருளுமா அவரைக் காப்பாத்தப் போகுது?"

அவளும் பெருமூச்சுவிட்டாள். அப்போது மதிவாணனும் எதிரில் திரும்பத் தெரிந்தான். ஒரு அதிசயம் போல அவன்கிட்டே வரும் சமயம் கருப்பு நாயும் குரைக்கவில்லை. அவன் அதையும் பார்த்தவனாக அவர்கள் அருகில் வந்து இளைப்பாறுபவன் போல அமர்ந்தான். மதிவாணனும் உமையாம்பிகை அவனைப் பார்க்கவும் சிரித்தான்.

"சாமி கும்பிட வந்தீங்களோ?" - என்று ஆரம்பித்தான்.

"ஆமாம்ப்பா..." என்று ஒரு வார்த்தையில் முடித்துக் கொண்டார் சதாசிவம்.

"நம்பூதிரி சாமி நீங்க வந்துகிட்டிருக்கறத சொல்லி என்னையும் அனுப்பி வெச்சார். நீங்க சாமி கும்புட மட்டுமல்ல. ஒரு வியாதிக்கு மூலிகை மருந்து தேடியும் வந்திருக்கீங்க... சரிதானே?"

அவன் கேட்டதும் உமையாம்பிகைக்கு தானாக முதுகு நிமிர்ந்தது. சதாசிவமும் ஆச்சரியத்தோடு பார்த்தார்.

"என்ன பாக்கறீங்க... நான் கேட்டது சரிதானே?"

"ரொம்ப சரிப்பா... அது யாருப்பா அந்த நம்பூதிரி..."

"வந்து பாருங்க தெரியும். உங்க தேடலுக்கு அவர் கிட்ட மருந்து இருக்கு..."

"நிஜமாவா?" உமையாம்பிகை மிகவே உணர்ச்சி வயப்பட்டாள். ஆனால், சதாசிவம் அவனை வைத்த விழியை எடுக்காதபடி பார்த்துக் கொண்டிருந்தார்.

"நீங்க என்ன அப்படிப் பார்க்கறீங்க.. வாங்க போவோம்" என்று எழுந்தான் அவன்.

"உன்னைதானே தம்பி என் கருப்பு நாய் முந்தி துரத்திச்சு?" சதாசிவம் அப்படி ஒரு கேள்வி கேட்பார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. தடுமாறியவன், "அது நான் இல்லீங்க.. நான் இப்பதான் வரேன்.." என்றான்.

"பொய் சொல்றே நீ..."

"சேச்சே... சரி, நீங்க நம்பாட்டி போங்க. நல்லதுக்கே காலமில்லை.." என்று மதி கூறவும், சில மணி நேரம் முன்பாக இறந்த ஆட்டைத் தோளில் போட்டுக் கொண்டு வந்து மதிவாணனுக்கும் சேகருக்கும் செம்பெருஞ்சாவியை அடையாளம் காட்டிய அதே பளியன் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

வந்தவன் மதியை பார்த்து, "ஏங்க செம்பெருஞ்சாவி கிடைச்சிச்சா...?" என்று கேட்டான்.

"கிடைக்காம... விடுவோமா? அது கிடைச்சு அதை சாப்பிட்டு என் சினேகிதனுக்கு ரத்தப் பெருக்கும் நின்னு இப்ப கலகலன்னு இருக்கான்..." என்றான்.

"பொறவு- செம்பெருஞ்சாவியை அரைச்சு குடிச்சா ரத்தத்துல புத்து இருந்தா அதுகூட அழிஞ்சு ரத்தம் சுத்தமாகிடுமே.." என்றான் பளியன்.

அவன் சொன்ன செய்தி உமையாம்பிகையை நிமிர்த்தியது. அவள் தேடி வந்திருப்பதும் அதற்குதானே?



# 24

**சி**த்தர்களில் யாக்கோபு என்று ஒரு சித்தர்! இவரது பெயரே வித்தியாசமாக இருப்பது மட்டுமல்ல... இவரும் மிக வித்தியாசமானவர். சித்தர்கள் என்பவர்கள் மதம், மொழி, இனம் கடந்தவர்கள் என்பதற்கு இவரே பெரிய சான்றாக விளங்குபவரும் கூட... இவரது இயற்பெயர் ராமதேவர் என்பதாகும். நாகப்பட்டினத்திலும் காசியிலும் இவர் ஞானம் தேடிச் சுற்றியவர். காசியில் கங்கையில் மூழ்கும்போது ஒரு சிவலிங்கம் இவருக்கு கிடைக்கிறது. அதை நாகப்பட்டினம் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து வழிபடுகிறார்.

இறை ரூபங்களில் லிங்கரூபம் மிக வித்தியாசமானது. ஆழ்ந்த அகப்பொருள் உடையது. லிங்கத்தின் கீழ் உள்ள ஆவுடை 'சக்தியை குறிக்கும். நிமிர்ந்து நிற்கும் லிங்கமே இயக்க சக்தியை குறிக்கும். அதாவது சக்தி இயங்கிடும்போது உலகம் தோன்றியது. அதனுள் உயிர்கள் தோன்றின. எனவே ஒரு சிவலிங்க ரூபமானது சிவசக்தியை மட்டும் உணர்த்தவில்லை. அதை வழிபடுகிறவரும் அதனுள்ளேதான் அடக்கம் என்று சொல்லாமல் சொல்கிறது. மெல்ல மெல்ல நாம் வேறு அது வேறு இல்லை. நாம் வேறு கடவுள் வேறு இல்லை என்கிற பெரும்பொருளை அது காலப்போக்கில் நமக்கு உணர்த்துவதோடு நாமும் இறைவனுடன் கலந்திட அது துணை செய்கிறது..

ராமதேவரும் அந்த லிங்கத்தை வழிபட்டு தன்னை அறிந்தார். அறிந்ததோடு உயிர்வாழ்ந்திடும்

நாளில் உடல் நிமித்தம் அனுபவித்திடும் துன்பங்களை அதாவது பசி, வியாதி, காமம், பயம் இதனால் உடலுக்கு நேரிடும் துன்பங்களை விரட்ட அவரே உரிய மருந்தினை கண்டறிந்தார். இதனால் இவர் சித்தர்கள் வரிசையில் போகர், தேரையருக்கு பிறகு சித்த வைத்தியம் புரிவதில் தலைசிறந்தவராக விளங்கினார். வைத்தியத்தின் பொருட்டு மூலிகைகளைத் தேடிக்கொண்டு இமயம் வரையெல்லாம் சென்றார்.

ஆகாய மார்க்கத்தில் சஞ்சரிக்கச் செய்யும் குளிகை ஒன்றை வாயில் அடக்கிக் கொண்டு இந்த உலகமெங்கும் சுற்றி வந்த இவர், மொகலாயர்களின் புண்ணிய ஷேத்ரம் எனப்படும் மெக்கா நகரையும் அடைந்தார். பாலைவனங்களுக்கு நடுவிலான வெப்பம் சூழ்ந்த அந்த நகரில் வாழ்பவர்கள் உஷ்ணாதிக்கத்தின் பாதிப்பில் இருந்து விடுபடப் பயன்படுத்தும் மூலிகைகளை எல்லாம் அங்கே கண்டறிந்தார். தான் கற்ற வைத்தியத்தை அங்கேயும் பயன்படுத்தி பெரும் புகழ் பெற்றார். அங்குள்ளவர்கள் இவரை யாக்கோபு என அழைத்தனர். பின் இந்த பெயரே இவர் வரையில் நிலைபெற்றது.

இவரை பற்றி நாம் அறிந்திடும் அதேசமயம் மத மாச்சர்யம் கடந்து அன்பு செலுத்துவது முக்கியம் என்பதை இவர் உணர்த்துவதாக கொள்ளலாம்!

அந்த பளியன் கேட்ட விதமும் அதற்கு மதிவாணன் பதிலளித்த பாங்கும் உமையாம்பிகையை பெரிய அளவில் உசுப்பி விட்டது. மதிவாணனும் உமையாம்பிகையைக் கவனித்தான். அவள் முகத்தில் தெரிந்த



ஆர்வத்தை அப்படியே பயன்படுத்திக் கொள்ள தயாரானான். பளியனும் செம்பெருஞ்சாவியை பெரிதாக புகழத் தொடங்கினான்.

“செம்பெருஞ்சாவி பத்தி எங்களுக்கே பெருசா எதுவும் தெரியாது... இந்த மலைக்காட்டுக்குள்ள அல்லாடற ஜீவனுங்கதானே நாங்க? பல சமயங்கள்ல மிருகங்ககிட்ட மாட்டிக்குவோம். அப்பல்லாம் பெரிய அளவில் ரத்த காயம் ஏற்படும். இங்க என்ன டாக்டருங்களா இருக்காங்க. சின்ன காயம்னா குப்பமேனி அதுவே பெருசுன்னா ஓதியமரப்பட்டையை வெச்சு கட்டுவோம். நிக்காம ரத்தம் போனாலோ இல்ல உடம்புக்குள்ள ரத்தம் கெட்டுப் போயிட்டாலோ, செம்பெருஞ் சாறுதான் எங்களுக்கு மருந்து. எங்க மேலேயும் கருணை வெச்சு சித்தர் சாமிங்கதான் எங்களுக்கு அடையாளம் காட்டிக் கொடுத்தாங்க. அதை கண்டு பிடிக்கிறதும் ஆனாலும் கஷ்டம்...” என்று அதன் பின்புலத்தையும் சொல்லி முடித்தான்.

“அந்த மூலிகையால ரத்த சம்பந்தமா, எந்த வியாதியையும் தீர்க்க முடியுமா?” உமையாம்பிகை ஆர்வம் தாளாமல் கேட்டாள்.

“தாராளமா... ரண ஜன்னிக்கே அது பெரிய மருந்துங்க. தினசரி மூணு வேளைன்னு ஒரு வாரம் அதோட சாறைக் குடிச்சா எப்பேர்ப்பட்ட ரத்த சம்பந்தப்பட்ட வியாதியும் துண்டக் காணோம் துணியக் காணோம்னு ஓடிடும்ல...?” பளியன் சொன்ன பதில் சதாசிவத்துக்கு திருப்தியை தரவில்லை. அது அவர் தீவிரமாய் யோசிப்பதில் தெரிந்து போனது.

மதிவாணன் அசரவில்லை. பளியன், “சரிங்க சாமி! நான் புறப்படறேன்” என்று புறப்பட்டுப் போனான்.

"என்னம்மா யோசனை.. அந்த மூலிகை மட்டுமில்ல, உங்க குடும்பத்துல ஏதாவது பிரச்சினை இருந்தா அதுக்கு யந்திரங்கள் செய்து கொடுத்து தீர்த்து வைக்கறதுலயும் எங்க நம்பூதிரி சாமி பெரிய ஆளு.. அவரும் ஒரு சித்தர்தான். என்கூட வாங்க. மத்ததெல்லாம் உங்களுக்கு தானா புரியும்.."

மதிவாணன் பேச்சோடு பேச்சாக முன்னால் நடந்தான். உமையாம்பிகையும் அவனை பின்தொடர்ந்தாள். சதாசிவம் அரைமனதாக அவர்கள் இருவரையும் தொடர்ந்தார்.

ஆஸ்பத்திரி கட்டிலில் லேசாக அரை கண்களை திறந்திருந்தார் ராமலிங்கம்! அருகிலேயே பார்த்திபன். அவர் கண்களைத் திறக்கவும், அப்பா என்று எழுந்து முகமருகே போய் நின்றான்.

அவன் கற்பனைகூட செய்து பார்க்க முடியாத ஒரு கோலத்தில் அவர் அவனைப் பார்த்தவிதமே அவனை என்னவோ செய்தது.

"எங்கப்பா உங்கம்மா?"

"அம்மா...அம்மா.."

"ஏன் தடுமாறுறே..."

"அது வந்துப்பா.. அம்மா உங்களுக்கு மருந்து தேடி சதுரகிரி மலைக்காட்டுக்குப் போயிருக்காங்க.."

"சதுரகிரிமலைக்கா.. அப்ப இங்க டாக்டர் கைய விரிச்சுட்டாரா?"

"அப்படி இல்லப்பா... அம்மா அலோபதியவிட சித்த வைத்தியத்துல நீங்க வேகமா குணமாவீங்கன்னு நம்பறாங்க.."



"நீ நல்லாவே சமாளிக்கறே பார்த்திபா.. என் மகன் இல்லையா! போகட்டும்.. நான் இப்ப சொல்றத நல்லா கேட்டுக்கோ. இப்படி எனக்கு ஒரு நிலை வரும்னு நான் கற்பனைகூட பண்ணல. உன் தாத்தா, அதாவது என் அப்பா அடிக்கடி ஆரோக்கியம்தான் பெரிய செல்வம்னு சொல்வார். அப்ப அவர் ஏதோ ஒரு பழமொழியதான் சொல்றார்னு நான் நினைச்சுகிட்டிருந்தேன். இப்பதான் அதுக்கு அர்த்தம் புரியுது. எத்தனை கோடி பணம் இப்ப இருந்து என்ன புண்ணியம். நான் போய்ச் சேரப்போறேன்! நீயாவது நல்லா இரு. பணத்தால எல்லாத்தையும் வாங்க முடியாதுங்கறத நீ என்ன வெச்சே தெரிஞ்சிக்கலாம். நான் இப்ப உன்கிட்ட ஒரு விஷயம் கேட்பேன். நீ எனக்காக பேசாம உள்ளத உள்ளபடி பேசணும் பேசுவியா?"

"என்னப்பா, நீங்க என்னென்னவோ பேசறீங்க. எதுவா இருந்தாலும் கேளுங்கப்பா.."

"நீ காதலிச்சியே அந்த பொண்ணு.."

"நந்தினி.."

"அவதான்... அவளேதான்... அவமேல உனக்கு நிஜமாலுமே கொள்ளை ப்ரியமா, இல்ல அனுபவிக்கிற எண்ணத்துலதான் பழகினியா?"

அவர் கேள்வி பார்த்திபனை சிறிது நேரம் மௌனமாக்கியது.

"என்னப்பா எதுவும் பேசமாட்டேங்கறே..?"

"என்னப்பா சொல்ல.. அவமேல பெருசா காதல்னு நான் பொய் சொல்ல விரும்பலப்பா. அழகா இருந்தா அதனால...."

"சரி, இப்ப அந்த பொண்ணு..?'

"நான் எப்படியும் கல்யாணம் பண்ணிப்பேன்கற நம்பிகைலதாம்ப்பா இருக்கா. அம்மாவும் அவங்க பக்கம்..."

"நினைச்சேன்... நல்ல வேளை நான் செய்த தப்பை உடையாம்பிகை செய்யல. நான்தான் வறட்டு கௌரவம், பணத்திமிர் எல்லாத்தையும் காட்டிட்டேன்."

"அப்பா..."

"ஆமாம்பா... நீயும் திருந்தணும், நானும் திருந்தணும். என் உடம்பே என் கைல இல்ல. ஆனா, நான் எல்லாமே என் கைலங்கற மாதிரி தப்புத் தப்பா நடந்துகிட்டேன். ஒரு விதத்துல இப்படி உடம்புக்கு வந்ததுக்கு நான் சந்தோஷம்தான் படறேன். நல்ல வேளை... எனக்கு இதையெல்லாம் உணர்ந்து பேசற ஒரு புத்தியாவது இப்ப வந்ததே...!"

அதுவரை பேசிவிட்ட நிமித்தம் அவரிடம் மூச்சிரைப்பு ஏற்பட்டது. அப்படியே மூக்கு துவாரங்கள் வழியாக ரத்தக்கசிவும் ஏற்படத் தொடங்கியது.

"அப்பா! நீங்க உணர்ச்சிவசப்படாதீங்கப்பா... உங்க மூக்குல ரத்தம் வருது... இருங்க, நான் போய் டாக்டரை கூட்டிக்கிட்டு வரேன்..."

பார்த்திபன் விலகப் பார்த்தான். அவனை தன் கையால் பிடித்து இழுத்து தடுத்த ராமலிங்கம், "நீ டாக்டரை அப்புறமா கூப்பிடு... இப்ப போய் அன்னிக்கு அந்த பொண்ணுக்காக என்கிட்ட வந்து பேசின அந்த பத்திரிகைக்கார தம்பியை கூட்டிக்கிட்டு வா... நான் அவங்ககிட்ட மன்னிப்பு கேக்கணும்..."

"அப்பா..."



"போப்பா... என் கதை முடியப்போகுது. உங்கம்மா ஒரு பைத்தியக்காரி. இந்த நேரம் பார்த்து மலைக் காட்டுப்பக்கம் போயிட்டா. அவளுக்கும் போன் பண்ணி வரச் சொல்லுப்பா, போ..."

அவரின் தூண்டுதலில் ஒரு வேகம். ரத்தமோ மூக்கில் இருந்து விடுபட்டு கன்னம் வழியாக அப்படியே தலையணையில் சொட்டுச் சொட்டாக சொட்டத் தொடங்கியது. அந்த நொடி ஒரு கிளியின் கீச்சுக்குரல்! பக்கவாட்டு கண்ணாடி ஜன்னலுக்கு அப்பால் உள்ள மரக்கிளையில் வந்து அமர்ந்திருந்த அது மூக்கை உரசிக் கொண்டு கொடுத்த குரல் ராமலிங்கத்தை கவர்ந்து விட்டது.

பார்த்திபன் ஓடினான்.

முதலில் டாக்டருக்கு தகவல் தந்தான்.

அவர் வந்து சிகிச்சையைத் தொடங்கவும், விலகிப் போய் உமையாம்பிகைக்கு போன் செய்தான். ஆனால், 'நாட் ரீச்சபிள்' என்றே வந்தது.

"போயிருக்கற மலைல டவர் இல்ல போல இருக்கு..." என்று முணுமுணுத்துக் கொண்டவன், அவ்வப்போது எட்டி எட்டி உள்ளே பார்த்தான். டாக்டர்கள் ரத்தம் உறைவதற்கு ஊசி போட்டுவிட்டு வெளியில் வந்தனர்.

"அவர் பேசினாலும் நீங்க பேசாதீங்க... உணர்ச்சி வசப்படும்போது ஹார்ட் பீட் அதிகரிக்குது. அதனால பம்பிங் அதிகமாகி ரத்தம் அதிகம் வெளிப்படுது. பைதபை இந்த கண்டிஷன்ல இவர் இன்னும் 48 மணி நேரம் உயிரோட இருந்தா அதிகம். பெட்டர் டு டேக் யுவர் ஹோம். இங்க எங்க ஹாஸ்பிடல்ல நாங்க எந்த அசம்பாவிதங்கள் நடக்கறதையும் விரும்பறதில்ல..."

டாக்டர் பேசப் பேச பார்த்திபனுக்கு காதைப் பொத்திக் கொள்ளத் தோன்றியது. வேகமாக அங்கிருந்து நடந்து ஹாஸ்பிடலுக்கு வெளியில் வந்தான். அவர் சற்றுமுன் சொன்னதெல்லாம் மனதுக்குள் ஓட்டமெடுத்தது. அதே சமயம் நந்தினியைப் பார்க்க அவள் வீட்டுக்கு எந்த முகத்தோடு போவது என்பதிலும் குழப்பம்.... வெகுநேரம் தடுமாறியபின் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தவனாக தன் காரை நோக்கிச் சென்றான்!

**தி**யாகுவின் கால் கட்டினை அவிழ்த்தபடி இருந்தாள் ஜெயந்தி. எண்ணெயில் ஊறிய துணியைப் பிரித்துப் பிரித்து எடுப்பது பெரும்பாடாக இருந்தது. சுற்றி நின்று கொண்டு இமைக்கக்கூட மறந்தவர்களாக பார்த்தபடி இருந்தனர் நந்தினியும் ராகவியும்!

ராம்கி ரன்னிங் காமெண்ட்ரி போல "பார்த்துங்க... பார்த்து.. தலைவா! இப்ப வலி எப்படி இருக்கு?" என்று கேட்டபடி முழு கட்டையும் அவிழ்த்து விட்டிருந்தாள் ஜெயந்தி. தியாகுவும் அப்படியே எழுந்து நிற்க முயன்றான்.

முதலில் மெதுவாக... பின் வேகமா... இறுதியாக ஜாகிங் புரிபவன் போல குதிக்கத் தொடங்கினான். அவன் முகத்தில் ஒரு புளகாங்கிதம்.

"ஐ ஆம் ஆல்ரைட்... நான் நினைச்சது சரியாத்தான் இருக்கு. ஜெயந்தி இதே தைலம் உன் காலையும் நிச்சயம் குணப்படுத்தும். நான் விடமாட்டேன்..." என்று அவளைப் பார்க்கவும், அவள் கண்களில் பனிப்பு. ராகவியும் கண் கலங்கி விட்டிருந்தாள்.



"என்ன சின்ன மச்சினிச்சி... நீ எதுக்கு அழுவறே..."

"இது அழுகை இல்ல சார்... பரவசம். உங்கள எங்கப்பா கூட்டிக்கிட்டு வந்து நின்னப்போ ரொம்ப பயந்தோம். இப்ப அவ்வளவுக்கவ்வளவு சந்தோஷப்பட்றோம். எங்க மூணுபேர் வாழ்க்கைக்கும் இப்ப ஒரு அர்த்தம் தெரிய வந்திருக்கு. 'இதுங்கல்லாம் எங்க உருப்படப்போகுது. அம்மா இல்லாத புள்ளைகள் அதுலயும் பெருசு நொண்டி. அப்பா கைல சல்லிக்காசு கிடையாது. இரண்டாவது பொண்ணும், மூணாவது பொண்ணும் சினிமா, டிராமான்னு போய் கூத்தாடினாதான் சோறாவது திங்கமுடியும்'னுதான் இங்க எங்கள சுத்தி பேசிக்கிட்டிருந்தாங்க. அதை எல்லாம் நீங்க மாத்தி காட்டிட்டீங்க."

ராகவி குரல் உடைந்தே போனது. அது ராம்கியை நெகிழ்த்திவிட்டது. உரிமையோடு அவள் கண்ணீரை துடைத்து விட்டான். அப்படியே, "நாம இன்னும் ரொம்ப தூரம் போக வேண்டியிருக்கு. நந்தினி வாழ்க்கை நல்லபடியா விடியணும். அதுக்குள்ள இப்படி உணர்ச்சி வசப்பட்டுப் பேசினா எப்படி?" என்றான்.

"ஆமாம் ராகவி... நந்தினியை அந்த பார்த்திபன் ஏத்துக்கறதுகூட முக்கியமில்ல. அவளை நல்லபடியா நேசிக்கணும். கெடுத்தவன் தலைல கெடுக்கப்பட்டவளை கட்டி வைக்கறது தமிழ் சினிமாவோட பஞ்சாயத்து ஸ்டைல். அது ஒரு விதத்துல பனீஷ்மெண்ட் மாதிரிதான்.

நந்தினி பனீஷ்மெண்டை அனுபவிக்கக் கூடாது. அவ சந்தோஷமா வாழணும்."

தியாகு தன் கருத்தைக் கூறிய அதே சமயம் வீட்டு வாசலில் பார்த்திபனின் கார், அவனும் இறங்கியவனாக உள்ள வர சக்தியில்லாமல் அப்படியே தலையைக் குனிந்து கொண்டு நின்றான்.

"நந்தினி.. போ, போய் உள்ள கூட்டிக்கிட்டு வா. ஐயா தயங்கி நிக்கறத பார்த்தா அவர் இப்ப பணக்கார அந்த பார்த்திபன் இல்லேங்கற மாதிரிதான் தெரியுது." என்றான் தியாகு.

நந்தினியும் முன்சென்று அவன் முன் நின்றவளாக "உள்ள வாங்க.." என்றாள். அவன் அடுத்த நொடியே "என்னை மன்னிச்சிடு நந்தினி..." என்று அது வீட்டு வாசல் என்று கூட பார்க்காமல் அவள் காலில் விழுந்து விட்டான்.

## 25

**சி**த்தர்களின் பட்டியலில் பிண்ணாக்கீசர் என்ற ஒரு சித்தர் இருக்கிறார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கேற்ப இவர் பிள்ளைப் பருவத்திலேயே மிக மாறுபட்டு காணப்பட்டார். இவருடைய நாக்கு பின்னப்பட்டு பிளந்து கொண்டிருந்தால் இவரால் மற்றவர்கள் போல தெளிவாக பேச முடியவில்லை. பின்னப்பட்ட நாக்குடையவர் என்பதே மருவி பிண்ணாக்கீசர் என்றானது!

தன் பிள்ளையால் சரியாக பேச முடியவில்லை. அவன் மற்ற பிள்ளைகளோடு விளையாடுவதும் இல்லை. இதனால் தன் பிள்ளைக்கு ஏதோ குறை உள்ளது என்று கருதி வருத்தப்பட்டாள் பிண்ணாக்



கீசரின் தாய். ஆனால், உண்மையில் குறை பிண்ணாக்கீசரிடம் இல்லை. அவரை சரியாக விளங்கிக் கொள்ளாத அவள் தாயிடம்தான் குறைபாடு இருந்தது.

பிண்ணாக்கீசருக்கு இளவயதிலேயே வாழ்க்கை எப்படிப்பட்டது என்பது விளங்கிவிட்டது. சிறு வயதில் விளையாடுவதே வெற்றி எது, தோல்வி எது என்பதை புரிந்து கொள்ளவும் பழகிக் கொள்ளவும் தான். விளையாடும்போது யாராவது ஒருவர் வென்று தானே தீர வேண்டும்? ஒருவர் வெல்லும்போது மற்றவருக்கு தோல்வி ஏற்படுகிறது. இப்படி வெற்றி தோல்வி தரும் ஒரு விளையாட்டை விளையாடுவதற்கு விளையாடாமல் நடுவு நிலையில் நின்றுவிடுவதை உத்தமமாக அவர் கருதினார்.

ஒருமுறை கடும் வயிற்றுவலி வந்தது! வைத்தியர் வந்து மருந்து தந்தார். ஆனால், அதை சாப்பிடாமல் அந்த வலியை அனுபவிக்கத் தொடங்கினார். இவரின் தாயும் தந்தையும் வைத்தியரும், இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று கேட்கவும், வலியைப் புரிந்துகொள்ளவும் அதை தாங்கவும் பழகுவது பைத்தியக்காரத்தனமா என்று திருப்பிக் கேட்டார். அவர்களால் பதில் கூற முடியவில்லை.

இவரது குரு பாம்பாட்டி சித்தர்! இவர் வாழ்ந்த ஊருக்கு பாம்பாட்டி சித்தர் வந்தபோது அவர் பின்னாலேயே சென்றுவிட்டார் இவர். பாம்பாட்டி சித்தர் இவருக்கு குண்டலினி யோகப் பயிற்சி அளித்ததோடு ஸ்பரிச, நயன, திருவடி தீட்சையையும் அளித்தார். அதாவது தொட்டும் கண்களாலும்,

காலைக் காட்டியும் மௌனமாக எந்த ஒரு வார்த்தைப்பாடும் இன்றி அவர் அளித்த தீட்சையைக் கொண்டு இவரும் சரியாக புரிந்து கொண்டார். கண்கள் திறந்திருக்கையில் இந்த உலகம் இருக்கிறது. அதுவே மூடியிருக்கும்போது இல்லாது போகிறது. ஸ்பரிசிக்க பயன்படும் கைகள் இடவலமாக உள்ளன. பிரிந்திருக்கும் இவை இரண்டும் சேர்ந்தால் சக்தி அதிகரிக்கிறது. திருவடியாகிய கால்கள்தான் உடம்பை தாங்கி நிற்கின்றன. நாம் ஒரு இடத்தை கடக்கவும் பயன்படுகின்றன. கூட்டிக் கழித்தால் 'இருக்கும் உலகில் ஒன்றுபட்டு கடந்து விட வேண்டும்' என்று பொருள் வரும்.

இவர் சாகசங்கள் செய்தவரோ, மருத்துவத்தில் நிபுணரோ அல்ல. மிக மிக பரீட்சார்த்தமாய் வாழ்ந்தவர். இவர் மூலமாக நாம் அர்த்தமுள்ள செயல்பாடுகளுடன் திகழ வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்!

**கா**லில் விழுந்த பார்த்திபனை நந்தினி பதறிப் போய் தொட்டுத் தூக்கினாள். அந்த காட்சியே வீட்டினுள் இருந்த பார்த்தபடி இருந்த தியாகு, ஜெயந்தி, ராகவி, ராம்கி ஆகியோருக்கு பார்த்திபன் பெரிய அளவில் மனம் மாறிவிட்டதை ஊர்ஜிதம் செய்துவிட்டன. நந்தினியும் அவனை கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

அவனால் நிமிர்ந்து அவர்கள் யாரையுமே பார்க்க முடியவில்லை. குனிந்த தலையோடு கண்ணீரையும் பெருக்கினான்.

"என்ன மாப்ள... எங்க இவ்வளவு தூரம்?" என்று ராம்கி மெல்ல ஆரம்பித்தாள். ஜெயந்தி அவன் உட்கார சேர் எடுத்து வந்து போட்டாள். அவனோ உட்காராமல் "எல்லாம் முதல்ல என்னை மன்னிச்சிடுங்க." என்றான். குரலில் உயிரே இல்லை.



"மன்னிக்காமலா உங்கம்மாவோட இவங்கப்பா உங்கப்பாவை காப்பாத்த மலைக்காட்டுக்குப் போயிருக்காங்க.. அதெல்லாம் எப்பவோ மன்னிச்சாச்சு மாப்ளை. இனி நீங்க மனுஷனா நடந்துகிட்டா அதுவே போதும்." என்றான் தியாகு.

"நான் மட்டுமில்ல... எங்கப்பாவும் இப்ப மனசு மாறிட்டாரு. அவர் உயிர் இப்ப துடிச்சுகிட்டிருக்கு. டாக்டருங்க அவருக்கு 2 நாள் கெடு விதிச்சிட்டாங்க. இதுக்கு இடைல அவர் தன் தப்புக்கு நந்தினிகிட்டேயும் உங்க எல்லார்கிட்டேயும் மன்னிப்பு கேட்க விரும்பறார்." என்றான் பார்த்திபன்.

"சரிதான்... இப்ப நாங்க அவரைப் பார்க்கறதும், அவரை மன்னிக்கறதுமா முக்கியம்.. அவருக்கு மருந்து கிடைக்கறதும், அவர் குணமாகறதும்தான் மாப்ளை முக்கியம்..."

பார்த்திபனின் பதிலில் ஒரு திண்மை இருந்தது.

"இரண்டு நாள்ல மருந்து கிடைச்சு அப்பாவை காப்பாத்த முடியுமா?"

"சித்தர்சாமி மனசு வெச்சா 2 நாள் என்ன... இரண்டு மணி நேரம் அதுக்கு அதிகம்" என்றாள் ஜெயந்தி. பார்த்திபன் நம்ப முடியாதபடி பார்த்தான்.

"ஆமாம் மாப்ளை... என் காலைப் பாருங்க. பதினைஞ்சு நாள் முந்தி அப்பளமா நொறுங்கிப் போயிருந்தது. ஆனா, இப்ப இரும்பு மாதிரி ஆயிடிச்சு.

எல்லாம் சாமி கொடுத்த மூலிகை எண்ணெயோட மகிமை..."

"எலும்புமுறிவுக்கும் ரத்தக் கோளாறான ரண ஜன்னிக்கும் நிறைய வித்தியாசம் இருக்குல்ல...?'

"அதனால என்ன... எந்த வியாதிக்கு எந்த மாதிரி மூலிகைங்கறததான் சித்தர் சாமிங்க உள்ளங்கைலயே வெச்சிருக்காங்களே..."

"ஆமாம் மாப்ளை... நான் ஒரு கேடுகெட்ட பத்திரிகைக்காரன். வாழ்க்கைங்கறது வாழறதுக்கு தாங்கற டைப். தண்ணியடிக்காத நாள் கிடையாது. கடவுள்ங் கறவர் என் வரைல ஒரு கற்பனையான கேரக்டர்... நான் சித்தர்கள் பத்தியும், சதுரகிரி மலை பற்றியும் கேள்விப் பட்டு கட்டுரை எழுதறதுக்காக அந்த மலைக்குப் போனேன். போன இடத்துலயும் அட்டகாசம் பண்ணேன். சித்தர்சாமிங்க பார்த்தாங்க. காலை ஒடிச்சு அப்புறம் ஒட்ட வெச்சு பாடம் கத்துக் கொடுத்துட்டாங்க. நல்ல இந்த குடும்பத்தையும் கண்ணுல காட்டி வாழ்க்கைன்னா என்ன, அன்பு பாசம்னா என்னங்கறதையும் நல்லாவே உணர்த்திட்டாங்க.

நான் கெட்ட பழக்கவழக்கங்கள் கொண்டவன் தான். ஆனா நியாயமானவன். யார் தப்பு பண்ணாலும் தட்டிக் கேட்க கொஞ்சம்கூட தயங்கமாட்டேன்... அந்த நியாய புத்திக்காகதான் சித்தர்கள் என்னை மன்னிச் சிருக்கணும்னு நினைக்கறேன்..."

தியாகு நீண்ட விளக்கமளித்தான். நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். நான் என் வேலையைப் பார்க்கிறேன் என்பது போல ஜெயந்தி தன் கட்டைக் கால்களோடு நடந்து பூஜை அலமாரியில் விளக்கு ஏற்றி ஊதுபத்தியும்



பொருத்தி வைத்தாள். அலமாரிக்குள் பதினெட்டு சித்தர்களின் படங்கள்... ஜவ்வாது சித்தரும் சதாசிவமும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படமும் இருந்தது. அந்த புகைப்படத்தில் தெரிந்த ஜவ்வாது சித்தரை பார்த்து ஜெயந்தி பிரார்த்திக்க தொடங்கி விட்டிருந் தாள்.

தியாகு அதை பார்த்துவிட்டு பார்த்திபனையும் அருகில் அழைத்துச் சென்றவனாக "அவர்கள் ஜவ்வாது சித்தர்... அவரை மனசார நினைச்சு கும்பிட்டுக்கங்க மாப்ளை... அப்புறம் பாருங்க.." என்றான்.

பார்த்திபனும் கைகளைக் கூப்பி நெகிழ்ச்சியோடு வணங்கத் தொடங்கினான்!

**அ**தர்வண கிரியின் நம்பூதிரி குகைப் பகுதி! குகைக்கு வெளியே சதாசிவமும் உமையாம்பிகையும் வந்து சேர்ந்திருந்தனர். உள்ளே நம்பூதிரி அன்றைய யட்சி பூஜையில்... சேகரையும் ஆனைமுத்துவையும் நம்பூதிரி வெளியே மலர் பறித்து வரச் சொல்லி அனுப்பி யிருந்தான். அவர்கள் இருவரும் ஒரு சில நொடிகள்தான் 'என்னடா இந்த நபர் நம்மை வேலை வாங்கப் பார்க் கிறான்?' என்று எண்ணினர். நம்பூதிரி அதிக நேரம் அவர்களை அப்படி எல்லாம் யோசிக்க விடவில்லை. தன் வசிய மந்திரத்தால் அவர்கள் இரண்டு பேரையும் க்ஷணத்தில் வசியப்படுத்தி விட்டான். இனி அவனாக பார்த்து விடுவித்தால்தான் உண்டு.

இப்படி ஒரு நிலையில்தான் சதாசிவத்துடன் உமை யாம்பிகையும் வந்திருந்தாள். மதிவாணன் குகைக்குள் சென்று வெற்றிகரமாய் இருவரையும் அழைத்து வந்து விட்டதை கூறினான். நம்பூதிரி அவர்களை உள்ளே

அழைத்து வரச் சொன்னான். மதிவாணன் அதே போல அவர்களை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

சதாசிவமும் உமையாம்பிகையும் தடுமாறியபடி தான் உள்ளே சென்றனர். குகையின் இண்டு இடுக்குப் பாகங்களில் தீப்பந்தங்கள் அரைகுறையாக எரிந்து கொண்டிருந்தன. குகைப் பாதையும் லேசான வளைவு களுடன் இருந்தது. சில இடங்களில் வவ்வால்கள் தொடங்கிக் கொண்டிருந்தன. அதைப் பார்த்த சதா சிவம் மூக்கைச் சுழித்துக் கொண்டார்.

சித்தர்கள் தங்கியிருக்கும் குகைகளுக்குள் வவ்வால்கள் நுழையாது. நுழைந்தாலும் அவர்கள் அவைகளை அங்கே தங்கவிட மாட்டார்கள். தான் தங்கியுள்ள இடத்தையே தனது கழிவால் நாற்றமடிக்க வைத்துவிடுவதுதான் வவ்வால்களின் வழக்கம். தலை கீழாக தொங்கிப் பிழைக்க வேண்டிய சாபப்பிறவிகள் அவை!

சதாசிவத்துக்கு அந்த குகைக்குள் துளியும் அருளே இல்லை என்பது தெரிந்து போனது. உள்ளே நம் பூதிரியும் பத்மாசன கோலத்தில், "வரணும், வரணும்" என்று வரவேற்று இருவரையும் புன்னகையோடு பார்த்தார். உமையாம்பிகை தயக்கமின்றி கும்பிட்டாள். ஆனால், சதாசிவத்துக்கு கை வரவில்லை. அதை நம்பூதிரியும் கவனித்தார். கண்ணிரண்டும் பார்த்தபடி இருக்க, மனது யட்சிணியை கூப்பிட்டு, சதாசிவம் இறுக்கமாக இருப்பது ஏன் என்று கேட்டான்?

"அவன் அப்படிதான்... இதே மலைல இருக்கற ஜவ்வாது சித்தன்கறவன்தான் இவனோட குரு. அந்த குருவை தவிர யாரையும் இவன் கும்பிடமாட்டான். உன்



வரைல இவன் ரொம்பவே சந்தேகப்படறான்" என்றது அதுவும்.

நம்பூதிரியிடம் சட்டென்று ஒரு சிலிர்ப்பு.

"நீங்க ஜவ்வாது சித்தரோட சிஷ்யப் பிள்ள தானே?" என்று கேட்டான். சதாசிவம் முகம் உடனேயே பிரகாசமாக மாறியது.

"ஆமா... சாமிய உங்களுக்கு தெரியுமா?"

"சரிதான்... நான் ஜவ்வாது சித்தன் எல்லாருமே இங்க ஒண்ணாதானே சித்த யோகம் புரியறோம்..."

"அப்படியா... நான் சாமியை எப்பவும் தனியா தானே பார்த்துருக்கேன்."

"ரெண்டு பேருக்கும் தனித்தனி கூடு... ஆனா, பாதை ஒண்ணுதான்."

சதாசிவம் மெல்ல சகஜமாகத் தொடங்கினார்.

"இன்னிக்கு காலைல பூஜைல உட்காரும்போதே உங்க ரெண்டு பேர் உருவமும் திருஷ்டியில் குறுக்கிட்டது. உங்க பிரச்சினையும் அர்த்தமானது. பாவம் நீங்க! ஒரு பக்கம் ரத்த வினையால சாகக்கிடக்கற இவங்க புருஷன், இன்னொரு பக்கம் புருஷத் துணைக்கு வழி இல்லாத உங்க மகள்... சரிதானே?"

நம்பூதிரி கேட்ட விதமும் குரலின் தொனியும் உமையாம்பிகையை பரவசப்படுத்தியது. சதாசிவத்திடம் மட்டும் நெருடல் தொடர்ந்தபடியே இருந்தது. நம்பூ திரிக்கு அது புரியாமல் இல்லை.

"சும்மா உங்க கணவரை நான் நிமிர்ந்து உட்கார வைக்கறேன். எந்த வியாதியால உங்க கணவர் உயிர் போகும்னு டாக்டர்கள் சொல்லியிருக்காங்களோ அதே

டாக்டர்கள் இனி இவர் உயிருக்கு ஆபத்தே கிடையாதுன்னு சொல்ல வைக்கிறேன். உங்களுக்கு சந்தோஷம்தானே?" என்று கேட்ட நம்பூதிரி, சதாசிவத்தை தன் வசியப் பார்வையால் பார்த்து "ஐயா! நீங்க இங்கயே இருங்க.. நான் இவங்க கூட போய் இவங்க கணவரை குணப்படுத்திவிட்டு வரேன். நாங்க இங்க வந்த பிறகு நீங்க போய் மலைல சாமி தரிசனம் பண்ணிட்டு அப்புறமா கீழ இறங்கலாம்.." என்றான். சதாசிவம் சாமி மாடு மாதிரி தலையை ஆட்டினார்.

"வாங்கம்மா உங்க கணவர் இருக்கற ஆஸ்பத்திரிக்கு போவோம்.." நம்பூதிரி புறப்பட்டான். கச்சிதமாக ஆனைமுத்துவும் சேகரும் ஒரு ஓலைக் கூடையில் ஏராளமான பூக்களோடு எதிரில் வந்து நின்றனர். மேலே சட்டை இல்லை... ஆனைமுத்து கீழே வேட்டியை விவசாயி போல கச்சமாக கட்டிக் கொண்டிருந்தார். சேகர் பேண்டை முழங்காலுக்கு மடக்கி விட்டுக் கொண்டிருந்தான். பார்ப்பதற்கு பரம்பரை அடிமைகள் போலவே இருவரும் தெரிந்தனர். மதிவாணனுக்கே அவர்களைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. ஆனால், காட்டிக் கொள்ளவில்லை. மனதுக்குள் வித்தியாசமாக எதை நினைத்தாலும் அதை நம்பூதிரி கண்டுபிடித்து விடுவான் என்கிற பயம் வேறு..

"மதி.. இவங்க இரண்டு பேரும் இன்னிக்கு குறளி பூஜை செய்யட்டும். நீ பக்கத்துல இருந்து சொல்லிக் கொடு. குறளிக்கு தேவையான குருதியை புதுசா வந்துருக்கற பெரியவர்கிட்ட கேள். அவர் தருவார்.." என்று கண் சிமிட்டலாக மதிவாணனிடம் கூறிவிட்டு கிளம்பினான். உமையாம்பிகை ஒருவித மறுப்பும் இன்றி பின் தொடர்ந்தாள்!

ஆஸ்பத்திரி!



பார்த்திபன் அவர்கள் அவ்வளவு பேருடனும் ராமலிங்கம் முன் சென்று நின்றான். ராமலிங்கத்திடம் பெரிய அளவில் தெம்பு இல்லை. கண்ணிரண்டும் பாதி திறந்திருக்க, பரிதாபமாக பார்த்தார்.. மார்பு மிக மிக லேசாக எழும்பி எழும்பி அடங்கிக் கொண்டிருந்தது. கைகளைக் கூப்பி மன்னிப்பு கேட்க முயன்றார். ஆனால், முடியவில்லை. பார்த்திபன் கூட்டமாக வந்திருப்பதை பார்த்த டாக்டர் அவனிடம், "அவர் உணர்ச்சிவசப் படும்படி எதுவும் பேசாதீங்க.. அதனால ரத்த ஓட்டம் அதிகமாகி உடனேயே மரணம் நிகழலாம்.." என்றார்.

அதைக் கேட்ட நந்தினி தன்னையும் மறந்து உடைந்து போய் அழுதே விட்டாள். அவள் அழுவது ராமலிங்கத்தை நெகிழ்த்திவிட்டது. அவரது அரைக் கண்களில் நீர் துளிர்த்தது.

தியாகு அதைப் பார்த்து வேகமாய் ஒரு முடிவுக்கு வந்தான்.

"டாக்டர் நாங்க ஒரு காரணமாதான் இங்க வந்தோம்.. இவருக்கான மருந்தை தேடி இவங்க மனைவியும் இந்த பெண்ணோட அப்பாவும் ஒரு மலைக்குப் போயிருக்காங்க. அவங்க கட்டாயம் மருந்தோட வந்துடுவாங்கங்கற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு.." என்று தியாகு சொல்லும்போதே பார்த்திபனின் செல் போனில் இருந்து அழைப்பொலி. அவனும் திரையைப் பார்த்து 'அம்மா' என்று உற்சாகமாய் குரலும் கொடுத்தான்.

"பார்த்தி அம்மா பேசறேன்பா.."

"அம்மா! இப்ப எங்க இருக்கீங்க.. மருந்து கிடைச்சிடுச்சா?"

"கிடைச்சிடுச்சுப்பா.. அதோட நான் நம்பூதிரி சாமி ஒருத்தரை கூட்டிக்கிட்டு வந்துகிட்டே இருக்கேன்.."

"வேகமா வாங்கம்மா… அப்பாவுக்கு நாடி அடங்கிகிட்டே வருது…"

பார்த்திபன் குரலில் தெரிந்த பதைப்பு உமையாம்பிகையை அந்த பக்கத்தில் உலுக்கி எடுத்து விட்டது.

"எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ வந்துடறேன்பா…" என்றாள். பின் பார்த்திபன் அந்த தகவலை டாக்டரிடம் சொன்னபோது டாக்டரிடம் ஒரு சின்ன வறட்டுச் சிரிப்பு!

"என்ன சார்?"

"பல்ஸ் மொத்தமாக இறங்கிக்கிட்டு இருக்கு… மருந்து உள்ள நுழையணும்னா அது ஊசியா இருந்தா சாத்தியம். சித்த வைத்தியத்துல மூலிகை மருந்தை விழுங்கணும். உங்கப்பாவுக்கு விழுங்கற சக்திகூட இப்ப இல்லை…

நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க… நூறு பர்சண்ட் இவர் பிழைக்க சான்ஸே இல்லை. நீங்க தயவு செய்து உங்க வீட்டுக்கு கொண்டு போய் அங்க வெச்சு என்ன வேணா பண்ணிக்குங்க. எங்க ஹாஸ்பிடல்ல ஒரு உயிர் போனதுன்னு இருக்க வேண்டாம். ப்ளீஸ்…"

டாக்டர் கைகளைக் கூப்பினார். அதைக் கேட்டு ஜெயந்தி, தியாகுவைத்தான் பெரும் தவிப்போடு பார்த்தாள்.

"நோ பிராப்ளம் டாக்டர்… சாரை நாங்க இப்பவே கூட்டிட்டுப் போறோம். ஆனா ஒண்ணு… இவர் நிச்சயம் பிழைப்பார். நானே சொல்றேன்னா பாத்துக்குங்க…" என்று தியாகு மிகவே உணர்ச்சி வயப்பட்டான்.

உடனேயே ஸ்ட்ரெச்சர் வந்தது… அதில் ராமலிங்கம் உடம்பும் கடத்தப்பட்டது. அந்த அறையை



விட்டு அவரை நகர்த்திச் செல்ல முயலும்போது "என்னங்க…" என்கிற பீதியான குரலுடன் உமையாம்பிகை நிற்க, கூடவே நம்பூதிரியும்!

அதுவரை ராமலிங்கத்தின் திறந்திருந்த கண்களிரண்டும் உமையாம்பிகை வரவும் மூடிக் கொண்டன!

"ஐயோ… என்ன ஆச்சு எங்க கொண்டு போறீங்க?" என்று உமையாம்பிகை பதறிட, நம்பூதிரி எந்த பதட்டமும் இன்றி ராமலிங்கத்தின் உச்சந்தலையில் மிக மிக மையத்தில் உள்ள நான்கே நான்கு முடிகளை கைகளால் துல்லியமாக தேடிப் பிடித்து ஒரு இழு இழுத்தார்.

டக்கென்று அவர் கண்ணிரண்டும் திறந்து கொண்டன!

## 26

'சித்த புருஷர்களில் இந்த உலகம் நன்கு அறிந்த ஒரு சித்தர் பெருமகன் பாம்பாட்டி சித்தர் ஆவார். அடிப்படையில் இவர் ஒரு பாம்பு பிடிக்கும் பிடாரன் இனத்தைச் சேர்ந்தவர்… காட்டுக்குள் நாகரத்தினம் கக்கும் நாகங்களை தேடி அலைவதையே வாழ்க்கையாக கொண்டிருந்தார். ராஜநாகங்களைக்கூட தனி மனிதராக தன் கைகளால் பிடிப்பதை வழக்கமாய் கொண்டிருந்த இவருக்குள் தன்னைப் போல பாம்பு பிடிக்க யாராலும் முடியாது என்கிற ஒரு கர்வமும், அச்சமில்லாதவன் தான் என்கிற எண்ணமும் இருந்தது.

ஆனால், அது எவ்வளவு பெரிய பிழையான கருத்து என்பதை, இவர் சட்டைமுனி என்கிற சித்தரைப் பார்த்த பிறகு புரிந்து கொண்டார். சட்டை

முனி குண்டலினி யோகப் பயிற்சியில் தேறிய ஒரு சித்தர். மனிதர்களாகிய நம் ஒவ்வொருவரின் மலப்பைக்கு கீழேயும் குண்டலினி சக்தியானது ஒரு உலோகக் கூழ் கணக்காக உள்ளது. அதை ஒரு உருண்டை வடிவில் கோலி போல ஆக்கி அப்படியே முதுகுத்தண்டுவடம் வழியாக மேலே கொண்டு சென்று சிரத்துக்கு மேல் உள்ள உச்சிப் பாகத்தில் நிறுத்துவதற்குப் பெயர்தான் குண்டலினி யோகப் பயிற்சியாகும்.

இந்த குண்டலினி சக்தி சிரசின் உச்சி பாகமாகிய சகஸ்ராரத்தில் நின்றிடும்போது தோன்றும் இன்பம் இன்பங்களுக்கெல்லாம் இன்பமாகும். அந்த நிலையில் ஒருவரை பார்க்கும்போது அவரது சிரத்துக்கு பின்னாலே ஒரு பாம்பானது படம் எடுத்து நிற்பது போலவும் இருக்கும். ஒரு மனிதன் புறத்தில் திரியும் உயிரினமாகிய பாம்புகளை அடக்கிப் பிடிப்பது ஒன்றுமில்லை. தனது குண்டலினி என்னும் பாம்பை அடக்கிப் பிடிப்பதில்தான் எல்லாமே உள்ளது!

சட்டை முனி வாயிலாக இதை பாம்பாட்டி சித்தரும் அறிந்து கொண்டார். அந்த க்ஷணமே காட்டில் திரியும் பாம்புகளைப் பிடிப்பதுதான் வீரம் என்கிற தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டவர், குண்டலினி யோகத்தில் அதன்பின் தலைசிறந்து விளங்கத் தொடங்கினார். இவரது பாடல்களும் 'பாம்பே.. பாம்பே..' என்றே முடியும். மிக ஆழமான கருத்துகளை உடையவை இவரது பாடல்கள். மனதின் மலிவான இச்சைகளை சாடியவர் இவர். உடம்பின் உறுப்பு ரகசியங்களையும் நன்கு அறிந்து போதித்தவர்.

நாமும் வாழ்வில் சரியான நெறிகளை பின்பற்றாமல் தவறான பாதைகளில் போய்க் கொண்டிருக்



கலாம். அம்மட்டில் இவரைப் பார்த்து நாமும் நல்ல பாதைக்கு வேண்டும் என்பதை பாடமாகக் கொள்ளலாம்!

மளுக்கென்று ராமலிங்கத்தின் கண்கள் திறந்து கொண்டதைப் பார்த்த எல்லோருக்குமே திகைப்பு. நம்பூதிரியோ யார் திகைக்கிறார், திகைக்கவில்லை என்றெல்லாம் பார்த்துக் கொண்டிராமல் அடுத்தடுத்து வேகமாக செயல்படத் தொடங்கிவிட்டான். மளமள வென்று தான் கொண்டு வந்திருந்த ஓலைப் பெட்டியை திறந்து அதில் காய்ந்த நிலையில் இருந்த ஒரு வேரின் நுனிப்பாகத்தில் தீ மூட்டவும் அந்த வேர் எரிந்து ஒருவித புகை வானில் பறக்கும் ஜெட் விமானக்கோடு போல உருவாகிட, அதை ராமலிங்கமும் சுவாசித்தார். ஒருவித வாசமான அந்த புகை அங்கு உள்ளவர்களையும் உறிஞ்ச வைத்தது. புகையைத் தொடர்ந்து ஒரு பாட்டிலுக்குள் இருந்து நிறைய ஊசிகளை எடுத்து அதில் ஒன்றை பாதத்தில் உட்குழிவான பக்கத்தில் ஒன்றையும், கட்டை விரலுக்கு மேல் பக்கத்தில் நகக் கண்ணுக்கு கீழேயும், இன்னொன்றை முட்டிக்கு கீழேயும், பின் ஒன்றை தொப்புளுக்கு மேலும் என்று குத்தி முடித்தான். அவன் ஒவ்வொரு ஊசியை செருகும்போதும் ராமலிங்கத்தின் உடம்பு மின் தாக்கத்திற்கு ஆளானதுபோல தூக்கித் தூக்கி போட்டது.

இறுதியாக சிறு குழந்தைகளுக்கு காதைத் திருகுவதைப் போல ஒரு திருகு திருகவும் ராமலிங்கம் உதடிரண்டையும், 'ஆ'வெனப் பிளந்தார். உள்ளே தொண்டை அண்ணம் வரை தெரிந்தது. திறந்து கொண்ட வாயினுள் பச்சையாக மூலிகைக் கரைசலை ஒரு குப்பிக்குள் இருந்து எடுத்து விட்டவன் காதை திருகியதை விட்டு விட்டு மூக்கை சுவாசிக்க விடாதபடி

அழுக்கிப் பிடிக்கவும், ராமலிங்கம் தவிக்கத் தொடங்கினார். அப்போது வாய்க்குள் விடப்பட்ட மருந்துக் கரைசல் வயிற்றுக்குள் சென்று விட்டது. இறுதியாக ராமலிங்கத்தின் பாதத்தை தன் இரு கரங்களாலும் சூடு பறக்கத் தேய்க்க ஆரம்பித்தான். நடு நடுவே விரல்களில் சொடக்கு எடுப்பும் நடந்தது. வரிசைக்கிரமமாக இல்லாமல் மாறி மாறி சொடுக்கு எடுப்பதன் பின்புலத்தில் ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று தோன்றியது.

இவ்வளவு காரியங்களும் 15 நிமிட நேரத்தில் முடிந்துவிட நம்பூதிரியும் நிமிர்ந்தான். டாக்டரிடம் ஒரு மாறாத வெறிப்பு. ராமலிங்கம் பழையபடி கண்கள் செருக மயங்கத் தொடங்கி விட்டார். அதைப் பார்த்த டாக்டர், "ஆமா.. இப்ப நீங்க செய்ததெல்லாம் என்ன? உடம்புல ரத்த ஓட்டமே கிட்டத்தட்ட அடங்கி, இதயத் துடிப்பும் அடங்கப் போற ஒரு உடம்புக்குள்ள எந்த மருந்துதான் வேலை செய்ய முடியும்? இதெல்லாம் பெரிய கூத்து.." என்றார்.

"கூத்தா, இல்லை குணப்பாடாங்கறத இரண்டு மணி நேரம் கழிச்சு தெரிஞ்சுக்குவீங்க.. உள்ள போயிருக்கற செம்பெருஞ்சாவியோட சாறு ரத்தத்துல கலக்கும் போது இருக்கு வேடிக்கை.." என்றான் நம்பூதிரி.

"சரி, என்னமோ பண்ணுங்க.. முதல்ல உடம்பை இங்க இருந்து எடுத்துக்கிட்டுப் போயிடுங்க. நான் பல தடவை சொல்லிட்டேன். இங்க எந்தவிதமான அசம்பாவிதமும் வேண்டாம். அடுத்து இந்த மாதிரி முரட்டு வைத்தியமெல்லாம் என் ஆஸ்பத்திரிக்குள்ள வேண்டவே வேண்டாம்.."

"அது எப்படி? நீங்கள் கைவிட்ட ஒரு கேஸை சித்த வைத்தியம் குணம் செய்யறத நீங்க பார்க்க வேண்டாம்?"



"எனக்கு நம்பிக்கையில்லை. முதல்ல இடத்த காலி பண்ணுங்க. இது சித்த வைத்தியமும் இல்லை. எனக்கு அதைப் பத்தி கொஞ்சம் தெரியும். ஊசியால குத்தி வர்மப்புள்ளிகளை தூண்டி விடற அக்குபஞ்சர், சுளுக்கெடுக்கற கிராமத்து வைத்திய முறை, மூலிகை சாறு கொடுக்கற வைத்திய முறைன்னு மூணு வழிமுறைகள் இங்க கையாளப்பட்டிருக்கு. பிச்சைக்காரன் ஒருத்தன் எல்லா சாப்பாட்டு இலைகளையும் வழிச்சுப் போட்டு சாப்பிட்ட மாதிரி இருக்கும்."

"சரியாக சொன்னீங்க டாக்டரே.. இந்த நம்பூதிரி சர்வ வைத்தியமும் அறிஞ்சவன். என்னைப் போல வைத்தியம் பார்க்க இங்க ஒருத்தரும் கிடையாது. சதுரகிரி மலைக்காட்டு சித்தனுங்ககூட யோகம் மட்டுமே தெரிஞ்சவங்க. ஆனா, நான் மந்திர சாஸ்திரமும் தெரிஞ்சவன்.. இப்ப கொடுத்திருக்கற மருந்து வேலை செய்யப் போறது, நான் இப்ப இவர் காதுல ரகசியமா சொல்லப் போற மந்திரத்துலதான் இருக்கு."

நம்பூதிரி சொன்ன சூட்டோடு குனிந்து காதில் மந்திரத்தையும் கூறத் தொடங்கி விட்டான்.

டாக்டர் அதற்குமேல் நம்பூதிரியிடம் பேசுவதில் அர்த்தமில்லை என்பதை புரிந்துகொண்டு பார்த்திபனைத்தான் பார்த்தார். அவர் பார்ப்பதன் பொருள் புரிந்த தியாகு, டாக்டரை சமாதானப்படுத்தத் தொடங்கினான். "டாக்டர்.. நீங்க நினைக்கற மாதிரி இங்க எந்த அசம்பாவிதமும் நடக்காது. இவர் குணமாகி எழுந்தே தீருவார். நீங்க உங்க தொழில் மேல வெச்சிருக்கற பக்தியையும் நம்பிக்கையையும் நான் நல்லாவே புரிஞ்சிகிட்டேன். கொஞ்சம் இங்க என்னதான் நடக்குதுன்னு பாருங்களேன்."

"ஸாரி மிஸ்டர்... நீங்க உங்க நம்பிக்கையையும், இவர் தன் சாமர்த்தியத்தையும் காட்ட என் ஆஸ்பத்திரி தான் உங்களுக்கு கிடைச்சிச்சா?"

"அதெல்லாம் எதுவும் இல்லை... இது ஒது புது அனுபவம். அப்படி எடுத்துக்குங்களேன்..."

"என்ன சார் நீங்க.. முதல்லயாவது மருந்துன்னு ஒன்னு தந்தார். அதையாவது கொஞ்சம் நம்பலாம். இப்ப மந்திரம் சொல்றேன்னு ஒரேடியா குழப்புறாரே..? நாம எந்த காலத்துல இருக்கோம்னு தெரியாம இப்படி நடந்துக்கறத நீங்க ஆதரிச்சா எப்படி?"

இருவரிடமும் வாதப் பிரதிவாதம் நீடித்தபோது ராமலிங்கத்திடம் ஒரு அசைவு தெரியத் தொடங்கியது. முகத்தில் சுருக்கம் விழுந்து தூக்கத்தில் கனவு காண்பவர் தன்னை அறியாமல் பேசுவதைப் போல பேசத் தொடங்கிவிட்டார்.

வார்த்தைகளில் கோவை இல்லை... ஆனால், மூளை தன் நினைவுகளை இழக்கவில்லை என்பது அதில் தெரிய வந்தது. டாக்டரும் கவனிக்கத் தொடங்கினார்.

அதுவரை பரிதவிப்போடு நம்பூதிரியையும் டாக்டரையும் மாறி மாறிப் பார்த்தபடி இருந்த உமையாம்பிகை அப்போதே நம்பூதிரியின் காலிலும் விழுந்து விட்டாள்.

நம்பூதிரியும் சிரித்தபடியே, "இனி இவரைச் சாகடிக்க அந்த எமனே வந்தாலும் முடியாது. ஆபத்து நீங்கிடிச்சு. டாக்டர் சாரே! நீங்க இனி தாராளமா உங்க மருந்துகளைத் தரலாம். இவர் மூணு நாளில் பூரணமாக குணமாகிவிடுவார்" என்றார் நம்பூதிரி. அப்படியே அவன் பார்வை அங்கிருந்த நந்தினியின் மேலும் அவளது



கர்ப்ப வயிற்றின் மேலும் சென்றது. அதை தியாகுவும், ராம்கியும் கவனித்தனர்.

"நீதானே அந்த கர்ப்பிணிப் பெண்?" நம்பூதிரியின் கேள்விக்கு நந்தினியும் ஆமோதிப்பால் தலைய சைத்தாள்.

"உன்னோட கொஞ்சம் பேசணும்மா... அப்படி வர்றியா?" என்றபடியே ஒதுங்கினான். அவள் தயங்கி னாள். தியாகு, நந்தினியை பார்த்து 'போ' என்று சைகை காட்டினான். அவளும் சென்றாள்.

நம்பூதிரி மற்றவர்களையும் அழைத்தான். அவர் களும் அவனை சூழ்ந்து கொண்டு நிற்க, உமையாம்பிகை மட்டுமே கணவனை விட்டு வருவதற்கு தயங்கினாள். "அம்மா, நீங்களும் வாங்க.. உங்க கணவருக்கு இனி ஒரு ஆபத்தும் இலலை. உங்க மாங்கல்யத்துக்கு இனி நூறு வயசு.." என்றான். அவளும் நம்பூதிரியை நெருங்கினாள்.

சதாசிவத்துக்கு எல்லாமே குழப்பமாக இருந்தது. கூடவே ராமலிங்கத்திடம் தென்பட்ட அசைவு நம் பிக்கை தருவதாகவும் இருந்தது. நம்பூதிரியும் அழைத்த விஷயத்தை பேசத் தொடங்கினான்.

'நான் இப்ப சொல்லப் போறத நீங்க கவனமா கேட்டுக்கணும். உங்க வரையில் இரண்டு சிக்கல்கள் இருந்தது. ஒன்னு அவரோட ரோகம். அது இப்ப போயாச்சு. அடுத்து இந்த பெண்ணோட கர்ப்பம். இந்த கர்ப்பம் நல்ல கர்ப்பம் இல்லை. அது தோஷமுள்ள கர்ப்பம். கர்ப்ப வயிற்றுக்குள்ளே உயிர்ப் பிண்டம் உருவம் பெறுவதற்கு முன்பே விஷம் அதை தீண்டப் பார்த்தது. நான் சொல்றது சரியா?"

நம்பூதிரியின் கேள்விக்கு பார்த்திபன் சோகமாக தலையை ஆட்டி, "ஆமாம் சாமி... இந்த கர்ப்பத்தை

நானே கலைக்க முயற்சி செய்து குங்குமப்பூவுல விஷம் வெச்சு கொடுத்தேன்" என்றான்.

"சரிங்க நம்பூதிரி.. இப்ப அதுக்கு என்ன?"

தியாகு, நம்பூதிரியை தன் பக்கம் திருப்ப முனைந்தான்.

"அதுக்கு என்னவா... இந்த குழந்தை அப்படியே பிறந்தால் நிச்சயம் ஊனமாகத்தான் பிறக்கும்.."

"ஐயோ..." - நந்தினி அலறினாள்."

"சாமி... என் குழந்தை நல்லபடியா பிறக்கணும் அதுக்கு வழி இல்லையா?" பார்த்திபன் பதைப்போடு கேட்டான்".

"இருக்கு. அதைச் சொல்லத்தான் உங்களை எல்லாம் கூப்பிட்டேன்" என்ற நம்பூதிரி தன்னோடு நந்தினியை அழைத்து செல்வதற்கு தோதாக பேச ஆரம்பித்தான்".

"சதுரகிரி மலையில் ஜ்வரலிங்கம்னு ஒரு லிங்கம். அதுக்கு இந்த பொண்ணு பாலபிஷேகம் செய்யணும்.." என்றான்.

"ஜ்வர லிங்கமா... அங்க சந்தன மகாலிங்கம்தானே இருக்கு?"

சதாசிவம் அதிர்வோடு கேட்டார்.

"அது நீங்கள்ளாம் வழக்கமா வந்து கும்பிடற லிங்கம். நான் குறிப்பிடற ஜ்வரலிங்கம் ஒரு சுனைக்குள்ள இருக்கு. எப்பவும் நீருக்குள் மூழ்கியிருக்கற அந்த லிங்கத்தை வெளியே எடுத்தாலே அதோட உடம்பெல்லாம் வியர்க்க ஆரம்பிச்சிடும். ஆகையால எப்பவும் அதை சுனைக்குள்ள போட்டு வெச்சிருப்போம்..."

"லிங்கத்துக்கும் வியர்க்குமா- ஆச்சரியமா இருக்கே?"



ஒரு லேசான அவநம்பிக்கை ராம்கியின் குரலில் தொனித்தது.

"என்கூட வந்து பாருங்க அப்ப தெரியும்.."

"அப்ப நந்தினி அந்த லிங்கத்துக்கு பாலபிஷேம் செய்தாதான் குழந்தை நல்லபடியா பிறக்குமா?"

"நிச்சயமா.."

"சரி, அதை எப்ப செய்யணும்?" - உமையாம்பிகை தான் நம்பூதிரியின் கருத்துக்கு உடன்பட்டவள் போல கேட்டாள்.

"தாமதம் கூடாது- இப்பவே செய்யணும்.. ஏன்னா உள்ள கருவானது வளர்ந்துகிட்டேயிருக்கு. ஆகையால தாமதிச்சா அந்த ஊனம் சரிசெய்ய முடியாதபடி ஆயிடும்."

நம்பூதிரி, உமையாம்பிகையை மிகவும் பயமுறுத்துவது போல பேசியதை தியாகுவும், ராம்கியும் ஓரளவு புரிந்துகொள்ளவே செய்தனர். சதாசிவம் முகத்தில் ஒரு தர்மசங்கடம் நெளிந்துகொண்டே இருந்தது. ஆனால், உமையாம்பிகை வேகமாக முடிவுக்கு வந்தவளாக "அம்மாடி... நீ சாமிகூட இப்பவே புறப்படு. உங்கப்பாவும் உன் கூட வரட்டும். இந்த பசங்களையும் கூட்டிக்கிட்டுப் போ.. நம்ம நம்பூதிரி சாமி சொன்ன மாதிரி பால் அபிஷேகம் பண்ணிட்டு வாம்மா.. அதுக்குள்ள நானும் இங்க இவரை பரிபூரணமா குணப்படுத்திடறேன். நீ வந்த உடனே வர்ற முகூர்த்தத்துலயே உங்க கல்யாணத்தையும் பண்ணிடலாம்.." என்றாள்.

நந்தினியும் தயார் ஆனாள்.

சதாசிவம் மட்டும் கவலைப்பட்டபடியே இருந்தார்.

"அப்பா.. என்னப்பா யோசனை..?" ஜெயந்தி கேட்டே விட்டாள்.

"இல்லம்மா.. இந்த நேரத்துல நம்ம ஜவ்வாது சித்தரை நினைச்சுகிட்டேன். அவர்தானேம்மா நமக்கு எல்லாம்? அவர் இருக்கும்போது இவர் பின்னால போறது நல்லதா எனக்கு படலை.." என்றார்.

நம்பூதிரிக்கு அந்த பதில் திகைப்பை தந்தது! ஏமாற்றமும் கோபமும் லேசாக உருவாகி, "நான் வேற அவர் வேறன்னு நீ ஏன்டா நினைக்கறே?" என்றான் நம்பூதிரி.

"இல்ல சாமி.. அவர் வந்து உங்க பின்னால போகச் சொன்னாதான் நான் என் மகளோட வருவேன். இவ கர்ப்பத்தை காப்பாத்தினதே அவர்தான். குழந்தையையும் அவரே காப்பாத்துவாரு. நீங்க இவங்க வீட்டுக்காரருக்கு செய்த உதவிக்கு நன்றி. தயவுசெய்து என் குடும்ப விஷயத்துல தலையிடாதீங்க. நீங்க தப்பா எடுத்துக்கிட்டாலும் சரி.."

சதாசிவத்தின் பதில் நம்பூதிரியின் முகத்தை சிவக்க விட ராம்கி, தியாகுவின் காதை கடிக்க தொடங்கினான்.

"சார்! எதுக்கு சார் இந்த நம்பூதிரி இப்படித் தேடி வந்து உதவி செய்ய துடிக்கறான். இதுக்குப் பின்னால என்னவோ இருக்கு சார்.." என்றான்.

"அதே கருத்துதான் எனக்கும்.." என்றான் தியாகு.

## 27

**புலிப்பாணி என்று ஒரு சித்தர்!**

இன்றைய ஜோதிட சாஸ்திரத்துக்கு அன்றே தன் பாடல்களில் விரிவுரை எழுதியவர் எனலாம்.



நமக்கெல்லாம் நாளாகட்டும், இல்லை விண்ணில் சுழன்றபடி இருக்கும் கோள்களாகட்டும், அதற்கும் மேலான நட்சத்திரங்களாகட்டும், இவையெல்லாமே நம்மைப் போலவே இந்த உலகில் உள்ளவை. மதைக் கடந்து இவைகளைப் பார்க்கவும் இவை பற்றி யோசிக்கவும் நம் வரையில் எதுவுமில்லை. ஆனால், புலிப்பாணி அப்படி இல்லை... விண்ணில் நிலவும் மாற்றங்களையும், நட்சத்திரங்களின் கதிர் ஆதிக்கத்தையும் கவனித்து அவை மனித வாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்பு எல்லாம் உணர்ந்து அவைகளை பாடலாகவும் எழுதியவராவார்.

இவர் பழனியம்பதியைச் சேர்ந்த போகர் என்னும் சித்தரின் மாணவராவார். காட்டுக்கு ஒருமுறை மூலிகை தேடிச் சென்ற போகர் அங்குள்ள ஒரு விஷத்தாவரம் காரணமாக மயங்கி விழுந்து விட்டார். அவரை தேடிக்கொண்டு வந்த புலிப்பாணி, மயங்கிக் கிடக்கும் போகர் அருகில் ஒரு புலியும் அமைதியாக நிற்பத்தைப் பார்த்து அதிசயித்தார். போகரை மயங்கச் செய்த தாவரமே புலியை செயலற்றதாக்கிவிட்டது. இதை நுட்பமாக அறிந்த புலிப்பாணி சுவாசிக்காமல் புலி அருகே சென்று, அதன்மேல் அமர்ந்துகொண்டு, நீர் நிலை ஒன்றை நெருங்கி அங்கிருந்து நீர் கொண்டு வந்து போகரின் மயக்கத்தை தெளிவித்து பின்பு அவரை பழனிக்கு அழைத்து வந்ததால் அவருக்கு புலிப்பாணி என்கிற பெயர் வந்ததாக ஒரு கதை உண்டு.

ஒரு வகையில் குருநாதாரான போகரை விஞ்சிய சீடர் இவர். போகர் மூலிகை மருத்துவதற்கு பெயர் பெற்றவர். போகர் நாலாயிரம் என்னும் நூல், சித்த வைத்திய உலகிற்கு ஒரு வரப்பிரசாதம்!

இந்த போகரே பழனியம்பதியில் நவபாஷாணங்களைக் கொண்டு தண்டாயுதபாணி உருவத்தை செய்தவராவார். நவபாஷாணங்களை சரியான விகிதத்தில் கலந்து செய்தால் அது கல்போல் ஆகும். அதுமட்டுமின்றி அது அருமருந்தாகவும் திகழும். அந்த விகிதாசாரம் மாறிப்போனால் அதன் அருகே செல்வதுகூட உடலை பாதிக்கும். இந்த நவபாஷாண ரகசியத்தை போகர் தனக்குப் பிறகு புலிப்பாணிக்கு உபதேசித்து, புலிப்பாணியும் ஒரு நவபாஷாண உருவத்தை செய்து அது பழனியில் இன்றளவும் ரகசியமாக உள்ளதாகவும் ஒரு வரலாறு உண்டு.

போகர் மருத்துவ ரகசியங்களை மட்டுமே அறிந்தவர். புலிப்பாணி மருத்துவ ரகசியங்களோடு கால ஞானமும் உடையவராக இருந்தார். காலகதியில் கழிந்து கொண்டே இருககும் நேர ஓட்டத்துக்கு இடையில் நட்சத்திர ஆதிக்கம், கிரக ஆதிக்கம் மற்றும் சூர்ய சந்திரர்களின் ஆதிக்கம் என்கிற விஷயங்கள் உள்ளன. இவை நொடிக்கு நொடி மாறிய படியேயும் உள்ளன. இந்த மாற்றங்களை எல்லாம் கணக்குப் போட்டுத்தான் ராகு காலம், எமகண்டம், அமிர்தநாழிகை போன்ற விஷயங்களை கண்டறிந்து கூறிபுள்ளனர். இதை எல்லாமும் கடந்து ஒருவருக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் காலம், இல்லாத காலம் என்றும் அதனுள் ஓட்டம் உண்டு... அவைகளை அறிந்து சொன்னதில் புலிப்பாணி பெரிய ஞானியாக திகழ்ந்தார்.

புலிப்பாணி நமக்கெல்லாம் ‘நேரம் காலமறிந்து செயல்படுதல் வெற்றியைத் தரும்’ என்று கூறியதாக நாம் எடுத்துக் கொள்ளலாம்!



ராம்கியும் தியாகுவும் நம்பூதிரியை சந்தேகப்பட்டகையோடு சதாசிவத்தைத்தான் பார்த்தனர். அவர் முகத்திலும் சந்தேக ரேகை. கூடவே நம்பூதிரியோடு நந்தினியை அனுப்பித்தர மறுத்த அந்த உறுதி!

நம்பூதிரிக்கு பெரிய அளவில் ஏமாற்றமாக இருந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளவும் தயங்கியவன், மனதுக்குள் அவனது ஏவல் தேவதையான யட்சியை கூப்பிட்டான்.

அதுவும் பிரசன்னமாகியது! அவன் மனதுக்கு மட்டும் கேட்கும் விதமாய் உள்ளுக்குள் பேசவும் செய்தது.

“நம்பூதிரி!

உனக்கு நான் கடமைப்பட்டது இந்த அழைப்போடு முடிகிறது. இனி நான் உனக்கு கட்டுப்பட்டு நீ அழைக்கும்போது வந்து உதவப்போவதில்லை! நான் உன்னிடம் முன்பே கூறியிருந்தேன். இன்னும் சில முறை மட்டுமே நான் வருவேன் என்று... அதன்படி இதோ வந்துவிட்டேன். உனக்கு இப்போது என்ன தெரிய வேண்டும்?” யட்சி கேட்கவும், நம்பூதிரியும் அதற்கான பதிலை கூறத் தொடங்கினான்.

“யட்சி... எல்லாம் கூடி வரும் இந்த சமயத்தில் இந்த சதாசிவம் ஜவ்வாது சித்தனை நினைத்துக் கொண்டு தன் மகளை என்னுடன் அனுப்ப மறுக்கிறான். அவனாக தன் மகளை அனுப்பித்தர என்ன வழி?”

“ஒரே வழிதான்... உன் மந்திர சக்தியால் சில நாழிகைகளுக்கு கிளி ஒன்றை உன் தோள்மேல் வந்து அமர்ந்து கொள்ளுமாறு செய். இப்போதைக்கு ஜவ்வாது சித்தனும் கிளியின் உடம்புக்குள்தான் இருக்கிறான். எனவே, ஜவ்வாது சித்தனே உன்னிடம் நீ

சொன்னபடி கேட்டு நடப்பதாக கருதி, இந்த சதாசிவம் தன் மகளை உன்னுடன் அனுப்பித் தருவான்..."

"நல்லது- இந்தப் பெண்ணை நான் பலி தந்தால் எனக்கு அந்த தைலக் கிணறு உள்ள இடத்தை அங்குள்ள காவல் பூதங்கள் காட்டிடும்தானே- அதில் எந்த மாற்றமும் இல்லையே?"

நம்பூதிரியின் கேள்விக்கு பதில் சொல்ல யட்சி அங்கே இல்லை. அவனிடம் இருந்து விடுதலை அடைந்துவிட்ட களிப்போடு மறைந்து விட்டிருந்தது. அதற்கான முக்திக்காக சில கர்ம காரியங்களை நம்பூதிரிதான் செய்ய வேண்டும். மற்றபடி அந்த யட்சி நம்பூதிரிக்கு வெகுவாகவே பயன்பட்டு முடிந்தும் விட்டது. நம்பூதிரிக்கும் பெரிய அளவில் ஏமாற்றமாகவும், கோபமாகவும்கூட வந்தது! அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கண்களைத் திறந்தவனை, சதாசிவத்தில் இருந்து கசலரும் வெறித்தபடி இருந்தனர்.

"என்ன சாமி- சார் மறுத்த உடனே அடுத்து என்ன பண்றதுன்னு தெரியாம அப்படியே தியானத்துல மூழ்கிட்டீங்களா?"

- தியாகு சற்று கிண்டலைக் குழைத்துக் கேட்டான்.

"ஆமாம்ப்பா... ஒரு உதவியை முழுசா பண்ண முடியாதபடி இருக்கேன்னு நினைச்சேன். வருத்தமா இருக்கு..."

"அதான் அந்த பணக்காரருக்கு மருந்து கொடுத்து அவரை ஆபத்துல இருந்து காப்பாத்திட்டீங்களே..?"

"அது ஒரு சாதாரண விஷயமப்பா... இந்த கர்ப்பிணிப் பெண் காப்பாற்றப்படணும். இல்லேன்னா ஒரு ஊனமுள்ள பெண் பிறந்து அது காலம் பூரா கஷ்டப்படுமே..?"



"அதான் இந்த பெண்ணை காப்பாத்த இவருக்கு ரொம்ப நெருக்கமான ஜல்வாது சித்தர் இருக்காரே.. நீங்க ஏன் கவலைப்பட்டீங்க?"

"ஜல்வாது சித்தர் வேற நான் வேற இல்லைன்னு நான் சொல்றத நீங்க யாரும் காது கொடுத்து கேட்கவே இல்லையே.."

"அது எப்படி சாமி.. நான் நான்தான், நீங்க நீங்க தான்! இரண்டு பேர் எப்படி ஒண்ணாக முடியும்?"

"என்னை இங்க அனுப்பினதேகூட ஜல்வாது சித்தன்னு சொன்னா உங்களுக்கு அது ஆச்சரியமா இருக்கும்..."

"இதைகூட இப்பதானே சொல்றீங்க.. முதல்லயே சொல்லலையே..?"

தியாகு, நம்பூதிரிக்கு ஈடாக பேசிக் கொண்டே இருக்க, நம்பூதிரியும் தன் மந்திர சக்தியாலே ஒரு கிளி தன்னை நோக்கி வருமாறு செய்ய தனக்குள் தயாராகிக் கொண்டிருந்தான்.

அண்டபேரண்ட மந்திரம் என்று ஒன்று உள்ளது! இது அண்டபேரண்ட பட்சி என்கிற பட்சிக் கூட்டத்துக்கெல்லாம் தலையான பட்சியையே எங்கிருந்தாலும் வசிகரித்து இழுத்து வந்துவிடும். அதே வழியில் அஞ்சுக வஸ்ய மந்திரத்தைச் சொல்லி தனக்குள் நம்பூதிரி ஜெபிக்கத் தொடங்கிட, கச்சிதமான அந்த வேளையில் படுக்கையில் கிடந்த ராமலிங்கத்திடம் ஒரு தெளிவான அசைவு! கண்களைத் திறந்து பார்த்தவர், "எங்க என் மனைவி உமையாள்?" என்று திடமான குரலில் கேட்டது தான் ஆச்சரியம்! டாக்டர் நிஜமாலுமே மிரண்டு போய் அவரே வெளியில் வந்து உமையாம்பிகையை அழைத்தார்.

"மேடம்! கொஞ்சம் வாங்க.. உங்க கணவர் பேசணும்னு சொல்றார்..."

உமையாம்பிகை அடுத்த நொடி கணவனின் படுக்கை நோக்கித்தான் ஓடினாள்! நெருங்கியவள் படபடத்தாள்.

"என்னங்க... கூப்பிட்டீங்களா?"

"ஆமாம் உமையாள்... நான் இப்ப ரொம்ப சுகமா உணர்றேன். என் உடம்புகூட லேசா பஞ்சு மாதிரி வானத்துல மிதக்கற மாதிரி இருக்கு. கொஞ்சம்கூட வலி தெரியல. பார்வையும் பழைய மாதிரி பளிச்சின்னு இருக்கு..."

"ரொம்ப சந்தோஷங்க.. நீங்க பிழைச்சுகிட்டீங்க. இனி உங்களுக்கு ஒரு ஆபத்தும் இல்லை."

"எப்படி உமையாள் இந்த அதிசயம் நடந்தது. நீ மருந்து தேடி சதுரகிரி மலைப்பக்கம் போனதா பார்த்திபன் சொன்னான். போன இடத்துல ஏதாவது மருந்து கிடைச்சுத்தான் இந்த அற்புதம் நடந்துச்சா?"

"ஆமாங்க.. எல்லாத்துக்கும் நம்ம சம்பந்திதாங்க காரணம்..."

"எங்க அவர்...? நான் முதல்ல அவர் கால்ல விழுந்து மன்னிப்பு கேட்டுக்கறேன்."

ராமலிங்கம் படபடத்திட சதாசிவம் அருகில் வந்தவராக, "ஐயா உணர்ச்சிவசப்படாதீங்க... அப்புறம் அதனால எதாவது பாதிப்பு ஏற்பட்டுடப் போகுது..." என்றார்.

"சம்பந்தி! உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு... நான் உங்களை கேவலப்படுத்தினதுக்கு நீங்க என்னை



கொல்லவே செய்யலாம். ஆனா, என்னைக் காப்பாத்தி எனக்கு மறுவாழ்வு தந்துருக்கீங்க..?"

எல்லாத்துக்கும் உங்க ஆயுள் பலம்தாங்க காரணம்.. நான் எதுவும் செய்துடலை..

"இவர் தன்னடக்கமா சொல்றாரு... உண்மைல இவர் மட்டுமல்ல.. நமக்கெல்லாம் இனி கடவுள் நம்பூதிரி தாங்க..."

"நம்பூதிரியா... அது யார்?"

"அவர்தான் இப்ப நீங்க இப்படிப் பேசவே காரணம்.." உமையாள் பேச்சோடு திரும்பி நம்பூதிரியை அருகில் அழைத்தபோது அவர் தோள் மேல் ஒரு கிளி!

அதைப் பார்த்த சதாசிவத்திடம் சிலிர்ப்பு.

"சாமி வந்துட்டீங்களா?" என்றார் பரவசத்தோடு. தியாகுவும், ராம்கியும்கூட கிளியை பார்த்து ஆச்சரியப் பட்டனர்.

ஜெயந்தியும் ராகவியும் கைகளை கூப்பி வணங்கவே செய்தனர்.

"நான் சொன்னப்ப நீங்க நம்பலை. ஆனா, இப்ப பாருங்க... ஜவ்வாது இங்கேயே வந்துட்டான்.."

என்று ஒருவித நட்போடு நம்பூதிரி சொல்லவும், அதுவரை குழப்பமும் கோபமுமாக இருந்த டாக்டரே மெல்ல நம்பூதிரி அருகில் வந்தவராக கைகூப்பி வணங்கத் தொடங்கினார்.

நம்பூதிரி முகத்தில் ஒருவித கேலிச் சிரிப்பு.

"என்னை மன்னிச்சிடுங்க.. உங்ககிட்ட பெரிய அளவுல விஷயங்கள் இருக்கு. நான் அவசரப்பட்டு அவைகளை நம்ப மறுத்துட்டேன்."

"பரவாயில்ல டாக்டரே... இனி இவருக்கு நீங்க உங்க விருப்பம் போல மருந்து கொடுங்க. எதுவும் ஆகாது. நான் சொன்னதைவிட வேகமான முன்னேற்றத்தை இவர் அடையறத நீங்க பார்க்கலாம்..."

"அது சரி.. நீங்க இவருக்கு கொடுத்த அந்த மூலிகை எதுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

நம்பூதிரி அதைக் கேட்டு பலமாய் சிரித்தார்.

"ஏன் சிரிக்கறீங்க... அது என்ன மூலிகைன்னு தெரிஞ்சா நான் இவர் மாதிரி பலபேரை காப்பாத்த ரொம்ப உதவியா இருக்குமே..."

"அது சரி... நோகாம நோம்பு கொண்டாடப் பாக்கறீங்க நீங்க. இந்த மூலிகையை கண்டுபிடிக்க நான் எவ்வளவு கஷ்டப்பட்டுருப்பேன் தெரியுமா?"

"அப்ப சொல்ல மாட்டீங்களா சாமி.."

"நோயாளி யாராவது வந்தா என்னை மலைல வந்து பாருங்க. மருந்து தரேன். குணப்படுத்துங்க. ஆனா அது என்ன மூலிகை, எங்க கிடைக்கும்னுல்லாம் கேக்கவும் கூடாது. நானும் சொல்லவும் மாட்டேன்.." என்றார்.

அதை ஆமோதிப்பது போல அவர் தோள் கிளி எழுந்து, வேகமாக ஒரு சுற்று சுற்றி பறந்துவிட்டு வந்து, திரும்ப நம்பூதிரி தோள் மேலேயே அமர்ந்து கொண்டது.

"சரி... எல்லோருக்கும் நமஸ்காரம். நான் புறப்படறேன்" என்று நம்பூதிரி ஒரு கும்பிடு போட்டுவிட்டு கிளம்ப முற்பட சதாசிவத்திடம் தடுமாற்றம். நம்பூதிரியும் வேண்டுமென்றே ஆஸ்பத்திரி காரிடாரை வேகமாக கடக்க முற்பட, சதாசிவம் ஓடிப்போய் முன்விழுந்து தடுத்தார்.



"சாமி.. இருங்க சாமி. நான் என் மகளோட உங்க கூட வரேன்.."

- அந்த பதிலைக் கேட்ட மாத்திரத்தில் நம்பூதிரி முகத்தில் வெற்றிப் புன்னகை. நந்தினியும் அவர்கள் அருகில் வந்து நின்றாள்.

"சரி, புறப்படுங்க.." என்ற நம்பூதிரி முன் அவ்வளவு பேரும் புறப்படத் தயாராகினர். நம்பூதிரிக்கு ஆச்சரிய அதிர்ச்சி. அதை காட்டிக் கொள்ளாமல், "யாரும் வர வேண்டாம்... இந்த பெண்ணும், கூட இவரும் மட்டும் வந்தால் போதும்..." என்றான்.

## 28

**சி**த்த புருஷர்களில் கருவூர் சித்தர் நமக்கு பல சிந்தனைகளை அளிப்பவர் ஆவார். ஓரளவு இவரது வாழ்க்கைப் பின்புலம் பளிச்சென்று தெரிவதாகவும் உள்ளது. கரூரில் வாழ்ந்த ஆகம விதிகள் அறிந்த ஒரு சிற்பிக்கு மகனாக பிறந்தவர் இவர். தாயின் கருவில் இவர் இருக்கும்போதே ஆகம நெறிகள், சிற்ப சாஸ்திர நுட்பங்களை இவரது தாய்க்கு உரைத்திடும்போது அதை இவரும் கேட்டே வளர்ந்தார். அதனாலேயே இவர் பிறந்து வளர்ந்த நிலையில் இவருக்கு வாஸ்து மற்றும் ஆலய ஆகமங்கள், சிற்பங்கள் தொடர்பான ரகசியங்கள் என்று எல்லாமே எளிதாக கைவரப் பெற்றன.

ஆயினும் தன் முன்னோர்களைப் போல ஒரு சிற்பியாக தன்னை வடிவமைத்துக் கொள்ளாமல் ஒரு சித்தனாக இவர் தன்னை வடிவமைத்துக் கொண்டது விதியின் காரணம் எனலாம்.

தஞ்சையில் ஒரு ஆலயத்தில் அன்றைய சோழ அரசன் லிங்கப் பிரதிஷ்டை செய்து அருளாட்சி புரிய

விரும்பினான். ஆனால், அதை சில தீய சக்திகளான திசைப் பூதங்கள் தடுக்க முனைந்து லிங்கத்தை பீடத்தில் அமர விடாமல் தடுத்தபடி இருந்தன. அரசன் இதனால் வருத்தமுற்று போகருக்கு செய்தி அனுப்பி தனக்கு உதவும்படி வேண்டியபோது போகர் கருவூராரை இந்த விஷயத்திற்கு அனுப்பினார். கருவூராரும் ஆலயத்துக்கு சென்று திசைப் பூதங்களை வென்று லிங்கப் பிரதிஷ்டையை வெற்றிகரமாய் முடித்தார்.

போகரின் சீடர்களில் ஒருவராய் விளங்கிய கருவூராருக்கு நிறைய எதிர்ப்புகளும் இருந்தன. இவரது ஆற்றல், இவரது அஞ்சாத்தன்மை காரணமாக இவரைப் பார்த்து சிலர் பொறாமைப்பட்டு இவர் மேல் பொய்யாக பழிகளைச் சுமத்தினர்.

அவைகளை எல்லாம் கரூரில் உள்ள பசுபதி நாதரின் அருளோடு வெற்றி கொண்ட கருவூரார் அதே சந்நிதிக்குள் நுழைந்து உடலோடு சிவ லோகம் சென்று விட்டார் என்பர். இவருக்கும் தாசி ஒருத்திக்கும் தொடர்பு இருந்தது. அவள் மூலம் இவருக்கு திருவரங்கத்தில் அரங்கனின் தரிசனமும் கிட்டியதாக சில செவி வழிக் கதைகள் கூறுகின்றன.

இவர் மூலமாக நாம் அறிய வேண்டியது ஒன்றைத்தான். எல்லா காலங்களிலும் பழிப்பவர்கள், இழிப்பவர்கள் இருந்துள்ளனர். அவர்களை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை. நாம் நாமாக இருந்தாலே போதும்... இறைவனின் தனிப் பெரும் கருணைக்கு நாம் ஆளாகலாம் என்பதே...!

**த**ன்னோடு யாரும் வரக்கூடாது என்று நம்பூதிரி கூறியதைக் கேட்டு எல்லோருக்குமே அதிர்ச்சியாக இருந்தது. சதாசிவம் வரையில் அது பேரதிர்ச்சியாக



இருந்தது. அதை நம்பூதிரியும் கவனித்தான். கவனித்த வேகத்தில் தன் கருத்தை சற்று மாற்றிக் கொண்டு, "இந்த கர்ப்பிணிப் பெண்ணோட ரத்த சம்பந்தம் உடையவர்கள் மட்டும் வரலாம்" என்றான்.

அப்படிச் சொன்னால் அது சதாசிவத்தை சற்று அமைதிப்படுத்தும் என்று ஒரு கணக்கு போட்டே சொன்னான்.

"ஏன் நம்பூதிரி... நந்தினி செய்ய வேண்டியது ஒரு பாலபிஷேகத்தை- இதை எல்லாரும் கூட வந்து தரிசனம் செய்தா என்ன தப்பு?" என்று சதாசிவமும் கேட்டார்.

"ஜ்வரலிங்கம் இருக்கற இடத்துக்கு எல்லாராலயும் போக முடியாது. அது சித்த ரகசியம். நந்தினி மாதிரி கர்ப்பிணிப் பெண்கள் ஒரு பரிகார நிமித்தம் அதை செய்ய வரும்போது அதை அங்க நடமாடற சித்தர்கள் தப்பா நினைக்க மாட்டாங்க. ஆனா, ஒரு கூட்டமே அங்கு வர்றதை அவங்க விரும்ப மாட்டாங்க. அப்புறம் ஜ்வர லிங்கத்தை தேடியும் பல ஆயிரம் பேர் வரத் தொடங்கிட்டா அந்த இடத்தோட அமைதியே போயிடும்."

நம்பூதிரி சொல்வதிலும் ஒரு சின்ன நியாயம் இருப்பதாகத்தான் சதாசிவத்துக்கு தோன்றியது. தியாகு வேகமாக ஒரு முடிவுக்கு வந்தான்.

"சார்... நீங்க நம்பூதிரிகூட நந்தினியை அழைச்சு கிட்டுப் போய் இவர் சொல்ற பாலபிஷேகத்தையும் பண்ணிட்டு வாங்க. நம்பூதிரி சொல்றதும் சரி தான்... இப்பல்லாம் ஒரு சாதாரண தெருக்கோவில்லயே கூட்டம் கட்டி ஏறிக்கிட்டு இருக்கு. அந்த அளவுக்கு ஜனங்களுக்கு பயமும், மன அழுத்தமும் ஏற்பட்டிருக்கு. ஒரு வேப்ப மரத்துல லேசா ஒரு புடைப்பு தெரிஞ்சாலும்

அதை பிள்ளையார்னு கும்பிடற அளவுக்கு பக்தியோட போக்கு இருக்கு.

இப்படி ஒரு நிலைல தண்ணிக்குள்ள ஒரு லிங்கம். அதுக்கும் பாலபிஷேகம் பண்ணினா பிறக்கற குழந்தை ஊனமில்லாம நல்லா பிறக்கும்னா இந்த ஊர் உலகத்துல இருக்கற அவ்வளவு கர்ப்பிணிப் பெண்களும் அங்கதான் இருப்பாங்க. ஜ்வரலிங்க யாத்ரா ஸ்பெஷல்னு டிராவல் ஏஜெண்ட்டுகளும் உருவாகிடுவாங்க.

நம்பூதிரி நீங்க இவங்களோட கிளம்புங்க. நானும் ராம்கியும் தாணிப் பாறை வரை கார்ல வந்து விட்டுட்டு திரும்பிடறோம்..." என்றான்.

தியாகுவின் பேச்சு நம்பூதிரியை அப்பாடா என்று பெருமூச்சு விடச் செய்தது. நந்தினி சற்று பரிதாபமாக பார்த்திபனைப் பார்த்தாள். அவனுக்கும் புரிந்தது.

"சாமி! நான் மட்டுமாவது வரேனே..." என்றான்.

"நீதான் கட்டாயமா வரக்கூடாது. இந்த நிமிஷம் நீ இந்த பெண் வரையில் ஒரு குற்றவாளி. தோஷ பரிகாரம் முடியற வரை இந்த பெண்ணை நீ பார்க்கக் கூட கூடாது."

நம்பூதிரியின் குரலில் கடுமை வெளிப்பட்டது. தியாகு வேகமாக சென்று பார்த்திபனின் கையைப் பற்றி அழுத்தியவனாக ஜாடை காட்டி விட்டு, "சாமி, இவர் மட்டுமில்ல, யாரும் வராதபடி பாத்துக்க வேண்டியது என் பொறுப்பு. நீங்க வேகமா பரிகார பூஜையை முடிச்சு எங்க பெண்ணையும் இவரையும் திருப்பி அனுப்பினா அதுவே எங்களுக்கு போதும்..." என்றான்.

அப்படியே ஜெயந்தி அருகில் சென்றான். அவள் அவனை காதல் பொங்கப் பார்த்தாள்.



"போய்ட்டு வந்துடறேன்..."

"ஜாக்கிரதையா போய்ட்டு வாங்க..." அதே பதிலைத்தான் ராம்கியிடம் ராகவியும் கூறினாள்.

"பயப்படாதே- நம்பூதிரிகிட்ட உங்கப்பாவையும் நந்தினியையும் தனியா விட்டுட மாட்டோம். அவங்களுக்கே தெரியாம பின்தொடர்வோம்..." என்றான் சற்று கிசுகிசுத்த குரலில்.

ராகவிக்கு அது இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

உமையாம்பிகை வேகமாக நந்தினிக்கு திருஷ்டி கழித்தாள். தன் கழுத்தில் தொங்கியபடி இருந்த ஒன்பது பவுன் செம்பவழச் சங்கிலியை வேகமாய் கழற்றி அவள் கழுத்துக்கு போட்டவள், "இந்த நொடி முதல் நீ இந்த குடும்பத்து பொண்ணு, போய் நல்லபடியா பரிகாரத்தை முடிச்சிட்டு வாம்மா..." என்று நெற்றியில் முத்தமிட்டு அனுப்பி வைத்தாள்.

அவ்வளவு பேருடனும் டாடா சுமோ புறப்பட்டது. பார்த்திபன்தான் டிரைவ் செய்தான். சுமோவில் அமர்ந்த நிலையில் நம்பூதிரி கண்களை மூடி சில வினாடிகள் தியானிக்கத் தொடங்கியபோது தன் செல்போனில் நம்பூதிரியைப் புகைப்படம் எடுத்தவன் "பார்த்திபன் ஒரு நிமிஷம் வண்டியை நிறுத்துங்க..." என்றான். பார்த்திபனும் நிறுத்த, "இந்த செல்போனை நான் என் ஆள்கிட்ட கொடுத்துட்டு வரேன். நாம நடுவுல ஏதாவது பேசணும்னா வசதியா இருக்கும்தானே?" என்று கேட்டுவிட்டு புறப்பட்டு சில அடிகள் வரை சென்று விட்ட டாடாசுமோவில் இருந்து இறங்கிக் குதித்து ஓடிச் சென்றவன், ராகவியிடம் செல்லைத் தந்தான்.

அப்படியே, "ராகவி... இதுல நம்பூதிரியோட போட்டோ இருக்கு... நீ இந்த செல்போனோட மதுரைல

இருக்கற ஏதாவது ஒரு கம்ப்யூட்டர் சென்டருக்கு போய் போட்டோவை கம்ப்யூட்டர்ல ஏத்தி என் பத்திரிகைக்கு மெயில் பண்ணிடு. பத்திரிகை மெயில் ஐ.டி. என் விசிட்டிங் கார்டுல இருக்கு. கார்டு என் பேக்ல இருக்கு.

என் பத்திரிகை ஆசிரியர்கிட்ட நான் அப்பறமா பேசிக்கிறேன். இந்த நம்பூதிரி ஒரு கிரிமினலா இருக்க வாய்ப்பு இருக்கு. உடனே பயந்துடாதீங்க! என் பத்திரிகை ஆசிரியர் கேரள போலீஸுக்கு இந்த போட்டோவை அனுப்பி அங்க அவங்க கிட்ட இருக்கற ரெக்கார்ட்ஸ்ல செக் பண்ணி ஒரு பதிலை என் பத்திரிகைக்கு தருவாங்க. அது பின்னாலே உதவியா இருக்கும்."

என்று வேகமாய் கூறிவிட்டு திரும்பிச் சென்று காருக்குள் ஏறிக் கொண்டான்.

கார் வேகமாய் கிளம்பி அவர்கள் கண்களை விட்டும் மறைந்தது. உமையாம்பிகை, ராகவியிடம் வந்து என்னவென்று கேட்க, ராகவியும், "செல்போனை கொடுத்து அப்பப்ப தொடர்பு கொள்ளச் சொன்னாங்க..." என்று அவளைச் சமாளித்தாள்.

அவளிடம் ஒரு புதிய மலர்ச்சி தெரிந்தது.

"உங்கப்பாவும் நந்தினியும் வர்றவரை நீங்க என் கூட என் வீட்லதான் இருக்கீங்க..." என்று சற்று கட்டளையான குரலில் கூறினாள்.

அவளுக்கும் அது இதமாக இருந்தது. ஜெயந்தி, ராகவியை கெட்டியாக பற்றிக் கொண்டாள். அவளிடம், கிளம்பிச் சென்றிருப்பவர்கள் நல்ல விதமாய் திரும்பி வர வேண்டுமே என்கிற கவலை பளிச்சென்று தெரிந்தது!



**மா**லை நேரம்!

சூரியன் மேற்குக்குள் புதைந்து கொண்டிருந்தான். இருட்டத் தொடங்கிவிட்டது.

நம்பூதிரியின் குகைக்குள் தீக்கணப்பு மூட்டி அதனைச் சுற்றி அமர்ந்து கொண்டிருந்தனர் சேகரும் ஆனைமுத்துவும்... மதிவாணன் நம்பூதிரி அன்றாடம் வழிபடும் சாத்தானுக்காக ஒரு முறத்தில் பொரியை கொட்டி பரத்திக் கொண்டிருந்தான். அதை குளிர் காய்ந்தபடியே சேகரும் ஆனைமுத்துவும் பார்த்தனர்.

ஆனைமுத்துவுக்கு தாங்கள் நம்பூதிரிக்கு அடிமைப் பட்டுவிட்ட மாதிரியும் தோன்றியது. இல்லாத மாதிரியும் தோன்றியது.

மதி, பொரி முறத்தோடு சேகரிடம் வந்தான்.

"சேகர்... கொஞ்சம் என்கூட வா..." என்றான்.

சேகரும் எதுவும் பேசாமல் அவன்பின் சென்றான். குகைக்கு வெளியே ஒரு மூலையில் உருண்டையாக ஒரு பாறை அருகே சென்றான். அந்த பாறை முழுக்க ரத்தம் பட்டு உறைந்து போய் ஒரு மாதிரி செங்கறுப்பு நிறத்தில் காட்சி தந்தது.

"சேகர் உன் கையைக் கீறி ரத்தத்தை அந்த பாறை மேல் அபிஷேகம் மாதிரி விடு..." என்றான். சொன்ன சூட்டோடு ஒரு கத்தியை தரவும், சேகரும் கையை கீறிக் கொண்டு பாறைக்கு நேர்மேலே கீறிய பாகத்தை காட்ட ரத்தம் பெருகி பாறைமேல் கொட்டவும் முறத்தில் இருந்த பொரியை அந்த பாறைமேல் கொட்டினான் மதி.

ரத்தம் கலந்து பொரி சிவந்து போனது. மதியும் முறத்தை வைத்துவிட்டு, "ஏதோ முணுமுணுத்தான்." பின் கையை தட்டி அதில் சில முத்திரைகளை உரு

வாக்கியவன், "வரணும் சாத்தானே, வரணும்... உன்னோட பலி பூசையை நீ ஏற்கணும்..." என்றான். அடுத்த நொடிகளில் ரத்தம் கலந்து பாறை மேல் விழுந்த அவ்வளவு பொரிகளும் மாயமாகத் தொடங்கின!

அதே வேகத்தில் யாரோ சேகரின் உடம்புக்குள் புகுந்தது போல சேகரிடம் ஒரு சிலிர்ப்பு. அப்படியே கை இரண்டையும் ஆகாயத்துக்கு உயர்த்திக் கொண்டு... கண்களை அகட்டிக் கொண்டு... சேகர் ஒரு ஆங்காரச் சப்தம் எழுப்பத் தொடங்கினான். மதிவாணனுக்கு உடனேயே புரிந்துவிட்டது. பலி பூஜையில் பொரி உண்ண வந்த சாத்தான் சேகர் உடம்புக்குள் நுழைந்து விட்டது!

## 29

**சி**த்தர் பெருமக்களில் திருமூலர் தனிரகம்! இவர் மண்ணில் ஒரு தாய் வயிற்றில் கருவுற்று கர்மத்தால் பிறப்பெடுத்த மற்ற சித்தர்கள் போல் பிறந்து வந்தவர் இல்லை. விண்ணகத்தே அந்த ஈசனின் கைலாயத்தில் இருந்து உலக வாழ்வின் மாயையை விளங்கிக் கொள்வதற்காக பூஉலகுக்கு இறைவனால் அனுப்பப்பட்டவர். கைலாயத்தில் சுந்தரநாதன் என்பது இவர் பெயர். இவரது குரு நந்தி தேவர் ஆவார்!

ஆகாய மார்க்கமாக பூ உலகம் நோக்கி இவர் வரும்போது கீழே ஒரு புல்வெளிமேல் ஒருவன் இறந்துகிடப்பதையும் அவனைச் சுற்றி பசுக் கூட்டம் நின்றுகொண்டு கண்ணீர் விடுவதையும் காண்கிறார். பார்த்த மாத்திரத்தில் கீழே இறந்து கிடப்பவன் மூலன் என்னும் இடையன், அவனை பாம்பு தீண்டிட அவன் உயிர் பிரிந்துவிட்டது என்பதும் - அதன் பொருட்டே அந்த ஆவினக்



கூட்டம் கண்ணீர் விட்டபடி நிற்பதையும் இவரது ஞான திருஷ்டியால் உணர முடிந்தது. ஆவினக் கூட்டத்தின் பாசமும், நேசமும் இவர் மனதை உருக் கவே அந்த பசுக்களின் கண்ணீரை நிறுத்துவதற் காக இவர் கீழிறங்கி தனது உயிரை அந்த மூலனின் பிண உடம்புக்குள் புகுத்தி உயிர்த்தெழுகிறார்! பசுக்கூட்டமும் மகிழ்ந்து வீடு திரும்பத் தொடங்கு கின்றன. இறுதியாக மூலனின் வீட்டுப் பசுவோடு மூலன் வீட்டுக்கு செல்லவும், மூலனின் மனைவி இவரை தன் கணவன் மூலன் என்று கருதி உறவாட முனைகிறாள். சுந்தரநாதனாகிய இவரும் நடந் ததைக் கூறி, 'நான் உன் கணவனல்ல - நானொரு கைலாயவாசி' என்கிறார். அவள் அதை நம்ப மறுத்து விஷயத்தை பஞ்சாயத்துக்கு கொண்டு செல் கிறாள். பஞ்சாயத்து செய்தவர்களும் இவர் சொன்னது உண்மைதானா என்பதை அறிய அவரது அசலான உடம்பைக் காண விரும்புகின்றனர். ஆனால், அந்த உடம்பை காட்டுப் புலி ஒன்று தனக்கான உணவாகக் கருதி தின்றுவிட்டிருந்தது.

சுந்தர நாதருக்கும் தான் உலக மாயைக்கும் பந்தத்துக்கும் ஆட்பட்டு விட்டது புரிந்தது. கூடவே அரிய வித்தைகளை உலகோர் அறியும்படியாகவோ இல்லை வேறு விதமாகவோ செய்தாலும் பூஉலகில் அதனால் துன்பமே ஏற்படும் என்பதையும் உணர் கிறார். இதன் பிறகே இவர் திருமூலர் என்றும் பெயர் பெற்றார்.

அதன்பின் 3000 வருடங்கள் பூஉலகில் வாழ்ந்து உடம்பின் நலத்தையும், சிறப்பையும் வலியுறுத்தி 3000 பாடல்களை இவர் பாடியுள்ளார்.

அவைகளை திருமந்திரம் என்று இந்த உலகம் கொண்டாடி வருகிறது.

திருமந்திரத்தில் பேசப்படாத உண்மைகளே இல்லை. எளிய தமிழில் அரிய கருத்துகளை உடையதுதான் திருமந்திரம். கைலாயவாசியையும் உலகின் மாயை ஆட்டிவைக்கும் என்கிற உண்மையை நாம் இவர் மூலமாக உணரலாம்.

சேகர் எழுப்பிய சப்தமும் அதைத் தொடர்ந்து அவன் பார்த்த விதமும் அலாதியாக இருந்தது. மதிவாணனுக்கு சாத்தான் அவனுக்குள் புகுந்துவிட்டது மட்டும் புரிந்தது. ஆனால், அதை எப்படி அடக்கிக் கட்டுவது என்பது தெரியவில்லை.

ஆனைமுத்துவோ அங்கு நடப்பதை நாம் தெருவில் நடக்கும் ஒரு சம்பவத்தைப் பார்ப்பது போல பார்த்தபடி இருந்தார். அந்த அளவு நம்பூதிரியின் வசியம் அவரை அவருக்குள் இருந்தே பிரித்து அந்நியப்படுத்தியிருந்தது.

சேகர், மதியின் அருகில் வந்து குரூரமாக மதியை முறைத்தவனாக, "எங்கடா அந்த நம்பூதிரி?" என்று கேட்டான். குரலும் மாறிவிட்டிருந்தது.

"நம்பூதிரி... நம்பூதிரி..."

"எங்கடா அவன்?"

"நம்பூதிரி மலைக்கு வெளியில போயிருக்கார்... சாத்தான்! நீ இப்படி உன் எஜமானனை மரியாதை இல்லாம பேசக்கூடாது..." - என்றான் தடுமாற்றமான குரலுடன்.

"என்னை அடிமைப்படுத்தி வெச்சிருந்த ஒருத்தன் எனக்கு எஜமானா... அவன் என் எதிரிடா.. எதிரி.." - சேகரின் குரலில் ஒரு கடூரம் ஒலித்தது. மதிவாணனுக்கும் இனி சாத்தானை கட்டுப்படுத்துவது என்பது கஷ்டம் என்பது புரிந்துவிட்டது. சாத்தான் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்ததால் அச்சப்படத் தொடங்கினான்.



துஷ்ட சக்திகளே இப்படித்தான்! அவைகளை ஏவல் சக்திகளாய் பயன்படுத்தி வேலை வாங்குவது என்பது மானின் மீது அமர்ந்து கொண்டு வேட்டைக்கு போவது போன்றது... எப்பொழுதும் விழிப்போடு இருக்க வேண்டும். துளி அசந்தாலும் அவை தங்களின் துஷ்ட சக்தியை காட்டத் தொடங்கி விடும்.

ரத்தப் பொரியை அவைகளுக்கு நிவேதிப்பது என்பது ஒரு அன்றாட பழக்கம். அதில் எந்த இடத்தில் குறை வந்து இப்படி ஆனது என்பது மதிவாணனுக்கு விளங்கவேயில்லை. திருதிருவென்று வெறித்தபடியே நின்றபோதுதான் சாத்தானிடம் அடுத்த கட்ட கொடூரம் அரங்கேறத் தொடங்கியது.

அது, தான் ஆக்கிரமித்திருந்த சேகரின் உடம்பையே கடித்து அப்படியே ரத்தம் குடிக்கத் தொடங்கியது. ஒருவன் தன் கைகால்களையே கிழங்கு தின்பது போல தின்பது என்பது பார்க்கச் சகிக்காத கொடுமை!

மதிவாணனுக்கு, சேகரை தான் சாத்தானுக்கு பலி கொடுத்துவிடுவோமோ என்றுகூட அச்சமாகி விட்டது. ஆனைமுத்துகூட அதிரத் தொடங்கினார். சேகர், தானே தன் உடம்பை கடித்துத் தின்றுவிட்டு கடித்துத் தின்ற இடத்தைப் பார்த்து வலிதாளாமல் கத்தவும் செய்தான். கடித்துத் தின்ற இடத்தில் ரத்தம் பெருகி அப்படியே ஆறாக ஓடத் தொடங்கியது!

மதி குகைக்குள் ஓடினான். நம்பூதிரி பயன்படுத்தும் மான் தோல் பை ஒன்று இருந்தது. அதனுள் சில உலோகப் பாத்திரங்களுக்குள் மந்திர நீரை சேமித்து

வைத்திருந்தான் நம்பூதிரி. ஒவ்வொரு நீருக்கும் ஒருவித சக்தி. ஆனால், எதற்கு எந்த மாதிரி சக்தி என்பதெல்லாம் மதிக்கு தெரியாது. கைக்கு சிக்கிய ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தான். நீரையும் கையில் கொட்டிக் கொண்டு "ஏய் சாத்தானே அடங்கு.." என்று சேகர் மேலே தெளித்தான்.. ஒரு ஆச்சரியம் போல சேகரும் அஞ்சி நடுங்கியவனாக ஒரு மூலையாகப் பார்த்துப் போய் உட்கார்ந்து கொண்டான். கைகளையும் இறுகக் கட்டிக் கொண்டு இருண்ட அந்தகாரத்தில் இருந்து வெளிச்சத்துக்கு வந்த ஒருவன் வெளி உலகைப் பார்க்க கூச்சப்படுவது போல கண்கள் இரண்டையும் சுருக்கிக் கொண்டான்.

எப்படியோ அவன் அடங்கினானே அதுவே போதும் என்று தோன்றியது மதிக்கு.. அதில் சில துளிகள் ஆனைமுத்து மேலும் பட்டிருந்தது. அவரிடமும் ஒரு மாற்றம்! வசியக் கட்டில் இருந்து விடுபட்டவர் போல ஒரு பதட்டமும் பரபரப்பும் அவரிடம் தெரிய ஆரம்பித்தது.

"மாமா.."

"மதி.. இங்க என்னப்பா நடக்குது.. ஆமா, நான் இவ்வளவு நேரமா என்ன பண்ணிக்கிட்டிருந்தேன்?"

"என்ன மாமா கேள்வி இது.. நீங்க இங்கதான் இருக்கீங்க."

"அது சரி.. ஆமாம்.. சேகர் ஏய்யா இப்படி ஆயிட்டான்? அவனைப் பார்... உடம்பெல்லாம் ஒரே ரத்தம் வேற.."

"மாமா... அது வந்து.."

- மதிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.



"சொல்லுய்யா.. ஆமா எங்க நம்பூதிரி..?"

"அவர் மலைக்கு வெளிய ஒரு முக்கியமான வேலையா போயிருக்காரு மாமா.."

"சரி.. சேகர் ஏன் இப்படி இருக்கான்.. என்ன ஆச்சு?"

"மாமா! இங்க நம்பூதிரி ஒரு சாத்தானை தன்னோட ஏவலுக்குன்னு வெச்சிருக்கார். அது அவனுக்குள்ள பூந்துடிச்சு மாமா.. நான் இப்ப நீர்க்கட்டு போட்டு கட்டி வெச்சிருக்கேன்."

"அடக் கொடுமையே.. ஆமா, இப்படி எல்லாம் கூடவா நடக்கும்?"

"மாந்த்ரீகம்னாலே இப்படி எல்லாம்தானே மாமா இருக்கும்?"

"நானும் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா, கண் எதிர்ல பார்க்கும்போது மனசு பதைச்சுப் போகுது."

"பயப்படாதீங்க மாமா.. நான்தான் இருக்கேன்ல?"

"நீ இருக்கே சரி... சேகருக்கு ஒரு மருந்துகூட போடாம வேடிக்கைதானே பாக்கறே?"

"சாத்தான்கிட்ட போக முடியாது மாமா.. அது நீர்க்கட்டுக்கு அடங்கினதே பெரிய விஷயம்."

"என்னப்பா சொல்றே.. உங்களுக்கு கட்டுப்பட்டதுதானே இந்த சாத்தான்?"

"உண்மைதான் மாமா... ஆனா, சாத்தான் ஒரு சிங்கம், புலி மாதிரி! சர்க்கஸ்ல கூண்டுக்குள்ள வெச்சு பயன்படுத்தற மாதிரி இதைப் பயன்படுத்தறவர்தான் நம்பூதிரி."

"என்னமோப்பா... பெருசா தப்பு பண்ணிக்கிட்டிருக்கற மாதிரி மனசு நினைக்குது. பேராசைப்பட்டு

தப்பான பாதைல போய்க்கிட்டிருக்கற மாதிரியும் தோணுது எனக்கு!"

ஆனைமுத்து ஒரு நல்ல மனிதன் போல ஒருவித தாபத்தோடு பேசினார். எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தார். பொழுதும் நன்றாக இருட்டி விட்டது. தாவரங்களில் பதுங்கியிருந்த சில் வண்டுகள் ரீங்காரம் இடத் தொடங்கின. காற்றில் குளிரும் நிறையவே இருந்து அவரது முதிய உடலை நடுங்க வைத்தது. பேசிக்கொண்டே மதி ஓடிப்போய் தீப் பந்தங்களை கொளுத்தினான். திகுதிகுவென்று எரியும் அத்துடன் குகைக்கு வெளியில் வந்தவன், ஒடுங்கி அமர்ந் திருந்த சேகர் அருகில் சென்று அங்குள்ள காட்டுமரம் ஒன்றின் பொந்துக்குள் அந்த தீப்பந்தத்தை செருகி நிறுத்தினான். அதைப் பார்த்து சேகருக்குள் இருந்த சாத்தானும் பயத்தோடு தலைகுனிந்து கொண்டது.

பின்னர் மதி, மாமா அருகில் சென்றான்.

"மாமா! தைரியமா இருங்க.. எனக்கும் இங்க இப்படி இருக்கறது கொஞ்சம்கூட பிடிக்கல. ஆனா ஒரு லட்சியத்தோட இந்த மலைக்கு வந்த நான் ஏமாற்றத்தோட திரும்பிப் போக விரும்பாமத்தான் இங்கயே இருக்கேன்.

எனக்கு ஒரு சித்தர் சாமிகூட உதவி செய்யல!

நம்பூதிரிதான் கை கொடுத்தார். ஒரு வகைல எனக்கும் நம்பூதிரியை விட்டா கதியில்லை. நம்பூதிரிக்கும் என்னை விட்டா கதி இல்லாம போயிடிச்சு. இவ்வளவு வருஷம் இங்க இருந்ததுல இப்பதான் ஒரு சின்ன திருப்பம் ஏற்பட்டிருக்கு!

கருப்பு காவல் காக்கற தைலக் கிணத்துகிட்ட ஒருத்தர் சாதாரணமா போயிட முடியாது.. அதுக்கு பலி



எல்லாம் கொடுக்கணும்கறது நம்பூதிரியோட முடிவு. அப்படி பலி கொடுக்க ஒரு கர்ப்பிணிப் பொண்ணு இப்ப கிடைச்சிருக்கா. கர்ப்பிணிப் பொண்ணை பலி கொடுக் கறதுங்கறது மந்திர சாஸ்திரத்துல ரொம்ப ரொம்ப பெரிய விஷயங்களுக்கு சொல்லப்பட்டிருக்கு!

நம்பூதிரியோட இஷ்ட தெய்வம் பேர் ஜெயசண்டி. அந்த ஜெயசண்டிக்கு பலி பூஜைன்னா எப்பவுமே பிடிக்கும். அடுத்து சின்னமஸ்தான்னு ஒரு தேவதை. இவளுக்கும் பலின்னா பிடிக்கும். இங்க இரண்டு பேர் தயவு இருந்தா இந்த மலைக்காட்டுல எங்க தைலக் கிணறு இருக்குன்னு தெரிஞ்சிடும். அப்புறமா அங்க காவல் இருக்கிற கருப்பசாமிக்கும் ஒரு ஆட்டையோ, மாட்டையோ பலியா கொடுத்துட்டா அதுவும் அடங்கி ஒடுங்கிடும். அதுக்குப் பிறகு தைலக் கிணத்துல இறங்கி காலகாலமா ஒரு குழம்பா அதுக்குள்ள இருக்கற தைலக் குழம்புல எனக்கு ஒரு கை அளவு குழம்பு கிடைச்சாலும் போதும்... அதை வெச்சு நான் தங்கம் பண்ற ரகசியத்தை கண்டுபிடிச்சிடுவேன். அப்புறம் நான்தான் உலகத் துலயே குபேரன்..."

- என்றவனாக பற்களை கடித்துக் கொண்டு ஒரு சிரிப்பு சிரித்தான் மதி.

"எல்லாம் கேட்க நல்லாத்தான் இருக்கு.. ஆனா, பலி கொடுக்க கர்ப்பிணிப் பொண்ணு கிடைக்கணுமே?"

"கிடைச்சாச்சு மாமா. அழைச்சிட்டு வந்துகிட்டே இருக்கார் நம்பூதிரி. இந்நேரம் அவங்களும் அடிவாரம் வந்திருப்பாங்க. அங்கேயே ராத்திரி தங்கிட்டு பொழுது விடியும்போது பாருங்க நம்பூதிரியும் அந்த பொண்ணும் இங்க வரப் போறதை..."

- மதியின் குரலில் நம்பிக்கை தெரிந்தது. ஆனை முத்துவும் காலை வரைதானே என்று சற்று சமாதானம் ஆனார். சேகரைப் பார்த்தபோது அவன் ஒரு புழு போல உட்கார்ந்திருந்த இடத்திலேயே சுருண்டு விட்டிருந்தான்!

அவன்தான் அவர் மனதை மிகவே பாதித்தான்.

"ஏ மதி... இந்தப் பயல இப்படியே விட்டா உடம்பு ரத்தம் பூரா வெளியேறி செத்துட்டா என்னப்பா பண்றது?"

"இல்ல மாமா! அப்படி எல்லாம் ஆகாது... ரத்தத்தை அட்டை பூச்சிங்க குடிச்சப்ப கொடுத்த மூலிகை மருந்துதான் இப்ப நமக்கு தெரியுமே - அதை கொடுத்துட்டா போச்சு..."

"இந்த சாத்தானை எப்படிப்பா விரட்டி அடிப்பே?"

"அதெல்லாம் நம்பூதிரிக்கு சாதாரண விஷயம் மாமா... நம்பூதிரி வந்த உடனே பாருங்க, இந்த சாத்தான் படப்போற பாட்டை..."

"என்னமோப்பா... இந்த மாயம் மந்திரம்லாம் படிக்கும்போதும், கேக்கும் போதும் பரபரன்னு இருக்கு. ஆனா, அதை அனுபவிக்கும்போது எல்லாமே நரகமா இருக்கு. தப்பு பண்றோமான்னு தோணுது..."

- ஆனைமுத்து இரண்டாவது முறையாக தான் தவறு செய்வதாக கூறியது மதியை சற்று கீறியது.

"மாமா.. நம்பூதிரி எதிர்ல தயவுசெய்து இப்படி பேசிடாதீங்க. எதுவும் தப்பு சரின்னு கிடையாதுங்கறதுதான் நம்பூதிரியோட கொள்கை. மானா பிறந்தா புலிக்கு உணவாகித்தான் தீரணும்னு சொல்வார். நாம பரிதாபப்பட்டு பார்க்கற விஷயத்தை அவர் மாத்தி யோசிப்பார். இப்ப செய்யப்போற கர்ப்பிணி பலியைக்



கூட அந்தப் பொண்ணு தாயும் பிள்ளையுமா மோட்சத்துக்கு போகப் போறாங்கன்னு சொல்வார்." என்றான்.

அவன் பதில் ஆனைமுத்துவையும் சற்று மாற்றி யோசிக்க வைத்தது. தற்காலிகமாக ஒரு அமைதிக்கு மாறினார்!

அடிவாரம்!

காரில் இருந்து நம்பூதிரியும் சதாசிவமும் இறங்கிக் கொள்ள நந்தினியும் இறங்கினாள். நம்பூதிரி காரை ஓட்டி வந்த பார்த்திபனை பார்த்தான்.

"புரியுது நம்பூதிரி... நாங்க மேல வரலை. இங்கயே இருக்கோம். உங்க வேலையை முடிச்சிட்டு இவங்கள எல்லாம் வேகமா அனுப்பி வையுங்க. நாங்க இங்கயே காத்துக்கிட்டு இருக்கோம்" என்றான் தியாகு.

"இல்லை.. நீ இங்க காத்திருக்காதே. புறப்படு. இவங்க தானா வருவாங்க. ஜ்வரலிங்க பூஜையை எந்த ஒரு நிர்ப்பந்தமும் இல்லாம சுதந்திரமா பண்ணணும். அதை ஒரு கடமையா நினைச்சு செய்யக் கூடாது.."என்றான் நம்பூதிரி!

அவன் எதற்காக அப்படிச் சொல்கிறான் என்பது தியாகுவுக்கும், ராம்கிக்கும் புரியாமல் இல்லை.

"சரி, நம்பூதிரி... நாங்க புறப்பட்றோம். சதாசிவம் சார், பார்த்து கவனமா போய்ட்டு வாங்க..."என்றான் தியாகு. நந்தினி மௌனமாக நின்றபடி இருக்கும் பார்த்திபனைப் பார்த்தாள். அவன் அவள் முன் லேசாக கண்ணடித்து கவலைப்படாமல் போ. நாங்கள் யார் என்ன சொன்னாலும் பின்னாலேயேதான் வருவோம்" - என்கிற செய்தியை முக ஜாடையிலேயே உணர்த்தவும் அவளிடம் ஒரு பிரத்தியேக மகிழ்ச்சி.

நம்பூதிரி, சதாசிவத்துடன் நடக்கத் தொடங்க, அவரும் நந்தினியின் கைகளைப் பற்றிக் கொண்டு நடந்தார்.

அந்த வாகனமும் திரும்பிச் செல்வது போல பாவனைதான் காட்டியது. நம்பூதிரிக்கும் அவர்கள் கட்டாயம் பின்தொடர்ந்து வரத்தான் போகிறார்கள் என்பது தெரிந்தே இருந்தது!

வருபவர்களை கடுமையாக ஒரு இடத்தில் சிக்க விட வேண்டும் என்கிற முடிவுடனேயே நடக்கத் தொடங்கினான்.

# 30

'**சி**த்த புருஷர்களில் மிகுந்த தத்துவச் சிறப்பினை உடையவர் கடுவெளியார்! இவரது ஆரம்பம் பற்றி தெளிவான தகவல்கள் இல்லை. ஆனால், காஞ்சி மாநகரில் இவர் வெகுகாலம் வாழ்ந்ததற்கு சான்றுகள் கிடைத்துள்ளன. இவர் வரையில் பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாயம்தான் அனைத்துக்குமே ஆதாரம். அந்த ஆகாயமே வெளியாக பரவி உள்ளது. அதுவே மனிதர்களுக்குள் மனமாக உள்ளது. ஜோதிடப்படி மனோகாரகன் என்று சந்திரனைச் சொல்வார்கள். ஆனால், சந்திரன் திகழ்வது வானத்தில்தானே? எனவே வெளியாகிய ஆகாயத்தில்தான் எல்லாம் இருக்கிறது என்பதை தனது ஞானத்தால் அறிந்து கொண்டு பல பாடல்களை அதன் நிமித்தம் பாடியுள்ளார். வெளியில்தான் சந்திர சூரியர்கள் முதல் சர்வ கோள்களும் திரிகின்றன... ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களும் வெளியில்தான் மிதந்தபடி உள்ளன. நமது பூமியே வெளியில்தான் சுழன்றபடி உள்ளது. வெளி என்று ஒன்று இல்லாவிட்டால் நாம் நடமாடவே முடியாது.



மண்புழு மண்ணுக்குள் நெளிந்து செல்வதைப் போலவே நாம் அனைவரும் வாழ வேண்டியிருக்கும் என்பது இவரது முடிவான கருத்து. இதை யாரால் மறுக்க முடியும்? நாம் நடமாடித் திரிய, பறவைகள் பறந்திட, தாவரங்கள் ஓங்கி உயர்ந்து வளர்ந்திட, நமது உயிராதாரமான காற்றும் தவழ்ந்து திரிய ஆகாயமே முழு முதலாக உள்ளது.

சரி, இதை உணர்ந்து கொள்வதால் ஆகப் போவது என்ன என்று ஒரு கேள்வி எழலாம். ஆனால், ஆகாயம் என்கிற ஒன்று உண்மையில் இருந்தும் இல்லாமல் இருக்கிறது. பார்வைக்கு அது புலப்படுவதில்லை. ஆனால், நாம் நடமாட இடமளிப்பதை வைத்து அதன் இருப்பை நாம் மறுக்க முடியாதவர்களாக உள்ளோம்.

அந்த ஈசனும் ஆகாயம் போன்றவனே அவன் இருக்கிறான் - இல்லாமலும் இருக்கிறான் என்று ஆகாயத்தை இறைவனோடு தொடர்புபடுத்தி அரிய பல தத்துவங்களை இந்த உலகிற்கு பாடல்களாய் தந்தவர் இவர்.

'காயமே இது பொய்யடா... வெறும் காற்றடைத்த பையடா...' எனும் கருத்துள்ள பாடல் இவர் பாடியதே என்பர்.

கடவுளை கண்ணில் காட்ட முடியுமா என்கிற கேள்வியை எழுப்புபவர்களுக்கு அவருக்குள் இருந்து கொண்டே அவரை உணர முடியாத உங்களை என்னவென்று சொல்வது என்று கேட்டு சிரிக்கிறார் கடுவெளியார். இவர் பெரிய அளவில் சித்துக்கள் புரிந்து, சாகசங்கள் செய்து மனிதக் கூட்டத்தை கவரவில்லை. ஆழ்ந்த சிந்தனை மற்றும் தத்துவத்தாலே இவர் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்

தவர். இவர் மூலமாக 'எதையும் புதிய கோணத்தில் சிந்திக்க வேண்டும்' எனும் கருத்தை நாம் உணரலாம்.

அடிவாரத்தில் இருந்து சிறிது தூரம்கூட நடக்க வில்லை - சதாசிவத்துக்கு அந்த இரவுப் பொழுதில் நடந்து செல்வது உசிதமாகப் படவில்லை. அதிலும் ஒரு கர்ப்பிணிப் பெண்ணுடன் நடப்பது தவறு என்றே அவ ருக்கு பட்டது. நம்பூதிரியிடமும், "நம்பூதிரி.. நாம இங்க எங்கயாவது தங்கிட்டு விடியகாலைல எழுந்து நடக்க லாமே.." என்றார்.

"நிச்சயமா... கொஞ்ச தூரத்துல பிடாரசாமி குகைன்னு ஒண்ணு இருக்கு. குளிருக்கு ரொம்ப இதமா இருக்கும். அங்க போய் தங்கிடுவோம். உங்க விருப்பப் படி காலைலயே கிளம்புவோம்.." என்றான் நம்பூதிரியும்.

"பிடாரசாமி குகையா.. நான் கேள்விப்பட்டதே யில்லையே.."

"அது சித்தர் சாமிகளுக்கும் என்னை மாதிரி தவசி களுக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம். உங்களைப் போன்ற மனுஷ ஜாதிக்கு தெரியாது.."

"இல்ல நம்பூதிரி.. ஜவ்வாது சித்தர் எனக்கு இந்த மலையை பத்தி நிறையவே சொல்லியிருக்கார். அவர் கூட பிடாரசாமி பத்தி எதுவும் சொன்னதில்லை.."

"நாளைக்கு அவரை பார்க்கும்போது நேர்ல அவர் கிட்டயே கேளுங்க. என்ன சொல்றார்னு பார்ப் போம்.."

பதில் சொன்ன கையோடு பின்னாலே திரும்பித் திரும்பி பார்த்தான் நம்பூதிரி. யட்சிணி மட்டும் வில காமல் இருந்திருந்தால் இன்னேரம் அவர்கள் நிலையை புட்டுப் புட்டு வைத்திருக்கும்.



உண்மையில் அவர்கள் மூவரும் பூனைபோல பின்னாலேயே வந்துகொண்டுதான் இருந்தனர். வழக்கமாக இரவு நேரத்தில் ஒரு உண்மையான பக்தன் மேலேறும்போது கருப்பனும் நாய்வடிவில் பின்னாலேயே வருவான். அன்று கருப்பன் வராததும் சதாசிவம் வரையில் ஆச்சரியத்தை அளித்திருந்தது. அதையும் நம்பூதிரியிடம் கேட்டார்.

"எப்பவும் நான் வரும்போது கருப்பன் நாய் வடி வத்துல ஓடி வருவான். இன்னிக்கு அவன் வராததும் ஆச்சரியமா இருக்கு.." என்றார். அது நம்பூதிரியை சற்று நெருடியது.

வாஸ்தவத்தில் கருப்பன் நம்பூதிரியின் வசியக் கட்டில் ஒரு பெரு நெல்லி மரத்துக்கு கீழே தன்னை மறந்து சுருண்டு படுத்திருந்தான்.

நந்தினி மலைக்காற்றின் தாக்கத்தோடு உடம்பை உதறிக் கொண்டு புடவைத் தலைப்பால் இழுத்து போர்த்தி மூடிக்கொண்டாள். கண்ணைக் கரிக்கும் இருட்டில் நடப்பதும் அவளுக்கும் சிரமமாக இருந்தது. நம்பூதிரியால் அதை உணர முடிந்தது. நல்ல வேளையாக எதிரில் இரண்டு பளியர்கள் பலாப்பழச் சுமையுடன் வந்து கொண்டிருக்க, ஒருவன் கையில் தீவட்டி திகுதிகு வென எரிந்தபடி இருந்தது.

அவர்கள் நம்பூதிரியையும் உடன் இருக்கும் சதாசிவம், நந்தினியையும் வெகு ஆச்சரியமாக பார்த்தனர்.

"இந்த ராத்திரி நேரத்துல போய் மேல ஏறிக்கிட்டு இருக்கிங்களே... வழியில கழுதப்புலிங்க நடமாடிக் கிட்டிருக்கு. கவனம்.." என்றனர்.

நம்பூதிரி அடுத்த நொடியே எதிரில் இருப்ப வர்களை சில பல நாழிகைகள் வரை வசியப்படுத்தும்

வருணி தந்த்ர மந்த்ரத்தை வேகமாக மனதுக்குள் ஓதி அந்த இருவரையும் பார்த்து வசியவசிய என்றும் சொல்லி முடிக்க, இருவரிடமும் ஒரு அசாதாரண மாற்றம்.

"சாமி! உங்களுக்கு நாங்க ஏதாவது உபகாரம் கிபகாரம் செய்யணுமா?" என்று தாங்களாக முன் வந்து கேட்டனர்.

"ஆமாம்.. கொஞ்சம் எங்ககூட பிடாரசாமி குகை வரை வர முடியுமா?"

"பிடார சாமி குகைக்கா?" அவர்கள் இருவரிடமும் வெடுக்கென்று ஒரு அச்சம்.

"பயப்பட வேண்டாம். சாமி எனக்கு நல்ல பழக்கம்..."

"அதுக்கில்ல, அந்த குகைல அவர் ஏகப்பட்ட பாம்புங்களோட பாடபுங்களால்ல இருப்பாரு...?" ஒரு பளியன் விவரம் தெரிந்து கேட்ட கேள்வி நந்தினியை பீதியை மூட்டியது.

"அதெல்லாம் ஒரு காலத்துல... இப்ப அவர் யோகத்துலதான் இருப்பாரு.. திரும்புங்க, நடங்க...!" என்று சற்று கட்டளைக் குரலில் கூறிட, அவர்கள் பலாப்பழங்களை அப்படியே ஒரு ஓரமாக இறக்கி வைத்துவிட்டு வேட்டைக்குப் புறப்படும் அரசனுக்கு காவலுக்கு செல்பவர்கள் போல முன் செல்ல, நம்பூதிரி சதாசிவத்தையும் நந்தினியையும் பார்த்தான். இருவர் முகத்திலும் நம்பி வந்ததைக் கடந்த பீதி. நம்பூதிரி கொஞ்சமும் தாமதிக்காமல் அவர்கள் இருவருக்கும்கூட வருணி தந்த்ர வஸ்யுத்தை பிரயோகிக்க, அவர்களிடமும் அதன்பின் எதிர்ப்பில்லை.



பின்னாலே வந்தபடி இருந்த தியாகுவும் ராம்கியும் பார்த்திபனும் ஒரு பாறையை ஒட்டிக் கொண்டு நின்று கவனித்தபடியே இருந்தனர். நம்பூதிரி, பளியர்களை பயன்படுத்திக் கொண்டு நடப்பதை வைத்து புரிந்து கொண்டனர்.

"நம்பூதிரி கெட்டிக்காரன்... தீப்பந்தங்களோட பளியர்கள் வரவும் அப்படியே தனக்கு வழி காட்ட பயன்படுத்திகிட்டான் பாருங்க..." என்றான் தியாகு.

"ஆமா. இப்படி ராத்திரி நேரத்துல மலைல போக முடியுமா?" - பார்த்திபன் கேட்ட விதத்தில் பயம் தெரிந்தது.

"பௌர்ணமி நாட்கள்ல கூட்டம் கூட்டமா போவாங்க. அப்ப மலை ஏறலாம். அன்றைய சந்திர ஒளியும் மலைக்காற்றும் சுவாசிக்க, சுவாசிக்க ஆனந்தமா இருக்கும். அது நெஞ்சுக்கூட்டுக்கும் நல்லதுன்னு சொல்வாங்க. ஆனா, இன்னிக்கும் நம்பூதிரி மேல போறதுக்கு பின்னால நம்மளை தவிர்க்கற ஒரு அவசரம் இருக்கற மாதிரிதான் எனக்கு தெரியுது."

தியாகு சொல்லும்போதே அவன் செல்போன் சிணுங்கியது. எடுத்து திரையைப் பார்த்தான்!

திரையில் அவனது இதழின் ஆசிரியர்...

'குட் ஈவினிங் சார்..."

"ஈவினிங்தான் போயிடிச்சே.. பைதபை இப்ப எங்க இருக்கே தியாகு?"

"சதுரகிரி மலை அடிவாரத்துல..."

"இந்த இரவு வேளைலயா...?'

"ஆமாம். நீங்க எதுக்கு சார் கூப்பிட்டீங்க...?"

"முதல்ல உன்கிட்ட நான் மன்னிப்பு கேட்டுக்கறேன். அந்த பெரிய மனுஷன் ராமலிங்கம் விஷயத்துல என்னால உனக்கு உதவ முடியாம போனதுக்காக ரொம்பவே வேதனைப்படறேன்."

"இப்ப எதுக்கு சார் பழைய குப்பையைக் கிளறிக்கிட்டு... அந்த ராமலிங்கம் இப்ப பழைய ராமலிங்கம் இல்ல சார்... அவர் இப்ப நூறு சதவிகிதம் திருந்திட்ட ஒரு பக்கா ஜென்டில் மேனாயிட்டார் சார். நீங்க எதுக்கு போன் பண்ணீங்க... விஷயத்துக்கு வாங்க.."

"தியாகு! நீ செல்போன்ல ஒரு போட்டோ எடுத்து அனுப்பியிருந்தேதானே?"

"ஓ.. அதுக்காகவா... சொல்லுங்க சார் - இந்த மாந்திரீகன் பத்தி எதாவது தகவல் கிடைச்சதா?"

"ஆமாம்.. இப்பதான் என் மெயில் பாக்ஸை திறந்து பார்த்தேன். அவனைப் பற்றி ஏராளமான தகவல்கள். எதுவுமே நல்லவிதமா இல்லை..."

"நல்லவிதமா இல்லைன்னா... எந்த வகைல?"

"அவன் பேர் கேசவன் நம்பூதிரி. சொந்த ஊர் வயநாடு பக்கம் தம்புராச்சேரி. மாயம் மந்திரத்துல தலைமுறை தலைமுறையா வர்ற குடும்பத்தை சேர்ந்தவன். இவன் முன்னோர்கள் ரொம்ப ஒழுக்கமானவங்க. தவறான விஷயங்களுக்கு மாந்திரீகத்தை பயன்படுத்தாம ரொம்ப நல்லவங்களா இருந்துருக்காங்க.

அதனால பெருசா காசு பணமோ, சொத்துக்களோ சம்பாதிக்கலை. ஆனா, இவன் அப்படி இல்லை. மாந்திரீகத்துக்காக ஒரு பல்கலைக்கழகம் அமைக்கணும்கற அளவுக்கு ஆர்வமும் வெறியும் இவனுக்கு இருக்கு. அதுக்காக அரசாங்கத்தை அணுகினப்போ



அரசாங்கம் அக்கல்ட் சயின்ஸை ஒரு பாடமா வைக்க முடியாது - அது ஒரு கற்பனையான விஷயம்னு சொல்லி நிராகரிச்சுட்டாங்க. ஆனா, இவன் மனம் தளரலை. தனது சொந்த செலவுல மாந்திரீக சாம்ராஜ்யத்தை நிறுவுறதுதான் இவன் லட்சியம். இந்த தகவல்கள் எல்லாம் கேசவன் நம்பூதிரி பகவதிகாம்கற அவன் வெப்சைட்டுக்குள்ள போய் நான் திரட்டின தகவல்கள்.

தன் விருப்பத்துக்கு நிறைய பணம் தேவைங்கறதுக்காக யார் எதற்காக வந்து இவன்கிட்ட நின்னாலும் மாந்திரீகத்தை தயங்காம அவங்களுக்கு பயன்படுத்தியிருக்கான். இவன் லட்சியமே அஷ்டமா சித்துக்களை அடையறதும், செல்வச் சீமானா திகழ இரும்பை தங்கமாக்கறதும்தான்! இவைகளுக்காகத்தான் சதுரகிரி மலைக்களத்துக்கு வந்துருக்கான். பலிகள் கொடுக்கறதுல தேர்ந்தவன். இவன் பேர்ல போலீஸ்ல சிலமுறை கம்ப்ளைண்ட் பதிவாகியிருக்கு. ஆனா, கேஸை பதிவு செய்தவங்க பதிவு செய்த சில நாட்கள்லயே இறந்துட்டதால அந்த கேஸ் எல்லாம் டெத் கேஸா போயிடிச்சு. இருந்தும் இவனை கிட்டத்தட்ட ஒரு கிரிமினல்ங்கற மாதிரிதான் காவல்துறை தன் ரெக்கார்ட்ஸ் புக்ல குறிச்சி வச்சிருக்கு. சரியா மூணு வருஷத்துக்கு முந்தி வயநாட்டை விட்டு வெளியேறின இவனை பத்தி அதன்பிறகு கேரளாவுல எந்தவித என்கொயரியும் இல்லை. ஏதாவது வெளிநாட்டுக்கு போயிருக்கலாம்கறது டிபார்ட்மெண்ட் எண்ணம். நான்தான் உன் போட்டோவை வெச்சு ஐயா எங்க ஊர் சதுரகிரி மலைல இருக்காருன்னு தகவல் கொடுத்தேன். அவங்களுக்கே ஒரே ஆச்சரியம்..."

- ஆசிரியர் மளமளவென்று நம்பூதிரி பற்றி ஒரு நீண்ட தகவல்களை அளித்து முடித்தார். அப்படியே,

"இப்ப அந்த ஆள்கிட்டதான் நீ இருக்கியா - இல்லை அந்த ஆளை ஃபாலோ பண்ணிக்கிட்டிருக்கியா?" - என்றும் கேட்டார்.

"கிட்டத்தட்ட 580 கிலோ மீட்டருக்கு அந்த பக்கத்துல இருந்தாலும் உங்களுக்கு நல்ல யூக அறிவு சார். நான் நம்ம மதுரை ரிப்போர்ட்டர் ராம்கியோட அவனை பின் தொடர்ந்துகிட்டு இருக்கேன். உங்க தகவல்களுக்கு ரொம்ப நன்றி சார். நான் அப்புறமா தொடர்பு கொள்றேன்..."

"ஒரு நிமிஷம் தியாகு... பெரிய விஷயம் ஒன்னு உனக்கு மாட்டியிருக்குன்னு நினைக்கறேன். இந்த வாரமே சதுரகிரி ஒரு மர்மகிரின்னு விளம்பர அறிவிப்பு கொடுத்துடட்டுமா?"

- ஆசிரியரிடம் ஆர்வம் கொப்பளித்தது.

"ஐயோ சார்... இது மர்மகிரியெல்லாம் இல்ல சார்.. தர்மகிரின்னு வேணா சொல்லாம். அவசரப்பட்டு உங்க வியாபார புத்தியை காட்டிடாதீங்க. நான் நேர்ல உங்களைச் சந்திக்கும்போது விவரமா எல்லாம் சொல்றேன். இப்ப ஆளை விடுங்க. உங்களோட பேசப்போய் நம்பூதிரியை மிஸ் பண்ணிட்டேன்..." என்ற தியாகு, செல்போனை முடக்கிவிட்டு ராம்கி மற்றும் பார்த்திபனுடன் வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

"என்ன சார்... நம்பூதிரி ஒரு ஃப்ராடுங்கறாரா எடிட்டர்."

"ஆமாம் ராம்கி.. நாம முந்தலைன்னா நந்தினிக்கு என்ன வேணா நடக்கலாம்..."

"சார்! எதுக்கும் கீழ போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் நம்பூதிரி பத்தி சொல்லி போலீஸை அனுப்ப சொல்லலாமா?"



'உடனே பயந்துபோய் முட்டாள் மாதிரி பேசாதே. என் வரைல ஜவ்வாது சித்தர்ங்கற ஒரு சித்தரோட பார்வை எப்பவும் நம்ம மேல இருக்கு. ஆகையால நீ எதுக்கும் கவலைப்படாதே. வாங்க முதல்ல அவங்கள பிடிப்போம்."

- மூவரும் வேகமாக நடக்கத் தொடங்கினர். பார்த்திபனுக்கு கால்கள் இடறின. இருட்டில் கண்ணிரண்டும் கரித்தன... அந்த மலைப்பாதை ஒரு வளைவில் திரும்பியபோது தூரத்தில் தீப்பந்த ஒளி!

"அதோ அங்க போய்க்கிட்டு இருக்காங்க பார்.." - மூவரும் அந்த ஒளியைப் பார்த்துவிட்டு வேகமாக அந்த ஒளிப்புள்ளி நோக்கியே நடக்க ஆரம்பித்தனர்.

ஆனால், அவர்கள் உணராத நிலையில் பக்க வாட்டில் இரு பாறைகளுக்கு இடையில் இருந்து வெளியில் வந்த நம்பூதிரி வேகமாக அவர்கள் தீப்பந்தம் நோக்கி செல்வதைப் பார்த்து மர்மமாக சிரித்தான்.

அது அந்த பளியர்கள்! அவர்களைத்தான் நம்பூதிரி அந்த பக்கம் போகப் பணித்திருந்தான். உண்மையில் அந்தப் பக்கத்தில் கழுதைப்புலிகள் மட்டுமல்ல, மலைப்பாம்புகளும் ஏராளம். புலிகளையும், பாம்புகளையும் வீரத்தோடு கடந்தாலும் ஒரு மாயவனம் ஒன்று அந்த திசையில்தான் உள்ளது. அதனுள் ஒருவன் நுழைந்துவிட்டால் அவனுக்கு தன் நினைவே மறந்து போய்விடும்! அப்படி ஒரு கொடுமையான மகரந்தத்தூள் பறக்கும் மலர்கள் கொண்ட வனம் அது!

# 31

'சித்தர்கள் வரிசையில் இந்த இதழில் நாம் சந்திக்க இருப்பது இடைக்காடரை...! மதுரையில் இருந்து ராமநாதபுரம் செல்லும் வழியில் திருப்புவனத்துக்கு அருகில் உள்ள ஊர் இடைக்காட்டூர். இந்த ஊரில் வாழ்ந்த இடையர் குலத்தில் வந்தவர் இடைக்காடர். மற்ற சித்த புருஷர்களில் இருந்து பெரிதும் வேறுபட்டவர். பெரும்பாலும் சித்தர்களில் வைணவ நெறி சார்ந்தவர்கள் இருப்பது அரிது. வைணவம் என்பது அந்த ஸ்ரீ ஹரியாகிய மகாவிஷ்ணுவே எல்லாம்... மற்ற தெய்வங்கள் எல்லாம் விஷ்ணுவுக்குள் அடங்கிவிட்ட பரதேவதைகளே என்கிறது. அப்படிப்பட்ட வைணவ நெறியை பின்பற்றிய ஒரு சித்தராக இவர் உள்ளார்.

சித்த புருஷர்களோ தங்களுக்குள் இறைவனைக் காண்பவர்கள். ஆசார நெறிமுறைகள் எதையும் ஒரு பொருட்டாக கருதாதவர்கள். ஒரு சித்தனின் சித்தாந்தம் மனித சமுதாயம் அவ்வளவிற்கும் பொருந்தும் என்றெல்லாம் கூற முடியாது. சிவ சிவா என்ற சிவ வாக்கியரே தனது ஒரு பாடலில் இறைவன் வெளியில் உள்ள பூஜா வடிவங்களில் இல்லை, சுட்ட சட்டி சட்டுவம் கறிச் சுவையை எங்காவது அறியுமோ என்று கேள்வி எழுப்புகிறார். போகர் பிரான் சிவமிருக்க முருகக் கடவுளுக்கு நவபாஷாண உருவம் சமைக்கிறார், பிராந்தரோ காளிதேவி வரம் தர முன் வந்தும் வரமெல்லாம் வேண்டாம் போய்வா என்கிறார். இப்படி சித்தர்களை ஒரு வரையறைக்குள் அடக்கிப் பார்ப்பது முடியாத ஒன்றாகவே உள்ளது. அவர்கள் காற்று போல சுதந்திரமாகவும், சூரியன் போல பிர



காசமாகவும் வானம் போல எல்லைகள் அற்றவர்களாகவுமே உள்ளனர். இடைக்காடரையும் அப்படியே சிந்திக்க வேண்டியிருக்கிறது.

ஆடு மாடுகளை மேய்க்கும் இடையராக இருப்பினும் மிகுந்த கருணை உடையவராக இவர் திகழ்ந்தமையால் இவர் சித்த புருஷராக மாறினார் என்பார்கள். இவருக்கு வானசாஸ்திரம் தெரிந்திருந்தது... தெரிந்திருந்தது என்றால் ஏதோ கொஞ்சம் தெரிந்திருந்தது என்று அல்ல... கோள்களை திசைமாற்றிப் படுக்க வைக்கும் அளவுக்கு இவர் வான சாஸ்திரம் தெரிந்தவராக இருந்தார்.

கடும் வறட்சி நிலவிய நிலையிலும் இவரும் இவரது ஆடு மாடுகளும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்ந்து வந்தன. அது எப்படி என்று அறிய ஒன்பது கிரகங்களும் ஒன்று சேர்ந்து இடைக்காடர் குடிலுக்கு வந்தனவாம். அப்படி வந்தவை அன்று இரவு இடைக்காடர் குடிலில் இளைப்பாறும்போது இடைக்காடர் அவைகளை தற்போது ஆலயங்களில் நவகிரகங்களை நாம் வழிபடும் விதத்தில் மாற்றிப் படுக்க வைக்கவும் கோள் மாற்றங்கள் காரணமாக வறட்சி நீங்கி மழையும் பெய்ததாம்.

மேலோட்டமாக பார்த்தால் ஒரு நம்ப முடியாத கட்டுக்கதை போல தெரியும் இதனுள் நுட்பமான பல உண்மைகள் பொதிந்துள்ளன.

இடைக்காடர் கிருஷ்ணனையும், நரசிம்மத்தையும் பெரிதும் போற்றினார். 'தாம்திமிதிமி தையக் கோனாரே தீம்திமிதிமி தையக் கோனாரே, ஆவுடன் மனம் விட்டுப் போனாரே அவர் ஆனந்தக் கோனாரே... என்றும் பேரின்பம் விடாரே...' என்று இவர் பாடிய பாடல்கள் மிக எளியவை.

**இடைக்காடரை எண்ணும்போது நம்முள்
கருணையும் அன்பும் எளிமையும் சுரக்க வேண்டும்.**

அந்த இரவு நேரத்தில் தங்கள் கண் எதிரில் தெரிந்த
தீப்பந்த ஒளியை நம்பூதிரி என்று எண்ணிய
வர்களாக பார்த்திபன், தியாகு, ராம்கி மூவரும் பின்
தொடர்ந்திட, நம்பூதிரிக்குள் அவர்களை திசை திருப்பி
விட்ட மகிழ்சசி.

அப்படியே திரும்பி பிடாரசாமி குகை எனப்படும்
மிகுந்த முண்டும் முரடுமான குகைக்குள் நுழைந்
தான். உள்ளே ஒரு சிறிய தீப்பந்த ஒளிக்குள் சதாசிவமும்
நந்தினியும் நெருக்கமாக அமர்ந்து கொண்டிருந்தனர்.
நம்பூதிரி அவர்களை அப்படியே படுத்துறங்கும்படி
கூறினான்.

“இரண்டு பேரும் படுத்துக்குங்க... காலைல
பொழுது விடிந்ததும் நாம இங்க இருந்து கிளம்பலாம்.
நேராக ஜ்வரலிங்கம் இருக்கற சுனைக்குதான் போறோம்.
வழியில எப்பாடுபட்டாவது அபிஷேகத்துக்கு பால்
வாங்கிக்கணும். அதுதான் முக்கியம்...” - என்று நம்பூதிரி
சொன்னதற்கு மறு பேச்சு பேசிட சதாசிவத்துக்கு தெரிய
வில்லை. அந்த அளவுக்கு அவரையும் நந்தினியையும்
நம்பூதிரியின் வருணி தந்த்ர மந்த்ரம் கட்டிப் போட்
டிருந்தது!

நம்பூதிரிக்கு தூக்கம் வரவில்லை. தனது இருப்
பிடமாகிய அதர்வண கிரிப்பகுதியில் மதிவாணன்
சேகருடனும் ஆனைமுத்துவுடனும் என்ன செய்து
கொண்டிருப்பானோ என்ற கேள்வி எழும்பி அப்
போதே புறப்பட்டுப் போனால் என்ன என்றும் தோன்
றிற்று. அங்குள்ள நிலையை அறிய யட்சிணியை
அழைக்கலாம் என்றாலோ அவள் கட்டுப்பாடுகளை



அறுத்துக் கொண்டு விடுதலை பெற்று விட்டது
நினைவுக்கு வந்தது.

சதாசிவம் நந்தினி முன்னால் குறுக்கும் நெடுக்
கும் நடக்க ஆரம்பித்தார். தீவிரமான சிந்தனை!

தங்கள் கண்களுக்கு நேராக தெரிந்த ஒளிப்
புள்ளியைத் தொடர்ந்து சென்றபடி இருந்த பார்த்திபன்,
சேகர், ராம்கி மூவருமே தவறான திசையில் தாங்கள்
சென்று கொண்டிருக்கிறோம் என்பதையே உணர
வில்லை. அந்தப் பளியர்களும் ஒரு நேர்கோட்டில்
நடப்பவர்களைப் போல நடந்து கொண்டிருந்தனர்.
திடும்மென்று வானில் மின்னலின் தோற்றம்... இடி
முழக்கம். காற்றிடமும் ஒரு புது வேகம்... மலைக்
காடுகளுக்கும் மழைக்கும் எப்பொழுதுமே ஒரு
நெருங்கிய தொடர்பு உண்டு. எப்பொழுது வரும்,
எப்பொழுது நிற்கும் என்பதே தெரியாது. அப்படி வந்த
மழைத்துளி பளியர்கள் பிடித்துச் செல்லும் தீப்பந்த
நெருப்பைத்தான் முதலில் அணைத்தது. அவர்கள்
மழையில் நனையத் தொடங்கினர்... சொல்ப நொடி
களில் அவர்களுக்குள் ஒரு உதறல். வாருணிதந்த்ர
மந்த்ரம் பஞ்சபூதங்களில் நீரைக் கொண்டு புரியும்
மந்திரதந்திரமாகும். இந்த மந்திரம் உரிய சப்தத்துடன்
ஜெபிக்கப்பட்ட நொடி அதன் நுட்பமான அலை வரிசை
எதிரில் உள்ளவர்களின் ரத்தத்தில் கலந்து அவர்களை
கட்டுப்படுத்தத் தொடங்கிவிடும். அதே கட்டு அவர்கள்
மழை நீரில் நனைந்து உடம்பு சிலிர்க்கும்போது விட்டுப்
போகும்.

பளியர்களிடமும் அதுதான் நிகழ்ந்திருந்தது.

அந்த நொடி இருவருமே ஒருவரை ஒருவர்
பார்த்துக் கொண்டனர். தலைக்கு மேல் ஒரு டிராகன்
மிருகம் போல மின் விசையானது ஒரு ஓட்டம் ஓடியதில்

அதன் ஒளியில் அவர்களுக்கு தாங்கள் இருக்குமிடம் ஒரு அளவுக்கு தெரிந்து போனது.

"எலேய்.. நாம என்னடா மேற்கு பக்கம் வந்துருக்கோம், கெழக்க போகாம இங்க எப்படிடா வந்தோம்..?"

"அதான... இப்படிப் பாதை மாறிப்போய் நாம வந்ததே இல்லையே...?"

"எல்லாம் அந்த மந்திரக்காரன பாத்த பொறவுதான்.. ஞாபகம் வருதுல்ல... அவன்தான் நம்ம கண்ண கட்டிட்டான்போல.."

- அவர்கள் மழையில் தெப்பமாக நனைந்தபடியே தங்களுக்குள் பேசிக் கொண்டனர். பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருந்த பார்த்திபன், தியாகு, ராம்கி மூவருக்கும்கூட அந்த திடீர் மழை ஒரு அதிர்வை உருவாக்கியிருந்தது. பார்த்திபன் தன் டார்ச் லைட்டை ஒளிர விட்டான். "முன்னால போய்க்கிட்டிருக்கறவங்க தீப்பந்தம் அணைஞ்சு போச்சு பார். பாவம் நந்தினி இருட்டுல தடுமாறப்போறா.." என்ற பார்த்திபன் டார்ச்லைட்டையும் அவர்கள் இருவரை நோக்கித்தான் அடித்தான். அந்த ஒளி தங்கள் மேல் படவும், "எலேய் அங்க பார்றா, யாரோ பேட்டரி விளக்கு அடிக்கறது.." என்றான் ஒரு பளியன். மழையிடம் வலு கூடிக் கொண்டே போனது. இரண்டு பளியர்களும் டார்ச் ஒளியை வைத்தே மூவரையும் நோக்கி ஓடிவந்தனர். குரலும் கொடுத்தனர்.

"யாருங்க சாமி இது.."

"யாருங்களா... நீ யாருய்யா?"

"பளியனுங்க சாமியோவ். இந்த நேரத்துல நீங்க எங்க இந்த பக்கம்..?"



"அடக் கொடுமையே.. ராம்கி, பார்த்திபன் நாம இவங்களதான் ஃபாலோ பண்ணிக்கிட்டு வந்துருக்கோம். நம்பூதிரி, நந்தினி, சதாசிவம் சாரை மிஸ் பண்ணிட்டோம்ப்பா.."

"எக்ஸாக்ட்லி... ஏய்யா, உங்ககூட வந்த அந்த பொண்ணும், பெரியவரும் எங்கய்யா போனாங்க?"

"யாருக்குங்க தெரியும். நாங்களே எங்கள மறந்து இந்த பக்கம் வந்துட்டோம். இது மதிமயக்கி வனத்துக்கு போற தடம்.. நல்ல வேளை மழை வந்துச்சு எங்க கண் கட்டும் விலகினிச்சு.."

"கண்கட்டா..?"

"ஆமாங்க சாமி.. அந்த நம்பூதிரி மோசமான ஆளு. இந்த மலைல நாங்க எவ்வளவோ சாமிங்கள பாத்துருக்கோம். அதுல அவன் ஒரு மாதிரிதான். மத்த சாமிங்களோட சேராம வடக்க கிடக்கற மலைப் பாகத்துல அவன் இருக்கும்போதே எங்களுக்கு சந்தேகம்தான்.."

"சரிப்பா! மழை பொத்துக்கிட்டு ஊத்துது பார்.. ஒதுங்க இங்க இடம் எதுவும் இல்லையா?"

"இப்படி அந்த பேட்டரி விளக்கை கொடுங்க. என் பின்னாடியே வாங்க. மண்டப்பாறை பின்னால போய் கொஞ்சம் ஒதுங்கி நிக்கலாம். மழை நின்னு பொழுது விடிஞ்சாதான் அடுத்து எந்த பக்கம் போகறதுன்னே முடிவு செய்ய முடியும்?"

- அவன் டார்ச் லைட்டை கேட்டு வாங்கிக் கொண்டு பாதையைக் காட்டிக் கொண்டு நடந்தான்.

பாதையா அது? அங்கங்கே கால்களை இடற விட்டது சில வழுக்கையான கற்கள்.

"இப்படி கஷ்டப்படுவோம்னு நினைச்சுக்கூட பார்க்கல நான்..." என்றான் ராம்கி.

"அந்த நம்பூதிரி நம்மளை திசைதிருப்பிட்டான். என் நந்தினியும் மாமாவும் பாவம் அவன் கூட இப்ப எங்க இருக்காங்களோ தெரியலியே.."

- பார்த்திபனிடம் பாசம் பீறிட்டது.

"தியாகு சார்... இந்த மாதிரி இக்கட்டான நேரத்துல எல்லாம் உங்க ஜவ்வாது சித்தர் வந்து உதவி செய்ய மாட்டாரா" - ராம்கி கச்சிதமாக ஞாபகப்படுத்தினான். தியாகுவுக்கு சற்று சுருக்கென்றது. அந்த இக்கட்டான வேளையில் அவரை நினைவுபடுத்திய ராம்கிக்கு நன்றி கூற வேண்டும் என்றும் தோன்றியது. நல்ல வேளையாக ஒரு பெரிய மின்வெட்டு வெளிச்சத்தில் மிகப் பெரிய பாறை ஒன்று கண்ணில் பட்டது. அதன் அடிப்பாகம் சிறுத்து மேல் பாகம் பரட்டையாக விரிந்திருந்தது. அதுவே ஒரு குடைபோலதான் இருந்தது. அந்த பளியன் தட்டுத்தடுமாறி அதன் அடிப்பாகத்தை அடைந்து மற்றவர்களுக்கும் டார்ச் லைட்டை அடித்து வழியைக் காட்டினான்.

மழை வலுத்துக்கொண்டே போனது. வரிசையாக அந்த ஐந்து பேரும் பாறையை ஒட்டி நின்றுகொண்டனர். காலடியில் மண் கரைந்து ஓடுவதை உணர முடிந்தது. தலைக்கு மேலே வானில் ஒரு அசுரத்தனமான இடி சப்தம். ஒரு ஊரளவு பெரிய கண்ணாடி ஒன்று அப்படியே தரைமேல் விழுந்து நொறுங்கியது போல் இருந்தது. பார்த்திபன் பயத்தில், ஐயோ என்று கத்தியே விட்டான்.



"என்ன தியாகு சார்... அட்வென்சர்ங்கற பேர்ல வந்து மாட்டிக்கிட்டோமா. கொஞ்சம் யோசிச்சிருந்தா ரெயின் கோட், குடை எல்லாம் எடுத்துக்கிட்டு வந்துருக்கலாமோ?"

- ராம்கி திரும்பவும் கேள்வியில் விழுந்தான். அதற்கு பளியன் பதில் கூறத் தொடங்கினான்.

"சாமி... குடை கோட்டெல்லாம் இங்க எதுக்கும் உதவாது சாமி. இது சித்தர் சாமிங்க நடமாடற மலைக்காடு. சுத்த பத்தமா இருக்கறவங்களுக்கு இங்க ஒரு ஆபத்தும் இல்லை. அதே தப்பான புத்தியோட யார் இருந்தாலும் சரி, அவங்க பாடா பட்டு ஓடாத் தேஞ்சு தான் போகணும்."

"அது சரி... அந்த சித்தர் சாமிங்களும் மனுஷங்க தானே? அவங்க இந்த மழையையும் குளிரையும் எப்படித் தாங்கிக்கறாங்க..."

"அவங்களுக்கு குளிரும் ஒண்ணுதான், வெக்கையும் ஒண்ணுதான். காத்து வீசறத வெச்சே எப்ப எவ்வளவு மழை பெய்யும்னு அவங்க சொல்லிடுவாங்க.."

"இப்ப நாம இங்க இப்படியே நின்னுகிட்டே இருக்க வேண்டியதுதானா... எந்த சாமியும் நமக்கு உதவி செய்ய வரமாட்டாங்களா?"

"அது மன உருக்கமா நாம அவங்கள கூப்பிடறத பொறுத்த விஷயம்..."

"ஓஹோ... இங்க இருந்து நாம கூப்பிட்டா அவங்க காதுல விழுந்து அவங்க வருவாங்களா?"

"நிச்சயமா... எங்க கூட்டத்துல யானை மிதிச்சு சாகக் கெடந்தவங்கள எல்லாம் அவுங்க காப்பாத்தியிருக்காங்க..."

"இப்ப இந்த ராத்திரி நேரத்துல நீ வழிய சொல். இன்னும் கொஞ்ச நேரத்துல இந்த மழை நிக்கலேன்னா நாங்க அவ்வளவு பேரும் குளிர்ல விறைச்க ஜன்னி வந்தே செத்தாலும் செத்துடுவோம்."

-ராம்கி பதைத்துப் போய் பேசினான். உடனே அந்த பளியர்களில் ஒருவன் தனது சக பளியனைப் பார்த்து, 'எலே மண்ணுளியா.. ஆத்திர அவசரத்துக்கு சாமிங்கள கூப்பிடற மந்திரம் உனக்கு தெரியும்தானே?'

"எனக்கு எங்க தெரியும்... ஏதோ 'வசிய வசிய வசிய'ன்னு திரும்பத் திரும்ப சொல்வாங்க. அவ்வளவுதான் தெரியும்..."

"அடப்பாவி... நம்ம சாதி சமனம் அவ்வளவு பேருக்கும் ஒரு சடைபிடிச்ச சாமி ஒரு நாள் படிச்சுப் படிச்சு சொன்னாரேடா...?"

"அவர் சொன்னா ஆச்சா... அது மனசுக்குள்ள இறங்க வேண்டாமா?"

- இருவரும் தர்க்கம் பண்ணிக் கொள்ள, ராம்கிக்கு எரிச்சல்தான் வந்தது.

"மந்திரம் சொன்னாதான் அந்த சித்தர் சாமிங்க வருவாங்களா... கோவில்ல இருக்கற சாமியே வந்ததில்ல. விடுங்கப்பா வேற வழி ஏதாவது இருக்குதா?"

"அப்படி எல்லாம் அவசரப்பட்டுப் பேசாதீங்க சாமி. மனுஷனுக்கு நம்பிக்கை முக்கியம்.."

"இந்த வார்த்தையை நீயும் சொல்லிட்டியா.. எல்லாம் என் நேரம். தியாகு சார்.. மிஸ்டர் பார்த்திபன். நாம இப்படி நனைஞ்சுகிட்டே நிக்கறதுக்கு நடப்போம். நிச்சயம் எதாவது ஒரு வழி தெரியும்..."



'நடக்கறதா... இந்த நேரத்துல இந்த மலைக் காட்டுலயா? அதுக்கு இங்க இப்படியே நிக்கறது ஆயிரம் மடங்கு மேல்' என்றான் பார்த்திபன்.

"ஏம்ப்பா.. மந்திரம்னு ஏதோ சொன்னியே. அதை சொன்னா சாமிங்க வந்துடுவாங்களா?"

"கட்டாயமா சார். எங்க கெட்ட நேரம் இப்ப அது ஞாபகத்துக்கு வரல.."

"அது எப்படி இருக்கும்னு சொல்ல முடியுமா..?"

"அதான் ஞாபகம் இல்லீங்களே.. சாமிங்களே வாங்க, உதவி செய்யுங்க, ஆபத்துல இருக்கோம் நாங்கன்னு கெஞ்சற மாதிரிதான் அது இருக்கும்.."

"அதை உரத்த குரல்ல சொல்லணுமா? இல்ல மனசுக்குள்ள நினைச்சுகிட்டா போதுமா?"

"நாங்க ஆபத்துல இருக்கும்போது சத்தம் போட்டு தானே சார் கூப்பிடுவோம்..."

"ரைட்! புரிஞ்சு போச்சு. இங்க நீங்க சொன்ன மாதிரி நம்பிக்கைதான் முக்கியம். புராண கதைகள்ல படிச்சிருக்கேன். முதலை வாய்ல அகப்பட்ட யானை ஆதிமூலமேன்னு அழைச்சப்போ அந்த மகாவிஷ்ணு கருடன் மேல உக்காந்துகிட்டு பறந்து வந்தாராம். ஒரு யானைக்கு இருந்த நம்பிக்கை நம்மகிட்ட இல்லேன்னா எப்படி?"

- தியாகு கேள்வியோடு கூடி கைகளை கூப்பிக் கொண்டு, "ஜவ்வாது சாமி... எங்க இருக்கீங்க? நாங்க நடுக்காட்டுல தத்தளிச்சுகிட்டு இருக்கோம். எங்களுக்கு உதவி செய்ய வாங்க.."-என்று பெரும் குரலெடுத்து கத்தத் தொடங்கினான்.

அந்த நெருக்கடியிலும் ராம்கிக்கு தியாகுவின் செயல் ஒரு பைத்தியக்காரத்தனமான ஒரு செயலாகத்தான் இருந்தது.

ஆனால், ஒரு ஆச்சரியம் போல உடனடியாக மழை நின்றதுதான் ஆச்சரியம்! அப்படியே யானையின் கழுத்துமணி ஒலிப்பது போலவும் ஒரு சப்தம்!

# 32

'**கா**லாங்கி நாதர் என்று ஒரு சித்த புருஷர்! இவர் திருமூலரின் சிஷ்யர். தானறிந்த கூடுவிட்டு கூடுபாயும் சித்தியை இவர் தன் சிஷ்யன் காலாங்கிக்கு உபதேசித்தார். இவரும் அந்த சித்தியை பயன்படுத்தி பல சாகசங்களைச் செய்தார். ஆனால், எந்த ஒரு சாகசத்தைச் செய்தும் புகழ் பொருள் என்றும் எதையும் அடையாதபடி, அதனால் பிறருக்கு நன்மை மட்டுமே விளையும்படி பார்த்துக் கொண்டார்.

கீரியால் கடித்துக் குதறப்பட்ட ஒரு நாகம் உடம்பெங்கும் காயத்தோடு கிட்டத்தட்ட உயிரை விட்டுவிடப் போன நிலையில் அதனுள் புகுந்து சிரஞ்சீவி மூலிகை உள்ள வனத்திற்கு சென்று அந்த மூலிகைமேல் பிரண்டு எழவும் அந்த நாகத்தின் காயங்கள் ஆறி அதுவும் உயிர் பிழைத்தது. இப்படித் தான் இவரது உதவும் தன்மை அமைந்திருந்தது.

சமாதி யோகத்திலும் இவர் தலைசிறந்து விளங்கினார். சமாதி யோகத்தில் இவர் ஆழ்ந்தால் வெளியே பலப்பல ஆண்டுகள் செல்வதுகூட தெரியாது. கண் விழிக்கும்போது உடம்பில்கூட மாற்றங்கள் ஏற்பட்டு நமக்கே அது ஆச்சரியம் தருவதாக இருக்கும்.



சித்த புருஷர்களில் இவர் காலத்தில் சுனாமி போல பிரளயம் ஏற்பட்டு பூவுலகமே அழிந்து போனது. அப்போது இமயமலை உச்சிக்கு சென்று தங்களை தற்காத்துக் கொண்ட வெகு சிலரில் இவரும் ஒருவர்!

அப்போது மலை உச்சியில் இவர் பலப்பல சித்தர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளையும் பெற்றார். சித்தர்களுக்கு தங்கள் சுய உருவத்தை தவிர்த்துவிட்டு விலங்காய், பறவையாய் திரிவதில் நாட்டமுண்டு. உயிர் வாழும் காலமும் இந்த உலகில் எவரைப் பற்றியும் எண்ணாமல் எவர் கண்ணிலும் பட்டுவிடாதபடி புலியாய், பாம்பாய், கிளியாய் திரிவதெல்லாம் சிவ சித்த புருஷர்களின் செயல்பாடுகள்.

அப்படிப்பட்டவர்களை காலாங்கி நாதர் அடையாளம் கண்டுகொண்டு அவர்களை வணங்கி அவர்களின் ஆசிகளையும் இவர் பெற்று கொண்டார். நீண்ட நெடிய காலம் வாழ்ந்தவர் இவர். அந்தப் பொருளிலேயே காலாங்கி என இவர் அழைக்கப் பட்டார்.

ஆரோக்கியம், அமைதி, தன்னடக்கம் மூன்றுக்கும் இவர் உதாரணமாக திகழ்கிறார் எனலாம்!

**அ**ந்த இருண்ட வேளையில் காதில் ஒலித்த மணி சப்தம் அவர்களை ஐந்து பேருக்குமே ஒரு புதிய நம்பிக்கையை தருவதாக இருந்தது. மழை நின்றதில் அதற்கும் மேலாக ஒரு சந்தோஷம். சப்தம் பலமாகவும் கேட்க ஆரம்பித்தது. கூடவே இன்னொரு அதிசயமும் சேர்ந்து கொண்டது. இருண்ட அந்த சூழலில் வெளிச்சமும் தெரியத் தொடங்கியது.

ஐவரும் நிமிர்ந்தனர்!

எதிரில் யானை ஒன்றின்மேல் தீப்பந்தம் பிடித்தபடி
ஜவ்வாது சித்தர்! அது ஒரு நம்ப முடியாத காட்சி.
தியாகு ஒரு வினாடி சிலிர்த்துப் போனான். பிரார்த்
தனை என்பது இவ்வளவு சக்தி மிகுந்ததா என்று அந்த
நிலையிலும் கேட்டுக் கொண்ட பின் அப்படியே
கைகளை கூப்பிக் கொண்டு அவரைப் பார்த்தான். உதவி
செய்த பளியர்களுக்கு ஜவ்வாது சித்தரைப் பற்றி
ஏற்கெனவே தெரிந்திருந்ததால் அவர்களும் 'சாமி
நீங்களா?' என்றனர் மிக உற்சாகமாக...

யானை கால்களை மடக்கி அமர்ந்தது. அவரும்
கீழே இறங்கினார். அப்படியே திரும்பி, "நீ போடா
யானை..." என்றார். அதுவும் திரும்பிச் செல்லத் தொடங்
கியது.

"இந்த பக்கமா இருந்து என்னை யாரோ கூப்பிடற
மாதிரி காதுல கேட்டது... அதான் வந்தேன். வழில
யானையைப் பார்க்கவும் ஏறி உட்கார்ந்துட்டேன்"
என்று தான் யானை மேல் ஏறி வந்ததற்கான காரணத்தை
அவர்கள் கேட்காமலே கூறினார்.

தியாகு நினைவு தெரிந்த நாளாக அழுததில்லை!

ஆனால், அப்போது அழுதான். இனம் தெரியாத
உணர்வுகளில் சிக்கிக் கொண்டிருப்பது போலவும்
உணர்ந்தான்.

"என்னப்பா... எதுக்கு இந்த கண்ணீர்?" என்று
அவரும் கேட்டார்.

"சொல்லத் தெரியல சாமி... இந்த ராத்திரி நேரத்
துல ஒரு மணி நேரமா நாங்க அனுபவிச்ச கஷ்டத்தை
யார்கிட்ட சொன்னாலும் நம்ப மாட்டாங்க. முட்டாள்
தனமா ராத்திரில இந்த மலைக் காட்டுக்குள்ள வந்தது
தான் முதல் தப்புன்னு எனக்குள்ளேயே திட்டிக்
கிட்டேன்.



பெரிய ஹீரோக்கள் மாதிரி கிளம்பி வந்துட்
டோம். ஆனாலும் எதுக்காக வந்தோமோ அந்த
விஷயத்தை கோட்டைவிட்டுட்டோம்.

ஒரே ஒரு நம்பிக்கை மட்டும்தான் என்கிட்ட
இருந்தது.

அது நீங்கதான் சாமி..." என்று அவன் முடித்த
போது அவனிடம் விசும்பலின் வெடிப்பு. கூடவே
இருந்த ராம்கிக்கே அது பெரிய ஆச்சரியம்.

"அப்ப உன் நம்பிக்கை வீண்போகலைன்னு
சொல்.."

"ஆமாம் சாமி! இந்த ராத்திரில உங்கள பார்க்கவும்
தான் உயிரே வந்துருக்கு..."

"ஒரு விஷயத்தை நீயும் புரிஞ்சுக்கோ! நாம வெச்
சுருக்கறது உண்மையான சந்தேகத்துக்கு இடமில்லாத
நம்பிக்கையா இருந்தா அது வீணால்லாம் போகாது-
தங்கம் எப்படி கருக்கக் கூடாததோ அப்படித்தான்
நம்பிக்கையும் வீண்போய்டக் கூடாதது."

"சாமி... பேசிக்கிட்டு இருக்க நேரமில்ல சாமி.
உங்களை நல்லா தெரியும்னு சொல்லிக்கிட்டு ஒரு
நம்பூதிரி, சதாசிவம் சாரையும் அவரோட கர்ப்பிணிப்
பெண்ணையும் கூட்டிக்கிட்டு இந்த மலைக்குதான்
வந்துருக்கான்.

நாங்க பின்தொடர்ந்து வந்தோம். எங்களை
ரொம்ப சாமர்த்தியமா திசை திருப்பிவிட்டான். அவன்
நல்லவனில்லை ஏமாத்துப் பேர்வழின்னு தெரிஞ்சு
போச்சு. அவன் ஏதோ ஒரு காரணத்தோடதான்
நந்தினியை கூட்டிக்கிட்டு வந்துருக்கணும்னு தோணுது"
- தியாகு பதறினான். ஜவ்வாது சித்தரோ சிரித்
தார்.

"சாமி! இது சிரிக்கற நேரமா..?"

"சிரிக்கறதுக்குகூட நேரம் காலம் பாப்பீங்களா என்ன..? தன்னை உணர்ந்தவன் எப்ப வேணா சிரிக்கலாம் தம்பி.."

"சாமி! அவங்கள காப்பாத்தணும் சாமி.."

"கவலையை விடு.. கூட வா! இது சாதாரண மலை இல்லை. இங்க நீ எதை கொடுக்கறியோ அதைதான் எடுத்துக்கவும் முடியும்."

"இப்படித் தத்துவமா பதில் சொன்னா எப்படி சாமி..?"

"உள்ளதை சொன்னேன். உனக்கு அது தத்துவமா தெரியுது. போகட்டும் போ. அவங்களுக்கு எதுவும் ஆகாது... தைரியமா இரு.."

"அவன் மகா மோசமான மாந்திரீகன்.. அவனை எதை வெச்சு சாமி நம்பறது..?"

"கவலைப்படாதே. அவன் மாந்திரீகமே அவனுக்கு பகையாகிடும்."

"அது எப்படிங்க சாமி...?"

"அதுக்கு பேர்தான் தம்பி கர்மங்கறது.. நீங்க இப்ப எதுவும் பேசாம என் கூட வாங்க. இன்னும் கொஞ்ச நேரத்துல பொழுது விடியப் போகுது. ஒரு ஆச்சரியம் பாரு. நீ வந்துருக்கற இந்த ராத்திரி பொழுது மாசிமாச மகாசிவராத்திரி... இந்த மலையே ஒரு கைலாசம். இதுல மழைல நனைஞ்சு பூரண உடல் சக்தியோட நீங்க கண் முழிச்சிட்டிருக்கறது உங்களோட பூர்வ புண்ணியம். நான் இப்ப உங்களை விடியற்கால பிரம்ம முகூர்த்த சிவ பூஜையை வேற பாக்கறதுக்கு கூட்டிக்கிட்டுப் போகப் போறேனே, அது இன்னும் புண்ணியம்..."



சொல்லிக் கொண்டே அவர் தீப்பந்தத்தோடு நடக்கத் தொடங்கினார். அவர்களும் அவரை பின் தொடரத் தொடங்கினர்!

மழை விட்டுவிட்ட அந்த இரவில் நம்பூதிரி குடிசைக்கு வெளியே மந்திர நீரால் புழு போல சுருண்டு விட்டிருந்த சேகரிடம் ஒரு அதீத மாற்றம். ஓங்கிப் பெய்த மழை நீர் மந்திர நீரின் அவ்வளவு சக்தியையும் தன்னோடு சேர்த்து அடித்துக் கொண்டு போய்விடவும், அவனுக்குள் அடங்கிக்கிடந்த அந்த ஆவேசம் திரும்பவும் செயல்பட ஆரம்பித்தது. குரளிகளே எப்பொழுதும் ஒரு கட்டுக்கு அடங்காது.. அடக்க அடக்க பந்து போல ஆர்ப்பரிக்கப் பார்க்கும்.. இங்கே அடக்கி வைக்கப் பார்த்தது பெரும் விபரீதத்துக்கு விதை போட்டது போலாகி விட்டது.

சேகரை குரளி ஆட்கொண்டதில் அவனுக்கு தான் யார் என்பதோ ஆனைமுத்து யார் என்பதோ எல்லாமே மறந்து போய்விட்டது. மதிவாணனைக்கூட தன்னை அடிமைப்படுத்தப் பார்த்த ஒரு சர்வாதிகாரி மாதிரிதான் பார்த்தான்.

ஆனைமுத்துவும் இந்த இரவுக் குளிருக்கும் மழைக்கும் தூக்கம் வராதபடி எப்பொழுது விடியும் என்பது போல உட்கார்ந்திருந்தார். சேகர் திரும்பவும் தன் பேய் விளையாட்டை காட்டத் தொடங்கினான். ஆனைமுத்து அருகே போய் அவரை வெறித்துப் பார்த்தான். அவருக்கு புரிந்துவிட்டது.

"சேகரு... எதுக்கு இப்படிப் பார்க்கறே.. நான் ஆனைமுத்து மாமாப்பா!"

"இல்ல.. பேராசை பிடிச்சவன் நீ.."

"எலே என்ன பேசறே நீ... நான் உன் மாமாப்பா... மதிவாணா, இங்க வந்து பாருப்பா சேகரை! அடங்கிக் கிடந்த பய திரும்ப ஒரு மாதிரி ஆகிட்டான்."

- மதிவாணனும் சேகரைப் பார்த்து அச்சப்படத் தொடங்கினான்.

"மாமா... இப்ப இவன் சேகர் இல்ல. நம்பூதிரி அடக்கி ஆண்ட குரளிப் பேய்..."

"அதைத்தான் நீ கட்டிப் போட்டியே மதிவாணா..."

"மந்திரத் தண்ணியோட சக்தி மழை பெய்யவும் போயிடிச்சு போல இருக்கு மாமா..."

"அப்ப அதுக்கு தகுந்த மாதிரி வேகமா எதையாவது பண்ணுப்பா..."

"இருங்க வர்றேன்..."

- மதிவாணன் அருகாமையில் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு வேகமாக குகைக்குள் நுழைந்தான். உள்ளே நம்பூதிரி பத்திரப் படுத்தி வைத்திருக்கும் விதவிதமான வேர்கள் மற்றும் மந்திர நீர்ப்பானைகளை ஒவ்வொன்றாக எடுத்து வந்து சேகர் மேல் கொட்டி அடக்கப் பார்த்தான். ஆனால், அதெல்லாமே வீணாகிப்போய் சேகரிடம் ஆவேசம் தான் அதிகரித்தது. ஒரு கட்டத்தில் மதிவாணன் மேல் பாய்ந்தவன் அப்படியே அவன் கழுத்தை புலியானது கவ்வுவது போல கவ்வி ரத்தத்தை உறிஞ்சத் தொடங்கினான். ஆனைமுத்து மாமா அப்படியே உறைந்து போய் அங்கிருந்து ஓடப் பார்த்து கால் தடுக்கி கீழே விழுந்ததில் அவர் தலை ஒரு பாறை மேல் மோதியதில் நாற்புறமும் ரத்தம் தெறித்தது. மதிவாணன் அந்த இரவுப் பொழுதில் போட்ட சப்தத்தில் அந்த அதர்வணகிரி மலைப் பகுதியே நடுங்கியது!



மெல்ல விடியத் தொடங்கியது!

பிடாரசாமி குகைக்குள்ளும் வெளிச்சம் பரவியது. சதாசிவமும் நந்தினியும் நெருக்கமாக அமர்ந்திருக்க, நம்பூதிரி வெளியில் காவல் வீரன் போல நின்றுகொண்டிருந்தான். பொழுது விடியவும் அவன் முகத்தில் ஒரு உற்சாகம் உட்பக்கமாய் திரும்பி, "விடிஞ்சாச்சு, புறப்படுங்க..." என்று அவர்களை அழைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். அவர்கள் இருவரும் அவனது பூரண வசியத்தில் இருந்தபடியால் எதுவும் பேசாமல் பின்தொடரத் தொடங்கினர்.

பாவம் நம்பூதிரி...

அவனது குகைப் பகுதியில் ஏற்பட்டுவிட்ட கொடூரமான மாற்றங்கள் எதைப் பற்றியும் அறியாமல் அவர்களோடு நடந்து கொண்டிருந்தான்!

குகைப்பகுதியிலோ சேகர், மதிவாணனை கொன்று அவன் ரத்தத்தை எல்லாம் குடித்து முடித்துவிட்டு மயங்கி விழுந்து கிடந்த ஆனைமுத்து மாமாவின் ரத்தத்தையும் குடித்துவிட்டு அதற்கு பிறகும் பசியடங்காதவன் போல உடம்பெல்லாம் ரத்தத் திப்பிகளோடு சண்டிதேவி போலவே ஒரு பாறை மேல் போய் அமர்ந்து கொண்டான்.

அவன் அப்படி அமர்ந்து கொண்டிருப்பது தெரியாதபடி தெரிந்துகொள்ள உதவிக் கொண்டிருந்த யட்சிணியும் இல்லாத நிலையில் தைலக் கிணறுக்கு வழி தெரிந்துவிடப் போகிற ஒரு மாயா உற்சாகத்தோடு நம்பூதிரியும் குகைப் பகுதியை நெருங்கி விட்டான்.

# 33

**பொ**துவாக சித்த புருஷர்களை பற்றி சிந்திக்கும்போது அவர்களைப் பெரும் சாகசக்காரர்களாகத்தான் நம்மால் உணர முடியும். அது ஒரு வகையில் உண்மையும்கூட...! சித்து விளையாட்டில் கடைத்தேறியவர்கள் என்பதனால் அவர்களை இந்த உலகம் சித்தர்கள் என்று அழைப்பதாக கூறுவார்கள். சித்தம் தெளிந்தவர்கள் அதனால் அவர்களை சித்தர்கள் என்கிறோம் என்பவர்களும் உண்டு.

உடம்பை வெற்றி கண்டவர்கள்... அவர்களுக்கு மனம்தான் பெரும் பொருட்டு... அதாவது மனமாகிய சித்தம்! அந்த மனமாகிய சித்தத்தை அமைதிக்கும் வைத்திருக்க முடிந்தவர்கள் அவர்கள். அதனால் அவர்களை சித்தர்கள் என்பவர்களும் உண்டு.

எது எப்படியோ சித்தர்களின் உலகம் தோண்டத் தோண்ட கிடைக்கும் விதம் விதமான புதையல் போல பெரும் மதிப்பினை உடையது. அதேபோல தொட்ட இடமெல்லாம் சுவாரஸ்யம் அப்பிக் கிடப்பது இவர்களின் வாழ்க்கைக்குள்தான்.

பெரும்பாலும் சித்தர்கள் தங்களுக்கென சிஷ்ய பரம்பரையையோ, மடங்களையோ உருவாக்கிக் கொள்ளவில்லை. இதுதான் எனது கொள்கை. இதை எல்லோரும் பின்பற்றுங்கள் என்று எவரையும் அவர்கள் நிர்ப்பந்தம் செய்ததும் இல்லை.

மக்கள் சமுதாயத்தை விட்டு ஒதுங்கி இருக்கவே பெரும்பாலான சித்தர்கள் விரும்பினார்கள். வெகு சிலரே சில சீடர்களோடு ஊர் உலகத்துக்குள் மருத்துவ சேவைகள் செய்துகொண்டு வாழ்ந்தனர்.



இன்றைக்கும் சித்தர்கள் வாழும் இடமாக தென் மேற்கு மலைத் தொடரின் இடையே சதுரகிரி எனும் மலைத்தலம் கருதப்படுகிறது.

இங்கே மகாலிங்கமாக அந்த ஈசன் காட்சி தருகிறான். ஆகம முறைப்படி கட்டப்பட்ட கோவில் கருவறைக்குள் தன்னை அடக்கிக் கொள்ளாமல் திறந்தவெளியில் சித்த புருஷர்களால் பூஜிக்கப்படும் இறைவனாக உள்ளான்.

சதுரகிரி என்பதை நால்வகை வேதங்களுமே இங்கே நாற்புறம் மலைகளாக விளங்குவதாக இதன் தல புராணம் கூறுகிறது.

அருவிகளும், ஓடைகளும் உடைய அபூர்வமான மலைத்தலம் இது. மிருகங்களுக்கும் இங்கே பஞ்சம் இல்லை. இந்த மலையின் தட்ப வெப்ப சூழல் தவம் புரிவோர்க்கு மிக ஏற்றது என்பதால் இன்றும் பல சித்தர்கள் இந்த மலையகத்தில் இந்த உலகை ஒரு பொருட்டாக கருதாமல் வாழ்ந்து வருகின்றனர். இந்த மலையகத்தில் நிறைய அற்புதங்களும் நடந்து வருகின்றன... அதில் ஒரு அற்புதமே இந்த சொர்ண ரகசியம் தொடர்!

சித்தம் என்னும் கடலுக்குள் மூழ்கி எடுக்கப்பட்ட சுவாரஸ்யமான ஒரு முத்து இந்த தொடர் என்றும் கூறலாம்.

குகைப் பகுதியை அடைந்த நம்பூதிரிக்கு தூக்கி வாரிப்போட்டது. போர்க்களத்தில் வாளால் வெட்டப்பட்டு சிதறிக் கிடக்கும் உடல்களைப் போல ஒரு இடத்தில் மதிவாணனும், இன்னொரு இடத்தில் ஆனைமுத்துவின் சடலமும் கிடந்தன. இருவர் சடலமும் வெளிறிப் போய்விட்டிருந்தது. அதுவே நம்பூதிரிக்கு குரளிப்பேயின் வேலை என்பதை புரிய வைத்துவிட்டது.

அடுத்த நொடி அவனையும் பயம் வந்து ஆட்கொண்டதுதான் விந்தை. நம்பூதிரியின் பார்வையும் பயம் விலகிடாதபடி நாலாபுறமும் சுற்றிச் சுழன்றது.

காலைச் சூரிய வெளிச்சம் பட்டு எல்லா பக்கமும் பளிச்சென்று தெரிந்தது. அங்கும் இங்குமாய் சில மஞ்சள் கழுத்து மைனாக்கள் மட்டுமே கூவியபடி இருக்க அங்கே பெரும் நிசப்தம்தான் நிலவிக் கொண்டிருந்தது.

அந்த நிசப்தமேகூட நம்பூதிரியை அரவப்படுத்தியது. வாமாச்சாரம் எனப்படும் அதர்வண வேத வித்தைகளுக்குள் சென்றுவிட்டவர்களுக்கு அச்சம் துவக்கத்திலேயே விட்டுப் போயிருக்கும். பேயும் பிசாகும் குரளியும் பூதமும் மோகினியும், ராட்சசமும் அவர்களுக்கு விளையாட்டுப் பொருள் போல... ஆனாலும் அவைகளை சில சமயங்களில் எதிராக மாறிவிடும் ஆபத்தும் வாமாச்சாரத்தில் உண்டு.

எப்படி கத்தியை எடுத்தவன் கத்தியாலேயே அழிவானோ அப்படித்தான் இதுவும்...

நம்பூதிரியைத் தொடர்ந்து அந்த குகைப் பகுதிக்குள் நுழைந்திருந்த சதாசிவமும், நந்தினியும் மதிவாணனையும், ஆனைமுத்துவையும் சடலமாகப் பார்த்துவிட்டு விக்கித்துப் போய் விட்டிருந்தனர்.

இருவர் உடம்பிலும் ஒரு உதறல்!

ஏதோ ஒன்று உடம்பை விட்டுப் பிரிந்து விலகுவது போலவும் ஒரு பிரமை. நம்பூதிரியின் வசியக்கட்டுதான் விலகி விட்டிருந்தது. காரணமும் அந்த சூழல்தான்!

நம்பூதிரியின் மந்திர நீரில் இருந்து வசிய சக்தி மிக்க மை தயாரிக்கப் பயன்படும் விதம் விதமான வேர்களும் அங்கே அழிந்து கிடந்ததுதான் காரணம். குகைக்குள்



நுழைந்து பார்த்த நம்பூதிரிக்குள் அடுத்தடுத்து அதிர்வுகள்! கூடவே சேகர் எங்கே என்னும் பிரதான கேள்வி...

இதயமும் வேகமாக துடிக்கத் தொடங்கியது. எல்லாவற்றையும் அடையப்போகிறோம் என்கிற எண்ணத்தோடு வந்த ஒருவன் எல்லாவற்றையும் இழக்கப் போகிறோம் என்கின்ற ஒரு நிஜத்தைப் பார்த்தால் எப்படி இருக்கும்?

இந்த மாதிரி வேளைகளில் கூடவே இருந்து உதவிக்கு வரும் யட்சிணிக்கும் விடுதலை கொடுத்தது பெரிய தவறாகத் தோன்றி மனதை உறுத்தியது. தட்டுத் தடுமாறிக் கொண்டு குகைக்கு வெளியே வந்தால் நந்தினியையும் சதாசிவத்தையும் காணவில்லை.

இது நம்பூதிரிக்கு உச்சபட்ச அதிர்ச்சியாக இருந்தது. அந்த நொடி வானமே தரைதட்டி தலைமேல் விழுந்த மாதிரிகூட இருந்தது. கண்கள் கலங்கிவிட்ட நிலையில் அண்ணாந்து வானத்தை பார்த்தபோது பகீர் என்றது. குகையின் தலைப்பாக பாறைமேல் சிறகை விரித்துக் கொண்டு நிற்கும் வவ்வால் கணக்காக சேகர்!

"அடேய் நீயா...!" என்று குரலெடுக்கு முன் சேகர் அப்படியே நம்பூதிரி மேல் புலி போல பாய்ந்தான். பாய்ந்த வேகத்தில் மானின் கழுத்தைப் பற்றும் புலியைப் போல நம்பூதிரியின் கழுத்தை தன் வாயால் கவ்வினான். அவனது உடும்புப் பிடியும் ஆவேசக் கடியும் நம்பூதிரியை கத்தக் கூட விடாமல் செய்து விட்டது!

அந்த இக்கட்டுக்கு நடுவிலும் நம்பூதிரியின் கையானது தனது வேட்டியின் ,இடுப்பு மடிப்பில் கையை விட்டு எதையோ தேடியது. ஒரு சிறு பொட்டலம் ஒன்றும் அகப்பட்டது. அந்த பொட்டலத்தை எடுத்து தன் கழுத்தை இறுக்கி ரத்தத்தை உறிஞ்சும் சேகரின் முகத்துக்கு முன் வீசி எறிந்தான்.

அடுத்த நொடியே சேகர் கவ்வியதை விட்டு விட்டு பின்பக்கமாய் போய் விழுந்தான்.

நம்பூதிரி வீசி எறிந்தது துஷ்ட வஸ்ய பஸ்பம் என்னும் பொடி. சேகர் வரையில் அது வேலை செய்யத் தொடங்கியது. நம்பூதிரியின் கழுத்திலோ அவன் பற் களின் கடி'பட்ட பாகத்தில் இருந்து ரத்தம் பீறிட்டு வழிந்தது.

சேகர் திரும்பவும் முடங்கத் தொடங்கினான்.

“போ சாத்தானே போ... தப்பி ஓடிப் போற அந்த ஆணையும் பெண்ணையும் கட்டி இழுத்து வா...”

- என்று சிரமப்பட்டு கட்டளையிட்டான்.

அதைக் கேட்ட மாத்திரத்தில் திரும்பவும் நம்பூதிரிக்கு கட்டுப்பட்ட ஒரு ஏவல் பிசாசு கணக்காய் மாறிய சேகர், அங்கிருந்து அசுர வேகமெடுத்து ஓடத் தொடங்கினான்.

எங்கே போகிறோம், எந்தப் பக்கம் போகிறோம் என்பதே தெரியாதபடி ஓடிக்கொண்டிருந்தார் சதா சிவம். அவரோடு ஓட முடியாதபடி ஓடிவந்து கொண் டிருந்தாள் நந்தினி. பெரிய அளவில் மூச்சிளைத்தது.

“அப்பா முடியிலப்பா... நில்லுங்கப்பா...” என்று இரைச்சலோடு பேசிக்கொண்டே தேங்கி நின்றாள் நந்தினி. அவரும் நின்றார்.

“அம்மாடி... பெரிய தப்பு பண்ணிட்டோம். அந்த நம்பூதிரி நல்லவனில்லை. அவனை நாம நம்பினது பெரிய தப்பும்மா... பெரிய தப்பு...”

மூச்சு வாங்க சதாசிவமும் குமுறினார்.

“அப்பா இப்ப நாம எங்க போறோம்?”



“யாருக்கும்மா தெரியும்... நான் இந்த மலைல இந்த காட்டுப்பகுதிக்கு மட்டும் வந்ததே இல்லைம்மா...”

நாம நம்பற ஜவ்வாது சித்தரும் நம்மளை கைவிட்டுட்டாரு பார்த்தீங்களா?”

“அப்படி எல்லாம் சொல்லாதே...” நாம இப்ப “அவரைத்தான் நினைக்கணும். அவரை நினைக்காத தப்புக்குதான் இந்த அவஸ்தை...”

“உங்களுக்கு இப்பவும் நம்பிக்கை இருக்காப்பா...”

“இப்பவும்னா... எப்பவும், இருக்கறதுக்கு பேர் தாம்மா நம்பிக்கை... ஒரு நிமிஷம் இரு...” என்ற சதா சிவம் கண்களை மூடிக்கொண்டு ஜவ்வாது சித்தரை தியானிக்க முனைந்தபோது, அசுர வேகத்தில் அவர்கள் முன்வந்து நின்றான் சேகர். கொஞ்சம்கூட இமைக் காதபடி இருவரையும் பார்த்தான். அவ்வளவு வேகமாய் ஓடிவந்தவனிடம் கொஞ்சம்கூட இளைப்பில்லை.

அவன் பார்வையே கொடூரத்தைப் புரிய வைத்து விட்டது.

“நந்தினி ஓடிவா...” சதாசிவம் மகளின் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு பக்கத்தில் இருந்த ஒரு வழிப் பாதை வழியாக ஓடினார். ஓடிய வேகத்தில் 'எச்சரிக்கை! புதைகுழிகள் உள்ளன' என்கிற அறிவிப்பைப் படிக்கத் தவறிவிட்டார். ஆனாலும் அப்படியும் இப்படியும் கால் வைக்க இடமாக பார்த்துப் பார்த்துதான் ஓடினார். பின் தொடர்ந்து ஓடிவந்த சேகர் ஒரு கட்டத்தில் அவர் களை காணாது தேங்கி நின்றான். அப்படியே வட்டமாய் சுற்றிலும் பார்த்தபடியே பின்பக்கமாகவே நடந்தான்.

சில அடி தூரத்தில் ஒரு தேர்ச்சக்கர அளவுக்கு சேற்றுக் குழம்பு ஒன்று கண்ணில் பட்டது. அதில் தடு

மாறிக்கொண்டு விழுந்தவன் சில நொடிகளில் புதையுண்டு போனதுதான் விந்தை! மறுபக்கத்தில் இதற்கு மேல் ஓட முடியாது என்பது போல தேங்கி நின்ற சதாசிவமும் நந்தினியும் பெருமூச்செறிய எதிரில் பார்த்தபோது ஒரு பெரிய வில்வமரம் அதன் கீழ் ஒரு ஆள் உயர லிங்கம்.

அந்த லிங்கத்தை மூன்றடிகூட உயரமில்லாத ஒரு சித்தர் பூஜித்தபடி இருந்தார். திரும்பிப் பார்த்தார். இருவரும் கண்ணில் படவும் வெறித்தார். சதாசிவமும் தன்னை மறந்து கைகளைக் கூப்பி அவரை வணங்கத் தொடங்கினார்.

"சாமி..."

"வாப்பா... நீ மூச்சிளைக்கறத பார்த்தா யாரோ துரத்தித்தான் ஓடிவந்துருக்கேன்னு நல்லா தெரியுது. பயப்படாதே. தைரியமா இரு..."

"இருக்க முடியல சாமி... பூலோக கைலாசம்னு சொல்லப்படற இந்த மலைலயே எவ்வளவு தப்பும் தவறும் நடக்குது தெரியுமா சாமி?"

என்று திருப்பிக் கேட்டார்.

"நீ பேசறதுதான் தப்பு... இங்க யாரும் தப்பெல்லாம் பண்ண முடியாது. அப்படித் தப்பு பண்ணிட்டு தப்பியும் பிழைக்க முடியாது..." - அந்த சித்தர் சொன்ன நொடியில் அந்த காட்டுப் பக்கமாய் கழுத்துக்கு ஒரு துணிக்கட்டைப் போட்டுக் கொண்டு தள்ளாடியபடி வந்து கொண்டிருந்தான் நம்பூதிரி. சேகரையும் சதாசிவம் நந்தினியையும்தான் அவன் விழிகள் தேடின. அவனது பதட்டமும் படபடப்பும் கச்சிதமாக சேகர் புதைந்து போன புதை குழி அருகிலேயே அவனையும் கொண்டு



வந்து நிறுத்தியது. சேகர் விழுந்து மூழ்கியது போலவே அவனும் திரும்பிய வேகத்தில் விழுந்தான். மூழ்கவும் ஆரம்பித்தான்!

வில்வ மரத்தடி லிங்கம் முன் சதாசிவமும் நந்தினியும் விழுந்து வணங்கி நின்றனர். அந்த குட்டைச் சித்தர் சிரித்தார். சிரித்தபடியே, "இதுக்கு பேர் ஜ்வரலிங்கம். மகாசிவராத்திரி தினமான இன்றைய தினம் இந்த ஜ்வர லிங்கத்தை சேவிக்கிறவாளுக்கு எல்லா நல்லதும் நடக்கும்னு சொல்வாங்க..." என்றார்.

"சாமி! நாங்க தேடி வந்ததும் இந்த லிங்கத்தை பார்க்கணும்னுதான் சாமி..." என்றார் சதாசிவம்.

"இது அபூர்வமான லிங்கம். இதை வணங்க முடிஞ்சவங்களுக்கு வாழ்க்கையில பணம் காசு மட்டுமில்லை. எல்லா செல்வங்களும் கிடைக்குமாம்..." என்றார்.

"அப்ப நாங்க கொடுத்து வெச்சருக்கோம் சாமி... கொடுத்து வச்சிருக்கோம்..." என்றபடியே இருவரும் கீழே விழுந்து மெய்சிலிர்க்க வணங்கி எழுந்தனர்.

எழுந்த நிலையில் பார்த்தால் அந்த குட்டைச் சித்தரை காணவில்லை!

சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது! ஸ்வரலிங்கம் முன் ஒரு வெண்சங்கு அதனுள் லிங்கபிஷேகம் செய்த பால். சதாசிவம் அந்த சங்கை அப்படியே கையில் எடுத்தார்.

"அம்மாடி! இது சாமி பிரசாதம்... இந்தா வாங்கிக்க..." - என்று அவளுக்கு கொடுத்துவிட்டு தானும் குடித்தார். பின் சங்கை அதே இடத்தில் வைத்துவிட்டு திரும்பவும் ஜ்வரலிங்கத்தை வணங்கியவர் நந்தினியை பார்த்தார்.

"அப்பா..."

இனி ஒரு குறையும் வராதும்மா... சித்தர் சாமி தரிசனம் கிடைச்சிடுச்சு. ஆனா, இந்த சாமி யார்னு தெரிஞ்சுக்கறதுக்குள்ள எங்க அவரை பத்தி கேட்டுடு வோமோன்னு மறைஞ்சுட்டாரு. அதனால பாதகமில்ல. அவர் பார்வை நம்மமேல பட்டதே. அதுவே பெருசு.

அதைவிட பெருசு இந்த பால் பிரசாதம்! நடம்மா..."

நந்தினியை அழைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். சிறிது தூரத்திலேயே நிறைய ஜனக்கூட்டம் கண்ணில் பட்டது. மனதுக்கும் ஒரு புதுத் தெம்பு வந்தது. அங்கிருந்து இன்னும் சிறிது தூரம் நடந்ததில் சந்தன மகாலிங்க கோவிலே கண்ணில் பட்டது. எள் போட்டு எடுக்க வழியில்லாதபடி ஒரு கூட்டம். "நந்தினி... சாமி சன்னிதானத்துக்கே வந்துட்டோம். இனி ஒரு கவலையும் இல்லை நமக்கு..." என்றார். காதில் 'சந்தன மகா லிங்கத்துக்கு அரோகரா... சுந்தர மகாலிங்கத்துக்கு அரோகரா...' என்னும் முழக்கங்கள்.

உற்சாகமாய் நடந்தவர் ஒரு திருப்பத்தில் வளைந்து திரும்பவும் எதிரில் பார்த்திபன், ராம்கி, தியாகுவை பார்த்தனர். பார்த்திபன், நந்தினியை பார்த்த மாத்திரித் தில் ஓடிவந்து கட்டிக் கொண்டான்.

"தம்பிகளா... நீங்க கீழ இல்லாம மேல வந்துட் டீங்களா?" என்று சதாசிவம் கேட்டிட, "ஆமாம் சார்... இந்த மலைக்கு மேல மட்டுமில்ல... வாழ்க்கைலயும் பல படிகள் மேல வந்துட்ட மாதிரிதான் தெரியுது. இப்ப தான் ஜவ்வாது சித்தர் எங்களுக்கு கைலாய தரிசனத்தை பண்ணி வெச்சார். சாமிக்கு முன்னால நந்தி தேவர்ல இருந்து பூத கணங்கள் வரை எல்லாரோட தரிசனமும்



கிடைச்சது. கனவா இல்லை நிஜமா இல்ல பிரமையான்னு ஒண்ணுமே தெரியல" என்றான் ராம்கி.

"ஆமா, எங்க அந்த மாந்திரீகன். அவன் நல்லவன் இல்ல. அதனாலதான் உங்கள பின்தொடர்ந்து வந்தோம். இருந்தும் உங்கள மிஸ் பண்ணிட்டோம்" என்றான் தியாகு. "இங்க உங்களுக்கு கைலாய தரிசனம்னா எங்களுக்கு ஜ்வரலிங்க தரிசனம்! அங்க சங்குப் பால் பிரசாதமும் கிடைச்சது. சித்த தரிசனமும் கிடைச்சது. குட்டையா இருந்த சித்தர் அனேகமா அகத்தியராதான் இருக்கணும்..." என்று பரவசப்பட்டார் சதாசிவம்.

"அந்த மாந்திரீகன்?"

"என்ன ஆனான்னே தெரியாது. ஆனா, நாங்க தப்பிச்சு வந்துட்டோம்."

"ஆச்சரியமாயிருக்கே..." ஆச்சரியப்பட்டுக்கிட்டே இருக்கற மாதிரிதான் ஒவ்வொரு விஷயமும் நடந்திருக்கு... சித்தர் சாமி தரிசனம் கிடைக்கவுமே எனக்கு தெம்பு வந்துடிச்சு. இந்த நம்பூதிரி இல்ல, எவனாலயும் இனி எங்களை எதுவும் பண்ண முடியாது."

"சரி, வாங்க போகலாம்..."

"போறதா... ஜவ்வாது சித்தரை பார்க்காம நான் வரமாட்டேன்."

"அவர்தான் எங்களை போகச் சொன்னார். வழில நீங்க தட்டுப்படுவீங்கன்னும் சொன்னார். உங்களைப் பாக்க அவரே வருவாரென்றும் சொல்லச் சொன்னார்..."

"அட... சாமி எதுக்கு இப்படிச் சொன்னார்...?"

"சித்தர் சாமிங்க விஷயம்தான் பிரம்ம ரகசியம் ஆச்சே... போகப் போக புரியலாம். முதல்ல புறப்படுங்க

சாமி தரிசனத்தை முடிச்சிட்டு அடிவாரத்துக்குப் போவோம். கீழே போய்ச் சேர்ந்த நிமிஷத்துல இருந்து அடுத்த வேலை என்ன தெரியுமா?"

- தியாகு, நந்தினியை பார்த்தான்.

"என்ன?"

"உம்... உங்க கல்யாணத்துக்கு நாள் பார்க்கறது தான்." "அவள் அதைக் கேட்டு சிரித்தாள். வெட்கத்தில் முகமும் சிவந்தாள். "எங்களுக்கு இருக்கட்டும் உங்களுக்கு...?" - பார்த்திபன் கேட்டான்.

"ஜவ்வாது சாமி சரின்னா மூணு பேருக்குமே ஒரே நேரத்துல கல்யாணத்தை பண்ணிடறேன். என்ன இப்போ?"

- சதாசிவம் ஒரே போடாக போட்டார். பக்கத்திலேயே ஒரு பருத்த மரம்! அதன் கிளையில் கிளி ஒன்று அந்த சந்தோஷமான காட்சியைப் பார்த்துவிட்டு படபடவென்று சிறகினை விரித்துக் கொண்டு வானில் தாவி ஏறியது...

**முற்றும்**

□□□